
# 1994 அவ்யக்த முரளி



**பொருளடக்கம் - 13**

**10.01.1994** இக்காலத்தில், ஒரு பாயின்ட் (Point) என்கிற சொல்லை மூன்று உருவங்களில் ஸ்மிருதி அல்லது சொரூபத்தில் கொண்டு வருவதே தற்காப்புக்கான சாதனம் ஆகும்!

**18.01.1994** பிராமண ஜென்மத்தின் ஆதி வரதானம் அன்பின் சக்தி!

**25.01.1994** பிராமணர்களின் இயல்பு விசேஷத்தின் இயல்பாகும் -இதை இயல்பான நினைவு சொரூபமாக்குங்கள்!

**01.02.1994** திரிகாலதரிசி நிலை என்ற உயர்ந்த ஆசனம் மூலமாக எப்பொழுதும் வெற்றி அடைபவர் ஆகுங்கள்!

**18.02.1994** சுவமானத்தின் (சுயகௌரவத்தின்) நினைவின் சுவிட்ச்சை ஆன் செய்வதினால் தேகஉணர்வின் இருள் முடிவடைந்து விடுகிறது!

**09.03.1994** விலகிய மற்றும் அன்பான, அதிசயமான, அன்பு மற்றும் சுகம் நிறைந்த அவதரணம் -சிவஜெயந்தி!

**03.04.1994** திருப்தியின் ஆதாரம் -சம்மந்தம், செல்வம் மற்றும் ஆரோக்கியம்!
**14.04.1994** அன்பின் ரிடர்னாக (பிரதி உபகாரம்) தன்னை டர்ன் (மாற்றம்) செய்ய வேண்டும்!

**17.11.1994** ஒவ்வொரு குணம் மற்றும் சக்தியின் அனுபவங்களில் மூழ்கியிருப்பது என்றால் குஷி மற்றும் அதிர்ஷ்டம் நிறைந்தவர் ஆவது ஆகும்!

**26.11.1994** பரமாத்ம பாலனை மற்றும் பரிவரித்தனை (மாறும்) சக்தியின் பிரத்யஷ (வெளிப்படையான) சொருபம் -சகஜயோகி வாழ்க்கை!

**05.12.1994** தற்சமயத்தின் தேவை -எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வின் சூழ்நிலையை உருவாக்குவது!

**14.12.1994** நேரம், சங்கல்பம், பேச்சின் மூலம் வருமானத்தை சேமிப்பதற்கு ஆதாரம் -மூன்று புள்ளிகள் வைப்பது!

**23.12.1994** தன்னுடைய மூன்று சொரூபத்தின் நினைவு எப்பொழுதுமே இருக்கட்டும் -1) சங்கமயுக பிராமணன், 2) பிராமணனிலிருந்து பரிஷ்தா மற்றும் 3) பரிஷ்தாவிலிருந்து தேவதா!

**31.12.1994 புது வருடத்தை சுப பாவனை, குண சொரூப வருட ரூபத்தில் கொண்டாடுங்கள்!**

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂

## 10.01.1994 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## இக்காலத்தில், ஒரு பாயின்ட் (Point) என்கிற சொல்லை மூன்று உருவங்களில் ஸ்மிருதி அல்லது சொரூபத்தில் கொண்டு வருவதே தற்காப்புக்கான சாதனம் ஆகும்!

விஸ்வ கல்யாணகாரியான பாப்தாதா, தமது, சர்வ மாஸ்டர் விஸ்வ கல்யாணகாரியான குழந்தைகளைப் பார்த்து வருகின்றார். குழந்தைகளின் இந்த பிரம்மாவின் வாழ்க்கையின் லட்சியம் மிகவும் சிரேஷ்டமானதாகும். ஒவ்வொருவரும் முதன்மையான புருஷார்த்தம் செய்வதற்கான லட்சியத்தைக் கொண்டு, முன்னேறி உயர்ந்து வருகின்றனர். முதன்மையாக வருவது அனைவரின் லட்சியமாக இருப்பினும் அதனை நடைமுறைப்படுத்துவதில் (லட்சணம்) வரிசைக்கிரமம் ஏற்பட்டு விடுகிறது. லட்சியம் மற்றும் லட்சணத்தில் வேறுபாடு ஏன் காணப்படுகிறது. இதன் காரணத்தைப் பார்ப்போம். ஞான தாதா தந்தை ஒருவர் தான், சேவையின் சாதனம் மற்றும் சேவையின் விதியை கற்பிப்பவரும் ஒருவர் தான். கல்வி மற்றும் பாவனை என்பது மிகவும் முக்கியமானவை ஆகும். இருப்பினும் பிரத்யட்ச வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதில் வரிசைக்கிரமம் ஏன் உருவாகிறது? நீங்கள் அனைவரும் உங்களைச் சிறப்பாக அறிந்திருக்கிறீர்கள். இருப்பினும், நடைமுறைப்படுத்துவதில் வரிசைக்கிரமம் ஏன் ஏற்படுகிறது? வரிசைக்கிரமம் ஏற்படுவதற்கான ஆதாரம் புள்ளி (Point) என்ற ஒரு சொல்லேயாகும்.

1. இந்த புள்ளி சொரூபத்தை அனுபவம் செய்ய வேண்டும்.

2. ஏதாவது வியர்த்த சங்கல்பம், சொல் அல்லது செயல் இருந்தால் அதற்கு புள்ளி.

3. ஞானத்தின் அல்லது தாரணையின் அனேக கருத்துக்கள் (Points) மனனம் செய்து உங்களுக்காகவும் சேவைக்காகவும் அவற்றை தக்க சமயத்தில் செயல்படுத்த வேண்டும்.

புள்ளி என்பது ஒரு செயல் தான் ஆனால் இந்த புள்ளியை மூன்று உருவங்களில், தக்க சமயத்தில் ஸ்மிருத்தியில் அல்லது சொரூபத்தில் கொண்டு வருவதில் வேறுபாடு ஏற்பட்டு விடுகிறது. அனைவரின் ஸ்மிருத்தியில் இருந்த போதிலும் இந்த ஸ்மிருத்தியை சொரூபத்தில் கொண்டு வருவதில் வரிசைக்கிரமம் ஏற்பட்டு விடுகிறது.

ஸ்மிருத்தியில் அனைவரும் திறமைசாலிகள் என்பதையும் பாப்தாதா குழந்தைகளிடத்தில் காண்கின்றார். இவ்வாறு கர்மம் செய்ய வேண்டும் என்று குழந்தைகள் சிந்திக்கின்றனர். இது சரி, இது தவறு என்கின்ற அறிவும் குழந்தைகளிடத்தில் உள்ளது. ஞானம் என்றால் அறிவு என்று பொருள். ஞானம் என்றால் ஒளி. ஞானம் என்றால் சக்தி என்று கூறப்படுகிறது. ஆகவே ஒளி இருக்குமிடத்தில், சக்தி இருக்குமிடத்தில் இவ்வாறு அமைய வேண்டும் என்கிற எண்ணம் இருக்க முடியாது. பாப்தாதா இவ்வாறு கூறுகின்றார். எவ்வாறு நாம் மாற வேண்டும் என்று ஞானம் உள்ளது ஆனால் தற்சமயத்தில் என்னிடத்தில் எத்தகைய எண்ணம் ஏற்படுகிறது என்று சிந்திக்கிறீர்கள் இது வேண்டும், வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு விடுகின்றது. இதன் பொருளாவது ஞானத்தை ஒளி மற்றும் சக்தி உருவில் காலத்திற்கு ஏற்ப செயலில் ஈடுபடுத்த இயலவில்லை என்பதேயாகும். ஸ்மிருத்தியில் இருக்கின்றீர்கள் ஆனால் அதை சொரூபத்தில் கொண்டு வருகின்ற சக்தி குறைவாக உள்ளது என்று நாம் கூறுகின்றோம். ஒளி இருக்கும்போது ஏதாவது பிரகாசம் இருக்கும்போது இது தவறு, இது சரி; இது அந்தக்காரம், இது பிரகாசம்; இது வியர்த்தமானது, இது சக்தி மிக்கது என்பது தெளிவாக புலப்படுகிறது; ஆனால் அந்தக்காரம் என்று உயர்ந்த போதிலும் அந்த அந்தகாரத்திலேயே இருந்தால் ஞானி அல்லது அறிவாளி என்று கூற முடியுமா? ஞானம் இல்லையெனில் யார் இவர்? இவர் பக்தரா? அல்லது அறை குறை ஞானியா? இவரை எவ்வாறு அழைப்பது? தவறு என்று

உணர்ந்தும் தவறான செயலுக்கு அல்லது சங்கல்பத்திற்கு அல்லது சுபாவம் மற்றும் சமஸ்காரத்திற்கு வசப்பட்டு விட்டால் இவரை என்னவென்று அழைப்பது? இவருக்கு எத்தகைய பட்டம் அளிக்கப்பட வேண்டும். காலத்தின் விரைவுகளை கண்டு பாப்தாதா உங்களுக்கு கவனம் என்ற சொல்லுக்கு இரட்டை அடிகோடுயிட்டு வருகின்றார்.

பிரகிருத்தியின் தமோகுண சக்தி மற்றும் மாயையின் சூட்சும அறிவின் சக்தி ஆகிய இரண்டும் தனது கடமையை தீவிர கதியில் செய்து வருகின்றன. மேலும் செய்து வரும். பிரகிருத்தியின் அச்சுறுத்தும் உருவை அறிவது மிகவும் எளிது ஆனால் வெவ்வேறு விதமான அச்சுறுத்தும் நிலைக்குலைவில் நிலையாக இருப்பதற்கு கவனம் தேவை. மாயையின் இச்சூட்சம உருவை உணர்ந்து கொள்வதிலும் தோல்வி ஏற்பட்டு விடும். மாயையானது மிகவும் மாயா உருவில் இருப்பதால் தவறை சரி என்று அனுபவம் செய்விக்கிறது. முற்றிலும் தவறாக இருப்பினும் புத்தியை முழுமையாக மாற்றி விடுவதால் உண்மையான அறிவை உணரும் சக்தியை அது மறைத்து விடுகிறது. மாயா மந்திரத்தின் மூலம் புத்தியை பேதலிக்க செய்வதைப் போன்று உண்மையை அறிய முடியாதபடி உணரும் சக்தியை மாயா மாயை மறைத்து விடுகிறது. முற்றிலும் தவறாக இருப்பினும் மாயையின் நிழல் வசப்படுவதால் தவறை சரியானது என உணருவதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் மாயை உயர்நீதி மன்றத்தின் வழக்கறிஞர்களாக மாற்றி விடுகிறது. வழக்கறிஞர் என்ன செய்கின்றார்? பொய்மையை உண்மை என்று ஏற்றுக் கொள்ள செய்வதில் திறமைசாலி ஆவார். உண்மையை உண்மை என்று சாதிக்கவும் செய்கின்றார். பொய்மையை உண்மை என்று சாதிப்பதில் இவர் திறமைசாலியாவார்.

இதனால் பாப்தாதா கவனம் என்ற சொல்லிற்கு இரட்டைக் அடிக்கோடு இட்டு வருகின்றார். உணரும் சக்தியை பரிவர்த்தனை செய்வதற்கு முயற்சி செய்து வரும் சூட்சும சொரூபத்தில் விளங்கி வரும் மாயையின் நிழலில் இருந்து விலகியிருக்க உங்களை சதா பாதுகாத்து வாருங்கள். ஏனென்றால் மாயை முக்கியமாக இந்த சொரூபத்தில் தனது செயலை செய்து வருகிறது. புரிந்ததா? தெளிவாகி விட்டதா? ஆகவே என்ன செய்ய வேண்டும்? ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஏதாவது ஒரு விசேஷ ஆத்மா உங்களுக்கு சமிக்ஞை காண்பித்தால்

மாயையின் இந்த நிழலில் இருந்து முழுமையாக விட்டு விலகி தந்தையின் குடை நிழலின் கீழ் உங்களை முக்கியமாக மனம் புத்தியை கொண்டு வந்து உதவியை பெற்றுக் கொள்ளுங்கள். ஏனென்றால் முக்கியமாக மாயையின் பிரபாவம் மனதில் எதிர்மறையான பாவத்தை, பாவனை ஏற்படுத்த முயற்சி செய்து வருகிறது. புத்தியில் எதார்த்தமான உணர்வை மறைத்து விடுவதற்காக மாயை முயற்சி செய்து வருகிறது. சில பருவ காலங்களில் உங்களை பாதுகாத்து கொள்வதற்காக சில ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்து கொள்கிறீர்கள் அல்லவா? மழை காலத்தில் என்ன செய்கின்றீர்கள்? குடை மற்றும் குளிர்கால ஆடைகளை தயாராக எடுத்து வைக்கின்றீர்கள். குளிர் காலத்தில் அதற்கேற்ற வெப்பம் தரும் ஆடைகளை தயாராக எடுத்து வைக்கின்றீர்கள். ஆகவே இவ்வாறு மனம் மற்றும் புத்தியில் மாயையின் பிரபாவம் ஏற்படாது இருப்பதற்காக முன்கூட்டியே பாதுகாத்து கொள்வதற்கான சாதனங்களை உங்களிடத்தில் வைத்திருங்கள். இதற்கான விசேஷ சாதனம் மிகவும் சகஜமானதாகும். இது பற்றி ஆரம்பத்தில் குறிப்பிட்டோம். அதாவது புள்ளி (பாயிண்ட்) என்கின்ற ஒரே சொல்லாகும். இந்த ஒரு சொல் எளிதானது அல்லவா. நீண்ட சொற்றொடரை நாம் கூறவில்லையல்லவா? ஆமாம், நான் ஆத்மா பிந்து சொரூபம், ஜோதி சொரூபம் என்று கூறி வருகிறீர்கள் ஆனால் இதில் நிலைத்திருப்பதில்லை. புள்ளியில் நிலைத்திருக்க விரும்புகின்றீர்கள் ஆனால் கேள்விக்குறி மற்றும் ஆச்சரியக்குறியில் நிலைத்து விடுகிறீர்கள். புள்ளி இடுவது எளிதானதா அல்லது ஆச்சயரியக் குறி, மற்றும் கேள்விக் குறியிடுவது சுலபமானதா என்பது பற்றி முன்பு நாம் கூறியுள்ளோம். எது சகஜமானது. முற்றுப்புள்ளி, அல்லவா, பிந்தி அல்லவா, புள்ளி அல்லவா. பிறகு கேள்விக்குறி அல்லது ஆச்சரியக்குறியில் ஏன் நின்று விடுகிறீர்கள். இந்த விதியை நன்கு உணர்ந்து கொள்ளுங்கள்.

இது பொய்மைக்கான பருவ காலமாகும். உண்மையான உண்மையை எடுத்துக்காட்டும் போது பொய் உண்மையை விட தெளிவாகவும் வசீகரமானதாகவும் விளங்குகிறது. இக்காலத்தில் நாகரீகத்தை பாருங்கள். நகல் எவ்வளவு பகட்டான காட்சித் தருகிறது. இதன் முன்னிலையில் அசலான வஸ்து மதிப்பு குறைந்து காணப்படுகிறது.

# 1994 அவ்யக்த முரளி

உண்மையான வெள்ளியைப் பாருங்கள். செயற்கையான வெள்ளியையும் பாருங்கள். எது சிறப்பாக தோன்றுகிறது? சுத்த வெள்ளி கருத்து விடுகிறது. செயற்கை வெள்ளி சதா பிரகாசித்து வருகிறது. ஆகவே எது சிறப்பாக தோன்றுகிறது. செயற்கை வெள்ளியா? அல்லது சுத்த வெள்ளியா? ஆகவே இந்த காலத்தை உணர்ந்து கொள்ளுங்கள். மாயையின் சொரூபத்தை உணர்ந்து கொள்ளுங்கள். பிரகிருதியின் தமோகுணத்தின், பல்வேறு உருவங்களை உணர்ந்து கொள்ளுங்கள். ஒன்று அடைவது, இரண்டாவது உயர்வது நன்று கற்றறிந்து கொண்டீர்கள் ஆனால் உயர்ந்து கொள்வதில் சில சமயங்களில் தவறு செய்து விடுகின்றீர்கள். சில சமயங்களில் சரியாக நடந்து கொள்கின்றீர்கள். இப்போது என்ன செய்கிறீர்கள். பாதுகாப்புடன் இருப்பீர்கள் அல்லவா? எனக்கு தெரியவில்லையே ஏன் இவ்வாறு நடந்து விட்டது என்று பின்பு நீங்கள் கூறக்கூடாது. ஏன் ஏன் என்பது சரியல்ல. இப்பொழுதும் தந்தை சிறிது கருணை காட்டி வருகின்றார். சிறிது உதவியும் செய்து வருகின்றார் ஆனால் பிறகு ஏன் எதற்காக என்பவற்றை செவி மடுக்க மாட்டார். இது இவ்வாரல்ல அவ்வாறு என்கின்ற வாதம் செல்லுபடியாகாது. நீதிபதியாகுங்கள். வழக்கறிஞர்களாக மாறாதீர்கள். மாயையின் வழக்கறிஞர் ஆகாதீர்கள். வாதம் செய்யும்போது சந்தோஷம் ஏற்படுகிறது அல்லவா? நீங்கள் அனைவரும் அனுபவசாலிகள் அல்லவா? செய்வதில் அல்லது சொல்வதில் நீங்கள் திறமைசாலிகள். மிகவும் அனுபவம் உள்ளது அல்லவா? செவிமடுத்து வந்து சாட்சியாகி எமக்கு சந்தோஷம் ஏற்பட்டு விடுகிறது நன்கு உயர்ந்து கொண்டீர்களா? பாண்டவர் கள் உயர்ந்து கொண்டார்களா? சக்திகள் உயர்ந்து கொண்டார்களா? ஆசிரியர்கள் உயர்ந்து விட்டவரா? அனைவரும் ஆமாம் ஆமாம் என்று கூறி வருகின்றனர். ஆமாம் என்று கூறுகிறீர்களா? அல்லது இல்லை என்று கூறுகிறீர்களா? இப்போது நீங்கள் அனைவரும் ஆமாம் என்று கூறுகிறீர்கள். ஆமாம் என்பதை புகைப்படம் பிடிக்கின்றனர்.

மூன்றாவதான பருவக்காலமானது பலவீனம் நிறைந்த சுபாவம் மற்றும் சமஸ்காரத்தின் தொடர்பு வருவதாகும். இதுவும் மிகவும் விஸ்தாரமானது ஆகும். அதைப் பற்றி இன்று கூறப் போவதில்லை. பிறகு கூறுவோம். இதற்கு முன்பு இவ்வாறில்லை ஆனால் இப்பொழுது இது எங்கிருந்து வந்து விட்டது என்று கூற முடியவில்லையே. இந்த

சமஸ்காரம் என்னுடையதல்ல, இருப்பினும் இப்பொழுது வந்து விட்டதே என்று சில குழந்தைகள் கூறுகின்றனர். இதன் காரணம் மற்றும் இதன் விதியைப் பற்றி விஸ்தாரமாக வேறு ஒரு சமயம் கூறுவோம். நல்லது.

நாற்புறங்களிலும் நிகழ்கின்ற பாப்தாதாவின் மகா வாக்கியங்களை செவிமடுக்கும், தாரணை செய்தும் வருகின்ற ஆன்மீக குழந்தைகளுக்கு, அனைத்து பாடங்களை ஸ்மிருத்தியில் வைத்திருப்பதுடன் சொரூபத்தில் கொண்டு வருகின்ற அருகாமையில் உள்ள ஆத்மாக்களுக்கு, சதா ஞானத்தின் ஒவ்வொரு கருத்தையும் ஒளி மற்றும் சக்தி சொரூபத்தின் செயலில் ஈடுபட்டு வருகின்ற சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா லட்சியம் மற்றும் லட்சணத்தை சரிசமமாக கொடுத்து வரும் தந்தையின் ஞானி ஆத்மாக்களான குழந்தைகளுக்கும், சதா தந்தையின் குடை நிழலில் இருந்து கொண்டு மாயையின் நிழலில் இருந்து தப்பித்து பாதுகாப்புடன் இருந்து வரும் அறிவது மற்றும் உயர்வது ஆகிய இரு சிறப்புகளையும் வாழ்க்கையில் கடைப்பிடித்து வரும் விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

<u>தாதிகளுடன்:</u> சக்தி சேனை தீவிர வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது தானே. சேனையை பாப்தாதாவுடன் கூடவே நிமித்த ஆத்மாக்கள் நீங்களும் நடத்துவதற்கு நிமித்தமானவர்கள். தந்தையோ சதா கூடவே இருக்கிறார் மேலும் இருப்பார். இருப்பினும் பாப்தாதாவின் சிரேஷ்ட கைகள்தானே. தந்தை சக்தி அளிக்கிறார், தந்தை 'மைட்' ரூபத்தில் உள்ளார் ஆனால் நிமித்தமான 'மைக்'கள் நீங்கள்தான். எத்தனை குஷியான விஷயங்களைக் கேட்கிறீர்கள், விளையாட்டாகத் தோன்றுகிறதா, விளையாட்டுதானே. விளையாட்டில் வெற்றி பெற்று எல்லோரையும் மாயாஜீத் வெற்றியாளராக்க வேண்டும், இதுவோ உத்தரவாதம் ஆகும்; ஆனால் இடையிடையே விளையாட்டைப் பார்க்க வேண்டியும் உள்ளது எனில் களைப்படைவதில்லைதானே? சிரிப்பது, விளையாடுவது, கடப்பது மற்றும் கடக்கச் செய்வது. யாராவது இந்த விஷயங்களைக் கேட்டார்கள் என்றால் மனதில் என்ன எழும்? ஆஹா டிராமா ஆஹா! ஐயோ டிராமா ஐயோ என சொல்வதில்லை, ஆஹா டிராமா! ஆஹா ஆஹா எனக் கூறியபடியே அனைவரையும் ஆஹா

ஆஹா என ஆக்க வேண்டும். இவை அனைத்தையும் கடக்க வேண்டும். நல்லது!

**குழுக்களுடன் தனிப்பட்ட சந்திப்பு (சாரம்):**

வெற்றி நமது பிறப்புரிமை, இந்த நிச்சயம் மற்றும் போதை மூலம் தடையற்ற ஸ்திதியின் அனுபவம் செய்யுங்கள்!

ஒவ்வொரு ஸ்தானமும் தடையற்றதாக ஆக வேண்டும்.

ஃபரிஷ்தா ஆக வேண்டும் எனில் தன்னுடைய மனதின் சுமைக்கு முடிவு கட்டி, எல்லோருக்கும் அன்பானவர் ஆகுங்கள்!

டபுள் லைட் என்பதன் அர்த்தமே ஆத்மாவும் லைட் மற்றும் ஃபரிஷ்தா சொரூபமும் லைட்!

என்னுடையது என்ற சுமை ஃபரிஷ்தா ஆக விடாது.

உயர் பதவி அடைவதற்கான சாதனம் -ஃபரிஷ்தா ஆவது.

நான் பரம் பூஜ்ய ஆத்மா ஆவேன் -இந்த நினைவின் மூலம் தூய்மையின் அஸ்திவாரத்தை உறுதியாக்குங்கள்!

எண்ணம், சொல், செயல், சம்பந்தம், தொடர்பில் பவித்ரமாக இருக்க வேண்டும்.

கொஞ்சம் சிதைந்த மூர்த்தியாயினும் பூஜை நடப்பதில்லை! மியூசியத்தில் (museum) வைப்பார்கள், கோவிலில் அல்ல!

தானும் திருப்தியாய் இருப்பது மற்றும் மற்றவர்களையும் திருப்தி படுத்துவது -இது கர்மயோகியின் முக்கிய அடையாளமாகும்!

கர்மயோகி என்றால் ஒவ்வொரு நொடி, ஒவ்வொரு சங்கல்பம், ஒவ்வொரு வார்த்தையும் சதா உயர்ந்ததாக இருப்பது. சகஜயோகி என்றால் கர்மயோகி மற்றும் கர்மயோகி என்றால் சகஜயோகி.

சிரேஷ்ட கர்மத்தின் அடையாளம் -தானும் திருப்தியாய் இருப்பது மற்றும் பிறரும் திருப்தியாவது.

யோகி வாழ்க்கைக்கான மூன்று முக்கிய சான்றிதழ்கள் -தானும் திருப்தி, தந்தையும் திருப்தி, லௌகீக-அலௌகீக பரிவாரமும் திருப்தி!

பிரத்யக்ஷ பலன் அடைவது -இது சங்கம யுகத்தின் மிகப் பெரிய விசேஷமாகும்!

இந்த சங்கம யுகத்தில் தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பைத்தான் உலகினர் நதிகளின் சங்கமமாக ஆக்கி விட்டனர்.

இரட்டை வெளிநாட்டினர்: இந்த வருஷம் ஒரு பிராமணர் கூட குழப்பத்தில் வரக்கூடாது, அத்தகைய வாயுமண்டலத்தை தங்களது சேவை மையங்களில் உருவாக்குங்கள்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 18.01.1994 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிராமண ஜென்மத்தின் ஆதி வரதானம் அன்பின் சக்தி!

அன்பு நிறைந்த சக்தியின் வரதானத்தின் மூலமாக நட க்க முடியாததை (அசம்பவத்தை) நடத்தி வைக்கக் கூடிய (சம்பவமாக்கக்கூடிய) அன்பின் கடல் பாப்தாதா கூறுகின்றார்: இன்று நாலாபுறத்திலும் உள்ள அனைத்து குழந்தைகளின் அன்பு நிறைந்த நினைவுகள் சக்திசாலியான பாப்தாதாவிடம் அன்புக்கடலுக்குச் சமமாக வந்து சேர்ந்து விட்டன. ஒவ்வொரு குழந்தையின் உள்ளத்தில் உள்ளத்தை கொள்ளை கொண்ட திலாராம் நிரம்பியிருக்கிறார். மேலும் திலாராமின் உள்ளத்தில் அனைத்து அன்பான குழந்தைகள் நிரம்பியிருக்கின்றனர். அன்பு மிகப் பெரிய சக்தி. அன்பின் சக்தி கடின உழைப்பை சுலபமாக்கி விடுகிறது. எங்கு அன்பு இருக் கிறதோ அங்கு கடின உழைப்பு இருப்பதில்லை. கடின உழைப்பு பொழுதுபோக்காகி விடுகிறது. விளையாட்டாக தென்படுகிறது. அன்பின் சக்தி உடல் மற்றும் உடலின் உலகத்தை ஒரு நொடியில் மறக்கச் செய்து விடுகிறது. அன்பில் என்ன மறக்க விரும்புகிறீர்களோ அதை மறக்க முடியும், என்ன நினைவு செய்ய விரும்புகிறீர்களோ அதில் மூழ்கி விடுகிறார்கள். அன்பின் சக்தி சகஜமாக சமர்ப்பணம் செய்வித்து விடுகிறது. அன்பின் சக்தி தந்தைக்குச் சமமாக ஆக்கி விடுகிறது. அன்பு எப்பொழுதும் ஒவ்வொரு நேரமும் பரமாத்மாவின் துணையின் அனுபவம் செய்விக்கிறது. அன்பு எப்பொழுதும் தன் மேல் தந்தையின் ஆசீர்வாதங்களின் கரத்தை

குடைநிழலுக்குச் சமமாக அனுபவம் செய்விக்கிறது. அன்பு அசம்பவத்தையும் அந்தக் காரியம் முடிந்தே இருக்கிறது என்பது போல் அவ்வளவு எளிதாக சம்பவமாக்கி விடுகிறது. அன்பு ஒவ்வொரு நேரமும் கவலையற்ற நிலையை அனுபவம் செய்விக்கிறது. அன்பு ஒவ்வொரு காரியத்திலும் நிச்சயம் வெற்றி அடையும் நிலையை அனுபவம் செய்விக்கிறது.
அப்படி அன்பின் சக்தியை அனுபவம் செய்கிறீர்கள் தான் இல்லையா? அனேக ஜென்மங்கள் அனேக விதமான கடின உழைப்பு செய்து களைப்படைந்து இருக்கும் ஆத்மாக்கள் என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார். விதவிதமான கட்டுப்பாட்டுகளில் கட்டப்பட்டுள்ள ஆத்மாக்களான காரணத்தினால் கடின உழைப்பு செய்து கொண்டே இருந்தார்கள். எனவே பாப்தாதா கடின உழைப்பிலிருந்து விடுவிப்பதற்காக சகஜ விதியாக அன்பின் சக்தியை அனைத்து குழந்தைகளுக்கும் வரதானமாக கொடுக்கிறார். நம்முடைய பிராமண வாழ்க்கையின் ஆரம்ப காலத்தை நினைவு செய்யுங்கள். பிறந்தவுடனேயே அனைவருக்கும் அன்பின் சக்தி தான் புது வாழ்க்கை யைக் கொடுத்தது. அன்பின் அனுபவத்திற்காக கஷ்டப்பட்டீர்களா? கடின உழைப்பு செய்ய வேண்டியதிருந்ததா? சுலபமாக அனுபவம் செய்தீர்கள் தான் இல்லையா? இப்படி ஜென்மத்தின் ஆரம்பத்தின் அனுபவம் தான் வரதானம் ஆகும். அன்பிலேயே உங்களை மறந்திருந்தீர்கள். எப்பொழுதும் இந்த அன்பின் வரதானத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். கஷ்டமான நேரத்தில் இந்த வரதானம் மூலமாக கஷ்ட மானதை மாற்றம் செய்ய முடியும். பாப்தாதாவிற்கு குழந்தைகள் கஷ்டத்தை அனுபவம் செய்வது பிடிப்பதில்லை. அன்பின் சக்தியின் மறந்த நிலை கஷ்டத்தை அனுபவம் செய்விக்கிறது.

எவ்வளவு பெரிய எப்பேற்பட்ட சூழ்நிலையாக இருந்தாலும் அன்பினால் சூழ் நிலை என்ற மலையும் மாறி தண்ணீருக்குச் சமமாக இலேசாக ஆக முடியும். பாறையை தண்ணீராக்க முடியும். எப்படிப்பட்ட மாயாவின் கொடுரமான ரூபம் அல்லது இராயலான ரூபம் மோதுகிறது என்றால் ஒரு நொடியில் அன்புக் கடலில் மூழ்கி விட்டீர்கள் என்றால் முற்றுகையிடும் மாயாவின் சக்தி முடிவடைந்து விடும். உங்களுடைய உள்ளடக்கும் சக்தி சூ-மந்திரம் அன்றி சிவ-மந்திரம் ஆகி விடும்.

## 1994 அவ்யக்த முரளி

அனைவரிடம் சிவ-மந்திரத்தின் சக்தி இருக்கிறதா? அல்லது தொலைந்து விடுகிறதா? சிவ அன்பில் மூழ்கி விடுங்கள், மூழ்கி எழுந்து வெளியில் மட்டும் வந்து விடாதீர்கள். கொஞ்ச நேரம் -இனிமையான பாபா, அன்பான பாபா என்று நினைவில் இருந்து கொண்டே இருங்கள். மூழ்கி எழுந்து பிறகு வெளியில் வந்து விட்டீர்கள் என்றால் மாயாவின் பார்வை பட்டுவிடுகிறது. மூழ்கி விடுங்கள், அப்பொழுது மாயாவின் பார்வையிலிருந்து தூரமாகச் சென்று விடுவீர்கள். வேறு எதுவும் தெரியவில்லை என்றாலும் அன்பின் சக்தி பிறப்பின் வரதானம் ஆகும். அந்த வரதானத்தில் மூழ்கி விடுங்கள். மூழ்கி விடத் தெரியாதா? அன்போ சுலபமானது தான் இல்லையா! அனைவருக்கும் அனுபவம் இருக்கிறது இல்லையா! யாருக்காவது பிராமண வாழ்க்கையில் ஆன்மீக அன்பின் அனுபவம் இல்லை என்று அப்படி யாராவது இருக்கிறீர்களா? யாராவது இருக்கிறீர்களா? அன்பு தான் சகஜயோகம் ஆகும், அன்பில் மூழ்கியிருப்பது தான் சம்பூர்ண ஞானம் ஆகும். இன்றைய தினத்தின் மகத்துவம் கூட அன்பு தான்.

அமிர்தவேளையிலிருந்து விசேஷமாக எந்த அலையிலேயே மிதந்து கொண்டிருக்கிறீர்கள்? பாப்தாதாவின் அன்பிலேயே தான் மிதந்து கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? அனைத்து ஆத்மாக்களின் மனதில் ஒரு தந்தையைத் தவிர வேறு ஏதாவது நினைவு இருந்ததா? சுலபமான நினைவு இருந்தது இல்லையா? அல்லது கஷ்டப்பட வேண்டியது இருந்ததா? அப்படி சுலபமானதாக எப்படி ஆனது.? அன்பின் காரணமாகத் தான். அப்படியானால் இன்றைய தினம் மட்டும் தான் அன்பிற்கானதா? சங்கமயுகமே பரமாத்மா அன்பிற்கான யுகம் ஆகும். அப்படி யுகத்தின் மகத்துவத்தைத் தெரிந்து அன்பின் பிராப்திகளை அனுபவம் செய்யுங்கள். அன்புக்கடல் அன்பின் வைரங்கள், முத்துக்களைத் தட்டுகளில் நிரப்பி கொடுத்துக் கொண்டிருக்கிறார். எனவே தன்னை எப்பொழுதும் நிரப்பிக் கொள்ளுங்கள். சிறிதளவு அனுபவத்திலேயே குஷி அடைந்து விடாதீர்கள். நிரம்பியவர் ஆகுங்கள். எதிர்காலத்திலோ ஸ்தூலமான வைரங்கள், முத்துக்களால் அலங்கரிக்கப்படுவீர்கள். இந்த பரமாத்மா அன்பின் வைரங்கள், முத்துக்கள் கிடைக்காது. எனவே இப்பொழுது இவற்றினால் நிரந்தரமாக அலங்கரிக்கப்பட்டு இருங்கள்.

நாலாபுறத்திலுள்ள குழந்தைகளின் நினைவின், அன்பின் பாடலை பாப்தாதா எப்பொழுதும் கேட்டுக் கொண்டிருக்கிறார் ஆனால் இன்று விசேஷமாக அன்பு சொருப குழந்தைகளின் அன்பிற்கு பிரதி உபகாரமாக எப்பொழுதும் அன்பிற்குரியவராகுக, எப்பொழுதும் அன்பின் வரதானம் மூலமாக சுலபமாக பறக்கும் கலையின் விசேஷ வரதானத்தை மீண்டும் கொடுக்கிறார். எப்படி சின்னக் குழந்தைகள் இருக்கிறார்கள், ஏதாவது கடினமான விஷயம் வருகிறது என்றால் மற்றும் ஏதாவது சூழ்நிலை வந்தது என்றால் தாய், தந்தையின் மடியில் ஒட்டிப் போய் விடுவார்கள். அப்படி ஒரு நொடியில் அன்பின் மடியில் எப்பொழுதும் மூழ்கி விட்டீர்கள் என்றால் கடின உழைப்பிலிருந்து தப்பித்துக் கொள்வீர்கள். ஒரு நொடியில் பறக்கும் கலை மூலமாக பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து விட்டீர்கள் என்றால் எப்பேற்பட்ட சொரூபத்தில் வந்துள்ள மாயா தூரத்திலிருந்து கூட உங்களைத் தொட முடியாது. ஏனென்றால் பரமாத்மா குடை நிழலின் கீழ் என்ன, தூரத்திலிருந்தும் மாயாவின் நிழல் வர முடியாது. அப்படி குழந்தையாவது என்றால் மாயாவிடமிருந்து தப்பித்துக் கொள்வதாகும். குழந்தை யாவது நல்லது தான் இல்லையா? குழந்தையாவதின் அர்த்தமே அன்பில் மூழ்கி விடுவது. நல்லது.

நாலாபுறத்திலுள்ள திலாராம் தந்தையின் மனதில் நிரம்பியிருக்கும் குழந்தைகளுக்கு, எப்பொழுதும் கடின உழைப்பை அன்பில் மாற்றம் செய்யக்கூடிய சக்திசாலியான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் பரமாத்மா அன்பில் சங்கமயுகத்தை மகான் ரூபத்தில் அனுபவம் செய்யக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் அன்பின் சக்தி மூலமாக தந்தையின் துணை மற்றும் ஆசீர்வாதங்களின் கரத்தை அனுபவம் செய்து மற்றவர்களுக்கும் அனுபவம் செய்விக்கக்கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் அன்பின் கடலில் மூழ்கியிருக்கும் சமமான குழந்தைகளுக்கு அன்புக் கடல் பாப்தாதாவினுடைய அன்பு நினைவுகளும், நமஸ்காரமும்.

தாதிகளுடன் சந்திப்பு: இன்றைய தினத்தில் என்னென்ன நினைவு வந்தது? விசேஷமாக வில் பவரின் கையின் நினைவு வந்ததா? வில் பவர் (மனோபலம்) அனைத்து காரியங்களையும் சகஜமாக செய்வித்து விடுகிறது. பிரம்மாபாபாவின் நினைவு அதிகமாக வந்ததா அல்லது

# 1994 அவ்யக்த முரளி

பாப்தாதா இருவரின் நினைவு இருந்ததா? இருந்த போதிலும் பிரம்மாபாபாவின் நினைவின் சரித்திரம் அனைவருக்கும் விசேஷமாக நினைவு வந்து கொண்டே இருந்தது. பிரம்மாபாபா பாப்தாதா இருவரும் இணைந்த பொழுது தான் பிரம்மாவாக ஆனார். பரமாத்மாவின் பிரவேசத்தின் கூடவே தான் பிரம்மாவின் காரியம் ஆரம்பம் ஆனது. இந்த அவ்யக்த சொரூபத்தின் அவ்யக்த ரூபத்தின் சரித்திரம் கூட வித்தியாசமானது மற்றும் பிரியமானது. சேவையின் 25-வருடங்களின் சரித்திரத்தை ஆரம்பத்திலிருந்து நினைவு செய்யுங்கள் -எவ்வளவு வேகமாக நடந்து முடிந்த சரித்திரமாக இருக்கிறது. அவ்யக்தமாவது என்றால் மிக வேகமாக அனைத்துக் காரியமும் நடப்பது. நேரத்தின் மாற்றமும் வேகமாக மற்றும் சேவையின் வளர்ச்சியின் வேகம் கூட அதிவேகமாக இருக்கிறது. வேகமாக ஆனது தான் இல்லையா? எனவே அவ்யக்தம் ஆனதினால் நேரத்திற்கும் அதிவேகம் கிடைத்திருக்கிறது என்றால் சேவைக்கும் அதிவேகம் கிடைத்திருக்கிறது. அவ்யக்த பங்கு நடந்து கொண்டிருக்கும் போது வரக்கூடிய ஆத்மாக்களுக்கும் முயற்சியின் அதிவேகத்தின் பாக்கியம் சகஜமாக கிடைத்திருக்கிறது. அவ்யக்த பங்கில் வந்திருக்கும் ஆத்மாக்களுக்கு லாஸ்ட் ஸோ பாஸ்ட், பாஸ்ட் ஸோ பர்ஸ்ட் என்ற வரதானம் கிடைத்திருக்கிறது. (சபையில் உள்ளவர்களிடம்).

வரதானத்தை நினைவு வரை இல்லாமல் காரியத்தில் ஈடுபடுத்துங்கள். நேரத்திற்கு தகுந்தாற்போல் வரதானத்தை சொருபத்தில் கொண்டு வாருங்கள். ஊரதானத்தை சொரூபத்தில் கொண்டு வருவதினால் இயல்பாகவே அதிவேகத்தை அனுபவம் செய்வீர்கள். அவ்யத்த பாலனை சகஜமாகவே சக்திசாலி ஆக்கக்கூடியது. எனவே எவ்வளவு முன்னேற வேண்டும் என்று விரும்புகிறிகளோ அவ்வளவு முன்னேற முடியும். பாப்தாதா மற்றும் பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்களிடமிருந்து உங்கள் அனைவர் மேலும் விசேஷமாக எப்பொழுதும் முன்னேறிச் சென்று பறப்பதற்கான ஆசீர்வாதங்கள் இருக்கின்றன. அப்படித்தான் இல்லையா? நாதிகளின் ஆசீர்வாதங் களும் இருக்கின்றன. இலாபத்தை மட்டும் எடுங்கள். அதிகமாக கிடைக்கிறது ஆனால் குறைவாக உபயோகிக்கிறீர்கள். புத்தியை ஒருபக்கம் வைத்திருக்காதீர்கள். சாப்பிடுங்கள். செலவு செய்யுங்கள். உபயோகிக்கத் தெரியுமா? செலவு செய்யத் தெரியுமா? அல்லது பாதுகாப்பாக வைக்கிறீர்களா? மிகவும்

நல்லது, மிகவும் நல்லது. இதைப் பாதுகாப்பாக வையுங்கள். நல்லதை தனக்காகவும் மற்றவர்களுக்காகவும் ஈடுபடுத்துங்கள். இங்கு செலவு செய்வது என்றால் அதிகரிப்பதாகும். எப்படி இன்றைய நாட்களின் ஒரு பழக்கம் இருக்கிறது இல்லையா -விலைமதிக்க முடியாத பொருட்கள் இருக்கிறது என்றால் அதை எங்கே வைக்கிறார்கள்? (லாக்கரில்) உபயோகிப்பது இல்லை, லாக்கரில் வைத்து குஷி அடைகிறார்கள். அப்படி ஞானத்தின் கருத்து மிக நன்றாக இருக்கிறது. விதி மிக நன்றாக இருக்கிறது என்று புத்தி என்ற லாக்கரில் பார்த்து குஷி அடைந்து விடுகிறார்கள். அது போல் நீங்கள் அனைவரும் லாக்கரில் வைக்கிறீர்களா அல்லது உபயோகிக்கிறீர்களா? நல்லது,

பாண்டவ சேனை நன்றாக இருக்கிறதா? (நன்றாக இருக்கிறது), நல்லது. நல்லது என்று சொல்பவர்கள் மட்டும் இல்லை தான் இல்லையா. என்ன கட்டளை கிடைக்கிறதோ அதை ஒரு நொடியில் செய்து விடும் மாதிரியான சேவை தயாராகி விட வேண்டும். அந்த மாதிரி தயாராக இருக்கிறதா? சக்திசேனை தயாராக இருக்கிறதா? சக்திகளின் சேவை அவர்களுடையது. பாண்டவர்களின் சேவை அவர் களுடையது. பாண்டவர்களின் உதவி இல்லாமல் கூட சக்திகள் இயங்க முடியாது, சக்திகளின் உதவி இல்லாமல் கூட பாண்டவர்கள் இயங்க முடியாது.

(தாதிஜி மெக்ஸிகோவின் கான்பிரன்ஸ் பற்றிய செய்திகளை பாப்தாதாவிற்கு கூறினார்). நல்லது. விஞ்ஞானத்தை சேர்ந்தவர்களும் கூட காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள், பிரயோகம் செய்வதில் விஞ்ஞானத்தை சேர்ந்தவர்கள் புத்திசாலியாக இருப்பார்கள் அல்லவா? ஆக ஒரு விஞ்ஞானியாவது நல்ல முறையில் யோகி மற்றும் பிரயோகியாக ஆகி விட்டார்கள் என்றால் நல்ல மைக் ஆகி விடுவார்கள்.

(லாஸ் ஏன்ஜலிஸ்'ல் பூகம்பம் வந்திருக்கிறது) சமய அனுசாரம் சமயத்தின் தீவிர வேகத்தினை இயற்கை அடையாளம் காட்டிக் கொண்டிருக்கிறது.

குழுக்களுடன் தனிப்பட்ட சந்திப்பு: பலனின் ஆசையை விட்டுவிட்டு இரக்கமனம் உடையவராகி சுபபாவனையின் விதையை விதைத்துக்

கொண்டே இருங்கள்! பாப்தாதா மூலமாக அனைத்துக் குழந்தைகளுக்கும் இந்த சங்கமயுகத்தில் விசேஷமாக எந்த பொக்கிஷம் கிடைத்திருக்கிறது? பொக்கிஷங்களோ அதிகமாக இருக்கின்றன ஆனால் விசேஷமான பொக்கிஷம் குஷியின் பொக்கிஷம் ஆகும். அப்படி குஷியின் பொக்கிஷம் எவ்வளவு உயர்ந்ததாக கிடைத்திருக்கிறது. அப்படி யானால் இது எப்பொழுதும் உடன் இருக்கிறதா அல்லது எப்பொழுதாவது விலகிச் சென்று விடுகிறதா? எப்பொழுது அளவில்லாமல் கிடைக்கிறது என்றால் ஒவ்வொரு நேரமும் பொக்கிஷத்தைக் காரியத்தில் ஈடுபடுத்த வேண்டும் இல்லையா? மனிதர்கள் தன்னிடமுள்ள பொக்கிஷம் கடைசி நேரத்தில் உபயோகத்தில் வர வேண்டும் என்பதற்காக தனியாக சேர்த்து வைப்பார்கள் ஆனால் உங்களிடமோ அளவில்லாமல் இருக்கிறது. இந்த ஜென்மத்தின் விஷயத்தையோ விட்டு விடுங்கள் ஆனால் அனேக ஜென்மங்கள் இந்த குஷியின் பொக்கிஷம் கூடவே இருக்கும். அளவற்று இருக்கிறது என்றால் உபயோகப்படுத்துங்களேன். பாப்தாதா ஏற்கனவே கூறியிருக்கிறார் உயிரே சென்றாலும் குஷி சென்று விடக்கூடாது. எனவே குஷியை ஒருபொழுதும் ஓரமாக சேர்த்து வைக்காதீர்கள். இன்னும் அதிகமாக மகாதானி ஆகுங்கள். ஏனென்றால் தற்சமயம் மற்ற அனைத்தும் கிடைக்க முடியும் ஆனால் உண்மையான குஷி கிடைக்க முடியாது. அற்பகால குஷி கிடைப்பதற்காக மக்கள் நேரம் மற்றும் பணத்தை எவ்வளவு செலவு செய்கிறார்கள். இருந்த போதிலும் உண்மையான குஷி கிடைப்பதில்லை. எனவே அந்த மாதிரி அவசியமான நேரத்தில் ஆத்மாக்கள் நீங்கள் மகாதானி ஆக வேண்டும். எப்படிப்பட்ட அமைதியில்லாத ஆத்மா, துக்கமான ஆத்மாவாக இருந்தாலும் ஒருவேளை அதற்கு குஷியின் அனுபவத்தை செய்வித்து விட்டீர்கள் என்றால் உள்ளப்பூர்வமாக எவ்வளவு ஆசீர்வாதங்கள் கொடுப்பார்கள். நீங்கள் வள்ளலின் குழந்தைகள் என்றால் பரந்தமனதோடு அதிகமாகக் கொடுங்கள். கொடுக்கத் தெரியும் இல்லையா? பிறகு ஏன் கொடுப்பதில்லை? நேரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? உள்ளத்திலிருந்து இரக்கம் வர வேண்டும். யார் அமைதியின்றி துக்கத்தில் அலைந்து கொண்டிருக்கிறார்களோ அவர்கள் உங்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தான் இல்லையா? குடும்பத்திற்கு சகயோகம் கொடுக்கப்படுகிறது தான் இல்லையா? அப்படி தற்சமயம் மகாதானி ஆவதற்காக விசேஷமாக

இரக்கமனம் என்ற குணத்தை வெளிப்படுத்துங்கள். உங்களுடைய ஜடச்சிலைகள் வரதானம் கொடுத்து கொண்டு இருக்கின்றன. எனவே நீங்களும் சைத்தன்யத்தில் இரக்க மனமுடையவராகி கொடுத்துக் கொண்டே இருங்கள் ஏனென்றால் இவர்கள் பிறர் வசமான ஆத்மாக்கள். இவர்களோ சொல்வதை கேட்பவர்கள் இல்லை, இவர்களோ நாம் சொல்வது போல் நடப்பவர்கள் இல்லை என்று அப்படி ஒருபொழுதும் நினைக்காதீர்கள். நீங்கள் இரக்க மனம் உடையவர்களாக ஆகுங்கள், கொடுத்துக் கொண்டே இருங்கள். பாவனைக்கு பலன் கிடைக்கிறது என்று மஹிமை இருக்கிறது. ஆத்மாக்களில் ஞானத்தின் மேலும் யோகத்தின் மேலும் சுபபாவனை இல்லாமல் இருந்தால் கூட உங்களுடைய சுபபாவனை அவர்களுக்கு பலன் கொடுத்து விடுகிறது. இவ்வளவு சேவை செய்த பிறகும் பலனோ கிடைக்கவில்லை என்று அப்படி நினைக் காதீர்கள் ஆனால் பலன் ஒரே மாதிரி இருப்பதில்லை. சில பழங்கள் ஒரு சில பருவங் களில் மட்டும் இருக்கும், சில பழங்கள் எப்பொழுதும் இருக்கும். அப்படி பருவ காலத்தின் பழம் பருவத்தில் மட்டும் தாள் வரும் இல்லையா? அப்படி நீங்கள் சுப பாவனையின் விதை விதைத்தீர்கள், ஒருவேளை பருவகாலத்து பழமாக இருந்தால் பருவத்தில் கண்டிப்பாக வெளிவரும். விவசாயம் செய்கிறார்கள் அதில் எது பருவத்தில் வருவதாக இருக்கிறது என்றால் இதுவோ ஆறு மாதத்திற்குப் பிறகு பலன் கொடுக்கும். எனவே விதையே விதைக்க வேண்டாம் என்று அப்படி நினைக்க மாட்டார்கள். அதே போல் நீங்களும் விதை விதைத்துக் கொண்டே இருங்கள். நேரம் வரும்பொழுது அனைத்து ஆத்மாக்களும் விழித்தெழ தான் வேண்டும். உங்களுடைய இரக்க பாவனை, சுபபாவனை அவசியம் பலன் கொடுக்கும். ஒருவேளை யாராவது எதிர்ப்பு தெரிவித்தால் கூட நீங்கள் உங்களுடைய இரக்க பாவனையை விடக்கூடாது. மேலும் இந்த எதிர்ப்பு அல்லது இழிவு. தவறான வார்த்தைகள் உரத்திற்கான வேலை செய்யும் என்றே நினையுங்கள். அப்படி உரம் போடுவதினால் நல்ல பலன் கொடுக்கும். எவ்வளவு தீய வார்த்தைகளில் திட்டுவார்களோ அவ்வளவு உங்களுடைய குணத்தை மஹிமை செய்வார்கள். எனவே ஒவ்வொரு ஆத்மாவிற்கும் வள்ளலாகிக் கொடுத்துக் கொண்டே இருங்கள். நல்லதாக நினைத்தால் கொடுக்கலாம் என்று அப்படி வேண்டாம். இவரோ எடுப்பவராகி விட்டாரா? அவர் நல்லது சொன்னால், நல்லது என்று ஏற்றுக் கொண்டால் கொடுக்கலாம் என்று எடுப்பதின் ஆசை

வைக்காதீர்கள். இதைத் தான் வள்ளலின் குழந்தைகள் மாஸ்டர் வள்ளல் என்று கூறப்படுகிறது. உள் உணர்வு மூலமாகவோ, வைப்ரேஷன் மூலமாகவோ, வார்த்தைகள் மூலமாகவோ கொடுத்துக் கொண்டே இருங்கள். இவ்வளவு நிரம்பியவர்களாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? அனைத்துப் பொக்கிஷங்களும் இருக்கின்றனவா? இரட்டை வெளி நாட்டினரைப் பார்த்து பாப்தாதா ஏன் இரட்டைக் குஷி அடைகிறார்? இரட்டை முயற்சி செய்கிறார்கள். ஒன்றோ தன்னுடைய பழக்க வழக்கங்களை மாற்றம் செய்வதற்கான முயற்சியும் செய்கிறார்கள். அதிகமானவரிடம் ஊக்கம் உற்சாகம் நன்றாக இருக்கிறது என்று பாப்தாதா பார்க்கிறார். ஒருவேளை எப்பொழுதாவது ஊக்கம் உற்சாகம் இடையிடையே மேலே கீழே செல்கிறது என்றால் இன்று கூறிய விதிப்படி அன்பில் மூழ்கி விடுங்கள். அன்பின் மடியில் ஒன்றிப் போய் விடுங்கள், பிறகு மாயா வரவே வராது. இதுவோ சுலபம் தான் இல்லையா. விதை ரூபம் ஆவது கடினம், இதில் எந்தவொரு கடினமும் இல்லை. வேறு எதுவும் தெரியவில்லை என்றாலும் அன்பில் மூழ்கியிருக்கத் தெரியுமா அல்லது அதுவும் கடினமா? (இல்லை). அப்படியானால் இதைச் செய்யுங்கள். இப்பொழுது கடினம் என்ற வார்த்தையைக் கூறாதீர்கள். கீழே வந்தீர்கள் என்றால் சின்ன விஷயம் கூட பெரியதாகத் தெரிகிறது. மேலே சென்று விட்டீர்கள் என்றால் பெரியது கூட சிறியதாகத் தென்படும். நீங்கள் பரிஷ்தாவா? அல்லது சாதாரண மனிதனா? (பரிஷ்தா), பரிஷ்தா எங்கிருக்கிறார்கள்? மேலே இருக்கிறார்களா அல்லது கீழேயா? (மேலே). பின்பு கீழே ஏன் இருக்கிறீர்கள், பிடித்தமாக இருக்கிறதா? எப்பொழுதாவது கீழே வர வேண்டும் என்ற விருப்பம் இருக்கிறதா? இல்லை. பிறகு ஏன் கீழே வருகிறீர்கள்? தந்தையின் துணையை விடுகிறீர்கள், அப்பொழுது கீழே வந்து விடுகிறீர்கள். அப்படி இரட்டை வெளிநாட்டினருக்கு இரட்டை முயற்சியின் பிரத்யட்ச பலன் இரட்டை வாய்ப்பாக இருக்கிறது. இதன் இலாபத்தை எடுங்கள். இந்த வருடம் என்ன செய்வீர்கள்? இரட்டை சேவை. மகாதானி, வரதானி ஆவீர்களா? அல்லது நீங்களே தந்தையின் எதிரில் சக்தி கொடுங்கள், மற்றவர்களுக்கும் சக்தி கொடுங்கள் என்று கூறுவீர்களா? மிகவும் நல்லது. தைரியம் வைப்பதில் நல்ல வரிசை எண் எடுத்து விட்டீர்கள். இப்பொழுது வேகமான முயற்சி செய்து முன்னேறிப் பறந்து செல்லுங்கள்.

ஒரே பலம், ஒரே நம்பிக்கை மூலம் சதா ஏக்ரஸ் ஸ்திதியின் அனுபவம் செய்யுங்கள்!

ஸ்திதியின் ஆதாரம் நினைவு, நினைவை மாற்றுவது மூலம் செயலை மேன்மையாக்குங்கள்!

சதா தடையற்றவராக இருப்பதற்காக தனது நெற்றியில் பரமாத்ம ஆசீர்வாதத்தின் கையை அனுபவம் செய்யுங்கள்!

நினைவின் சக்தி மூலம் ஒரு நொடியில் மனம் புத்தியை ஒருநிலைப்படுத்துவது மற்றும் சேவை மூலம் கஜானாக்களை அதிகரிப்பது -இதன் சமநிலைதான் **(balance)** ஆசீர்வாதங்கள் **(blessings)** பெறுவதற்கான சாதனமாகும்!

திருப்தியாயிருக்க திட சங்கல்பம் வைத்தீர்கள் என்றால் வெற்றி சதா கூடவே இருக்கும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 25.01.1994 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிராமணர்களின் இயல்பு விசேஷத்தின் இயல்பாகும் -இதை இயல்பான நினைவு சொரூபமாக்குங்கள்!

இன்று பாப்தாதா தனது அனைத்து உலகத்தின் விசேஷ ஆத்மாக்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். நாடகத்தின்படி ஆத்மாக்கள் உங்களுக்கு எவ்வளவு விசேஷமான பங்கு அடங்கியிருக்கிறது. இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளின் விசேஷங்களைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து ஆஹா! குழந்தை என்ற அன்பின் பாடல் மனதில் இசைத்துக் கொண்டிருந்தது. கூடவே குழந்தைகளின் மனதில் இந்த ஆஹா ஆஹா என்ற பாடல் எப்பொழுதும் வெளியாகிறதா என்று இதையும் பார்த்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு காரியத்தில், ஒவ்வொரு அடியில், ஒவ்வொரு எண்ணத்தில் இந்த உயர்ந்த அனுபவம் இருக்கிறதா? அல்லது எப்பொழுதாவது இருக்கிறதா? சாதாரண வாழ்க்கையானது விசேஷ வாழ்க்கையாக எப்பொழுதும் இயல்பாகவே இருக்கிறதா? எப்பொழுது வாழ்க்கை இருக்கிறது என்றால், வாழ்க்கையின் அர்த்தமே எப்பொழுதும் மற்றும் இயல்பாக இருப்பது, நினைவில் கொண்டு வந்தால் அனுபவம் செய்தீர்கள் மற்றும் நினைவில் கொண்டுவரவில்லையென்றால் விசேஷத்திற்குப் பதிலாக சாதாரண வாழ்க்கை அனுபவம் ஆவது, இது விசேஷ ஆத்மாக்கள் உங்களின் விசேஷத்தன்மை கிடையாது. பிராமண பிறவியே விசேஷ பிறவி ஆகும். யாருடைய பிறவியே விசேஷம் என்றால் அவருடைய வாழ்க்கை என்னவாக இருக்கும்? விசேஷமாக இருக்குமா? அல்லது சாதரணமாக இருக்குமா? பிராமண பிறவியும் உயர்ந்தது. பிராமனை தர்மமும் உயர்ந்தது மற்றும் பிராமணனின் கர்மமும் உயர்ந்தது. ஏனெர்றால் பிராமண பிறவியை கொடுத்தவ'. பிராமண தர்ம ஸ்தாபகர், அனைவரையும் விட மிக உயர்ந்த பரமாத்மா மற்றும் ஆதி ஆத்மா

பிரம்மாபாபா ஆவார்கள். அப்படியானால் படைப்பவர் மிக உயர்ந்தவர் என்றால் படைப்பும் மிக உயர்ந்தது அதாவது விசேஷமானது பிராமணர்களின் கர்மம் ஏன் விசேஷமானது? ஏனென்றால் கர்மம் செய்வதில் பின்பற்றுவதற்காக உங்கள் அனைவரின் எதிரில் உதாரணமாக பிரம்மாபாபா இருக்கிறார். கர்மம் செய்வதில் சாகார பிரம்மாபாபாவைப் பின்பற்றுகிறீர்கள். எனவே பாக்கியத்தை உருவாக்குபவர் அதாவது கர்மம் மூலமாக பாக்கிய ரேகையை உயர்ந்ததாக்கக்கூடியவர் பிரம்மா என்று மகிமை செய்யப்பட்டிருக் கிறது. பாக்கிய ரேகையின் எழுதுகோல் கர்மம் ஆகும். அப்படி உயர்ந்த கர்மத்தின் அடையாளமாக பிரம்மாபாபா இருக்கிறார். எனவே நீங்கள் அனைவரும் விசேஷ முயற்சி செய்வதற்காக தந்தைக்குச் சமமாக வேண்டும் என்ற வார்த்தையை உபயோகிக்கிறீர்கள்.

இந்த அவ்யக்த வருடத்தில் அனைவரின் இலட்சியமாக என்ன இருந்தது? நிராகாரி நிலையில் நிராகார தந்தைக்குச் சமமாக அசரீரி நிலையை அனுபவம் செட்தீர்களா? சாகர கர்மத்தில் பிரம்மாபாபாவுக்குச் சமமாக ஆவதில் வரிசைக்கிரமமாக அனுபவம் செய்தீர்களா? அட்பட விசேஷ வாழ்க்கையின் ஆதாரம் விசேஷ பிறவி, தர்மம் மற்றும் உயர்ந்த கர்மம். லௌகீக வாழ்க்கையில் கூட ஒருவேளை எந்த ஆத்மாவின் பிறவி விசேஷ இராஜ குடும்பத்தில், இராஜகுமாராகவோ அல்லது இராஜகுமாரியாகவோ இருக்கிறது என்றால் இந்த விசேஷத்தன்மை ஜென்மத்திற்கானதாக இருக்கும் காரணத்தால் ஒவ்வொரு நேரமும் எப்பொழுதும் நினைவு இயல்பாகவே இருக்கிறதா? அல்லது நான் இராஜகுமாரி என்று அடிக்கடி நினைவில் கொண்டு வரவேண்டியதாக இருக்கிறதா? சுலபமாக நினைவு இருக்கிறது இல்லையா'? முயற்சி செய்கிறார்களா என்ன? செய்யும் கர்மம் தன்னுடைய விருப்பத்தின் காரணமாக எவ்வளவு தான் சாதாரணமாக இருந்தாலும் தன்னுடைய பிறவியின் விசேஷத்தை மறந்து விடுகிறார்களா என்ன? இயல்பானதாக மற்றும் இயற்கையானதாக ஆகி விடுகிறது. பிராமண ஆத்மாக்கள் உங்களுடைய இயல்பு என்னவாக இருக்கிறது? விசேஷமானதா? அல்லது சாதாரணமானதா? இப்பொழுது கூட சில குழந்தைகள் எப்பொழுதாவது சாதாரண கர்மம் செய்து விடுகிறார்கள் என்றால், தான் அதற்குக் காரணமல்ல என்று நிரூபிப்பதற்கு பாப்தாதா எதிரில் என்ன

கூறுகிறார்கள்? இந்த காரியத்தைச் செய்வதற்கு நான் விரும்பவில்லை; ஆனால் என்னுடைய இயல்பு இல்லையா? அதனால் ஆகி விட்டது என்று கூறுகிறார்கள். அப்படியே! இப்படி சொல்வது மற்றும் நினைப்பது சரியா? நான் யார்? பிராமண வாழ்க்கை உடையவன் தான் இல்லையா? அப்படியானால் பிராமண வாழ்க்கையுடைய ஆத்மா இது என்னுடைய இயல்பு என்று நினைக்க முடியுமா? இப்படிக் கூறுவது சரியா? அப்படியானால் அந்த நேரம் ஏன் கூறுகிறீர்கள்? அந்த நேரம் பிராமணன் பேசுதில்லை, மாயா பேசுகிறது. எப்படி இந்த சாதாரண இயல்பு மற்றும் மாயாவின் இயல்பு இயற்கையாகவே வேலை செய்து விடுகிறது. இல்லையா? எனவே தான் நான் விரும்பவில்லை ஆனாலும் ஆகி விட்டது என்று கூறுகிறார்கள். அப்படி பிராமணனின் இயல்பு அதாவது விசேஷத்தின் இயல்பு கூட இயற்கையானதாக இருக்க வேண்டும். இயற்கையானது எப்பொழுதும் இருக்க முடியும். அப்படியானால் விசேஷ வாழ்க்கையின் நினைவு இயல்பின் ரூபத்தில் இயற்கையானதாக இருக்க வேண்டுமா? அல்லது சில நேரம் மறப்பது சில நேரம் நினைவு இருப்பது என்றிருக்கலாமா? எனவே எப்பொழுதும் நினைவு சொரூபத்தில் இருங்கள். நினைவைக் கொண்டு ருபவராக அன்றி. நினைவு சொரூபமாக இருங்கள். எனவே தான் அவ்யக்த வருடம் நேரப்படி முடிவடைந்தது ஆனால் பாப்தாதாவிற்குச் சமமாகத் தன்னை சம்பன்னமாக ஆக்கினீர்களா? என்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். இந்த அவ்யக்த வருடத்தில் அவ்யக்தம் அதாவது பரிஸ்தா சொரூபம் ஆக வேண்டும். மற்றும் ஆக்க வேண்டும் என்ற விசேஷ இலட்சிடம் ைெபத்தீர்கள், ைஅனவரும் இந்த இலட்சியம் வைத்தீர்கள் இல்லையா? பின்பு முடிவு பிசல்ட்) என்ன வந்தது? உங்களை நீங்களே சோதனை செய்தீர்களா? பரிஸ்தா ஆகுக என்ற வரதானம் கூட வரமளிப்பவரிடமிருந்து கிடைத்தது என்றால் வரதானம் மற்றும் இலட்சியம் என்ற இரண்டின் நினைவினால் எதுவரை வெற்றியை அனுபவம் செய்தீர்கள் என்ற இதைச் சோதனை செய்தீர்களா? அல்லது அவ்யக்த வருடம் முடிவடைந்தது. சக்திக்கேற்றபடி எவ்வளவு தான் அனுபவம் செய்தீர்களா? அல்லது டிராமாப்படி சரியாக இருந்தது என்று அப்படியா? வருட மாற்றத்தின் கூடவே சுயமாற்றத்தின் வேகம் என்னவாக இருந்தது. இந்த விதியில் சோதனை செய்தீர்களா? எப்படி வருடம் முடிந்ததோ அப்படி இலட்சியம் மற்றும் இலட்சணத்தில் சம்பன்னம் ஆனீர்களா? அல்லது இந்த

வருடத்தில் இன்னும் ஆகி விடலாம் என்று நினைக்கிறீர்களா? நேரம் மற்றும் சுயத்தின் வேகம் சமமாக இருந்ததா? டார்க்கப்போனால் நேரத்தை விட சயத்தின் வேகம் அதிகமாக இருக்க வேண்டும். ஏனென்றால் முடிவு நேரத்தை கொண்டு வருவதற்கு விசேஷ ஆத்மாக்கள் நீங்கள் பொறுப்பானவர்களாக இருக்கிறீர்கள். வருடமோ மிக வேகமாக முடிவடைந்து விட்டது. வருடம் முடிவடைந்தது என்று தெரிய வந்ததா? எனவே விசேஷ ஆத்மா என்பதில் மாற்றத்தின் வேகம் தீவிரமாக இருந்ததா? அல்லது அவ்வப்பொழுது தீவிரமாகவும். அவ்வட்பொழுது மத்யமாகவும் இருந்ததா? என்று சோதனை செய்யுங்கள்.

பரிஸ்தா என்றால் யாருக்கு பழைய சம்ஸ்காரம் மற்றும் பழைய உலகத்தோடு ரிஷ்தா 'சம்பந்தம் இல்லை என்பதாகும். எனவே டழைய உலகத்தின் ஏதாவது கவர்ச்சி சம்பந்த ரூபத்திலோ, அல்லது தனது உடல் மேல் கவர்ச்சி ஏதாவது தேசதாரி நடரின் பக்கம் கவர்ச்சி அல்லது ஏதாவது பொருளின் மேல் கவர்ச்சி எத்தனை சதவிகிதம் இருந்தது என்று சோதனை செய்பங்கள். அதேபோல் பழைய சம்ஸ்காரத்தின் கலர்ச்சி எண்ண ரூபத்தில், உள் உணர்வில் ரூபத்தில் வார்த்தைகளின் ரூபத்தில், உறவு நெருக்கத்தில் அதாவது கர்மத்தில் எத்தனை சதவிகிதம் இருந்தது? பரிஸ்தா என்றால் பபுள் வைட். எனவே தனது லைட் னொரூப நினைவு சொரூபத்தில் எவ்வளவு இருந்தீர்கள்? கூடவே வைலட் என்றால் சுமையற்ற லேசான தன்மை சுய மாற்றத்தின் முயற்சியில் எவ்வளவு வைட் அதாவது லேசாக இருந்தீர்கள்? மனம் அதாவது எண்ண சக்தியில் வீணானதை பயனுள்ளதில் மாற்றம் செய்வதில் அதாவது வினானதின் சுமையை லேசாக ஆக்குவதில் எவ்வளவு வெற்றி அடைந்தீர்கள்? இந்த விதமாக விணான நேரம், விசான சேர்க்கை. வீணான சூழ்நிலை, இவை அனைத்திலும் மாற்றம் செய்வதில் எவ்வளவு லேசாக இருந்தீர்கள்? பிராமணக் குடும்பத்தின் சம்பந்தத்தில் சேவையின் சம்பந்தத்தில் எவ்வளவு லேசாக இருந்தீர்கள்? இதைத்தான் பரிஷ்தா தன்மை மிக வேகமான நிலை என்று கூறுவது. இந்த விதியில் சோதனை செய்யுங்கள் மற்றும் எதிர்காலத்திற்காக மாற்றம் செய்யுங்கள். தன்னுடைய பிராமண பிறவியின் விசேஷத்தை இயற்கையான இயல்பு ஆக்குவது, இதைத்தான் சகஜமான முயற்சி என்று கூறுவது. நான் ஒரு விசேஷ

ஆத்மா என்ற நினைவு சொரூபத்தில் மட்டும் நிலைத்து விட்டீர்கள் என்றால் தந்தைக்குச் சமமாக ஆவது மிகச் சுலபமானதாக அனுபவம் செய்வீர்கள். ஏனென்றால் நினைவு சொரூபத்திலிருந்து சக்திசாலியான சொரூபமாகி விடுகிறீர்கள். வருடம் முடிந்து விட்டது. பாப்தாதா ரிஸ்ட்டைப் பார்ப்பார் தான் இல்லையா? அப்படி ரிசல்ட்டில் சக்திக்கேற்றபடி அதிகமானவர்கள் இருக்கிறார்கள். மேலும் எப்பொழுதும் சக்திசாலியானவர்கள் சக்திக்கேற்றபடி அதிகமானவர்களில் குறைவாக இருக்கிறார்கள். நினைவு நாளைக்கூட மிக அன்போடு கொண்டாடினீர்கள். எப்படி விசேஷமாக அன்போடு கொண்டாடினீர்கள். அதேபோல் அன்பின் நிரூபணமாக தந்தைக்குச் சமமாக நினைவு சொரூபமாக ஆகவே தான் வேண்டும். ரிசல்ட்டைக் கேட்டீர்களா? தொடர்ந்து இன்னும் என்ன செய்வீர்கள்? சக்திக்கேற்றபடியா? அல்லது எப்பொழுதும் சக்தி சொரூபமா? இந்த வருடம் அதிகமானவர்கள் எப்பொழுதும் சக்திசாலியான நிலையில் இருந்தோம் என்பதற்கு நிரூபணம் எவ்வளவு கொடுக்கிறார்கள் என்று பார்க்கலாம். டீச்சர்ஸ் என்ன நினைக்கிறீர்கள்? எந்த வரிசையில் வருவீர்கள்? எப்பொழுதும் சக்திசாலியான நிலை. அனைவரின் போட்டோவும் எடுக்கப்பட்டு கொண்டு இருக்கிறது. என்ன ஆனாலும் சரி, எப்படிப்பட்ட சூழ்நிலை உருவானாலும் சரி எப்பொழுதும் சக்திராலியான நிலையில் இருக்க வேண்டும். யார் யார் எந்த குருப்பில் வரலாம் என்ற பெயர் குறிக்கப்படுகிறது இல்லையா? இப்பொழுது டீச்சர்களின் மாநாடு நடக்கப்போகிறது தான் இல்லையா? அதுவரை அனைத்து மச்சர்களின் ரிசல்ட் என்னவாக இருக்கும்? யாருக்குச் செய்ய வேண்டும் என்றிருக்கிறதோ அவருக்கு எப்பொழுது என்பது இருக்காது. அப்படி நினைப்பதில்லை. உறுதியான எண்ணத்தின் அர்த்தம் இப்பொழுது என்பதாகும். சாதாரண எண்ணத்தின் அர்த்தம் எப்போதாவது ஆகி விடும். அப்படியானால் நீங்கள் எப்பொழுது என்பவர்களா? இப்பொழுது என்பவர்களா? சக்தி சேனை மிகப் பெரிய சேனை, எப்பொழுது என்பவர்களா அல்லது இப்பொழுது என்பவர்களா? பாண்டவர்கள் என்ன நினைக்கிறீர்கள்? பாருங்கள். அனைவரின் பெயரும் குறிக்கப்படுகிறது இப்பொழுது பெயரைக் கூறமாட்டோம். கடைசியில் பெயரைக் கூறக்கூட்ய அந்த நேரமும் வந்து விடும். புரிந்ததா?

மிக அதிகமான எண்ணிக்கையில் எந்த மண்டலத்திலிருந்து (ஜோன் வந்திருக்கிறார்கள். பஞ்சாப் மற்றும் இந்தூர் என்ன அதிசயம் செய்டப்போகிறார்கள் என்று பார்க்கலாம். டீச்சர்களும் அதிகமாக வந்திருக்கிறார்கள். எண்ணிக்கை அதிகமாக இருந்தால் டீச்சர்களும் அதிகமாக இருக்கிறார்கள். பஞ்சாப்பைச் சேர்ந்தவர்கள் நம்பர் ஒன் எடுப்பீர்களா? இல்லது இரண்டா? இந்தூரும் நம்பர் ஒன் எடுப்பீர்களா? மேலும் கர்நாடகா என்ன செய்வீர்கள்? எந்த நாடகத்தைக் காண்பிப்பீர்கள்? கர்-நாடகம், எனவே ஹீரோ நாடகம் காண்பியுங்கள். ஏதோ சாதாரணமானதைக் காண்பிக்காதீர்கள். மேலும் மகாராஷ்டிராவோ மாகானாக ஆவீர்கள் தான் இல்லையா? மேலும் உத்திரப்பிரதேசத்தை என்ன சொல்கிறார்கள். உத்திரப் பிரதேசத்தில் நதிகள் இருக்கின்றன அதாவது பதிதமானவர்களை தூட்மையற்றவர்களை) பாவனமாக்குபவர்கள். பாவனம் தூய்மை! ஆவது மற்றும் ஆக்குவதில் முதல் நம்பர். அப்படியானால் உத்திரபிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் நம்பர் ஒன் ஆவார்கள். இந்த நேரம் யாரையும் இரண்டாம் நம்பர் என்று கூற மாட்டோம். இராஜஸ்தானோ அகிர்ஷ்டம் நிறைந்தது ஏனென்றால் பாபாவின் கர்ம பூமியே இராஜஸ்தானில் தான் இருக்கிறது. தலைமையகம் இராஜஸ்தானில் இருக்கிறது இல்லையா? அப்படியானால் எங்கு தலைமையகம் இருக்கிறதோ அவர்கள் என்ன ஆவார்கள்? தலைமை ஆவார்கள் தான் இல்லையா? அனைவரும் நம்பர் ஒன் ஆவோம் என்று குஷியோடு கூறுகிறார்கள் ஆனால் அங்கு அவரவர்கள் இடத்திற்கு சென்ற பிறகு என்ன செய்வது.. செய்ய முடியவில்லை. விரும்பவில்லை தான் ஆனால் ஆகி விடுகிறது என்று கூறாதீர்கள். இந்த மாதிரி வார்த்தையை நினைக்கக் கூடக்கூடாது நல்லது, இரட்டை வெளிநாட்டினரும் சேவை என்ற டந்தயத்தில் நன்கு முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் மற்றும் பந்தயத்தில் நம்பர் ஒன்னாக வரவேண்டும் இல்லையா? உள்நாட்டினருக்கு தைரியம் கொடுப்பதற்கு வெளிநாட்டினர் நல்ல காரணமாகி விட்டார்கள், இந்த மாதிரி தைரியம் கொடுப்பதின் காரணமாக அதிகப்படியான உதவியும் கிடைக்கிறது. புரிந்ததா? இதை நினைவில் வைத்து எளிதில் முன்னேறிச் செல்லுங்கள். மற்றும் முன்னேற்றிக் கொண்டே இருங்கள். நல்லது.

நாலாபுறத்திலுமுள்ள அனைத்து விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் சாகார பிரம்மாபாபாவின் சிரேஷ்ட கர்மங்களை பின்பற்றக் கூடிய கர்மயோகி ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் விசேஷங்களை இயற்கையாக மற்றும் இயல்பாக ஆக்கக்கூடிய கோடியில் சிலரான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் உறுதியான எண்ணம் மூலம் விசேஷ பிறவி, தர்மம் மற்றும் கர்மத்தின் நினைவு சொரூப ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் விசேஷங்கள் நிறைந்த அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

தாதிகளுடன் சந்திப்பு: பிராமணர்கள் நீங்கள் எவ்வளவு நிரம்பியவர்களாக ஆகிக் கொண்டேயிருப்பீர்களோ அவ்வளவு இயற்கையும் எதிர்காலத்தில் உயர்ந்த நிலையை பிராப்தி செய்யும், ஏனென்றால் இயற்கையும் அவ்வப்போது தனது அறிகுறிகளைக் காண்பித்துக் கொண்டிருக்கிறது. எவ்வளவு இயற்கையின் குழப்பமோ அவ்வளவு ஆடாத அசையாத நிலையானது இயற்கையை மாற்றம் செய்யும். எவ்வளவு ஆத்மாக்கள் அவ்வப்போது துக்க அலைகளில் வருகிறார்கள். அந்த மாதிரி துக்கமான ஆத்மாக்களுக்கு ஆதரவு தந்தையும் நீங்கள் மட்டும் தான். எனவே இரக்கம் வருகிறது இல்லையா? செட்தியைக் கேட்கும்பொழுது மனதில் என்ன எண்ணம் வருகிறது? ஒன்றும் புதிதல்ல என்பதோ தன்னுடைப ஆடாத அசையாத நிலைக்காகவோ சரி தாள் ஆனால் இயற்கையின் குழப்பத்தில் ஆத்மாக்கள் கதறுகிறார்கள் என்றால் யாரை அழைத்து கதறுகிறார்கள். எப்பொழுது இரக்கம், கருணை கேட்கிறார்கள் என்றால் உங்களுக்கு அவர்களின் இரக்கம் கேட்டு எழுப்பம் கூக்குரல் வந்து சேருகிறது இல்லையா? இந்த சின்ன சின்ன அழிவுகள் இன்னும் துடிக்க வைக்கின்றன, பிராமணர்கள் முழுமையாகி விட்டார்கள் என்றால் துக்கமான உலகம் முடிந்து விடும். அப்படி இரக்கம் வருகிறதா இல்லையா? இரக்கம் வருகிறது என்றால் பிறகு என்ன செய்கிறீர்கள்? இருந்தாலும் ஈஸ்வரியக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தான் இல்லையா? அப்படியானால் குடும்பத்தில் ஏதாவது துக்கத்தை சுகத்தில் மாற்ற வேண்டும் என்ற எண்ணமோ வருகிறது தான் இல்லை.யா? குடும்பத்தில் யாராவது நோயுற்றார் என்றால் என்ன எண்ணம் வருகிறது? விரைவில் ரியாகி விடவேண்டும் என்பது தானே. கதறிக் கதறி இறப்பது; மேலும் ஒரு அடியில் மாறிவிடுவது இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது இல்லையா? மகா விநாசம் மற்றும்

ஒத்திகையின் விநாசம் இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது இல்லையா? மகா விநாசம் என்றால் மகான் பரிவர்த்தனை (மாற்றம்) அதற்குப் பொறுப்பாக நீங்கள் இருக்கிறீர்கள். சம்பன்னம் ஆனீர்கள் என்றால் முடிவு ஏற்பட்டு விடும். பிரச்சனைகளில் இருப்பவர்கள் விரைவில் பிரத்பகத்தின் திரை விலகட்டும் என்று நினைக்கிறார்கள் ஆனால் மேடையில் வரும் ஹீரோ நடிகர் தயார் ஆகவேண்டும் இல்லையா? அப்பொழுது தானே திரை விலகும் அல்லது பாதியிலேயே விலகி விடுமா? மாற்றத்தின் சுபபாவனையை தீவிரப்படுத்துவது என்றால் தீவிர வேகத்தில் சம்டன்னம் ஆக்குவது. நீங்களும் சில நேரம் ஒரு மாதிரியும். வேறு சில நேரம் வேறு மாதிரியும் இருக்கிறீர்கள் என்றால் இயற்கையும் சில நேரம் மிக அதிவேகமாக காரியம் செ.ய்கிறது மேலும் சில நேரம் அமைதியாகி விடுகிறது. எனவே இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? இரக்க பாவனையை வெளிப்படுத்துங்கள். தனக்காகவும். மற்றவர்களாகவும் இருக்கிறது தான் இல்லையா? அலையைப் பரப்புங்கள். இரக்கப் பாவனை மூலமாக தடைகள் கூட சுலபமாக முடிந்து விடும். எங்கு இரக்கம் இருக்குமோ, அங்கு உனது. எனது என்பதின் குழப்பம் இருக்காது. கருணை நிறைந்த பூஜ்ய சொரூபத்தைத் தாரணை செய்யங்கள். சரியா. இப்பொழுது இந்த அலையைப் பரட்புங்கள். ஒவ்வொரு எண்ணமும் கருணை நிறைந்ததாக இருக்கட்டும். எண்ணத்தில் இருக்கிறது என்றால் வார்த்தைகள் மற்றும் செயல்களில் தானளாகவே வந்து விடும். அனைவரும் என்ன சொல்லிக் கதறுகிறார்கள்? கருணை. கருணை நல்லது.

குழுக்களுடன் தனிப்பட்ட சந்திப்பு (சாரம்):

மாயாவின் நிழலிலிருந்து தப்பிப்பதற்கான சாதனம் -பாப்தாதாவின் குடை நிழல்!

அடிமைத்தனத்திற்கு முடிவு கட்ட அதிகாரத்தின் ஆன்மீக போதையில் இருங்கள்!

புனித அன்னப்பறவை ஆவதற்கான சாதனம் -மனம் புத்தியின் தூய்மை மற்றும் ஞானரத்தினங்களின் தாரணை!

அன்னப்பறவையின் விசேஷம் கல்லைத் தவிர்த்து முத்தை எடுப்பது மற்றும் தண்ணீரையும் பாலையும் பிரித்து எடுப்பது, அதாவது நிர்ணயசக்தி.

# 1994 அவ்யக்த முரளி

தீய மற்றும் வீணான தொடர்பிலிருந்து தப்பிப்பதற்காக சதா ஈஸ்வரிய தொடர்பில் இருங்கள்!
சுக வள்ளலின் குழந்தைகள் மாஸ்டர் சுக வள்ளல் ஆகுங்கள் -துக்கம் கொடுக்கக் கூடாது, துக்கம் எடுக்கவும் கூடாது!

வரதானம்: ஒளியின் (லைட்) ஆதாரத்தில் ஞானம் யோகத்தின் சக்திகளை பிரயோகம் செய்யக்கூடிய பிரயோகசாலி ஆத்மா ஆகுக!

எப்படி இயற்கையின் ஒளி அறிவியலின் அனேக விதமான பிரயோகத்தை நடைமுறையில் செய்து காண்பிக்கிறது அதேபோல் அழியாத பரமாத்மா ஒளி ஆத்ரீக லைட் மற்றும் கூடவே நடைமுறை நிலையின் லைட் மூலம் ஞானம் போகத்தின் சக்திகளைப் பிரயோகம் செய்யுங்கள். ஒருவேளை நிலை மற்றும் சொரூபம். ட்புள் வைட்டாக இருக்கிறது என்றால் பிரயோகத்தின் வெற்றி மிகச் சுலபமாக கிடைக்கிறது. எப்பொழுது ஒவ்வொருவரும் தனக்காக பிரயோகத்தில் ஈடுபட்டுவிட்டார் என்றால் பிரயோகசாலி ஆத்மாக்களின் சக்திசாலியான குழு உருவாகி விடும்.

சுலோகன்: தடைகளின் அம்சம் மற்றும் வம்சம் இரண்டையும் முடிவு கட்டுபவர் தான் விக்ன விநாசக் ஆவார்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

## 01.02.1994 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# திரிகாலதரிசி நிலை என்ற உயர்ந்த ஆசனம் மூலமாக எப்பொழுதும் வெற்றி அடைபவர் ஆகுங்கள்!

இன்று திரிகாலதரிசி பாப்தாதா தன்னுடைய அனைத்து மாஸ்டர் திரிகாலதரிசி குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். திரிகாலதரிசி ஆவதற்கான சாதனமாக பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் தெய்வீக புத்தியின் வரதானமாக பிராமண ஜென்மத்தின் விசேஷ பரிசைக் கொடுத்திருக்கிறார். ஏனென்றால் தெய்வீக புத்தி மூலமாகத் தான் தந்தையை, தன்னைத் தானே மற்றும் மூன்று காலங்களையும் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். தெய்வீக புத்தி மற்றும் நினைவு மூலமாகத் தான் அனைத்து சக்திகளின் தாரணை செய்ய முடியும். ஆகவே தெய்வீக புத்தி முதல் வரதானம் ஆகும். இந்த வரதானத்தை பாப்தாதா அனைத்துக் குழந்தைகளுக்கும் கொடுத்திருக்கிறார் ஆனால் இந்த வரதானத்தை நடைமுறை வாழ்க்கையில் வரிசைக்கிரமமாக காரியத்தில் ஈடுபடுத்துகிறீர்கள். தெய்வீக புத்தி திரிகாலதரிசி நிலையின் அனுபவும் செய்விக்கிறது. நான்கு பாடங்களையும் தாரணை செய்வதற்கான ஆதாரம். தெய்வீக புத்தி ஆகும். நான்கு பாடங்களையும் அனைத்து குழந்தைகளும் நன்றாகத் தெரிந்திருக்கிறீர்கள், வர்ணனையும் செய்கிறீர்கள். தெரிந்து கொள்வது மற்றும் வர்ணனை செய்வது என்பது அனைவருக்குமே வரும். புதியவர்கள் மற்றும் பழையவர்கள் அனைவருமே இதில் புத்திசாலிகள் தான் ஆனால் தாரணை செய்வதில் தான் வரிசைக்கிரமமாக ஆகி விடுகிறார்கள். தெய்வீக புத்தியின் விசேஷங்களை தெய்வீகபத்தி உடைய ஆத்மாக்கள் எந்தவொரு எண்ணத்தையும் காரியம் மற்றும் வார்த்தைகளில் கொண்டு வரும் நேரம், ஒவ்வொரு வார்த்தை மற்றும் ஒவ்வொரு காரியத்தையும் மூன்று காலங்களினால் தெரிந்து பிறகு நடைமுறையில் வருகிறார்கள்.

இது தான் தெய்வீக புத்தியின் விசேஷம் ஆகும். சாதாரண பத்தி உடைய ஆத்மாக்கள் அதிகபட்சம் தற்சமயத்தைத் தெளிவாகத் தெரிந்திருக்கிறார்கள். ஆனால் எதிர்காலம் மற்றும் கடந்த காலத்தை தெளிவாகத் தெரிந்திருக்கவில்லை. தெய்வீக புத்தி உடைய ஆத்மாவிற்கு நிகழ்காலம் எப்படி தெளிவாக தெரிகிறதோ அதே போல் கடந்த காலம் மற்றும் எதிர்காலமும் அந்த அளவே தெளிவாக இருக்கும். மூன்று காலங்குளும் கூட கூடவே தெளிவாக அனுபவம் ஆகிறது. என்ன நினைக்கிறீர்கள், என்ன செய்கிறீர்கள், என்ன பேசுகிறீர்கள் இவற்றை முன்னும் பின்னும் யோசித்து புரிந்து செய்யுங்கள் என்று அனைவரும் கூறத்தான் செய்கிறார்கள். காரியம் செய்வதற்கு முன்பு விளைவுகளை எதிரில் வையுங்கள், விளைவு என்பது எதிர்காலம் ஆகும். திரிகாலதரிசி பத்தி தான் நம்பர் ஒன் ஆகும். திரிகாலதரிசி புத்தி ஒருபொழுதும் தோல்வியை அனுபவம் செய்விக்காது ஆனால் குழந்தைகளில் மூன்று விதமான புத்தியுடையவர்கள் இருக்கிறார்கள். முதல் நம்பராக ஏற்கனவே கூறியது போல் எப்பொழுதும் திரிகாலதரிசி புத்தி உடையவர்கள். இரண்டாம் நம்பரில் சில நேரம் திரிகாலதரிசி மற்றும் சில நேரம் ஒரு காலதரிசியாக இருப்பவர்கள். மூன்றாம் நம்பரில் அலட்சிய புத்தி உடையவர்கள், அதாவது யார் எப்பொழுதும் நிகழ்காலத்தை பார்ப்பவர்களாக இருப்பவர்கள். இப்பொழுது என்ன நடந்து கொண்டிருக்கிறதோ அல்லது கிடைத்துக் கொண்டிருக்கிறதோ இதில் சரியாக இருக்க வேண்டும். எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று இதைப் பற்றி நாம் ஏன் யோசிக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள் ஆனால் அலட்சிய புத்தி உடையவர்கள் முதல், இடை, கடையை நினைக்காததினால் எப்பொழுதும் வெற்றியை பிராப்தி செய்வதில் ஏமாற்றம் அடைந்து விடுகிறார்கள், எனவே திரிகாலதரிசி புத்தி உடையவராக ஆக வேண்டும். திரிகாலதரிசி நிலை என்பது அப்பேர்பட்ட உயர்ந்த ஆசனம் ஆகும். அந்த ஆசனம் அதாவரும்

திரிகாலதரிசி நிலை மூலமாக தானும் எப்பொழுதும் வெற்றி அடைபவர் மற்றும் மற்றவர்களையும் வெற்றி அடைபவராக ஆக்குவதின் சக்தி மற்றும் சகயோகம் கொடுக்கக்கூடியது. தெய்வீக புத்தி விசால புத்தி ஆகும். தெய்வீக புத்தி என்பது எல்லைக்கு அப்பாற்பட்ட புத்தி ஆகும். எனவே தன்னுடைய புத்தி எந்த நம்பரில் உருவாக்கப்பட்டிருக்கிறதூ

என்று சோதனை செய்யுங்கள்.அனைத்து குழந்தைகளிடமும் ஞானம், குணம், சக்திகளின் பொக்கிஷம் சேமிப்பாகியிருக்கிறது இருந்தாலும் சேமிப்பாகியும் கூட வரிசைக்கிரமமாக ஏன் இருக்கிறார்கள்? என்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். பொக்கிஷமே சேமிப்பாகவில்லை என்று அப்படி யாருமே தென்படவில்லை? எல்லோரிடமும் சேமிப்பாகி உள்ளது தானே. பிறகு ஏன் வரிசைக்கிரமம்? ஒருவேளை யாரிடமாவது தன்னைப் பற்றிய ஞானம், தந்தையைப் பற்றிய ஞானம், படைப்புச் சக்கரத்தின் ஞானம் மற்றும் கர்மத்தின் விளைவுகளின் ஞானம் இருக்கிறதா என்று அனைவரிடமும் கேட்டால் என்ன பதில் கிடைக்கும்? அனைவரிடமும் அனைத்து சக்திகளும் இருக்கிறதா? சில இருக்கின்றன மற்றும் சில இல்லை என்று அப்படியா. ஞானத்தைப் பற்றிய கேள்விக்கு அனைவரும் ஆம் என்று சொன்னார்கள் மற்றும் சக்திகளைப் பற்றியதில் ஏன் ஆம் என்று சொல்லவில்லை? சரி, அனைத்து குணங்களும் இருக்கின்றனவா? அனைத்து குணங்களும் புத்தியில் இருக்கின்றதா? புத்தியில் ஞானமும் இருக்கின்றது. சக்திகளும் இருக்கிறது என்றால் பிறகு வரிசைக்கிரமம் ஏன்? என்ன வித்தியாசம் ஏற்படுகிறது? பொக்கிஷங்களை விதிப்பூர்வமாக காரியத்தில் ஈடுபடுத்தத் தெரியவில்லை. காலம் கடந்து சென்று விடுகிறது அதன் பின்பு இப்படி செய்திருந்தால், இந்த விதிப்படி நடந்து கொண்டிருந்தால் வெற்றி கிடைத்திருந்திருக்கும் என்று யோசிக்கிறார்கள். அப்படி நேரத்தைத் தெரிந்து கொள்வது மற்றும் நேரத்திற்கு ஏற்ப சக்தி மற்றும் குணம் மற்றும் ஞானத்தை காரியத்தில் ஈடுபடுத்துவது இதற்காக தெய்வீக புத்தியின் விசேஷம் அவசியமாக இருக்கிறது. ஞானத்தின் விஷயங்களை அதிகமாக சிந்தித்து கொண்டே இருக்கிறார்கள், மற்றவர்களுக்கு கூறவும் செய்கிறார்கள், கைப்பிரதிகளும், நோட்டு புத்தகங்களும் நிரம்பி இருக்கிறது. அனைவரிடமும் எத்தனை நோட்டு புத்தகங்கள் ஒன்றாக சேர்ந்திருக்கும், அதிகமாக ஸ்டாக் நிரம்பி விட்டது இல்லையா. எப்படி தந்தையின் மகிமையாக நான் என்னவாக இருக்கிறேன், எப்படி இருக்கிறேன் அப்படியே என்னைத் தெரிந்து கொண்டவர்கள் கோடியில் சிலர் தான் என்றிருக்கிறது. அனைவரும் தெரிந்திருக்கிறார்கள் ஆனால் என்னவாக இருக்கிறேன், எப்படி இருக்கிறேன் என்று தெரிந்து கொள்வதில் தான் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. அதே போல் எப்படிப்பட்ட நேரம் மற்றும் எந்த ஞானத்தின் விஷயம் அல்லது குணம்

அல்லது சக்தியின் அவசியம் இருக்கிறதோ அப்படி காரியத்தில் ஈடுபடுத்துவதில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது மேலும் இந்த வித்தியாசத்தின் காரணமாக வரிசை எண் உருவாகி விடுகிறது. ஆகவே காரணம் என்னவென்று புரிந்து கொண்டீர்களா? ஒன்றோ நேரத்திற்கு ஏற்றபடி விதியில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது, இரண்டாவது எந்தவொரு காரியம் மற்றும் எண்ணத்தை திரிகாலதரிசியாகி செய்வதில்லை, எனவே வரிசை எண் உருவாகி விடுகிறது. எந்தவொரு எண்ணமும் புத்தியில் வருகிறது என்றால் எண்ணம் விதை ஆகும், வார்த்தைகள் மற்றும் செயல்கள் விதையின் விஸ்தாரம் ஆகும். ஒருவேளை எண்ணம் அதாவது விதையை திரிகாலதரிசி நிலையில் நிலைத்திருந்து சோதனை செய்து, சக்திசாலியாக ஆக்கினீர்கள் என்றால் வார்த்தைகள் மற்றும் காரியங்களில் இயல்பாகவே எளிதான வெற்றி இருக்கவே இருக்கும். எண்ணத்தை சோதனை செய்யவில்லை அதாவது விதை சக்திசாலியானதாக இல்லை என்றால் வார்த்தைகள் மற்றும் செயலிலும் வெற்றி அடைவதற்கான சக்தி இருப்பதில்லை. அனைவரின் லட்சியமும் சித்தி (வெற்றி) சொரூபம் ஆவதற்கானவை தான் இல்லையா, அப்படியானால் எப்பொழுதும் சித்தி சொரூபம் ஆவதற்கான விதியாக என்ன கூறினோமோ அதை சோதனை செய்யுங்கள். இடையிடையே புத்தி கவனக்குறைவானதாக ஆகி விடுகிறது எனவே சில நேரம் வெற்றியை அனுபவம் செய்கிறீர்கள் மற்றும் சில நேரம் கடின உழைப்பை அனுபவம் செய்கிறீர்கள்.

பாப்தாதாவிற்கு அனைத்து குழந்தைகள் மேல் இருக்கும் அன்பின் அடையாளமானது அனைத்து குழந்தைகளும் எப்பொழுதும் சுலபமாக சித்தி சொரூபம் ஆகிவிடவேண்டும் என்பது தான். உங்களுடைய ஜடச்சிலைகள் மூலமாக பக்த ஆத்மாக்கள் சித்தியை பிராப்தி செய்து கொண்டிருக்கிறார்கள் என்றால் சைத்தன்யத்தில் சித்தி சொரூபமாக ஆகியிருக்கிறீர்கள் அப்பொழுது தான் ஜடச்சிலைகள் மூலமாகவும் மற்ற ஆத்மாக்கள் சித்தியை பிராப்தி செய்து கொண்டிருக்கிறார்கள். யார் திரிகாலதரிசி நிலையில் நிலைத் திருக்கிறார் என்றால் திரிகாலதரிசி நிலை சக்திசாலியான நிலை ஆகும். இந்த சக்திசாலியான நிலையில் இருப்பவர் கனவில் கூட வீணானது இல்லாத அளவிற்கு வீணானவைகளை சுலபமாக அகற்றி விடுகிறார்கள். ஒருவேளை திரிகாலதரிசி புத்தி மூலமாக காரியம் செய்யவில்லை என்றால்

வீணானதின் சுமை அடிக்கடி உயர்ந்த நம்பரில் அதிகாரி ஆக விடுவதில்லை. எனவே தெய்வீக புத்தியின் வரதானத்தை எப்பொழுதும் ஒவ்வொரு நேரமும் காரியத்தில் ஈடுபடுத்துங்கள்.

ஞானி யோகி ஆத்மாக்களாகவோ ஆகியிருக்கிறீர்கள், இப்பொழுது ஞானம் மற்றும் யோகத்தின் சக்தியை பிரயோகத்தில் கொண்டு வரும் பிரயோகி (பயன்படுத்தும்) ஆத்மாக்களாக ஆகுங்கள் என்று பாப்தாதா ஏற்கனவே சைகை (இஷாரா) கொடுத்திருக்கிறார். எப்படி அறிவியல் சக்தியின் பிரயோகம் பார்க்கத் தென்படுகிறது இல்லையா, ஆனால் அறிவியல் சக்தியின் பிரயோகத்தின் மூல ஆதாரமாக கூட என்ன இருக்கிறது? இன்று அறிவியலை பிரயோகித்து என்னென்ன சாதனங்கள் கொடுத்திருக்கிறார்களோ அந்த அனைத்து சாதனங்களின் ஆதாரம் என்ன? அறிவியலின் பிரயோகத்தின் ஆதாரம் என்ன? பெரும்பான்மையாக லைட் (மின்சாரம்) என்பதாக பார்ப்பீர்கள். ஒளியின் மூலமாகத்தான் பிரயோகம் ஆகிறது. கணினிகளின் இயக்கம் எதன் ஆதாரத்தில் நடக்கிறது? கணினி சக்தி மிகுந்தது தான் ஆனால் அடிப்படை ஆதாரம் ஒளி அல்லவா? அப்படியானால் உங்களுடைய அமைதி சக்தியின் ஆதாரமாக என்ன இருக்கிறது? ஒளி தான் இல்லையா. எப்பொழுது அவர்கள் இயற்கையின் லைட் (சக்தி) மூலமாக ஒரு லைட் அனேக விதமான பிரயோகத்தை நடைமுறையில் செய்து காண்பிக்கிறது என்றால் உங்களுடைய அழியாத பரமாத்மா சக்தி ஆத்மீக சக்தி மற்றும் கூடவே நடைமுறை நிலையின் சக்தி எதைத்தான் பிரயோகத்தில் கொண்டு வர முடியாது. உங்களுடைய நிலை கூட லைட் தான் மற்றும் மூல சொரூபம் கூட லைட் தான். எப்பொழுதாவது ஏதாவது பிரயோகத்தில் கொண்டு வர விரும்பினீர்கள் என்றால் முதலில் தன்னுடைய மூல ஆதாரத்தை சோதனை செய்யுங்கள். எப்படி ஏதாவது அறிவியல் சாதனத்தை உபயோகிக்கிறார்கள் என்றால் லைட் இருக்கிறதா இல்லையா என்று முதலில் சோதிப்பார்கள் இல்லையா. அதே போல் எப்பொழுது யோகத்தின், சக்திகளின் மற்றும் குணங்களை பிரயோகத்தில் கொண்டு வருகிறீர்கள் என்றால் முதலில் மூல ஆதாரமாகிய ஆத்மீக சக்தி பரமாத்மா சக்தி மற்றும் லைட் (லேசான) நிலை இருக்கிறதா? என்று சோதனை செய்யுங்கள். ஒருவேளை நிலை மற்றும் சொரூபம் டபுள்

லைட்டாக இருக்கிறது என்றால் பிரயோகத்தின் வெற்றி வெகு சுலபமாக கிடைக்க முடியும். நல்லது.

நாலா புறத்திலுள்ள மாஸ்டர் திரிகாலதரிசி குழந்தைகளுக்கு, எப்பொழுதும் நேரத்தின் மகத்துவத்தை தெரிந்து கொள்ளும் மற்றும் நேரத்திற்கேற்றபடி பொக்கிஷங்களை காரியத்தில் ஈடுபடுத்தக் கூடிய தெய்வீக புத்தியுடைய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் உள்நோக்குமுகம் என்ற பரிசோதனைக் கூடத்தில் பிரயோகப்படுத்திப் பார்க்கும் பிரயோகம் செய்யும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தைரியம் மூலமாக தந்தையின் உதவியை பிரத்யக்ஷமாக அனுபவம் செய்யக்கூடிய ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

குழுக்களுடன் தனிப்பட்ட சந்திப்பு (சாரம்):

அழியாத அதிகாரத்தின் நிச்சயிக்கப்பட்டது என்ற இந்த நினைவில் மூலம் சதா கவலையின்றி இருங்கள், எல்லா சுமையையும் தந்தையிடம் கொடுத்து விடுங்கள்!

தனது சிரேஷ்ட பட்டத்தின் நினைவின் மூலம் ஆன்மீக போதையின் அனுபவம் செய்யுங்கள், ஆஹா ஆஹா என்ற பாடலை பாடிக் கொண்டே இருங்கள்!

சர்வ சிரேஷ்ட சக்தி அமைதிசக்தி -இது அசம்பவத்தையும் சம்பவமாக்கி விடும்!

மதுபன் வாசி ஆவது என்றால் எல்லையற்ற சேவையின் மேடை மீது வருவது!

வரதானம்: யோகா மூலமாக உயர்ந்த நிலையை அனுபவம் செய்யக்கூடிய டபுள் லைட் பரிஷ்தா ஆகுக!

இராஜயோகி குழந்தைகள் நீங்கள் யோகாவில் உயர்ந்த நிலையை அனுபவம் செய்கிறீர்கள், ஹடயோகி உடலை உயர்வாக தூக்குகிறார்கள். நீங்கள் எங்கிருந்தாலும் உயர்ந்த நிலையில் இருக்கிறீர்கள். எனவே யோகி உயர்வாக இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். உங்களுடைய மனதின் நிலையின் ஸ்தானம் உயர்வாக இருக்கிறது ஏனென்றால் டபுள் லைட் ஆகி விட்டீர்கள்.

## 1994 அவ்யக்த முரளி

பரிஷ்தாக்களின் கால்கள் பூமியில் படுவதில்லை என்றும் கூறுகிறார்கள். பரிஷ்தா என்றால் புத்தி என்ற கால்கள் பூமியில் இல்லாமல் இருப்பது, தேக உணர்வில் இல்லாமல் இருப்பது, பழைய உலகத்தின் மேல் எந்தவொரு ஈடுபாடும் இல்லாமல் இருப்பது.

**சுலோகன்: இப்பொழுது ஆசீர்வாதங்களின் கணக்கை நிரப்பி விட்டீர்கள் என்றால் உங்களுடைய சிலைகள் (நினைவுச்சின்னங்கள்) மூலமாக அனைவருக்கும் அனேக பிறவிகளுக்கு ஆசீர்வாதங்கள் கிடைத்துக் கொண்டே இருக்கும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 18.02.1994 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சுவமானத்தின் (சுயகௌரவத்தின்) நினைவின் சுவிட்ச்சை ஆன் செய்வதினால் தேகஉணர்வின் இருள் முடிவடைந்து விடுகிறது!

இன்று அகாலமூர்த்தி தந்தை அனைத்து அழியாத ஆசனத்தில் அமர்ந்திருக்கும், உலக நன்மை காரியம் என்ற பொறுப்பு கிரீடம் அணிந்திருக்கும், நெற்றியில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் புள்ளி என்ற திலகம் இட்டுக் கொண்டிருக்கும் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொருவரும் ஆசனத்தில் அமர்ந்திருப்பவர்களாகவும் இருக்கிறீர்கள், கிரீடமும் அணிந்திருக்கிறீர்கள், அனைவரின் திலகமும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது அனைவரின் நெற்றியின் நடுவில் ஆத்மா புள்ளி நட்சத்திரத்திற்கு சமமாக தென்பட்டுக் கொண்டிருக்கிறது. நீங்கள் அனைவரும் கூட தன்னுடைய ஆசனம், கிரீடம் மற்றும் திலகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? முழு சபையும் கிரீடம் அணிந்திருப்பவர்களாகவும், திலகம் இட்டுக் கொண்டிருப்பவர்களாகவும் ஆசனத்தில் அமர்ந்திருப்பவர்களாகவும் பாப்தாதாவிற்கு தென்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த ஆன்மீக சபை, கலியுக இராஜ்ய சபை மற்றும் சத்யுக சபையிலிருந்து எவ்வளவு வேறுபட்டது மற்றும் பிரியமானதாக இருக்கிறது. அப்படியானால் அந்த மாதிரி சபையில் அமர்வதற்கு உரிமையுள்ள குழந்தைகள் எவ்வளவு பிரியமானவர்களாக இருக்கிறார்கள். உங்கள் அனைவருக்கும் கூட தன்னுடைய இந்த ஆசனம், கிரீடம் மற்றும் திலகம் இட்டுக் கொண்டிருக்கும் சொரூபம் மிகவும் பிடித்தமானதாக இருக்கிறது இல்லையா? எப்பொழுது ஆழியாத ஆசனத்தில் அமர்ந்திருப் பவராக, அழியாத மூர்த்தி, உயர்ந்த ஆத்ம நிலையில் நிலைத்திருந்து

ஆசனத்தில் அமருகிறீர்கள் என்றால் இந்த நிலை எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறது. அனைவரின் உயர்ந்த நிலையின் ஜொலிப்பு இந்த முகத்தை பரிஷ்தாவாக ஆக்கி விடுகிறது. சாதாரண முகம் இல்லை. பரிஷ்தா முகமாக இருக்கிறது. அப்படியானால் பரிஷ்தா முகம் கூட எவ்வளவு பிரியமானதாக இருக்கிறது. பரிஷ்தா அனைவருக்கும் மிகவும் பிடித்தமானவராக இருக்கிறார். ஏனென்றால் பரிஷ்தா ஒருவர் இருவருக்கானவர் அன்றி அனைவருக்குமானவராக இருக்கிறார். எல்லைக்கப்பாற்பட்ட பார்வை, எல்லைக்கப்பாற்பட்ட உள்உணர்வு எல்லைக்கப்பாற்பட்ட நிலை உடையவராக இருக்கிறார். பரிஷ்தா அனைத்து ஆத்மாக்களுக்காக பரமாத்மா வின் செய்தி கொடுக்கும் வாகனமாக இருக்கிறார். பரிஷ்தா என்றால் எப்பொழுதும் பறக்கும் கலை உள்ளவர். பரிஷ்தா என்றால் அனைவரின் ரிஷ்தாவை (உறவை) ஒரு தந்தையுடன் இணைப்பவர். பரிஷ்தா என்றால் டபுள் லைட். உடல் மற்றும் உடல் சம்மந்தப்பட்ட உறவில் இருந்து விலகியவர் லேசாக இருப்பவர். பரிஷ்தா என்றால் அனைவரையும் தன்னுடைய நடத்தை மற்றும் முகம் மூலமாக தந்தைக்குச் சமமாக ஆக்கக்கூடியவர். பரிஷ்தா என்றால் சுலபமாக மற்றும் இயல்பாக அனாதி மற்றும் ஆதி சம்ஸ்காரத்தை எப்பொழுதும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் சொரூபத்தை காண்பிப்பவர். பரிஷ்தா என்றால் பொறுப்புணர்வு பணிவான சுபாவம் மற்றும் அனைவருக்கும் நன்மை பயக்கும் உயர்ந்த பாவனை உடையவர். நீங்கள் அந்த மாதிரி பரிஷ்தா தான் இல்லையா. நாம் இல்லை என்றால் வேறு யார் இருக்க முடியும் என்று உடனே பதில் சொல்லுங்கள். அப்படி பாப்தாதா அந்த மாதிரி பரிஷ்தாக்களின் தர்பாரை பார்த்துக் கொண்டிருக்கிறார். இந்த சுவமானத்தில் மட்டும் நிலைத்திருப்பதினால் தேக பான் (உடல் உணர்வு தானாக முடிவடைந்து விடும்.

குழந்தைகள் உடல் உணர்வை விடுவதற்காக கடும் உழைப்பை செய்கிறார்கள் என்று தந்தை பார்க்கிறார். தேக உணர்வின் ஒரு ரூபத்தை விடுகிறார்கள் என்றால் இன்னொரு ரூபம் வந்து விடுகிறது. பிறகு இரண்டாவதை விடுகிறார்கள் என்றால் மூன்றாவது வந்து விடுகிறது ஆனால் விடுவது எப்பொழுதும் கடினமாக இருக்கிறது மற்றும் தாரணை செய்வது சுலபமாக இருக்கிறது. எனவே எப்பொழுதும் சுவமானத்தில் இருங்கள் என்று பாப்தாதா கூறுகிறார். எங்கு சுவமானம்

இருக்கிறதோ அங்கு தேக உணர்வு வரவே முடியாது. எனவே விடுவதற்காக கஷ்டப்படாதீர்கள் ஆனால் சுமானத்தில் நிலைத்திருப் பதற்கான கவனம் வையுங்கள் மேலும் சங்கமயகத்தில் சுயம் தந்தை மூலமாக எவ்வளவு நல்ல நல்ல சுவமானங்கள் பிராட்தி ஆகியிருக்கிறது. பிராட்தி செய்ய வேண்டும் என்பதில்லை, பிராப்தி ஆகியிருக்கிறது. தன்னுடைய சுவமானத்தின் பட்டியலை எழுதுங்கள். எவ்வளவு பெரிய பட்டியலாக இருக்கிறது. முழு கல்பத்திலும் எப்பேற்பட்ட புகழ்பெற்ற ஆத்மாவாக இருந்தாலும், அரசியல் தலைவராக இருந்தாலும், கலைஞர்களாக இருந்தாலும், தர்ம ஆத்மாவாக இருந்தாலும், மஹான் ஆத்மாவாக இருந்தாலும் ஒருவேளை அவர்களுடைய பட்டங்களை எண்ணினீர்கள் என்றால் அவை உங்களுடைய சுவமானத்தின் பட்டியலை விட அதிகமாக இருக்க முடியுமா? மேலும் தினந்தோறும் அதிகாலையில் பாப்தாதா சுவமானத்தின் நினைவூட்டுகிறார். மேலும் சுவமானத்தில் நிலைத்திருக்க வைக்கிறார். தினந்தோறும் ஒரு புதுப்புது சுவமானத்தைக் கூட நினைவில் வைத்தீர்கள் என்றால் சுவமானத்தின் எதிரில் தேக உணர்வு எப்படி வெளிச்சத்தின் எதிரில் இருள் ஓடி விடுவது போல் ஓடிவிடுகிறது. நேரமும் எடுப்பதில்லை, உழைப்பும் ஆவதில்லை. எனவே அடிக்கடி விதவிதமான தேக உணர்வை அகற்றுவதற்காக ஏன் கஷ்டப்படுகிறீர்கள்? சுவமானத்தின் நினைவின் ஸ்விட்ச்சை ஆன் செய்யத் தெரியாதா என்ன? எவ்வளவு தான் கார்மேகம் சூரியனின் வெளிச்சத்தை மறைப்பதாக இருந்தாலும் கூட உங்களிடம் ஆட்டோமெடிக் நேரடியாக பரமாத்மா சக்தியோடு கனெக்ஷன் இருக்கிறது. டைரக்ட் லைன் தான் இல்லையா. லைன் கிளியராக இருக்கிறதா அல்லது லீக்கேஜ்ஜும் இருக்கிறதா. யாருக்காவது இணைப்பு இருக்கிறது என்றால் லீக்கேஜ்ஜும் ஏற்பட்டு விடுகிறது. அப்படி நேரடி லைன் எவ்வளவு சக்திசாலியானதாக இருக்கிறது. டைரக்ட் கனெக்ஷன் தான் இல்லையா அல்லது இன்டைரக்டா? அனைவருக்கும் டைரக்ட் லைன் தான் இல்லையா? அனைவருக்கும் டைரக்ட் லைன் கிடைத்து விட்டதா? பிறகோ ஒரு மேகம் என்ன அனைத்து மேகங்களும் வந்து விட்டாலும் இருளை ஏற்படுத்த முடியுமா என்ன? நினைவின் சுவிட்ச்சை டைரக்ட் லைனில் ஆன் செய்கிறீர்கள் மேலும் தானும் லைட்டிலேயே தான் இருப்பார் ஆனால் மற்றவர்களுக்காகவும் லைட் ஹவுஸ் ஆகி விடும் அளவிற்கு

அவ்வளவு லைட் வந்து விடும். அந்த மாதிரி ஏற்படுகிறது தான் இல்லையா? நீங்கள் அனுபவிகள் தான் இல்லையா? ஆனால் சில நேரம் அனுபவத்தை ஓரமாக வைத்து விடுகிறீர்கள். ஆதரவு கிடைத்திருக்கிறது ஆனால் சில நேரம் ஆதரவை எடுத்துக் கொள்வதற்கு பதிலாக ஓரமாகி விடுகிறீர்கள். கடின உழைப்பு செய்ய வேண்டியதிருக்கிறதா என்ன? எப்பொழுதும் செய்ய வேண்டியது இல்லை எப்பொழுதாவது செய்ய வேண்டியதாக இருக்கிறது. சுவிட்ச் ஆன் செய்வதை மறந்து விடுகிறீர்களா என்ன? உண்மையிலேயே ஒருவேளை மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற ஒரு சுவமானத்தின் நினைவு இருந்தால் கூட கடின உழைப்பிற்கான விஷயமே இருக்காது. மார்க்கம் கடினமானது இல்லை ஆனால் நெடுஞ்சாலைக்கு பதிலாக குறுக்கு சிறு தெருக்களில் சென்று விடுகிறீர்கள் மற்றும் சென்றடைய வேண்டிய இலக்கை விட்டு விலகிச் சென்று விடுகிறீர்கள் எனவே திரும்பி வருவதற்கான உழைப்பை செய்ய வேண்டியதாக இருக்கிறது. பாப்தாதா எப்பொழுதும் தன்னுடைய அன்பு மற்றும் சகயோகத்தின் மடியில் அமர வைத்து இலக்கை நோக்கி அழைத்துச் சென்று கொண்டிருக்கிறார். மடியில் அமர்ந்து இலக்கைச் சென்றடைவதில் கடினம் ஏன் ஏற்படுகிறது. அன்பு மற்றும் சகயோகத்தின் மடியில் இருந்து விலகி எப்பொழுதாவது கவர்ச்சி (மாயை) தன் பக்கம் இழுக்கிறது என்றால் சுற்றி வருவதற்காக சென்று விடுகிறார்கள். களைப்படைந்தும் விடுகிறார்கள், பிறகு கஷ்டப்பட்டு முயற்சி செய்வதை உணருகிறார்கள். எனவே இந்த வருடம் என்ன செய்வீர்கள்? கஷ்டப்பட்டு முயற்சி செய்வதற்கு முடிவு கட்ட வேண்டும். அன்பில் ஐக்கியமாகி விடுங்கள். அன்பில் ஐக்கியமாகி ஒவ்வொரு காரியம் செய்யுங்கள். யார் ஐக்கியமாகி விடுகிறாரோ அவருக்கு வேறு எதுவும் தென்படுவதில்லை, கவருவதும் இல்லை. அப்படியானால் அன்பில் இருக்கிறீர்களா? எனக்கு தந்தை மேல் அன்பு இல்லை என்று சொல்பவர்கள் யாராவது இருக்கிறார்களா? அனைவருக்கும் அன்பு இருக்கிறது தான் இல்லையா ஆனால் சில நேரம் அன்பில் இருக்கிறீர்கள் மற்றும் சில நேரம் அன்பில் ஐக்கியமாகி விடுகிறீர்கள். பாருங்கள் மனம், புத்தி மூலமாக மனநிலையில் அனைத்து உறவுகளினால் தந்தையின் துணை இருக்கிறது. துணையும் இருக்கிறது மேலும் சேவையிலும் தந்தை ஒவ்வொரு நேரமும் துணைவனாகவும் இருக்கிறார். அப்படி மனநிலையில் துணையாக இருக்கிறார் மற்றும்

சேவையில் துணைவனாக இருக்கிறார். எங்கு எப்பொழுதும் துணையும் இருக்கிறது மற்றும் துணைவனும் இருக்கிறார் என்றால் அங்கு என்ன கஷ்டம் இருக்க முடியும். கடினத்தை சுலபம் ஆக்குபவர் என்பது தான் பரமாத்மாவின் மஹிமையே. அந்த மாதிரியான தந்தை உங்களுடைய துணையாக மற்றும் துணைவனாக இருக்கிறார் என்றால் கடினம் இருக்க முடியுமா? பிறகு ஏன் கடினமாக்கி விடுகிறீர்கள்?

அனைத்து உறவுகளையும் நேரத்திற்கேற்றபடி தந்தை அவரே ஒவ்வொரு குழந்தைக்கும் வாய்ப்பளிக் கிறார். எப்படி நேரமோ அப்படி உறவு முறையில் உடன் இருந்து மற்றும் துணைவனாக ஆக்கிக் கொள்ளுங்கள். சில நேரமோ உறவினால் துணைவனாக ஆக்குகிறீர்கள் மற்றும் சில நேரம் துணைவனை ஒரு பக்கமாக வைத்து விடுகிறீர்கள். பிறகு தனிமை அனுபவம் ஆகிறது என்று கூறுகிறீர்கள். திடீரென்று தனிமை அனுபவம் ஆகிறது மேலும் தனிமையின் அனுபவத்தினால் என்ன நடக்கிறது? தன்னுடைய உயர்ந்த வாழ்க்கை சாதாரண வாழ்க்கையாக அனுபவம் ஆகிறது. பிறகு போரிங் லைப் (ஆர்வமற்ற வாழ்க்கை) ஆகி விட்டது. ஏதாவது மாற்றம் வேண்டும் என்று கூறுகிறீர்கள். நாங்களோ இணைந்திருக்கிறோம் என்று ஒரு பக்கம் பாப்தாதாவை குஷி படுத்துகிறீர்கள். இணைந்திருப்பவர் எப்பொழுதாவது தனியாக இருப்பாரா என்ன? மிக நல்ல நல்ல விஷயங்களை பேசுகிறார்கள் -பாபா நாங்களோ உங்களுடன் இணைந்தே இருக்கிறோம். பிறகு 15-20 வருடங்கள் கழிந்தது என்றால் தனிமையாக விட்டேன். மாற்றம் வேண்டும் என்று கூறுகிறார்கள். பொதுவாக உலகத்தில் கூட ஒருவேளை மாற்றம் விரும்புகிறார்கள் என்றால் சிலர் கடற்கரையில் சென்று தூங்கி விடுவர்கள், சிலர் மனதிற்கு பிடித்த கேளிக்கைகளின் பக்கம் சென்று விடுவார்கள், நடனம் ஆடுகிறார்கள், சிலர் பாடல்களின் மகிழ்ச்சியோடு இருப்பார்கள், சிலர் கம்பெனி அல்லது கம்பேனியளை தன்னோடு சேர்த்துக் கொள்வார்கள். இதைத் தான் செய்கிறீர்கள் இல்லையா. விளையாடுகிறீர்களா? விளையாட்டு உலகத்தின் தோட்டத்தில் சென்று விடுகிறீர்கள். இங்கு ஞானக் கடலின் கரை இருக்கிறது இதை மறந்து விடுகிறீர்கள். ஒருவேளை கடல் விருப்பமாக இருக் கிறது என்றால் கடற்கரையில் அமர்ந்து விடுங்கள். தந்தை ஞானக்கடல் இல்லையா. தந்தை கம்பேனியன் (துணைவன்) இல்லையா என்ன? அவரிடம் இருந்து

மகிழ்ச்சி வருவதில்லையா? அல்லது புள்ளியிலிருந்து என்ன மகிழ்ச்சி வரும் என்று நினைக்கிறீர்களா? உங்கள் அனைவரையும் எப்பொழுதும் குதூகலப்படுத்து வதற்காகத் தான் பிரம்மாபாபா கூட அவ்யக்தம் ஆகியிருக்கிறார் ஆனால் இங்கோ எப்பொழுதும் துணைவன் தேவை இல்லையா? எப்பொழுதாவது தன்னை தனிமையாக அனுபவம் செய்தால் அந்த நேரம் புள்ளி ரூபத்தை நினைவு செய்யாதீர்கள். அது கடினமாக இருக்கும், அதில் போர் ஆகி விடுவீர்கள் ஆனால் தன்னுடைய பிராமண வாழ்க்கையின் விதவிதமான நேரத்தின் சுவாரஸ்யமான அனுபவத்தின் கதைகளை நினைவில் கொண்டு வாருங்கள். அனுபவத்தின் கதைகளின் புத்தகம் அனைவரிடமும் இருக்கிறது. எப்பொழுது போர் ஆகி விடுகிறார்கள் என்றால் நாவல் படிக்கிறார்கள் இல்லையா?. அப்படி நீங்கள் உங்களுடைய கதைகளின் புத்தகத்தைத் திறந்து மேலும் அதைப் படிப்பதில் பிஸியாகி விடுங்கள். தன்னுடைய சுவமானத்தின் பட்டியலை எதிரில் கொண்டு வாருங்கள், தன்னுடைய பிராப்திகளின் பட்டியலை எதிரில் கொண்டு வாருங்கள். பிராமண உலகத்தின் விசித்திரமான நடைமுறை கதைகளை நினைவில் கொண்டு வாருங்கள். எப்படி தன்னை மாற்றிக் கொள்வதற்காக செய்தித் தாள்கள் படிப்பதின் ஆதாரத்தையும் எடுத்துக் கொள்கிறார் என்றால் பிராமண உலகத்தின் எத்தனை ஆன்மீக செய்தி ஆகியவை இதுவரை பார்த்திருக்கிறீர்கள் மற்றும் கேட்டிருக்கிறீர்கள், செய்தித் தாளும் உங்களிடம் இருக்கிறது. அனேகருக்கு செய்தித்தாள் படிக்காமல் இருக்கவே முடியாது. உங்களிடமும் செய்தித் தாள் இருக்கிறது அதை படியுங்கள். நடனம் மற்றும் இசையை தெரிந்தே இருக்கிறீர்கள். களைப்பில்லாத நடனம் செய்கிறீர்கள். மன்மனாபவ ஆவதே அனைத்தையும் விட மிகப் பெரிய பொழுதுபோக்காகும். ஏனென்றால் அனைத்து உறவுகளின் ரசனை மற்றும் அனுபவங்களைச் செய்வதே மன்மனாபவ ஆகும். தந்தையின் ரூபத்தில் மட்டுமின்றி அல்லது முக்கியமான மூன்று ரூபங்களின் உறவுகளின் அனுபவங்கள் மட்டுமின்றி அனைத்து சம்மந்தங்களின் அன்பை அனுபவம் செய்ய முடியும். உறவுகளினால் நினைவோ செய்கிறீர்கள் ஆனால் என்ன வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது? ஒன்று புத்தியால் ஞானத்தின் ஆதாரத்தில் உறவை நினைவு செய்வது மற்றும் இன்னொன்று இதயத்தினால் அந்த உறவின் அன்பில் ஐக்கியமாகி விடுவது பாதியையோ செய்கிறீர்கள் மீதிப் பாதி தங்கிப் போய்விடுகிறது. எனவே

## 1994 அவ்யக்த முரளி

கொஞ்ச நேரமோ சரியாக இருக்கிறீர்கள், கொஞ்ச நேரத்திற்குப் பிறகு புத்தியால் மட்டும் உறவை நினைவு செய்திருந்தால் புத்தியில் இன்னொரு விஷயம் வருவதினால் இதயம் மாறிவிடுகிறது. பிறகு கடுமையான முயற்சி செய்ய வேண்டியிருக்கிறது பிறகு என்ன சொல்கிறீர்கள் நானோ நினைவு செய்தேன் பாபா என்னுடைய துணைவன் ஆனால் துணைவனை அனுபவம் செய்யவில்லை. இது புத்தியால் நினைவு செய்தீர்கள் உள்ளத்தில் அன்பை நிரப்பவில்லை. எப்பொழுதாவது ஏதாவது விஷயம் புத்தியில் வருகிறது என்றால் அது விரைவில் வெளியேறியும் விடுகிறது ஆனால் உள்ளத்தில் நிரம்பி விட்டது என்றால் அதை முழு உலகமுமே இதயத்தில் இருந்து அகற்ற விரும்பினாலும் அகற்ற முடியாது. எனவே நேரத்திற்கு தகுந்தாற்போல் எந்த நேரத்தில் எந்த உறவின் அவசியம் இருக்கிறதோ அதை அனுபவம் செய்யுங்கள். நண்பனின் அவசியம் இருக்கிறது மேலும் தந்தையை நினைவு செய்தீர்கள் என்றால் மகிழ்ச்சி வராது. எனவே எந்த நேரம் எந்த உறவின் அனுபவம் தேவையோ அந்த உறவை அன்போடு உள்ளப்பூர்வமாக அனுபவம் செய்யுங்கள். பிறகு கடின உழைப்பும் தேவை இருக்காது மேலும் போராகவும் இருக்காது எப்பொழுதும் மனமகிழ்ச்சியானதாக இருக்கும். அதனால் இந்த வருடம் என்ன செய்வீர்கள்?

கடின உழைப்பிலிருந்து விடுபட வேண்டும். ஒவ்வொரு மாதமும் ஓ.கே. என்று மட்டும் எழுதுங்கள். வேறு எதுவும் எழுத வேண்டாம். ஓ.கே. மூலம் கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விட்டார் என்று புரிந்து கொள்வோம். நீள நீளமான கடிதம் எழுதாதீர்கள். இல்லையென்றால் கடிதமோ எழுதினோம், பதில் கிடைக்கவில்லை என்று கூறுகிறார்கள். உங்கள் கடிதம் வந்து சேரவில்லை என்று அப்படியில்லை. கடிதம் எழுத ஆரம்பம் செய்கிறீர்கள் மேலும் அங்கு வதனத்தில்) கம்ப்யூட்டரில் முதலில் வந்து விடுகிறது. தபாலில் பின்பு வந்து சேருகிறது. பார்க்கப்போனால் இவ்வளவு நீளமான கடிதங்களுக்கு பாப்தாதா தினசரி முரளியில் அனைவருக்கும் பதில் கொடுக்கிறார். தினந்தோறும் கடிதம் எழுதுகிறார். இவ்வளவு நீளமான சுடிதம் யாராவது எழுதுகிறார்களா? எனவே பரமாத்மாவிற்கு உங்கள் அனைவர் மேலும் எவ்வளவு அன்பு இருக்கிறது என்ற இந்த தன்னுடைய கவமானத்தைப் பாருங்கள். பரமாத்மாவின் அன்பு இருக்கிறது அப்பொழுது தான் கடிதம்

எழுதுகிறார், அதாவது முரளியில் பதிலும் கொடுக்கிறார். மேலும் அன்பு நினைவும் கொடுக்கிறார். ஒருவேளை ஏதாவது கேள்வி எழுகிறது அல்லது ஏதாவது பிரச்சனை எதிரில் வருகிறது என்றால் முரளியில் பதில் கிடைக்கிறது. எனவே பதில் வரவில்லை என்று பின்பு ஒருபொழுதும் புகார் செய்யாதீர்கள். மற்றபடி இதயத்தின் விஷயம் வருகிறது அதை தந்தையின் எதிரில் வைப்பது அதாவது இதயத்திலிருந்து அகற்றிவிடுவது என்ற நல்ல காரியத்தை செய்கிறீர்கள். அதை நன்றாக செய்யுங்கள் ஆனால் சுருக்கமாக எழுதுங்கள். எப்பொழுது கடிதம் எழுதுகிறீர்கள் என்றால் அதே நேரம் இதயம் லேசாகி விடுகிறது இல்லையா. ஏனென்றால் கொடுத்து விட்டீர்கள் இல்லையா. பிறகு மறுநாளின் முரளியில் என்ன நான் கடிதம் எழுதினேனோ அதன் பதில் என்னவென்று அதே விதியில் பாருங்கள். பதில் கிடைக்கிறது தான் இல்லையா. எல்லைக்கப்பாற்பட்ட தந்தை என்றால் கடிதமும் பெரியதாகத் தான் எழுதுவார், சிறியதாக எழுதமாட்டார்.

நாலாபுறத்திலும் உள்ள இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகள் சேவையில் மிக நல்ல ஈடுபாடுடன் இருக்கிறார்கள் என்று பாப்தாதா பார்க்கிறார். ஒவ்வொருவரையும் பார்க்கிறார் என்றால் ஒவ்வொருவரும் மற்றவரை விட பிரியமானவராக தென்படுகிறார். ஒருவேளை பெயரை சொல்வது என்றால் எத்தனை பெயரை சொல்ல வேண்டியது இருக்கும். எனவே அனைவரும் தன்னுடைய பெயரை விசேஷமாக சேவையின் பிரதிபலனாக பாராட்டுக்களை ஏற்றுக்கொள்ளுங்கள். பெயர் சொல்ல ஆரம்பித்தோம் என்றால் மாலையை கோர்க்க வேண்டியதாக இருக்கும் ஆனால் மாலையின் அனைத்து மணிகளும் பாப்தாதாவின் எதிரில் இருக்கிறார்கள். அவ்வப்பொழுது சேவையை எல்லைக்கப்பாற்பட்டதாகவும் வெற்றி நிறைந்ததாகவும் ஆக்கிக் கொண்டே இருக்கிறீர்கள். தற்சமயம் முக்கியமாக வெளிநாட்டில் இரண்டு சேவைகளின் முடிவு மிக நன்றாக பிரத்யக்ஷம் ஆனது அனேக விதமான சேவைகளோ நடந்து கொண்டு தான் இருக்கின்றன ஆனால் விசேஷமாக ஒன்று இந்த குலோபல் புத்தகம், மிகுந்த கடின உழைப்பு செய்து தயார் செய்தார்கள் அதன் காரணமாக நாலாபுறத்திலும் விசேஷ ஆத்மாக்கள் உறவு நெருக்கத்தில் வருவது சுலபமாகி விட்டது. அதனால் எந்த குழந்தைகள்

# 1994 அவ்யக்த முரளி

உள்ளப்பூர்வமாக உயிருக்கு உயிராக அன்போடு நேரம் கொடுத்தார்களோ, உதவி செய்தார்களோ, அதன் உடனடி பலனாக சேவையில் பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்களுக்கு பாப்தாதா பலகோடி மடங்கு வாழ்த்துக்களை தெரிவிக்கிறார். மேலும் கூடவே இப்பொழுது டையலாக் மற்றும் ரிட்ரீட் செய்தீர்கள் அதன் முடிவும் முன்பை விட மிக நல்லதாக இருக்கிறது. மேலும் அனைத்து தேசத்தை சேர்ந்தவர்கள் இதில் சகயோகம் கொடுத்திருந்தார்கள். அவர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள் நல்ல லட்சியம் வைத்திருந்தீர்கள் அப்படி நாலாபுறமும் இப்பொழுது இந்த இரண்டு விதமான சேவை நன்கு ஓசையை எழுப்பிக் கொண்டிருக்கிறது. வரும் காலத்திலும் அப்படியே இருக்கும். ஆரம்பத்தில் வெளிநாட்டில் விஜபி-யை விடுங்கள் ஐபி-யை கொண்டு வருவது கூட கடினமாக இருந்தது என்று பாப்தாதாவிற்கு நினைவு இருக்கிறது. மேலும் இப்பொழுதோ சுலபமாக இருக்கிறது இல்லையா. இது தான் சேவையின் பிரத்யக்ஷ பலன், மேலும் எத்தனை பேர்களின் ஆசிர்வாதங்கள் கிடைத்தன. யாருடைய கையில் புத்தகம் செல்கிறது என்றால் அவர்கள் அனைவரின் ஆசிர்வாதங்கள் யாருடைய கணக்கில் சேமிப்பாகிறது? யார் பொறுப்பாளர் ஆனாரோ அவருடைய கணக்கில். கொடுப்பதின் சேவையாக இருந்தாலும், தயார் செய்யும் சேவையாக இருந்தாலும், கருத்தை தெரிவிக்கும் சேவையாக இருந்தாலும் அல்லது எழுதுவதின் சேவையாக இருந்தாலும் அனைவருக்கும் ஆசிர்வாதங்கள் கிடைக்கிறது. அப்படி எவ்வளவு ஆசிர்வாதங்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. அதிகமாக ஆசிர்வாதங்கள் கிடைக்கிறது, நீங்கள் பெற்றுக் கொண்டு மட்டும் இருங்கள். உங்கள் மேலேயே பிஸியாக இருக்கிறீர்கள் என்றால் ஆசிர்வாதங்களை பெற்றுக் கொள்வதில்லை. மேலும் ஐ.பி அல்லது வி.ஐ.பி யார் யார் நெருக்கத்தில் வருகிறார்களோ. ஒருவர் எத்தனை பேருக்கு அனுபவம் சொல்கிறாரோ அவர்கள் அனைவரின் ஆசிர்வாதங்கள் பிராமண ஆத்மாக்களுக்கு அதிகமாக பிராப்தி ஆகிறது. ஒருவேளை ஆசிர்வாதங்களை பெற்றுக் கொண்டீர்கள் என்றாலும் கூட நிரம்பியவராகவோ ஆகியே விடுவீர்கள். புத்தகமும் நன்றாக வந்திருக்கிறது மேலும் இந்த நிகழ்ச்சியும் மிக நல்லதாக இருக்கிறது. மேலும் பாரதவாசிகளின் விசேஷ சேவையாக இப்பொழுது கார் யாத்திரை நடந்து கொண்டிருக்கிறது (பிஸினஸ் விங்கின் சகோதர சகோதரிகள் 11-கார்களின் ராலி ஒன்று ராஜ்கோட்டிலிருந்து மும்பை வரை). இதில் அனேக விதமான சேவைகள் நடந்து கொண்டிருக்கின்றது.

அதனுடைய ரிசல்ட்டும் மிக நன்றாக வெளி வந்து கொண்டிருக்கிறது. மேலும் ஒருவர் நிமித்தமாகி விட்டார் என்றால் அனேகரின் பாக்கியத்தை எழுப்பிக் கொண்டே இருப்பார். அப்படி இந்த சேவையின் ரிசல்ட்டும் மிக நல்லதாக தென்படுகிறது. யார் யார் இந்த சேவைக்கு நிமித்தமாக இருந்தார்களோ, ஊக்கம் உறசாகத்தினால் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள் அனைவருக்கும் நாலாபுறத்திலுள்ள பாரதவாசி குழந்தைகளுக்கு, சகயோகி குழந்தைகளுக்கு, நிமித்தமான குழந்தைகளுக்கு பாப்தாதா பாராட்டுக்கள் தெரிவிக்கிறார். பெயரளவில் தான் உழைப்பு மேலும் வெற்றி அதிகமாக இருந்தது. இப்பொழுது அந்த மாதிரி சேவையின் திட்டம் உருவாக்குங்கள். இந்த சேவையிலும் கூட உழைப்பு குறைவு ரிசல்ட் அதிகமாக தென்படுகிறது. வெளிநாட்டின் இரண்டு நிகழ்ச்சிகளிலும் கூட அதே ரிசல்ட் தான். நல்லது.

பாரதம் மற்றும் வெளிநாட்டின் அனைத்து சேவையில் ஊக்கம் உற்சாகத்தோடு முன்னேறிச் சென்று கொண்டிருப்பவர்களுக்கு, களைப்பற்றவராகி மற்றவர்களுக்கு தானம், வரதானம் கொடுக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு, நாலாபுறத்திலுள்ள தந்தையின் அனைத்து உறவுகளின் அன்பில் ஐக்கியமாக இருக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் சுலபமாக அனுபவம் செய்யும், மற்றவர்களுக்கும் சுலபமாக அனுபவம் செய்விக்கும் சகஜயோகி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் சுவமானம் மூலமாக சுலபமாக தன்னை தேக உணர்விலிருந்து விடுவிக்கக்கூடிய ஜீவன்முக்த் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தந்தையின் துணையை அனுபவம் செய்யக்கூடிய மற்றும் துணைவனை அனுபவம் செய்யக்கூடிய நெருக்கமான ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும், நமஸ்காரமும்.

குழுக்களுடன் தனிப்பட்ட சந்திப்பு (சாரம்):

சர்வ கஜானாக்களாலும் நிரம்பியவர்தான் விஷ்வ கல்யாணகாரி ஆவார்!

தன்னை மற்றும் நேரத்தின் மகத்துவத்தை உணர்ந்து எதிர்கால பலனை சேமியுங்கள்!

நல்ல குழந்தையாகி தன் மீது ஸ்ரீமத் மற்றும் வரதானங்களின் கையை அனுபவம் செய்தவாறே சமம் ஆவதற்கான சான்று கொடுங்கள்!

## 1994 அவ்யக்த முரளி

சதா தந்தையின் இதய சிம்மாசனதாரி, பரமாத்ம அன்பிற்குரியவரானால் கவலையற்ற ராஜா ஆகி விடுவீர்கள்!

வரதானம்: உணரும் சக்தி மூலமாக சுயமாற்றம் செய்யக்கூடிய தீவிர முயற்சி செய்பவர் ஆகுக!

எந்தவொரு மாற்றத்தின் சுலபமான ஆதாரம் உணரும் சக்தி எதுவரை உணரும் சக்தி வரவில்லையோ என்றால் அதுவரை அனுபவம் ஆகாது. மேலும் எதுவரை அனுபவம் ஆகவில்லையோ அதுவரை பிராமண வாழ்க்கையின் விசேஷத்தின் அஸ்திவாரம் உறுதியாகாது. ஊக்கம் உற்சாகத்தின் செயல்பாடுகள் இருக்காது. எப்பொழுது உணரும் சக்தி ஒவ்வொரு விஷயத்தின் அனுபவி ஆக்குகிறதோ அப்பொழுது தீவிர முயற்சி செய்பவர் ஆகி விடுகிறார். உணரும் சக்தி நிரந்தரமாக சுலபமாக மாற்றம் செய்து விடுகிறது.

சுலோகன்: அன்பின் சொரூபத்தை நடைமுறையில் வெளிப்படுத்தி பிரம்மாபாபாவிற்குச் சமமாக ஆகுங்கள்!

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

## 09.03.1994 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விலகிய மற்றும் அன்பான, அதிசயமான, அன்பு மற்றும் சுகம் நிறைந்த அவதரணம் -சிவஜெயந்தி!

இன்று மூன்று தேவர்களை படைக்கும் தந்தை தன்னுடைய பூஜைக்குரிய சாலிகிராம் குழந்தைகளை சந்திப்பதற்காக வந்திருக்கிறார். எப்படி புள்ளி வடிவமான ஜோதி/சொரூப தந்தையின் பூஜை நடக்கிறது, நினைவை கொண்டாடுகிறார்கள் என்றால் தந்தையின் கூடவே சாலிகிராம் ஆத்மாக்கள் உங்களுடைய பூஜையும் நடக்கிறது. தந்தை ஒருவர் திரிமூர்த்தி சிவன் என்று மகிமை செய்யப்படுகிறார் மற்றும் பூஜை செய்யப்படுகிறார் மேலும் சாலிகிராம் ஆத்மாக்கள் நீங்கள் அனேகர் இருக்கிறீர்கள். இருவருக்கும் பூஜை நடக்கிறது. ஏனென்றால் தந்தை அனைத்து குழந்தைகளையும் தனக்குச் சமமாக பூஜைக்குரியவர்களாக ஆக்கியிருக்கிறார். எப்பொழுதாவது சாலிகிராமை பார்க்கிறீர்கள் என்றால் என்ன அனுபவம் செய்கிறீர்கள்? இது நாமே தான் என்று அந்த மாதிரி அனுபவம் ஏற்படுகிறதா? அப்படி தந்தை குழந்தைகளை சமமாக என்ன ஆனால் தன்னை விட உயர்ந்த பூஜைக்குரியவராக ஆக்கியிருக்கிறார். குழந்தைகளின் பூஜை இரட்டை ரூபத்தில் நடக்கிறது. தந்தையின் பூஜை ஒரே சிவலிங்க ரூபத்தில் மட்டும் நடக்கிறது. குழந்தைகள் உங்களுடைய பூஜை சாலிகிராம் ரூபத்திலும் நடக்கிறது மற்றும் தேவ ஆத்மாக்கள் ரூபத்திலும் நடக்கிறது. தந்தையை விட அதிகமாக இரட்டை ரூபத்தின் பூஜையின் அதிகாரி ஆத்மாக்கள் நீங்கள். எப்படி இரட்டை வெளிநாட்டினர் என்று சொல்லப்படுகிறீர்கள் என்றால் இரட்டை பூஜைக்குரியவர்களாகவும் இருக்கிறீர்கள். இரட்டை கிரீடதாரியாகவும் நீங்கள் ஆகிறீர்கள். நிராகார தந்தை அப்படி ஆவதில்லை. சில இடங்களில் பக்தர்கள் சிவனின் சிலைக்கு கிரீடம் கொடுத்து விடுகிறார்கள். ஏனென்றால் கிரீ தாரியாக ஆக்கி விடுகிறார். எனவே சில இடங்களில் கிரீடத்தை

காண்பிக்கிறார்கள் ஆனால் தந்தை ஒருபொழுதும் இரத்தினம் பதித்த தங்கம், வெள்ளியின் கிரீடம் அணிபவராக ஆவதில்லை. ஏனென்றால் நடைமுறையில் கிரீடம் தலையில் வைக்கப்படுகிறது. நிராகார தந்தைக்கு தலை இருக்கிறதா என்ன? உடலே இல்லை என்றால் கிரீடம் என்ன தாரணை செய்வார் ஆனால் அன்பின் காரணமாக கிரீடம் காண்பித்திருக்கிறார்கள். அப்படி தந்தையோ குழந்தைகளை தன்னை விட முன்னுக்கு வைத்திருக்கிறார். அவ்வளவு குஷி மற்றும் அவ்வளவு உயர்ந்த நினைவு இருக்கிறதா? பாப்தாதாவிற்கு தன்னுடைய ஜெயந்தியை கொண்டாடுவதில் குஷி இல்லை ஆனால் உங்கள் அனைவரினினும் ஜெயந்தியாகவும் இருக்கிறது. எனவே குழந்தைகளின் ஜெயந்தியின் குஷி இருக்கிறது. ஏனென்றால் தந்தை தனியாக எதையும் செய்ய முடியாது மேலும் நீங்களும் தனியாக எதையும் செய்ய முடியாது. இருந்தாலும் சில நேரங்களில் சில குழந்தைகளுக்கு நான் தான் செய்பவன் என்று மனதில் கொஞ்சம் எண்ணம் வந்து விடுகிறது ஆனால் தந்தை இன்றி வெற்றி கிடைப்பதில்லை. அப்படி தந்தையும் தனியாக எதையும் செய்ய முடியாது என்றால் குழந்தைகளும் தனியாக எதையும் செய்ய முடியாது. ஒருவேளை தந்தை குழந்தைகளை சந்திப்பதற்கு சாகாரத்திலானாலும் அல்லது ஆகாரத்திலானாலும் பிரம்மாவின் ஆதாரத்தை எடுக்கவே வேண்டியதாக இருக்கிறது. பிரம்மா இன்றி கூட ஒன்றும் செய்ய முடியாது. ஆதாரம் இன்றி சாகாரத்தில் சந்திப்பை ஏற்படுத்த முடியாது. அப்படி தந்தைக்கு குழந்தைகள் மேல் எவ்வளவு அன்பு இருக்கிறது மேலும் குழந்தைகளுக்கு தந்தை மேல் எவ்வளவு அன்பு இருக்கிறது. ஒருவர் இன்னொருவரின்றி எதையும் செய்ய முடியாது. ஒருவேளை தந்தையை விலக்கி வைத்து விட்டு, உடன் வைத்துக் கொள்ளவில்லை என்றால் தனியாக எதையாவது செய்ய முடியுமா? தந்தைக்கு செய்ய முடியுமா? தந்தையும் செய்ய முடியாது. அப்படி தந்தையும் குழந்தைகளும் சேர்ந்தே தெய்வீக ஜென்மம் எடுப்பது சேர்ந்தே உலக மாற்றம் செய்வது மேலும் சேர்ந்தே தன்னுடைய இனிமையான வீட்டிற்கு செல்வது - இது டிராமாவில் அழியாததாக அடங்கியிருக்கிறது. இதை யாரும் மாற்ற முடியாது. அப்படி இந்த மாதிரி இருப்பது நல்லது தான் இல்லையா. பிடித்திருக்கிறது தான் இல்லையா. அப்படியானால் இன்று அனைவரும் தந்தையின் பிறந்த நாள் கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்களா? அல்லது தன்னுடைய

# 1994 அவ்யக்த முரளி

பிறந்த நாளை கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்களா? தந்தை உங்களுடைய பிறந்த நாள் என்று கூறுவார் மற்றும் குழந்தைகள் தந்தையின் பிறந்த நாள் என்று கூறுவார்கள்.

இந்த தெய்வீக அவதாரம், எதை சிவஜெயந்தி அல்லது சிவராத்திரி என்று கூறுகிறார்கள், இது எத்தனை ஆத்மாக்களுக்காக அன்பு நிறைந்த, சுகம் நிறைந்த அவதாரமாக இருக்கிறது. சத்யுகத்தில்கூட இந்த மாதிரி பிறந்த நாள் கொண்டாட மாட்டீர்கள். ஆத்மாக்கள் ஆத்மாக்களின் பிறந்த நாளை கொண்டாடுவார்கள் ஆனால் இந்த நேரம் ஆத்மாக்கள் பரமாத்வின் பிறந்த நாளை கொண்டாடுகிறார்கள். முழு கல்பத்திலும் இந்த மாதிரி வித்தியாசமான மற்றும் பிரியமான, அதிசயமான பிறந்த நாள் ஒரே நேரத்தில் தந்தை மற்றும் குழந்தைகளின் பிறந்த நாளாக இருக்கிறது. இந்த மாதிரி எப்பொழுதாவது நடக்குமா என்ன? ஒருவேளை கிழமை ஒன்றாக இருந்தால் கூட வருடம், மாதம், நாளில் வித்தியாசம் ஏற்பட்டுவிடும் ஆனால் இந்த அவதார நாள் எவ்வளவு அதிசயமானது இது தான் தந்தை மற்றும் குழந்தைகளின் பிறந்த நாள் சேர்ந்தே இருக்கிறது.

இந்த நினைவுச்சின்ன நாள் அன்று பக்தர்கள் கூட இரண்டு விசேஷங்களினால் இந்த நாளை கொண்டாடுகிறார்கள். இரண்டு விசேஷங்கள் என்ன? ஒன்று விசேஷமாக விரதம் கடைபிடிப்பது மற்றும் இன்னொன்று தன்னை சமர்ப்பனம் செய்யாமல் வேறு யாரையோ பலி கொடுக்கிறார்கள். அப்படி பலி கொடுப்பது, விரதம் கடைபிடிப்பது இந்த இரண்டு விசேஷங்கள் இந்த நாளுக்கானது. அனேக விதமான விரதத்தை கடைபிடிக்கிறார்கள். சிலர் உணவுக்காக செய்து கொள்கிறார்கள், சிலர் கண்விழித்திருக்கிறார்கள். சிலர் தூரத்தொலைவிலிருந்து கால் நடையாக நடப்பதில் செய்கிறார்கள். எவ்வளவு தான் களைப்படைந்து விட்டாலும் தன்னுடைய விரதத்தை நிறைவேற்றிவிடுகிறார்கள். எத்தனை நாளானாலும் சரி, எவ்வளவு நேரமானாலும் சரி விரதத்தை விடுவதில்லை. அப்படி இந்த நினைவுச் சின்னத்தை யாரிடம் காப்பியடித்திருக்கிறார்கள். உங்களுடைய பிராமண வாழ்க்கையின் விரதம் மற்றும் பக்தர்களுக்கு ஒரு நாள் விரதமாகும். நீங்கள் கூ எப்பொழுது பிராமண ஜென்மம் மற்றும் தெய்வீக பிறப்பை எடுத்திருக்கிறீர்கள் என்றால் என்ன விரதம்

எடுத்திருக்கிறீர்கள்? எப்பொழுதும் அஞ்ஞான தூக்கத்திலிருந்து விழிப்பதற்கான விரதம் எடுத்திருக்கிறீர்களா அல்லது கொஞ்சம் கொஞ்சம் தூங்கவும் செய்வோம் என்ற விரதம் எடுத்திருக்கிறீர்களா? அப்படி நீங்கள் அனைவரும் கூட சிவஜெயந்தி மற்றும் தெய்வீக பிறந்த நாளன்று கண் விழிப்பதற்கான விரதம் எடுத்திருக்கிறீர்கள் எனவே பக்தர்களும் இதன் நினைவாக கண் விழித்திருக்கிறார்கள். மேலும் நீங்கள் அனைவரும் கூட சுத்தமான உணவு அருந்துவதற்கான விரதம் எடுத்திருக்கிறீர்கள். எனவே பக்தர்களும், என்ன ஆனாலும் சரி, நோயுற்றவராக இருந்தாலும் கூட உணவின் விரதத்தை கடைபிடிக்கிறார்கள். அப்படியானால் நீங்கள் அனைவரும் கூட மனதின் எதிரே; உடலின் எதிரே சூழ்நிலைகள் வந்தது என்றால் விரதத்தை விட்டுவிடுவீர்களா என்ன? எப்பொழுதாவது கலப்படமாக அருந்திவிடுவது, அப்படி செய்கிறீர்களா என்ன? யாரும் பார்க்கவில்லை சாப்பிட்டுவிடலாம் என்று அப்படியா? தன்னுடைய நியமத்தை உறுதியாக வைத்திருக்கிறீர்கள் தான் இல்லையா? அல்லது முதிர்ச்சி அடையாத காய் மாதிரி உறுதியற்றதாக இருக்கிறதா? பார்த்து சில நேரம் சாப்பிட வேண்டும் என்ற ஆசை ஏற்படுகிறதா? ஒரே மாதிரியான உணவை அருந்தி அருந்தி மற்ற உணவுகளையும் அருந்துவதற்கு ஆசை ஏற்படுகிறதா? நல்லது. இதில் அமெரிக்கா, ஆஸ்டிரேலியா, ஐரோப்பா, ஆசியா மற்றும் ரஷ்யா அனைவரும் உறுதியாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் பிஞ்சாக உறுதியற்றவராக இருக்கிறீர்களா?

இரட்டை வெளிநாட்டினர் அனைவரும் தேர்ச்சி பெற்று விட்டனர். மேலும் பாரதவாசிகளோ தேர்ச்சி பெற்றவர்களே தான். இருந்தாலும் பாரதவாசிகளுக்கு சுலபமானது. இரட்டை வெளிநாட்டினருக்கு இந்த விஷயத்தில் இரட்டை உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கிறது ஆனால் தேர்ச்சி அடைந்து விட்டீர்கள் அதற்காக பாராட்டுக்கள். அப்படி ஒன்று பிறந்த நாளுக்கான வாழ்த்துக்கள் இன்னொன்று தேர்ச்சி பெற்றதற்கான வாழ்த்துக்கள் மற்றும் மூன்றாவது ஒருபொழுதும் குழப்பத்தில் வராமல் எப்பொழுதும் ஆடாமல் அசையாமல் இருக்க வேண்டும் இதில் தேர்ச்சி பெற்றிருக்கிறீர்களா? என்ன செய்வது என்று இதில் சொல்லி விடுகிறார்கள். சில நேரங்களில். இன்று பாப்தாதா இரட்டை வெளிநாட்டினருக்காக மிகவும் சுவாரஸ்யமான பாஷையை

வெளிப்படுத்தி இருக்கிறார். ஏனென்றால் இரட்டை வெளிநாட்டினர் அனுபவிப்பதை அதிகமாக விரும்புகிறார்கள் தான் இல்லையா. ஏதாவது நடக்க வேண்டும், ஏதாவது அனுபவிக்க வேண்டும் அப்படி அமைதி அமைதியாக இருந்து என்ன செய்வது. அப்படி பாப்தாதா சிவராத்திரி அன்று இந்த வார்த்தைகளினால் அனைவரிடமிருந்து உறுதியான விரதம் எடுக்க வைக்கிறார். விரதம் எடுப்பதற்காக தயாராக இருக்கிறீர்களா? அல்லது எப்பொழுது கேட்பீர்களோ அப்பொழுது இதுவோ கொஞ்சம் கொஞ்சம் கடினம் என்று கூறுவீர்களா? முதலிலோ 'கடினம்' என்ற வார்த்தையை எண்ணத்தில் கூட கொண்டு வர மாட்டோம் என்ற இந்த விரதம் எடுப்பதற்கு தயாராக இருக்கிறீர்களா? எதுவரை எண்ணத்தில் உறுதி இல்லையோ அதுவரை வெற்றி ஏற்படுவதில்லை என்று பாப்தாதாவும் பார்த்திருக்கிறார். எண்ணம் ஏற்படுகிறது ஆனால் உறுதியில்லை என்றால் பலஹீனம் வந்து விடுகிறது.

அதிகமாக பலஹீனமான வார்த்தையாக என்ன செய்வது என்று கூறுகிறார்கள். What (என்ன) எனவே இப்பொழுது What என்று சொல்லாதீர்கள். What-ற்கு பதிலாக என்ன கூறுவீர்கள்? Fly (பறப்பது). அப்படி எப்பொழு தெல்லாம் What என்ற வார்த்தை வருகிறது என்றால் பிராமண அகராதியில் What என்பதற்கு பதிலாக Fy என்ற வார்த்தை இருக்கட்டும். இன்னொரு வார்த்தை என்ன கூறுகிறீர்கள். Why (ஏன்) அப்படியானால் Why-ஐ என்ன செய்வீர்கள்? Bye Bye நிரந்தரமாக Bye Bye செய்வீர்களா? அல்லது கொஞ்ச நேரத்திற்காகவா? மேலும் மூன்றாவது வார்த்தையாக என்ன கூறுகிறீர்கள்? How?. எனவே How கிடையாது Know தெரிந்திருக்கிறார்கள். நோ என்றால் தெரிந்திருப்பவர்கள். எப்பொழுது திரிகாலதரிசி ஆகி விட்டீர்கள். தெரிந்தவர்களாக ஆகி விட்டீர்கள் என்றால் How (எப்படி) என்று கூறுவீர்களா என்ன? How என்று கூறுவது என்றால் காகம் வருவது. காகம் பிடித்திருக்கிறதா என்ன? எனவே இதே வார்த்தைகள் தான் பலஹீனத்தை கொண்டு வருகிறது. இதே வார்த்தைகள் தான் வீணான எண்ணம் என்ற கதவுகளைத் திறக்கிறது. யோசித்துப் பாருங்கள். எப்பொழுதெல்லாம் வீணான எண்ணங்களின் வரிசை ஏற்படுகிறது என்றால் எந்த வார்த்தையினால் ஏற்படுகிறது? இதே வார்த்தைகளினால் தான் ஏற்படுகிறது இல்லையா என்ன ஆகும், என்ன அல்லது எப்படி ஆகும். இது எப்படி ஏற்பட்டது. இதை எப்படி

சொன்னார்கள், இதை ஏன் சொன்னார்கள், இப்பொழுது என்ன செய்வது எப்படி செய்வது. அப்படி பலஹீனத்தின் மற்றும் வீணான எண்ணங்களின் கதவுகள் இந்த வார்த்தைகள், இதை டிக்ஷனரியில் மாற்றி விடுங்கள். பிறகு என்ன ஆகும்? நீங்களும் மாறிவிடுவீர்கள் இல்லையா? பக்தர்கள் உங்களைத் தான் காப்பி செய்து கொண்டிருக்கிறார்கள். உங்களுடையது எல்லைக்கப்பாற்பட்ட விஷயம் மேலும் அவர்கள் எல்லைக்குட்பட்ட ரூபத்தில் நினைவு ரூபமாக வைத்திருக்கிறார்கள். இந்த உறுதியான விரதம் எடுப்பது தான் சிவஜெயந்தி மற்றும் சிவராத்திரி கொண்டாடுவதாகும். கொண்டாடுவது என்றால் அப்படி ஆவது, கேக் வெட்டுவது, லைட்டை (விளக்கு) எரிய வைப்பது, தீபத்தை எரிப்பது என்பது கொண்டாடுவது அல்ல. இந்த மனமகிழ்வான விஷயங்களும் அவசியம் தான் ஆனால் இதன் கூடவே சிலவற்றை வெட்டவும் வேண்டும். எரிக்கவும் வேண்டும். ஒரு பக்கம் தீபம் மற்றும் மெழுகுவர்த்தி ஏற்றுகிறீர்கள், இரண்டாவது கேக் வெட்டுகிறீர்கள், மூன்றாவது கொடி ஏற்றுகிறீர்கள், நான்காவது பாடல் பாடுகிறீர்கள், ஐந்தாவது நடனமும் ஆடுகிறீர்கள். மேலும் என்ன செய்கிறீர்கள்? இனிப்பை வழங்குகிறீர்கள் மற்றும் அருந்துகிறீர்கள். அப்படியானால் இப்பொழுது ஆறு விஷயங்கள் தான் செய்ய வேண்டும். முதலிலோ இப்பொழுதிலிருந்து திடத்தன்மையின் மூலமாக வெற்றியை அடையத்தான் வேண்டும் என்ற உறுதியான எண்ணத்தின் தீபத்தை மனதில் ஏற்றுங்கள். பார்க்கலாம், தெரியவில்லை, தெரியவில்லை என்பது வேண்டாம். ஆகத்தான் வேண்டும், செய்யத் தான் வேண்டும், பார்க்கலாம், செய்யலாம் என்ற வார்த்தை வேண்டாம். மேலும் இரண்டாவது கேக் எதை வெட்டுகிறீர்கள்? கேக்கை முழுவதாக சாப்பிட மாட்டார்கள், வெட்டித் தான் சாப்பிடுவார்கள். அப்படியானால் எதை வெட்டுவீர்கள். என்னவெல்லாம் சம்பன்னம் (முழுமை) மற்றும் சம்பூர்ணம் நிறைவு ஆவதில் ஏதாவது எண்ணத்தில் அளவில் கூட தடையாக இருக்கிறது அதை இப்பொழுதிலிருந்தே வெட்டி விடுங்கள். அழித்து விடுங்கள். மேலும் என்ன பலஹீனம் இருக்கிறதோ அந்த இடத்தில் சக்தியை தாரணை செய்வதற்கான கேக்கை வாயில் போடுங்கள். முதலில் வெட்டுங்கள், பிறகு வாயினால் சாப்பிடுங்கள். புரிந்ததா. எந்த கொடியை ஏற்றுவீர்கள்? இதுவோ நினைவுச்சின்ன ரூபத்தில் கொடி ஏற்றுகிறீர்கள், ஆனால் தன்னுடைய இதயத்தில் தந்தையை ஒவ்வொரு எண்ணம், வார்த்தை மற்றும் காரியம் மூலமாக

எப்பொழுதும் பிரத்யக்ஷம் செய்வதின் கொடியை இதயத்தில் பறக்க விடுங்கள். எந்தவொரு எண்ணம், சொல் மற்றும் செயல் தந்தையை பிரத்யக்ஷம் செய்யாததாக இருக்க வேண்டாம். ஏனென்றால் அனைவரின் உள்ளத்தில் தந்தையின் அன்பின் காரணமாக தந்தையை பிரத்யக்ஷம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அதை எப்படி செய்வீர்கள்? எப்பொழுதும் தன்னுடைய எண்ணம், சொல் மற்றும் செயல் மூலமாக இதயத்தில் பிரத்யம் செய்வதற்கான கொடியை பறக்க விடுங்கள் மேலும் எப்பொழுதும் குஷியாக இருப்பதின் நடனம் ஆடிக் கொண்டே இருங்கள். சில நேரம் குஷியாக, சில நேரம் சோர்வாக என்று அப்படி இருக்க வேண்டாம் எப்பொழுது சோர்வாக இருக்கிறீர்கள் என்றால் அந்த நேரம் கூட தன்னுடைய ஒரு போட்டோ எடுத்துக் கொள்ளுங்கள். மேலும் எப்பொழுது குஷியாக இருக்கிறீர்களோ அப்பொழுதும் போட்டோ எடுத்துக் கொள்ளுங்கள். பிறகு இரண்டு போட்டோக்களையும் சேர்த்து வையுங்கள். பிறகு எது நல்லது என்று பாருங்கள். நான் இதுவா அல்லது அதுவா? எனவே எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருப்பதற்காக, குஷியாக இருப்பதற்காக நடனம் ஆடுங்கள். என்ன தான் ஆனாலும் யாராவது குஷியை திருடுவதற்கு எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், ஏனென்றால் மாயா யார் மூலமாவது தான் செய்விக்கும் இல்லையா, என்னவானாலும் சரி, எந்த விதத்திலாவது யாராவது குஷியை குறைப்பதற்காக மற்றும் குஷியில் இல்லாமல் செய்வதற்காக எவ்வளவு முயற்சி செய்தாலும் ஆனால் நீங்கள் எதுவரை வாழ வேண்டுமோ அதுவரை குஷியாக இருக்க வேண்டும். இந்த உறுதியான விரதம் எடுத்திருக்கிறீர்கள் இல்லையா? உங்களால் என்ன செய்ய முடியாது. வில் பவர் (மனோபலம்) இருக்கிறது இல்லையா? அப்படி யாரிடம் வில் பவர் இருக்கிறதோ அவரால் என்ன செய்ய முடியாது. ஒருவேளை மாஸ்டர் சர்வ சக்திவானாகிய நீங்கள் செய்ய முடியவில்லை என்றால் வேறு யார் செய்வார்கள். வேறு யாராவது பிறக்கப் போகிறார்களா அல்லது நீங்களே தானா? மாலையின் மணியாக நீங்களே தான் ஆக வேண்டுமா? அல்லது மற்றவர்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறீர்களா? முதல் டிவிஷனில் வர வேண்டும் இல்லையா? அல்லது இரண்டாவதும் பரவாயில்லையா? அப்படி எதுவரை வாழ வேண்டுமோ அது வரை குஷியாக இருக்க வேண்டும் என்ற இந்த உறுதியான எண்ணம் அதாவது விரதம் எடுத்துக் கொள்ளுங்கள். மேலும் யார் குஷியாக இருப்பாரோ

அவர் அனைவருக்கும் குஷி என்ற இனிப்பை வழங்கிக் கொண்டே இருப்பார். வெளியுலக இனிப்பிலோ வாய் மட்டும் தான் இனிக்கிறது மேலும் இதனால் மனம், உடல், உள்ளம் அனைத்தும் குஷி அடைந்து விடுகிறது. அப்படி இந்த இனிப்பை வழங்க வேண்டும். மேலும் பாடலாக எப்பொழுதும் என்ன பாடுகிறீர்கள்? இனிமையான பாபா, அன்பான பாபா, என்னுடைய பாபா. இதே பாடல் தான் பாடுகிறீர்கள் இல்லையா? இதே பாடல் எப்பொழுதும் தானாக ஒலித்துக் கொண்டே இருக்கட்டும். செல் முடிந்து விட்டது. பேட்டரி குறைந்து விட்டது என்றால் பாடலும் முடிந்து விட்டது என்று அப்படி இருக்க வேண்டாம். எப்பொழுது பேட்டரி குறைந்து விட்டது என்றால் எப்படி பாடுகிறீர்கள்? அனைவருக்கும் அனுபவம் இருக்கிறது இல்லையா? பிறகு என்ன ஆகிறது? என்னுடையது இருக்கிறது என்றால் பாபா. என்றால் என்றால் வந்து விடுகிறது. என்னுடைய பாபா என்று மட்டும் கூற மாட்டார்கள். என்னுடையது இருக்கிறது என்றால் பாபா, கலப்படம் ஆகி விட்டது இல்லையா? பேட்டரி குறைந்து விட்டது என்றால் சப்தமும் குறைந்து விடுகிறது. மேலும் அதில் என்றால், என்றால் வார்த்தை சேர்ந்து விடுகிறது. என்னுடைய பாபா என்று எடுத்த எடுப்பிலேயே சொல்ல மாட்டார்கள். என்னுடையது இருக்கிறது என்றால் பாபா.

ஆக சிவராத்திரி கொண்டாடுவது என்றால் இந்த உறுதியான விரதம் எடுப்பது. அந்த மாதிரி சிவராத்திரி கொண்டாடினீர்கள் இல்லையா? அல்லது யோசித்து பின்னால் பதில் தருவீர்களா? நல்லது. மிகுந்த புத்திசாலிகள். இப்பொழுதே யோசித்து விட்டீர்கள். இரட்டை வெளிநாட்டினர் எனவே இரட்டை புத்திசாலிகள். நல்லது.

இரட்டை வெளிநாட்டினர் மதுபன்னில் விசேஷமாக என்ன சேவை செய்தீர்கள்? என்ன செய்தீர்கள்? பிரம்மாபாபாவை பிரத்யக்ஷம் செய்தீர்களா? ஸ்டாம்ப் (தபால் தலை) வெளியீட்டு விழாவை கொண்டாடினீர்கள். விசேஷமாக யோகாவும் செய்தீர்கள் இல்லையா? சக்திசாலியான யோகா செய்தீர்கள் என்றால் தடைகளை அழிப்பவர்களாகவும் ஆகி விட்டீர்கள் இல்லையா. அனைவரின் யோகா, அது மதுபன் நிவாசிகளினுடையதானாலும், இரட்டை வெளிநாட்டினருடையதானாலும் அல்லது நாலாபுறத்திலுள்ள பிராமண குழந்தைகளினுடையதானாலும், அதிசயம் செய்தது ஏனென்றால்

நாலாபுறத்திலும் அனைவருக்கும் பிரம்மாபாபாவை பிரத்யக்ஷம் செய்யவே வேண்டும் என்ற இந்த ஒரே எண்ணம் தான் இருந்தது. சிலர் அங்கு இங்கு செல்லும் சேவை செய்தனர். சிலர் மனம் மூலமாக சேவை செய்தனர். சிலர் வாய்மொழி சேவை செய்தனர் ஆனால் யாரெல்லாம் யோக நிலையில் இருந்து சேவை செய்தார்களோ அந்த மாதிரி சேவாதாரிகளின் வெற்றிக்கு வாழ்த்துக்கள். எவ்வளவு குஷி கிடைத்தது. ஏனென்றால் பிரம்மாபாபா விடம் அனைவருக்கும் இதயப்பூர்வமான மிக சூட்சும அன்பு இருக்கிறது. அனைவரும் பிரம்மாபாபாவை பார்த்திருக்கிறீர்களா அல்லது தெரிந்திருக்கிறீர்களா? என்ன சொல்வீர்கள் -பார்த்திருக்கிறீர்களா அல்லது தெரிந்திருக்கிறீர்களா? நான் பார்த்திருக்கிறேன் என்று யார் கூறுகிறார்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். தெரிந்திருக்கிறேன் ஆனால் இப்பொழுது பார்க்க வேண்டும் யார் கூறுகிறார்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள் (மிகக்குறைந்தவர்கள் கையை உயர்த்தினார்கள்). நல்லது. அனுபவம் செய்தீர்களா? பிரம்மா என்னுடைய தந்தை என்ற இந்த அனுபவம் செய்தீர்களா? ஏனென்றால் அனுபவமும் ஒரு கண் ஆகும். எப்படி ஸ்தூல கண்களினால் பார்க்கப்படுகிறது என்றால் அனைத்தையும் விட பெரிய கண் அனுபவம் ஆகும். அனுபவத்தின் கண்ணால் பார்த்தால் என்றால் கூட பார்த்ததாக கூறலாம். ஒருவேளை அனுபவமும் செய்யவில்லை மேலும் அவ்யக்த ரூபத்தில், அவ்யக்த நிலை மூலமாக பார்த்ததில்லை என்றால் பின்பு தன்னுடைய பெயரை தாதிகளிடம் கொடுத்தீர்கள் என்றால் அனுபவம் செய்விப்பார்கள். இதில் தங்கிப்போய் விடாதீர்கள். ஏனென்றால் மற்றவர்களுக்கு ஸ்டாம்ப் மூலமாக பிரம்மாபாபாவின் அனுபவம் செய்விக்கிறீர்கள் மேலும் தானே செய்யவில்லை என்றால் நன்றாக இல்லை இல்லையா. எனவே எப்பொழுது பிரம்மாபாபாவின் படத்தின் எதிரில் அமர்கிறீர்கள் என்றால் படத்தினால் சைத்தன்யமான சந்திப்பின், அனுபவத்தின் பிராப்தி ஏற்படுவதில்லை. ஆன்மீக உரையாடலுக்கு பதில் கிடைப்பதில்லையா? கிடைக்கிறது தான் இல்லையா? அப்படியானால் தந்தையாக இருக்கிறார் எனவே தான் கேட்கிறார் மற்றும் பதில் கொடுக்கிறார். இருந்தும் இந்த அனுபவத்திலிருந்து வஞ்சிக்கப்பட்டு இருந்து விடாதீர்கள். புரிந்ததா. அனைவரும் என்ன என்ன சேவை செய்தீர்களோ விசேஷமாக பார்தவாசிகள் அதிகமாக சேவையின் வாய்ப்பை எடுத்திருந்தார்கள்.

பாப்தாதா பெயரை குறிப்பிடவில்லை ஆனால் அனைவரும் தன்னுடைய சேவையின் பிரதிபலனாக பெயரையும் சேர்த்து பாராட்டுக்களை ஏற்றுக்கொள்ளுங்கள். இரட்டை வெளிநாட்டினருக்கும் சேவையின் வாய்ப்பு கிடைத்து விட்டது. நன்றாக இருந்தது இல்லையா. நடனம் ஆடினீர்கள் இல்லையா? நல்லது.

நாலாபுறத்திலும் உள்ள பிராமண ஜென்மம் என்ற தெய்வீக ஜென்மத்தின் அதிகாரி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தந்தை மற்றும் நீங்கள் சேர்ந்தே இருக்கும் நெருக்கமான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் இரட்டை பூஜைக்குரிய சொரூபத்தின் நினைவில் இருக்கக்கூடிய சக்திசாலியான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் உறுதியான எண்ணம் மற்றும் விரதத்தை கடைபிடிக்கக்கூடிய வெற்றியின் அதிகாரி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் குஷியாக இருக்கக்கூடிய மற்றும் மற்றவர்களையும் குஷி படுத்தக்கூடிய அதிர்ஷ்டம் நிறைந்த குழந்தைகளுக்கு, மூன்று தேவர்களை படைக்கும் தந்தை மற்றும் பிரம்மாபாபாவிடமிருந்து பிறந்த நாள் வாழ்த்துக்கள் மற்றும் அன்பு நினைவுகளும், கூடவே மிக உயர்ந்த ஆத்மாக்களுக்கு நமஸ்காரம்.

**குழுக்களுடன் தனிப்பட்ட சந்திப்பு (சாரம்):**

தன் மீதும் நேரத்தின் மீதும் நம்பிக்கை இல்லை -ஆதலால் திட சங்கல்பம் மூலம் பலவீனங்களைக் களைந்து விடுங்கள்!

'வேஸ்ட்'ஐ (waste) 'பெஸ்ட்' (best) ஆக்குவது என்றால் புனித அன்னப்பறவை ஆவதாகும்!

தூய்மையின் ராயல்டிதான் பிராமண வாழ்வின் விசேஷமாகும்!

திருப்திமணி ஆவதற்கு தனது அநாதி மற்றும் ஆதி சொரூபத்தின் நினைவில் இருங்கள்!

சகஜ யோகத்திற்கான ஆதாரம் -சம்பந்தம் மற்றும் பிராப்தி!

பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் சந்தித்த பின் மேடையில் எழுந்து நின்று கொடி அசைத்து, **58'**வது திரிமூர்த்தி சிவ ஜெயந்தியின் வாழ்த்துக்கள் அளித்தார் -இன்று இந்த விசேஷ சிவ ஜெயந்தி நாளில் நாலா புறமும் உள்ள குழந்தைகளுக்கு வைரத்திற்குச் சமமான ஜெயந்தியினுடைய வைரத்திற்குச் சமமான வாழ்க்கை வாழும்

ஆத்மாக்களுக்கு கோடானுகோடி வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்!

தூய்மையின் ராயல்டிதான் பிராமண வாழ்க்கையின் விசேஷமாகும். எப்படி ஒரு ராயல் குடும்பத்து குழந்தையின் முகம் மூலம், நடத்தை மூலம் இது ஒரு ராயல் குல குழந்தை என தெரிய வருகிறது; அது போல பிராமண வாழ்க்கையின் வித்தியாசமே இந்த தூய்மையின் ஜொலிப்பின் மூலமே ஏற்படுகிறது. மேலும் எப்போது சங்கல்பத்தில் கூட தூய்மை இருக்குமோ, அப்போது முகம் மற்றும் நடத்தையில் ஜொலிப்பு எப்போது தெரிய வரும். சங்கல்பத்தில் கூட அபவித்ரதாவின் பெயர் அடையாளம் இருக்கக் கூடாது! நல்லது.

வரதானம்: சத்தியத்தின் அஸ்திவாரம் மூலமாக நடத்தை மற்றும் முகம் மூலமாக தெய்வீகத் தன்மையை அனுபவம் செய்விக்கக்கூடிய சத்தியவாதி ஆகுக!

உலகத்தில் அனேக ஆத்மாக்கள் தன்னை சத்தியவாதி என்று கூறுகிறார்கள் மற்றும் நினைக்கிறார்கள் ஆனால் சம்பூர்ண சத்திய நிலை தூய்மையின் ஆதாரத்தில் ஏற்படுகிறது. தூய்மை இல்லை என்றால் எப்பொழுதும் சத்திய நிலை இருக்க முடியாது. சத்திய நிலையின் அஸ்திவாரம் தூய்மை ஆகும். மேலும் சத்திய நிலையின் நடைமுறை வெளிப்பாடு நடத்தை மற்றும் முகத்தில் தெய்வீகத் தன்மை இருக்கும். தூய்மையின் ஆதாரத்தில் சத்திய நிலையின் சொரூபம் தானாக மற்றும் சுலபமாக ஏற்படுகிறது. எப்பொழுது ஆத்மா மற்றும் உடல் இரண்டும் தூய்மையாக இருக்குமோ அப்பொழுது சம்பூர்ண சத்தியவாதி அதாவது தெய்வீகம் நிறைந்த தேவதை என்று கூறலாம்.

சுலோகன்: எல்லைக்கப்பாற்பட்ட சேவையில் பிஸியாக (சுறுசுறுப்பாக) இருந்தீர்கள் என்றால் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் தானாக வந்து விடும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 03.04.1994 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# திருப்தியின் ஆதாரம் -சம்மந்தம், செல்வம் மற்றும் ஆரோக்கியம்!

இன்று திலாராம் (மனதை வென்ற) தந்தை தன்னுடைய எப்பொழுதும் திருப்தியாக இருக்கும் திருப்தியான ஆத்மாக்கள் மற்றும் திருப்திமணிகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். இந்த ஆன்மீக மணிகளின் பிரகாசம் முழு தர்பாரையும் (சபையையும்) பிரகாசிக்கச் செய்து கொண்டிருக்கிறது. திருப்தியான ஆத்மாக்கள் தனக்கும் பிரியமானவர்கள் மற்றும் அனைவருக்கும் பிரியமானவர்கள் மேலும் தந்தைக்கோ பிரியமானவர்களே தான். அப்படித் தான் இருக்கிறீர்கள் இல்லையா? ஏனென்றால் இந்த உயர்ந்த பிராமண வாழ்க்கையில் பிராப்தி இல்லை என்ற பெயரே கிடையாது. அனைத்து பிராப்திகளினால் நிரம்பிய ஆத்மாக்கள் நீங்கள். அப்படி எங்கு அனைத்து பிராப்திகள் இருக்கின்றனவோ அங்கு எப்பொழுதும் திருப்தி இயல்பாகவே மற்றும் இயற்கையாகவே இருக்கவே இருக்கிறது. திருப்தி அவருடைய இயற்கையான சுபாவம் ஆகும். மேலும் திருப்தியின் சொரூபம் மற்றும் சுபாவம், இயற்கையான சம்ஸ்காரம், திருப்தியில்லாத ஆத்மாக்களையும் திருப்தியின் எண்ண அதிர்வலைகள் மற்றும் திருப்தியான வாயுமண்டலத்தில் மாற்றி விடும் மாதிரி உயர்ந்ததாகும். இந்த சங்கமயுகத்தில் விசே மாக பாப்தாதாவின் பரிசு திருப்தியாகும். திருப்தியின் ஒரு விசே த்தன்மை மற்ற விசேஷங்களையும் கூட சுலபமாக தன் அருகில் கொண்டு வருகிறது ஆனால் எப்பொழுதும் திருப்தியாக இருக்கிறீர்களா? சூழ்நிலை எவ்வளவு தான் மாறினாலும் திருப்தியின் நிலையை சூழ்நிலை மாற்ற முடியாது. பிற காரணங்களால் ஏற்படும் சூழ்நிலைகள் மாறக்கூடியவையே தான் ஆனால் தன்னுடைய திருப்தியின் நிலை எப்பொழுதும் அதிகரித்துக் கொண்டிருக்கிறதா? உங்கள் எதிரில் எப்பேற்பட்ட அசைக்கக்கூடிய சூழ்நிலையும் பொம்மலாட்ட காட்சியைப் பார்ப்பது போன்ற அனுபவம் ஏற்படுகிறது. அனைத்தும் நடக்கிறது ஆனால் பொம்மலாட்டம் நடந்து

கொண்டிருக்கிறது. அப்படி எப்படிப்பட்ட சூழ்நிலையும் பொம்மலாட்டம் மாதிரி அனுபவம் ஆகிறது மேலும் இன்றைய நாட்களின் நாகரீகமாக கார்ட்டூன் ஷோ இருக்கிறது. பார்க்க நன்றாக இருக்கிறது தான் இல்லையா. அதில் சிங்கமும் இருக்கும், பூனையும் இருக்கும் ஆனாலும் என்ன நடந்து கொண்டிருக்கிறது? கார்ட்டூன் ஷோ. கதை முடிந்து விடுகிறது ஆனால் கார்ட்டூனின் கதை உண்மை அல்ல. எப்பொழுதாவது ஏதாவது சூழ்நிலை வந்தது என்றால் ஒரு எல்லைக்கப்பாற்பட்ட திரையில் கார்ட்டூன் ஷோ நடந்து கொண்டிருக்கிறது மற்றும் பொம்மலாட்டம் நடந்து கொண்டிருக்கிறது என்று புரிந்து கொள்ளுங்கள். அப்படி அதைப் பார்த்து குழப்பத்தில் வருவீர்களா அல்லது மகிழ்ச்சியாக ரசித்துக் கொண்டிருப்பீர்களா? ஷோ (திரைக்காட்சி) பார்ப்பதுவோ பிடித்தது தான் இல்லையா. அப்படி இது மாயா மற்றும் இயற்கையின் ஒரு காட்சியாகும். அதை சாட்சி நிலையில் இருந்து எப்பொழுதும் திருப்தியின் சொரூபத்தில் பார்த்துக் கொண்டே இருங்கள். நான் திருப்திமணியாவேன், திருப்தியான ஆத்மா ஆவேன் என்ற தன்னுடைய உயர்ந்த கௌரவத்தில் இருந்து பாருங்கள் இது தான் சங்கமயுகத்தின் உயர்ந்த கௌரவமாகும். அப்படி கௌரவத்தில் நிலைத்திருக்கத் தெரியும் இல்லையா? அல்லது குழப்பத்தில் வருவது பிடித்திருக்கிறதா? எப்பொழுதும் திருப்தியின் விசேஷத்தை நினைவில் வெளிப்படுத்தும் ரூபத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

பிராப்திகளில் முக்கியமாக சம்மந்தம் மற்றும் செல்வம் அவசியமானது. சம்மந்தத்தில் கூட ஒருவேளை ஒருசம்மந்தம் இல்லையென்றாலும் முழுமையான திருப்தி இருக்காது. அப்படி சம்மந்தத்திலும் அனைத்தும் தேவையாக இருக்கிறது மற்றும் அழியாததாகவும் தேவையாக இருக்கிறது. ஒருவேளை ஏதாவது சம்மந்தம் அழிவதாக இருக்கிறது என்றால் பிராப்தியின்மை மற்றும் திருப்தியின்மை தானாக ஏற்பட்டுவிடும் ஆனால் இந்த சங்கமயுகத்தில் மட்டும் தான் அனைத்து அழியாத சம்மந்தத்தை ஒரு தந்தையிடமிருந்து அனுபவம் செய்ய முடியும். சத்யுகத்தில் கூட குறைவான சம்மந்தம் தான் இருக்கும். அனைத்தும் இருக்காது, ஆனால் இந்த நேரம் எந்த சம்மந்தத்தின் கவர்ச்சி உங்களுக்குள் இருக்கிறதோ, அனுபவம் செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அந்த சம்மந்தத்தை பரமாத்மா மூலமாக

அனுபவம் செய்ய முடியும். ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் சம்மந்தத்தில் கூட வேறு வேறு விருப்பம் இருக்கும். சிலருக்கு தந்தையின் சம்மந்தம் அவ்வளவு நல்லதாக இருக்காது ஆனால் நண்பனின் சம்மந்தம் மிகவும் பிரியமானதாக இருக்கும் ஆனால் ஒரே நேரத்தில் ஒருவரிடமிருந்து அனைத்து சம்மந்தமும் கிடைக்கிறதா? அனைத்து பிராப்திகளும் இருக்கிறதா அல்லது ஏதாவது குறை இருக்கிறதா? பின்னால் அமர்ந்திருப்பவர்கள் என்ன நினைக்கிறீர்கள்? இன்று புதுப்புது குழந்தைகளுக்கு முன்னால் அமர்வதற்கான வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. நல்லது, யார் இந்த கல்பத்தில் முதல் தடவையாக வந்திருக்கிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். நல்லது வருக, வருக. பாப்தாதாவும் பல கோடி மடங்கு அன்பு நிறைந்த வரவேற்பை கொடுத்துக் கொண்டிருக்கிறார். புதியவர்களாக இருந்தும் ஒவ்வொரு கல்பத்திற்கும் அதிகாரி ஆகி விட்டீர்கள், இதைப் புரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா. பெரியவர்களோ பெரியவர்கள் தான் ஆனால் சிறியவர்கள் தந்தைக்குச் சமமானவர்கள் என்று எப்பொழுதும் பாப்தாதா கூறுகிறார். எனவே எப்பொழுதும் தன்னுடைய ஆன்மீக எல்லைக்கப்பாற்பட்ட முழுமையான அதிகாரத்தின் நிச்சயம் மற்றும் போதையில் இருங்கள். எல்லைக்கப்பாற்பட்ட போதை இது, எல்லைக்குட்பட்ட போதையை வைக்காதீர்கள். பாருங்கள், நீங்கள் எவ்வளவு உயர்ந்த அதிகாரிகள் சுயம் தந்தை சர்வ சக்திவானின் மேல் அதிகாரம் வைத்துவிட்டீர்கள். பரமாத்ம அதிகாரி -இதை விட பெரிய அதிகாரம் வேறு ஏதாவது இருக்கிறதா என்ன? எப்பொழுது விதையை தன்னுடையதாக ஆக்கி விட்டீர்கள் என்றால் மரமோ அதில் அடங்கியே தான் இருக்கிறது. அனைத்து சம்மந்தங்களின் அழியாத அதிகாரத்தை எடுத்துக் கொண்டீர்கள் மேலும் செல்வத்தில் கூட ஒருவேளை ஸ்தூல செல்வம் மட்டும் இருக்கிறது என்றாலும் எப்பொழுதும் திருப்தியாக இருக்க முடியாது. ஸ்தூல செல்வத்தின் கூடவே ஒருவேளை அனைத்து குணங்களின் செல்வம், அனைத்து சக்திகளின் செல்வம் மற்றும் உயர்ந்த ஞானத்தின் செல்வம் முழுமையாக இல்லை என்றால் திருப்தி எப்பொழுதும் இருக்க முடியாது ஆனால் உங்கள் அனைவரிடமும் இந்த உயர்ந்த பிராப்திகள் இருக்கின்றன. நீங்கள் செல்வம் நிறைந்தவர்கள் தான் இல்லையா. உலகத்தினரோ ஸ்தூல செல்வம் உள்ளவர்களை மட்டும் செல்வம் நிறைந்தவராக ஆகுக என்ற வரதானம் கொடுக்கிறார்கள் ஆனால் உங்கள் அனைவருக்கும்

வரமளிக்கும் தந்தை அனைத்தையும் விட உயர்ந்த செல்வம் உடையவர்கள் ஆகுக என்ற வரதானம் கொடுக்கிறார். அப்படியானால் அனைத்து செல்வங்களும் இருக்கின்றன தான் இல்லையா. அல்லது ஏதாவது குறை இருக்கிறதா? முழுமையாக இருக்கிறதா? பின்னால் இருப்பவர்கள் மேல் அனைவரையும் விட மிகுந்த கவனம் இருக்கிறது. முன்னால் இருப்பவர்களின் கவனம் தந்தை மேல் அதிகமாக இருக்கிறது மற்றும் தந்தையின் கவனம் பின்னால் இருப்பவர்களின் மேல் அதிகமாக இருக்கிறது. எவ்வளவு தூரமாக இருக்கிறீர்களோ அவ்வளவே கண்களில் நிரம்பியிருக்கிறீர்கள்.

சாகார உலகத்திலோ சாகாரமான வியங்கள் தான் நடக்கிறது. பாருங்கள், பரந்தாமத்தில் நீங்கள் அனைத்து ஆத்மாக்களும் எவ்வளவு அருகில் இருக்கிறீர்கள். அனைவரும் உடன் இருப்பீர்கள் தான் இல்லையா. மேலும் சூட்சும வதனத்திலும் அவ்வளவு எல்லையில்லா இடம் இருக்கிறது நீங்கள் எவ்வளவு அருகில் வர விரும்பினாலும் வர முடியும் ஆனால் குழந்தைகளின் அன்பு நிராகாரமானவரையும் (சிவபாபா) மற்றும் ஆகாரமானவரையும் (பிரம்மாபாபா) சாகாரமாக ஆக்க விரும்புகிறது. தந்தையும் என்ன கூறுகிறார்? சரி ஐயா, வந்து விட்டேன் என்று தான் கூறுகிறார். குழந்தைகளோ தந்தையின் எஜமானர்கள் தான் இல்லையா. எஜமானனை ஐயா என்று கூறப்படுகிறது மேலும் குழந்தைகளையும் எஜமானன் என்று கூறப்படுகிறது. அப்படியானால் நீங்கள் அனைவரும் யார்? திருப்தியானமணிகள். சம்மந்தத்திலும் திருப்தி மற்றும் செல்வத்திலும் திருப்தி. சம்மந்தம், செல்வம் மற்றும் மூன்றாவதாக ஆரோக்கியம் இருக்கிறது. நீங்கள் அனைவரும் ஆரோக்கியமானவர்கள் தான் இல்லையா அல்லது நோயுற்றவர்களா? ஆத்மாவோ ஆரோக்கியமாக இருக்கிறது இல்லையா, உடலுக்கான வியம் எதுவும் இல்லை ஆத்மா எப்பொழுதும் சக்திசாலியாக இருக்கிறது. சங்கமயுகத்தில் உயர்ந்த ஆரோக்கியம் என்பது ஆத்மாவின் ஆரோக்கியம் ஆகும். இந்த நேரத்தின் ஆத்மாவின் ஆரோக்கியம் பல ஜென்மங்களுக்கு உடலின் ஆரோக்கியத்தையும் கொடுக்கிறது ஆனால் இந்த நேரம் கொஞ்சம் இயற்கை (உடல்) தன்னுடைய ரூபத்தை காண்பிக்கிறது. இதில் கூட பெரிய வியம் ஒன்றுமில்லை. இதுவும் கார்ட்டூன் மே தான். அப்படி அனைத்து பிராப்திகளும் இருக்கின்றன தான் இல்லையா. சம்மந்தமும்

இருக்கிறது, செல்வம் உடையவராகவும் ஆகுக மேலும் அனைத்து சம்மந்தம் உடையவராகவும் ஆகுக என்பதும் இருக்கிறது. மேலும் எப்பொழுதும் ஆரோக்கியமானவராகவும் ஆகுக என்பதும் இருக்கிறது. மூன்று வரதானங்களும் வரமளிக்கும் தந்தையிடமிருந்து கிடைத்திருக்கின்றன. எனவே வரதானங்களை தேவையான நேரத்தில் காரியத்தில் ஈடுபடுத்துங்கள். வரதானத்தை கேட்டு மட்டும் குஷி அடைந்து விடாதீர்கள், எனக்கு மிக நல்ல வரதானம் கிடைத்திருக்கிறது என்பதை எழுதி மட்டும் வைத்துக் கொள்ளாதீர்கள் ஆனால் தேவையான நேரத்தில் வரதானத்தை காரியத்தில் ஈடுபடுத்துவதினால் வரதானம் நிலைத்திருக்கிறது. ஒருவேளை வரதானங்களை தேவையான நேரத்தில் காரியத்தில் ஈடுபடுத்தவில்லை என்றால் அந்த வரதானம் பலன் கொடுப்பதில்லை. வரதானமோ அழியாத தந்தையினுடையது ஆனால் வரதானத்தை நன்றாக பலன் கொடுப்பதாக வளர்க்க வேண்டும். விதையோ இருக்கிறது, ஆனால் அதிலிருந்து எவ்வளவு பழங்களை பெறுகிறீர்கள் என்பது உங்கள் கையில் இருக்கிறது. சிலர் வரதானம் என்ற விதையை மட்டும் பார்த்து மிக நல்லது மிக நல்லது என்று குஷி அடைந்து கொண்டே இருக்கிறார்கள் ஆனால் பலன் கொடுப்பதாக ஆக்குங்கள். அடிக்கடி நினைவு என்ற தண்ணீரை விடுங்கள், வரதானத்தின் சொரூபத்தில் நிலைத்திருக்கும் வெயிலை கொடுங்கள் பின்பு பாருங்கள், வரதானம் எப்பொழுதும் பசுமையாக வளரும் மேலும் மற்ற வரதானங்களையும் தன்னுடன் கொண்டு வரும். வரதானங்களின் பலன் சொரூபமாக ஆகி விடுவீர்கள். எனவே இன்றைய மூன்று வரதானங்களையும் பலனுள்ளதாக ஆக்குங்கள் மேலும் தேவையான நேரத்தில் அவசியம் நினைவில் வைத்திருங்கள். தேவையான நேரத்தில் மறந்து விடுகிறீர்கள், பின்பு இந்த வரதானமோ இருந்தது என்று படித்துக் கொண்டே இருக்கிறீர்கள், வரதானங்களை எவ்வளவு தேவையான நேரத்தில் காரியத்தில் ஈடுபடுத்துவீர்களோ அவ்வளவு வரதானம் இன்னும் உயர்ந்த சொரூபத்தை காண்பித்துக் கொண்டே இருக்கும். அனைவருக்கும் வரதானம் கிடைத்தது தான் இல்லையா. நல்லது.

இப்பொழுது ஐந்து பக்கங்களிலிருந்தும் வந்திருக்கும் குரூப் வரிசைக்கிரமமாக கையை உயர்த்துங்கள். **ஆசியா:** இதில் பாரதவாசிகள் மற்றும் மதுபன்வாசிகளும் கையை உயர்த்துங்கள்.

மதுபன்வாசிகளோ விசேஷமானவர்கள். இது பெரிய குரூப் ஆகும். பாரதவாசிகளும் வாய்ப்பை எடுத்துக் கொள்வதில் புத்திசாலிகள். ஆசியாவைச் சேர்ந்தவர்களுக்காக விசேஷமாக இன்றைய நாளில் மூன்று வரதானமோ அனைவருக்கும் இருக்கவே இருக்கிறது, ஆனால் விசேஷமாக ஆசியாவைச் சேர்ந்தவர்களுக்காக எப்பொழுதும் சுபாவனை மற்றும் உயர்ந்த உள்நோக்கம் உடையவராக ஆகுக என்பது வரதானமாகும்.

ஐரோப்பியா: ஐரோப்பியாவில் இங்கிலாந்தும் வந்து விடுகிறது. ஐரோப்பியாவில் வசிப்பவர்களுக்காக விசேஷமான வரதானமாவது எப்பொழுதும் ஜீரோ மற்றும் ஹீரோ ஆகுக. ஜீரோவையோ தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா. ஒன்று மட்டும் அல்ல மூன்று ஜீரோக்களை நினைவு வைத்துக் கொள்ளுங்கள். ஜீரோ மற்றும் ஹீரோ நடிகர்கள் நீங்கள் மேலும் ஹீரா (வைரத்திற்கு) சமமானவர்கள், இரட்டை ஹீரோ. அப்படி மூன்று ஜீரோ மற்றும் இரட்டை ஹீரோ. அப்படி இந்த வரதானம் ஐரோப்பாவாசிகளுக்கானது.

அமெரிக்கா: முழு அமெரிக்காவைச் சேர்ந்தவர்களும் கையை உயர்த்துங்கள். எக்சைஸ் செய்யுங்கள். நேராக கையை உயர்த்துங்கள். அநேகருக்கு கையை சிறிதாக உயர்த்தும் பழக்கம் இருக்கிறது. பாப்தாதாவிற்கு கையை சிறியதாக உயர்த்துபவர்கள் அரை ஜாதியினர் (ஹாஃப் காஸ்ட்) என்று தோன்றுகின்றனர். முழுமையான கையை உயர்த்துங்கள். அமெரிக்காவில் வசிக்கும் அனைத்து ஆத்மாக்களுக்காக விசேஷமாக இது தான் வரதானம். மாயாவைப் பற்றி இன்னொசன்ட் (ஒன்றும் தெரியாதவர்) மற்றும் வெற்றியில் சென்ட் பெர்சன்ட் (நூறு சதவிகிதம்) மற்றும் மனநிலையில் எப்பொழுதும் சென்ட் (வாசனை). சென்ட் என்றால் மணம் தருவது மற்றும் சென்ட் என்றால் மஹான் ஆத்மா டபுள் சென்ட். அப்படி எப்பொழுதும் இன்னொசன்ட் ஆகவும் மற்றும் டபுள் சென்ட் ஆகவும் ஆகுக.

ஆப்பிரிகா, மொரிஷியஸ்: இன்று பாப்தாதா நேராக கையை உயர்த்தும் டிரில் செய்வித்துக் கொண்டிருக்கிறார். டாக்டர்கள் கூட டிரில் செய்யுங்கள் என்று கூறுகிறார்கள் இல்லையா. அனைத்து ஆப்பிரிகாவில் வசிக்கும் குழந்தைகளுக்காக விசேஷமாக இந்த

வரதானம். எப்பொழுதும் அனைத்து பிராஸ்பரட்டி (வளம்) மற்றும் எப்பொழுதும் ஒவ்வொரு எண்ணம், சொல், செயலில் சகஜ ஹானஸ்ட்டி (உண்மையானவராக) உடையவராக ஆகுக. பிராஸ்பரட்டி உடையவராக ஆகுக மற்றும் மூன்று சொரூபத் தினால் சகஜ ஹானஸ்ட்டியானவராக ஆகுக.

ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து: ஆஸ்டிரேலியாவைச் சேர்ந்த அனைவரையும் விட உயர்ந்த பாக்கியவான். ஆத்மாக்களுக்காக விசேஷமாக இந்த வரதானம். எப்பொழுதும் மாயா மேல் வெற்றி அடைபவராக மேலும் கூடவே மாயாவை வென்று உலக இராஜ்யத்தை வென்ற உயர்ந்த வரதானம் உடையவராக ஆகுக. கூடவே எப்பொழுதும் கவலையற்ற மற்றும் உறுதியான நிச்சயம் உள்ளவராக ஆகுக. ஆஸ்டிரேலியாவில் இருப்ப விசேஷமாக தந்தைக்கு பிரியமானவர்கள். அனைவருமே பிரியமானவர்கள் தான் ஆனால் விசேஷமாக ஆஸ்டிரேலியாவைச் சேர்ந்தவர்கள் ஏன் பிரியமானவர்கள்? தந்தையின் அன்பின் பார்வை விசேஷமாக ஆஸ்டிரேலியாவைச் சேர்ந்தவர்கள் மேல் இருக்கிறது. ஏன்? ஏனென்றால் ஆஸ்டிரேலியாவில் இருப்பவர்களின் பூமி அதிசயம் செய்வதில் மிக நன்றாக உள்ளது ஆனால் தந்தை விசேஷமாக பூமிக்கு அன்பு என்ற தண்ணீர் கொடுக்கிறார். எனவே விசேஷ அன்பு இருக்கிறது. புரிந்ததா. அப்படி ஆஸ்டிரேலியாவைச் சேர்ந்தவர்கள் மிகுந்த அதிசயங்களை செய்ய முடியும். இப்பொழுது கொஞ்சம் கொஞ்சம் செய்திருக்கிறீர்கள். மேலும் ஆஸ்டிரேலியாவின் பெயரை கடைசியில் எடுத்திருக்கிறோம் என்றால் கடைசியில் வருபவர்களுக்கு ஏதாவது கொஞ்சம் அதிகமாக கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படி அனைவருக்கும் வரதானம் கிடைத்து விட்டது,

மதுபன்: மதுபன் நிவாசிகளோ விசேஷமானவர்கள். தற்சமயம் ஞானசரோவர் நிவாசிகளாக இருந்தாலும், உலகத்தை எப்பொழுதும் ஆரோக்கியமானதாக ஆக்கக்கூடிய ஹாஸ்பிடலில் இருப்பவர்களாக இருந்தாலும், ஆரோக்கியம் மட்டும் அல்ல சந்தோஷமான ஆரோக்கியம், மதுபன்னில் நாலாபுறமும் முற்றுகை இடக்கூடிய குழந்தைகளானாலும், அபுவில் முற்றுகை இடுகிறார்கள் தான் இல்லையா. அப்படி அனைத்து மதுபன் நிவாசி விசேஷ

குழந்தைகளுக்காக விசேஷமான வரதானம் இது தான். எப்பொழுதும் மனம், சொல், செயல் -மூன்றிலும் சென்ட் பெர்சன்ட் (நூறு சதவிகிதம்) முன்னேற்றம் அடைபவராக ஆகுக.

மற்றபடி ஆங்கங்கிருந்து வந்திருக்கக்கூடிய அனைத்து குழந்தைகளுக்காக வேறு வேறு வெளிநாடு களிலிருந்து வந்திருக்கும் மற்றும் பாரதத்திலிருந்து வந்திருக்கும் அனைவருக்கும் விசேஷமாக எப்பொழுதும் சம்பன்னம் மற்றும் சம்பூர்ணம் ஆகுக என்ற வரதானம். அஹமதாபாத்தை சேர்ந்தவர்களும் சேவையை மிக நன்றாக செய்கிறார்கள். மதுபன்னிலும் கூட களைப்பற்ற சேவாதரிகள் இருக்கிறார்கள் என்றால் விசேஷமாக அஹமதாபாத், டெல்லி மற்றும் மும்பை இந்த மூன்று ஸ்தானங்களுக்கும் சேவைக்கான மிக நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அனைத்து இடங்களிலும் அன்பு நிறைந்த களைப்பற்ற சேவாதாரியாகி தன்னுடைய சேவையை செய்து கொண்டிருக்கிறார்கள் மேலும் செய்து கொண்டே இருப்பார்கள். சேவைக்காக பாராட்டுக்கள்.

மேலும் நாலாபுறத்திலும் தூரத்தில் அமர்ந்திருந்தாலும் உள்ளத்தில் அருகில் இருக்கிறார்கள், அப்படி நாலாபுறத்திலும் உள்ள உள்நாடு மற்றும் வெளிநாட்டு அனைத்து திருப்தியான ஆத்மாக்களுக்கு, திருப்தி மணிகளுக்கு, அனைத்து பிராப்தி நிரம்பிய ஆத்மாக்களுக்கு, யாரெல்லாம் நினைவு கடிதம், தபால் அட்டை இன்றைய தினம் அனுப்பியிருக்கிறார்களோ அப்படி அனைத்து குழந்தைகளுக்கும் இன்றைய விசேஷ நாளின் பலகோடி மடங்கு அன்பு நினைவுகள். தூரத்தில் அமர்ந்து கொண்டே மனதில் உள்ளத்தில் கொண்டாடிக் கொண்டிருந்தாலும் எதிரில் கொண்டாடிக் கொண்டிருந்தாலும், கடிதம் மற்றும் தபால் அட்டை முதலில் வதனத்தை வந்தடைகின்றன. அப்படி அனைவரின் கடிதம், தபால் அட்டை மற்றும் நல் எண்ணங்களின் நினைவு சுபபாவனை நிரம்பிய நினைவிற்கு பிரதிபலனாக பாப்தாதாவின் விசேஷமான அன்பு நினைவுகள் மற்றும் அனைத்து குழந்தையாக இருந்து அதிகாரி ஆகும் குழந்தைகளுக்கு நமஸ்காரம். நல்லது.

# 1994 அவ்யக்த முரளி

தாதிகளுடன் சந்திப்பு: சூட்சும இஷாராக்களின் பாஷையையோ தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா. எப்படி அவ்யக்த தந்தை இஷாராக்களின் பாஷையைத் தான் தெரிந்திருக்கிறார். அவ்யக்த வதனத்திலோ கண்களின் மற்றும் இஷாராக்களின் பாஷை இருக்கிறது. நீங்களும் தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா. கண்களின் பாஷையை தெரிந்திருக்கிறீர்களா? சாகார பாபாவிடமிருந்து கற்றுக் கொண்டீர்கள் தான் இல்லையா? வாய்மொழி பாஷையையோ கேட்டிருக்கிறீர்கள், இப்பொழுது கண்களின் பாஷை, கண்களின் பாஷை மிகவும் பிரியமானது. சப்தத்திலிருந்து விலகியோ செல்லவே தான் வேண்டும் இருந்தாலும் தந்தை சரி ஐயா என்று செய்யவே தான் செய்கிறார். நல்லது. (கடைசியில் பாப்தாதா கையை உயர்த்தி அனைவருக்கும் ஆசீர்வாதம் கொடுத்தார் மற்றும் விடைபெற்றார்). எந்த ஒரு சூழ்நிலை வந்தாலும் இந்த எல்லையற்ற திரையில் கார்ட்டூன் (cartoon show) காட்சி நடந்து கொண்டிருக்கிறது அல்லது பொம்மலாட்டம் (puppet show) நடந்து கொண்டிருக்கிறது என்று நினையுங்கள், எனில் அதைப் பார்த்து துக்கமடைய மாட்டீர்கள். மாயாவுடையது அல்லது இயற்கையுடையது இதுவும் ஒரு காட்சிதான் என இதை சாக்ஷியாகி சதா திருப்தி சொரூபமாகி பாருங்கள். தனது கௌரவத்தில் நிலைத்திருந்து பாருங்கள் -திருப்தி மணி ஆவேன், சந்தோஷ ஆத்மா ஆவேன்!

வரதானம்: சேவையின் கூடவே எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வின் பயிற்சியை வெளிப்படுத்தக்கூடிய வெற்றி மூர்த்தி ஆகுக!

சேவையின் மூலம் குஷி மற்றும் சக்தி கிடைக்கிறது ஆனால் சேவையில் தான் வைராக்கிய உள்உணர்வும் அழிந்து விடுகிறது. எனவே தனக்குள் வைராக்கிய உள்உணர்வை எழுப்பி விடுங்கள். எப்படி சேவையின் திட்டத்தை நடைமுறையில் வெளிப்படுத்துகிறீர்கள் அப்பொழுது தான் வெற்றி கிடைக்கிறது. அப்படி இப்பொழுது எல்லைக்கட்டாற்பட்ட வைராக்கிய உள்உணர்வை வெளிப்படுத்துங்கள். எவ்வளவு தான் சாதனங்கள் கிடைத்திருந்தாலும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வின் சாதனா (பயிற்சி) உள்ளடங்கிப் போய்விட வேண்டாம். சாதனம் மற்றும் சாதனாவின் சமநிலை இருக்கிறது என்றால் வெற்றிமூர்த்தி ஆகி விடுவீர்கள்.

சுலோகன்: அசம்பவத்தை சம்பவமாக ஆக்குவது தான் பரமாத்ம அன்பின் அடையாளமாகும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 14.04.1994 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அன்பின் ரிடர்னாக (பிரதி உபகாரம்) தன்னை டர்ன் (மாற்றம்) செய்ய வேண்டும்!

இன்று அன்பு மற்றும் சக்தியின் மூர்த்தியாகிய பாப்தாதா தன்னுடைய நாலாபுறத்திலும் உள்ள அன்பான குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். சாகாரத்தில் (இங்கு பாபாவின் எதிரில்) எவ்வளவு சபை இருக்கிறதோ அதை விட அதிகமாக ஆகார ரூபத்தின் (சூட்சும வதனத்தின்) சபை இருக்கிறது. அனைத்து சாகார ரூபமுடைய மற்றும் ஆகார ரூபமுடைய குழந்தைகளை பாப்தாதா அன்பின் புஜங்களில் நிரப்பி வைத்திருக்கிறார். அன்பின் புஜங்கள் எவ்வளவு பெரியதாக இருக்கிறது. நாலாபுறத்தின் அனைத்து குழந்தைகள் அன்பின் புஜங்களில் எப்படி நதி கடலில் சென்று கலந்து விடுகிறதோ அதே போல் கலந்து விடுகிறார்கள். அன்பின் புஜங்கள், அன்பின் கடல் எல்லைக்கப்பாற்பட்டது. அனைத்து குழந்தைகளும், வரிசைக்கிரமமானவர்களாக இருந்த போதிலும் அனைவரும் அன்பில் கட்டப்பட்டிருக்கிறார்கள். அனைத்து குழந்தைகளிலும் பாப்தாதாவின் அன்பு நிரம்பி இருக்கிறது. அன்பின் சக்தியினால் தான் அனைவரும் முன்னேறி மேலே பறந்து சென்று கொண்டிருக்கிறார்கள். அன்பினால் உயரே பறப்பது அனைத்து குழந்தைகளையும் உடலால் மற்றும் மனதால், உள்ளத்தால் தந்தையின் நெருக்கத்தில் கொண்டு வருகிறது. அன்பின் விமானம் ஒரு நொடியில் அவ்வளவு வேகமாக தந்தையின் அருகில் கொண்டு வருகிறது. ஞானம், யோகம், தாரணை இதில் அவரவர்கள் சக்திக்கு ஏற்றபடி வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள் ஆனால் அன்பில் ஒவ்வொருவரும் தன்னை நம்பர் ஒன் ஆக முதல் எண்ணாக) அனுபவம் செய்கிறார்கள். அன்பு அனைத்து குழந்தைகளுக்கும் பிராமண வாழ்க்கை கிடைப்பதற்கான மூல ஆதாரம் ஆகும். ஒருவேளை அனைத்து குழந்தைகளிடமும் நிரந்தர யோகியாக

இருக்கிறீர்களா? நிரந்தர ஞான சொரூபமாக இருக்கிறீர்களா? ஞானம் தெரிந்தவர் என்றல்ல ஆனால் ஞான சொரூபமாக இருக்கிறீர்களா? என்று கேட்டால் யோசிப்பார்கள் பிறகு சொல்வார்கள் இருக்கத் தான் செய்கிறோ.... நிரந்தரமாக தாரணை சொரூபமாக இருக்கிறீர்களா? என்று கேட்டால் என்ன கூறுவார்கள். லட்சியமோ அப்படித் தான் இருக்கிறது என்று கூறுவார்கள் ஆனால் நிரந்தர அன்பானவர்களாக இருக்கிறீர்களா? என்று கேட்டால் ஆமாம் என்று சொல்வார்கள். அனைவரும் அன்பில் தேர்ச்சி பெற்று விட்டீர்கள். சிலர் சிறப்பாக தேர்ச்சி பெற்றிருக்கிறீர்கள். சிலர் தேர்ச்சி பெற்றிருக்கிறீர்கள். தேர்ச்சி பெற்றிருக்கிறீர்கள் இல்லையா? இரட்டை வெளிநாட்டினர், பாரதவாசிகள் அனைவரும் தேர்ச்சி பெற்றிருக்கிறீர்களா? தேர்ச்சி பெறவில்லை என்றால் அருகில் வரமாட்வர்கள். அருகில் வருவது என்பது தேர்ச்சி பெற்றிருப்பதை நிரூபிக்கிறது. அன்பின் அர்த்தமே அருகில் (பாஸ்) இருப்பது மற்றும் தேர்ச்சி பெறுவது (பாஸ் ஆவது) மற்றும் ஒவ்வொரு சூழ்நிலையையும் வெகு சுலபமாக கடந்து செல்வது (பாஸ் செய்வது). அப்படியானால் அனைவரும் மூன்றிலும் தேர்ச்சி பெற்றிருக்கிறீர்கள் இல்லையா? கடந்து செல்வதும் சுலபம் இல்லையா? அல்லது கடந்து செல்வதில் சில நேரம் கடினம் மற்றும் சில நேரம் சுலபமாக இருக்கிறதா? அருகில் இருப்பதிலோ ஆனந்தமே ஆனந்தம் தான் மேலும் கடந்து செல்வது இதில் வரிசைக்கிரமமாக இருக்கிறீர்களா அல்லது அனைவரும் வரிசை எண் ஒன்றில் இருக்கிறீர்களா? பாருங்கள் நம்பர் ஒன் என்று கூறுவதில்லை. அனைவரும் அமைதியாகி விட்டீர்கள். அப்படியானால் ஏதோ ஒன்று இருக்கிறது ஆனால் அவ்வப்பொழுது அன்பின் சக்தியினால் கடந்து செல்வதும் அவ்வளவே சுலபமாகிக் கொண்டிருக் கிறது. மேலும் ஆகத்தான் வேண்டும். எப்படி அருகில் இருப்பது சுலபம் மேலும் எப்பொழுது கடந்து செல்வது எப்பொழுதுமே சுலபமாகி விட்டது என்றால் தேர்ச்சி பெறுவதென்ன. தேர்ச்சி பெறுவது ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டது தான். தேர்ச்சி பெறுவது ஏற்கனவே நிச்சயிக்கபட்டது தான் என்பது உறுதியான நிச்சயம் தான். மீண்டும் அதே போல் செய்ய மட்டும் வேண்டும். இவ்வளவு அசைக்க முடியாத நிச்சயம் இருக்கிறது இல்லையா? தூரத்தில் அமர்ந்திருந்தாலும் அனைவரும் அருகில் இருக்கிறீர்கள் இல்லையா? இதயசிம்மாசனத்தில் இருக்கிறீர்கள். சிலர் கண்ணின் மணியாக இருக்கிறீர்கள், சிலர் இதய சிம்மாசனதாரியாக

இருக்கிறீர்கள். மிகவும் அருகில் இருப்பது கண் மற்றும் இதயம், நீங்கள் அனைவரும் ஓம்சாந்தி பவனில் அமர்ந்திருக்கவில்லை ஆனால் பாப்தாதாவின் இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். அல்லது கண்களின் கண்மணியாகி உள்ளடங்கியிருக்கிறீர்கள், உள்ளடங்கியிருப்பது ஒருபொழுதும் தூரமாக இருப்பதில்லை.

இந்த வருடம் என்ன செய்வீர்கள்? சொல்வதற்காக இது இந்த வருடத்தின் கடைசி சந்திப்பு என்று கூறுகிறீர்கள் ஆனால் முடிவு ஆரம்பத்தை அதிகமாக நினைவூட்டுகிறது. ஆரம்பம் இடைக்காலத்தை நினைவூட்டுகிறது ஆனால் முடிவு ஆரம்பத்தை நினைவூட்டுகிறது. அப்படி என்றாள் முடிவில்லை ஆனால் ஆ ரம்பம் ஆகும். அதிக வேகத்தில் மேலே செல்வதற்கான தொடக்கம் ஆகும். அனாதி சொரூபம் ஆத்ம சொரூபமாகும், அப்படியானால் அனாதி சொரூபத்தின் வேகம் என்ன, எவ்வளவு அதிக வேகம். இன்றைய நாட்களின் விதவிதமான அறிவியல் சாதனங்களின் அதிவேகத்தை விட அதிக வேகமாகும். அறிவியல் சாதனங்களின் வேகம் இருந்தாலும் அறிவியல் ஆகும். அறிவியல் மூலமாக வேகத்தை குறைக்கவும் முடியும், அளக்கவும் முடியும் ஆனால் ஆத்மாவின் வேகத்தை இதுவரை யாரும் பிடிக்கவில்லை இல்லை, பிடிக்கவும் முடியாது. இதில் தான் அறிவியல் தன்னை தோல்வி அடைந்ததாக நினைக்கிறது. மேலும் எங்கு அறிவியல் தோல்வி அடைந்திருக்கிறதோ அங்கு அமைதியின் சக்தியினால் என்ன செய்ய விரும்புகிறீர்களோ அதைச் செய்ய முடியும். அப்படி ஆத்ம சக்தியில் மேலே செல்வதின் அதிவேகத்தின் தொடக்கத்தை செய்யுங்கள். சுயமாற்றமாக இருந்தாலும், யாருடைய உள்உணர்வின் மாற்றமாக இருந்தாலும், சூழ்நிலையின் மாற்றமாக இருந்தாலும், உறவு சம்பந்தத்தின் மாற்றமாக இருந்தாலும் இப்பொழுது அதிவேகத்தை கொண்டு வாருங்கள். தீவிரத்தின் அடையாளமானது நினைத்தீர்கள் மற்றும் நடந்தது. நினைத்திருக்கிறேன். ஆகி விடும் அந்த மாதிரி வேண்டாம். நினைத்தீர்கள் மற்றும் நடந்தது, எண்ணம், சொல் மற்றும் செயல் மூன்றிலும் உயர்ந்த நிலை சேர்ந்தே இருக்கட்டும். வீணானவற்றை மற்றும் தவறான எண்ணங்களை சோதனை செய்தீர்கள் என்றால் அதனுடைய வேகம் மிக அதிகமாக இருக்கும். இப்பொழுது எண்ணத்தில் வந்தது, இப்பொழுதே பேசி விட்டீர்கள் மேலும் இப்பொழுதே செய்தும் விட்டீர்கள் என்றிருக்கும். எண்ணம்,

சொல், செயல் மூன்றும் சேர்ந்தே மிக வேகமானதாக இருக்கும். அதனுடைய வேகத்தின் ஆவேசம் உயர்ந்த எண்ணம், காரியம், மரியாதைகள், பிராமண வாழ்க்கையின் மஹான் தன்மையின் உணர்வை மறக்க வைக்கும் அளவிற்கும் அதிவேகமாக இருக்கும். வீணானவற்றின் ஆவேசம் சத்தியத்தின் உணர்வு சரியானவற்றின் உணர்வு ஆகியவற்றை முடித்து விடுகிறது. பின்பு கொஞ்ச நேரத்திற்குப் பிறகு எப்பொழுது உணர்வு வருகிறதோ அப்பொழுது செய்திருக்கக்கூடாது தான், சரியில்லை என்று யோசிக்கிறார்கள் ஆனால் அந்த நேரம் எப்பொழுது ஆவேசம் இருக்கிறதோ அப்பொழுது சரியானதை தெரிந்து கொள்வது மாறி சரியில்லாததை சரியென்று அனுபவம் செய்கிறார்கள். அப்படி வீணானதின் ஆவேசம் உணர்வை அழித்து விடுகிறது. எனவே இந்த வருடம் அனைத்து குழந்தைகளும் முக்கியமாக வீணானவற்றை என்னவென்று தெரியாதவர்களாக ஆகுங்கள். எப்படி எப்பொழுது நீங்கள் ஆத்மாக்கள் சத்யுக இராஜ்யத்தில் இருந்தீர்களோ அப்பொழுது வீணானவை மற்றும் மாயாவை என்னவென்று தெரியாத நிலையில் இருந்தீர்கள். எனவே தேவதைகளை மஹான் ஆத்மாக்கள் மற்றும் முழுமையானவர்கள் என்று கூறுகிறார்கள், அந்த மாதிரி தன்னுடைய அந்த சம்ஸ்காரத்தை வெளிக் கொண்டு வாருங்கள், விணானவற்றை என்னவென்று தெரியாத சொரூபமாக ஆகுங்கள். நேரம், சுவாசம், வார்த்தை, செயல் அனைத்திலும் வீணானவை என்னவென்று தெரியாத நிலை அதாவது இன்னொசன்ட் ஆக வேண்டும். எப்பொழுது வீணானவற்றின் தெரியாத நிலை ஆகி விடுகிறது என்றால் தெய்வீகத் தன்மை இயல்பாகவே சுலபமாகவே அனுபவம் ஆகும். மற்றும் அனுபவம் செய்விக்கும். இதுவரை முயற்சியோ செய்து கொண்டு தான் இருக்கிறோம் என்று அப்படி நினைக்காதீர்கள். புருஷார்த்தம் அதாவது முயற்சி என்றால் புருஷ் (ஆத்மா) இந்த ரதத்தில் (உடலில்) செய்கிறார் என்றால் ஆத்மா ஆகி உடல் மூலமாக செய்விட்பது இதைத் தான் புருஷார்த்தம் என்று சொல்வது. முயற்சி நடந்து கொண்டிருக்கிறது என்று அப்படி வேண்டாம் ஆனால் முயற்சி செய்பவர் எப்பொழுதும் மேலே சென்று கொண்டிருக்கிறார் இதைத் தான் சரியான முயற்சி செய்பவர் என்று சொல்வது. ஒரு தடவை செய்த தவறை அடிக்கடி செய்து கொண்டே இருப்பது என்பது முயற்சி செய்வதின் அர்த்தம் அல்ல. மேலும் முயற்சியை தன்னுடைய ஆதாரமாக ஆக்கிக் கொள்ளுங்கள். சரியான

முயற்சி செய்பவராக இருக்கட்டும், சுபாவமும் இயல்பானதாக இருக்கட்டும் பின்பு அனைத்தும் மிக சுலபமாகும். இப்பொழுது கடுமையாக உழைப்பதை ஒரு பக்கம் வையுங்கள். அற்ப காலத்தின் ஆதாரங்களை ஆதாரமாக்கி எவற்றை ஓரமாக வைத்திருக்கிறீர்களோ அந்த அற்ப கால ஆதாரத்தை இப்பொழுது விட்டு விடுங்கள். எதுவரை இந்த ஆதாரம் இருக்கிறது என்றால் எப்பொழுதும் தந்தையின் ஆதாரம் அனுபவம் ஏற்பட முடியாது. மேலும் தந்தையின் ஆதாரம் இல்லை என்பதினால் எல்லைக்குட்பட்டவைகளை ஆதாரமாக ஆக்கிக் கொள்கிறார்கள். தன்னுடைய சுபாவம், சம்ஸ்காரங்களினுடையதானாலும், சூழ்நிலைகளினுடையதானாலும் எவற்றை ஆதாரமாக ஆக்கி உள்ளீர்களோ இவை அனைத்தும் அற்ப காலத்தின் வெறும் பகட்டிற்கானவை இருக்கும். ஏமாற்றம் அளிப்பவை. ஏமாற்றத்தில் இருந்து விடாதீர்கள். தந்தையின் ஆதரவு குடைநிழலாகும். அற்பகாலத்தின் விஷயங்கள் ஏமாற்றம் அளிப்பவை. மாயாவின் மிக இனிமையிலும் இனிமையான விஷயங்களை கேட்டுக் கொண்டே இருக்கிறோம், மிக அதிகமாக கேட்டாகி விட்டது. எப்படி துவாபரயுகத்தின் சாஸ்திரங்கள் எழுதுபவர்கள் விஷயங்களை உருவாக்குவதில் மிகவும் திறமைசாலிகள், எவ்வளவு இனிமையான விஷயங்களை உருவாக்கியிருக்கிறார்கள். எனவே விஷயங்களை உருவாக்காதீர்கள், விஷயங்களை உருவாக்குவதில் அனைவரும் ஒருவர் இன்னொருவரை விட திறமைசாலிகளாக இருக்கிறார்கள். விஷயங்களை உருவாக்காதீர்கள், விஷபங்களை பார்க்காதீர்கள் மற்றும் விஷயங்களை பேசாதீர்கள் ஆனால் என்ன செய்வது? தந்தையைப் பாருங்கள், தந்தைக்குச் சமமாக செய்யுங்கள் மற்றும் தந்தைக்குச் சமமாக ஆகுங்கள். எப்பொழுது ஏதாவது விஷயம் எதிரில் வருகிறது என்றால் விஷயத்தை உருவாக்குவது ஒரு நொடியில் வந்து விடுகிறது. ஏனென்றால் மாயா அதிவேகமுடையது இல்லையா. அப்படிப்பட்ட அழகான ரூபமுடைய வி யத்தை உருவாக்கி விடுகிறது அதைக் கேட்டு தந்தைக்கோ சிரிப்பு வருகிறது ஆனால் மற்றவர்கள் பிரபாவம் அடைந்து விடுகிறார்கள் - சரியாகத் தான் சொல்கிறார். மிக நன்றாக இருக்கிறது, விஷயமோ சரி தான்! மேலும் தனக்கும் சரியாகத் தான் படுகிறீர்கள் ஆனால் நேரத்தின் அதிவேகத்தை பார்த்து இப்பொழுது இந்த விஷயங்களிலிருந்து விடுபட்டு மிக வேகமாக மேலே செல்லுங்கள். இந்த அனேக விதமான விஷயங்கள் வீணான

ரிஜிஸ்டரில் ரோல் உருவாக்கிக் கொண்டே இருக்கிறது. ரோலுக்கு மேல் ரோல் உருவாகிக் கொண்டு இருக்கிறது. எனவே இதிலிருந்தும் என்னவென்று தெரியாதவர் ஆகுங்கள். இந்த என்னவென்று தெரியாத நிலையினால் தயாராக இருக்கும் சேவையின் மேடை உங்கள் எதிரில் வரும். வீணானவற்றை எதிர்கொள்வதை முடிவு கட்டினீர்கள் என்றால் சேவையின் அழைப்பிதழ் எதிரில் வரும். நீங்கள் அனைவரும் சேவையின் பொறுப்பாளர்களாக அனேக வருடங்களாக ஆகியிருக்கிறீர்கள், இப்பொழுது மற்றவர்களை பொறுப்பாளர்களாக ஆக்கும் சேவையின் பொறுப்பாளர் ஆகுங்கள். அவர் மைக்காக இருக்கட்டும் நீங்கள் மைட் (சக்தி நிறைந்தவர்) ஆக இருக்கிறீர்கள். வெகுகாலமாக நீங்கள் மைக்காக ஆகியிருக்கிறீர்கள் இப்பொழுது நீங்கள் மைட் ஆகுங்கள். மேலும் மற்றவர்களை மைக்காக ஆக்குங்கள். உங்களுடைய சக்தியினால் மைக் (பொறுப்பாளர்) ஆகட்டும். இதைத் தான் மிக வேகமாக மேலே பறந்து செல்வதின் அடையாளம் என்று கூறுவது. என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? அதிவேகமாக மேலே செல்வது தான் இல்லையா? அல்லது சில நேரம் வேகமாகவும் சில நேரம் மெதுவாகவும் இருக்கிறதா? எப்பொழுதும் அதிவேகமாக பறந்து மேலே சென்று கொண்டே இருங்கள். மேகங்களைக் கண்டு பயப்படாதீர்கள். இந்த விஷயங்கள் தான் மேகங்கள் ஆகும். ஒரு நொடியில் கடந்து செல்லுங்கள். விதியைத் தெரிந்து கொள்ளுங்கள் மற்றும் ஒரு நொடியில் விதி மூலமாக வெற்றியை பிராப்தி செய்யுங்கள். ஒரு பக்கம் ரித்தி சித்தியின் ஃபோர்ஸ் (பலம்) மேலும் உங்களுடையது விதி நிரம்பிய வெற்றியின் ஃபோர்ஸ் (பலம். ரித்தி சித்தி அற்ப காலத்திற்கானது மற்றும் விதி மூலம் சித்தி நிரந்தரமானது.

எப்பொழுதும் மனதில், சொல்லில், பேச்சில், நெருக்கத்தில் யார் முதலில் செய்து அர்ஜுனன் ஆகிறார்களோ அந்த மாதிரி குரூப்பை பாப்தாதா விரும்புகிறார். நான் அர்ஜுனன், நான் என்ன செய்கிறேனோ (தேக உணர்வின் நான் இல்லை, நான் உயர்ந்த ஆத்மா ஆவேன்) என்னைப் பார்த்து மற்றவர்கள் செய்வார்கள். அப்படியானால் யார் முதலில் செய்கிறார்களோ அவர் அர்ஜுனன். முதல் எண் என்று மஹிமை செய்யப்பட்டிருக்கிறது அதாவது அர்ஜுனன், அலௌகீகமானவன். அந்த மாதிரி குரூப்பை பாப்தாதா பார்க்க விரும்புகிறார். விஷடங்களைப் பார்க்க வேண்டாம், மற்றவர்களைப்

பார்க்க வேண்டாம், மற்றவர்களின் வீணானவற்றை கேட்க வேண்டாம். ஆன்மீகமானவன் அவ்வளவு தான். எண்ணம், சொல் மற்றும் செயல் அனைத்திலும் ஆன்மீகம், தெய்வீகத்தின் பொலிவு இருக்கட்டும். இதைத் தான் அர்ஜுனன் என்று கூறப்படுவது அதாவது ஆன்மீகமானவன். அந்த மாதிரியான குரூப் இந்த வருடம் தயாராகுமா அல்லது அடுத்த வருடத்தில் தயார் ஆகுமா? யார் இந்த குரூப்பில் வர விரும்புகிறீர்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். நாள் ஆக வேண்டும். நான் தான் அர்ஜுனன். பிறகு, என்ன செய்வது... நடந்து விடுகிறது. சூழ்நிலை அந்த மாதிரியானது...உதவி கிடைப்பதில்லை...ஆசீர்வாதங்கள் கிடைப்பதில்லை... இந்த மாதிரி ஏதாவது செய்தி வர வேண்டாம். யாருக்கு கொஞ்சம் காலம் வேண்டுமோ அவர்கள் கையை உயர்த்துங்கள். ஓரிரு மாதங்கள் தேவையாக இருக்கிறதா அல்லது ஒரு வருடம் தேவையாக இருக்கிறதா? எந்த குரூப் வந்தாலும் அவர்களிடம் கேளுங்கள் பிறகு முடிவைச் சொல்லுங்கள். டீச்சர்களோ முதலில் செய்ய வேண்டும். ஏனென்றால் யார் நிமித்தமாக ஆகிறார்களோ அவர்களுடைய சூட்சும வாயுமண்டலம், வைப்ரேஷன் (எண்ண அதிர்வலைகள்) அவசியம் செல்லும். பல மடங்கு புண்ணியமும் கிடைக்கிறது மேலும் பல மடங்கு நிமித்தமாகவும் ஆகுகிறார்கள். வேறு வார்த்தையிலோ சொல்ல மாட்டீர்கள் தான் இல்லையா? டீச்சர் ஆவது மிகவும் நல்லது. முரளி இருக்கையோ (கத்தி) கிடைத்து விடுகிறது. தீதி-தாதி (மூத்த சகோதரி) என்ற பட்டமும் கிடைத்து விடுகிறது ஆனால் பொறுப்பும் அவ்வளவு இருக்கிறது. இந்த வருடத்தில் ஏதாவது புதுமையை காண்பியுங்கள். கைடையோ அனேக தடவைகள் உயர்த்தியிருக்கிறோம், உறுதிமொழியையும் பல வருடங்கள் செய்து இருக்கிறோம் என்று அந்த மாதிரி யோசிக்காதீர்கள். அந்த மாதிரி எண்ணம் சூட்சுமத்திலும் வர வேண்டாம். மேலும் மற்றவர்களுக்காகவும் வர வேண்டாம். இந்த எண்ணம் தான் தொய்வாக்கி விடுகிறது. இதுவோ நடந்து கொண்டே தான் வந்து இருக்கிறது, இதுவோ நடந்து கொண்டே தான் இருக்கிறது. இந்த எண்ண அதிர்வலைகள் கூட பலஹீனம் ஆக்குவதாகும். உறுதியான எண்ணம் செய்தீர்கள் என்றால் உறுதியான வெற்றியை அவசியம் கொண்டு வருகிறது பலஹீனமான எண்ணத்தை உருவாக்காதீர்கள். அதை வளர்ப்பதில் அதிக நேரம் வீணாக செல்கிறது. வெகு விரைவில் உற்பத்தி ஆகிறது ஒரு விநாடியில் நூறு பிறந்து

விடுகிறது. மேலும் பாலனை செய்வது எவ்வளவு நேரம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அழிப்பதிலும் கஷ்டப்பட வேண்டியதாக இருக்கிறது. நேரமும் செலவாகிறது. மேலும் பாப்தாதாவின் வரதானம் மற்றும் ஆசிர்வாதங்களிலிருந்தும் வஞ்சிக்கப்பட்டு விடுகிறார்கள். அனைவர்களின் சுபபாவனைகளின் ஆசீர்வாதங்களிலிருந்தும் வஞ்சிக்கப்பட்டவர்களாகி விடுகிறார்கள். சுத்தமான எண்ணங்களின் பந்தனம் மற்றும் முற்றுகையை அனைவருக்காகவும் யார் கொஞ்சம் பலஹீனமானவராக இருந்தாலும் அவருக்காகவும் அந்த மாதிரி கட்டுங்கள், அவர்களுக்காகவும் கூட இந்த சுத்த எண்ணங்களின் முற்றுகை ஒரு குடைநிழலாகி விடட்டும், பாதுகாப்பு சாதனமாகி விடட்டும், கோட்டை ஆகி விடட்டும். சுத்த எண்ணங்களின் சக்தியை இப்பொழுது குறைவாக தெரிந்திருக்கிறீர்கள். ஒரு சுத்தமான மற்றும் உயர்ந்த சக்திசாலியான எண்ணம் என்ன அதிசயம் செய்ய முடியும் என்ற இந்த அனுபவத்தை இந்த வருடம் செய்து பாருங்கள். பயிற்சியில் முதலில் யுத்தம் இருக்கும், வீணான எண்ணம் சுத்தமான எண்ணத்தை வெட்டி விடும். எப்படி கௌரவர்கள், பாண்டவர்களின் அம்புகளை காண்பிக்கிறார்கள் இல்லையா, அம்பு அம்பை வழியிலேயே அழித்து விடுகிறது என்றால் எண்ணம் எண்ணத்தை அழிப்பதற்கு முயற்சி செய்கிறது, செய்யும் ஆனால் உறுதியான எண்ணம் உடையவர்களின் துணைவனாக தந்தை இருக்கிறார். வெற்றித் திலகமோ எப்பொழுதும் இருக்கவே செய்கிறதுதான் இருக்கிறது. இப்பொழுது இதை வெளிக் கொண்டு வந்தீர்கள் என்றால் வீணானவை தானாகவே உள்ளடங்கி போய்விடும். வீணானவற்றிற்கு நேரம் கொடுக்கிறீர்கள், வெட்டி விடுவதில்லை ஆனால் அதனுடைய வர்ணத்திலேயே மூழ்கி விடுகிறீர்கள். ஒரு விநாடியின் குறைந்த நேரத்திலேயே வெட்டி விடுங்கள். சுத்தமான எண்ணத்தினால் முடித்து விடுங்கள். அப்படி அனைவரின் சுப எண்ணங்களின் வாயுமண்டலத்தின் முற்றுகை அதிசயம் செய்து காண்பிக்கும். நடப்பதோ இல்லை, அதிகமாகத் தான் செய்கிறோம், கேட்பதும் அதிகமாகத் தான் இருக்கிறது, மிகவும் நன்றாக இருக்கிறது ஆனால் ஒன்றும் நடப்பதில்லை என்று முதலிலேயே இப்படி நினைக்காதீர்கள். இந்த வீணான வாயுமண்டலம் கூட பலஹீனம் ஆக்குகிறது. ஆகத் தான் வேண்டும் என்ற உறுதியை வையுங்கள். உங்களால் என்ன செய்ய முடியாது. முதலில் உங்கள் மேல் கவனம் வையுங்கள். தன் மேல் உள்ள கவனம் தான் டென்ஷனை

முடிக்கும். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? இதுவோ நடந்து கொண்டே தான் இருக்கிறது, முன்பும் உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள் என்று யாராவது கூறினார்கள் என்றால் அதைக் கேட்காதீர்கள். இதில் பலஹீனமானவர்களுடன் ஒத்துப்போகாதீர்கள். ஒருவேளை யாராவது அந்த மாதிரி கூறுகிறார்கள் என்றால் நல்லதே பேசுங்கள், நல்லதே நினையுங்கள், நல்லதே செய்யுங்கள் என்று ஒருவர் இன்னொருவருக்கு கூறுகிறீர்கள் இல்லையா. நல்லது. அனைவரும் குஷியாக திருப்தியாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? அனைவருடன் பேசினோம் இல்லையா. இதுவும் தந்தையின் அன்பு தான். அன்பின் அடையாளமானது அன்பிற்குரியவர்களின் குறையை பார்க்க முடியாது. அன்பிற்குரியவர்களின் தவறை தன்னுடைய தவறாக நினைப்பார். தந்தையும் எப்பொழுது குழந்தைகளின் ஏதாவது விஷயத்தை கேள்விப்படுகிறார் என்றால் அது தன்னுடைய விஷயம் என்று நினைக்கிறார். அப்படி அன்பானவர் சம்பன்னமாக, சம்பூர்ணமாக, சமமாக பார்க்க விரும்புகிறார். அனைவரும் அன்பில் ஒரு வார்த்தையை பாப்தாதாவின் எதிரில் உள்ளத் திலிருந்தோ, பாடல் மூலமாகவோ, வார்த்தைகள் மூலமாகவோ அல்லது எண்ணத்தின் மூலமாகவோ பாப்தாதாவோ அனைவருடையதையும் கேட்கிறார் தான் இல்லையா என்று அவசியம் கூறுகிறார்கள். அனைவரும் தந்தையின் அன்பிற்குப் பிரதிபலனாக என்ன கொடுப்பது என்ற ஒரு விஷயத்தை அடிக்கடி கூறுகிறார்கள். ஏனென்றால் என்னவாக இருந்தவர்கள் என்னவாகவோ ஆகி விட்டீர்கள் இல்லையா. கோடியில் சிலராகவோ ஆகி விட்டீர்கள் இல்லையா, அந்த சிலரிலும் சிலராக ஆகவில்லை. அப்படி கோடியில் சிலராகவோ ஆகியிருக்கிறீர்கள் இல்லையா. இதில் அனைவரும் பாஸாகி விட்டீர்கள். தந்தை பிரதிபலனாக என்ன விரும்புகிறார்? ரிடர்ன் (பிரதிபலன்) கொடுக்க வேண்டும் என்றால் தன்னை டர்ன் (மாற்றம்) செய்ய வேண்டும். புரிந்ததா? இது தான் பிரதிபலனாக கொடுப்பது. இதையோ செய்ய முடியும் இல்லையா? அன்பின் காரணமாக இதை செய்ய முடியாதா? காரியத்தின் பொருட்டான அன்பு இல்லை தானே? அன்பில் தியாகம் செய்வதற்காகத் தயாராக இருக்கிறீர்களா? தந்தை என்ன கட்டளையிட்டாலும் செய்வதற்கு தயாராக இருக்கிறீர்களா. அன்பில் அனைவரும் நூறு சதவிகிதமா அல்லது குறைவான சதவிகிதத்தில் இருக்கிறீர்களா? தன்னை மாற்றுவதற்காக தயாராக இருக்கிறீர்களா? அன்பிற்காக இது

## 1994 அவ்யக்த முரளி

தியாகமா அல்லது பாக்கியமா? பக்தர்களோ தலையை வெட்டி வைப்பதற்கும் தயாராக இருக்கிறார்கள், நீங்கள் இராவணனின் தலையை வெட்டி வைப்பதற்காக தயாராக இருக்கிறீர்களா? உடலில் உள்ள தலையை வெட்டாதீர்கள் ஆனால் இராவணனின் தலையையாவது வெட்டுங்கள். ஐந்து தலையையும் வெட்டுவீர்களா? அல்லது ஒன்று இரண்டை வைத்துக் கொள்வீர்களா? கொஞ்சம் பலஹீனத்தின் தலையை வைத்துக் கொள்வீர்களா? சரி, ஐந்து இல்லை, ஆறாவதை காண்பிக்கிறார்கள் இல்லையா. முட்டாள்தனத்திற்கானதை அதை வைத்துக் கொள்வீர்களா? நல்லது.

இப்போது ஒவ்வொரு மண்டலமும் கை உயர்த்துங்கள் -டில்லி, மஹாராஷ்டிரா, கர்நாடகா, ஈஸ்டர்ன், தமிழ்நாடு, கேரளா, இந்தோர், உ.பி., குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப், ஹரியானா, இரட்டை வெளிநாட்டினர்.

சில முக்கிய கருத்துகள்:

1. இப்போது ஆத்மசக்தியை அதிகரிக்கும் தீவிர வேகத்தை ஆரம்பித்தீர்கள் என்றால் நினைப்பது நிறைவேறும்.
2. மகான் ஆவதற்காக வீண் என்பதன் அப்பாவி ஆகுங்கள்.
3. வீணானது என்னவென்று தெரியாதவர் ஆவதற்கு தெய்வீக குணங்களின் அனுபவமே ஆதாரம் ஆகும்.
4. உண்மையான புருஷார்த்தி என்றால் யார் ஆத்மா ஆகி ரதத்தின் மூலம் காரியம் செய்பவர்.
5. எல்லைக்குட்பட்டவைகளின் ஆதாரத்தை விட்டு விட்டு ஒரு தந்தையை தன்னுடைய ஆதாரம் ஆக்கிக் கொள்ளுங்கள்.
6. அல்ப கால விஷயங்கள் ஏமாற்றம் தருபவை, தந்தையின் குடைநிழலே உதவி அளிப்பதாகும்.
7. வீணானதை எதிர்கொள்வதை முடித்து விட்டீர்கள் எனில் சேவையின் வாய்ப்பு முன்னால் வரும்.
8. மற்றவர்களை 'மைக்' ஆக்குங்கள், சுயம் 'மைட்' ஆகுங்கள்.
9. தீவிர வேகத்தில் பறப்பதற்கு அநேக விதமான விஷயங்கள் என்ற மேகத்தை ஒரு நொடியில் கடந்து விடுங்கள்.

10. சுத்த சங்கல்பங்களுடைய அத்தகைய வேலியிடுங்கள் இதனால் பலவீனமான ஆத்மாக்களுக்கு அது பாதுகாப்பு சாதனம் ஆகி விடட்டும்.
11. சுத்த மற்றும் சிரேஷ்ட சங்கல்பத்தை 'எமர்ஜ்' (emerge) செய்தீர்கள் எனில் வீணானது தானாகவே உள்ளடங்கி (merge) விடும்.

நாலாபுறத்திலுமுள்ள மனதால் பறக்கக்கூடிய மதுபன் நிவாசி, அவ்யக்த ரூபமுடைய ஆத்மாக்களுக்கு மேலும் கூடவே எண்ணத்தின் விமானம் மூலமாக மதுபன்னில் வந்தடையும் உயர்ந்த ஆத்மாக்களுக்கு, மேலும் நாலாபுறத்திலுமுள்ள மிக உயர்ந்த அன்பிற்குரிய, அன்பில் தியாகத்தின் பாக்கியத்தின் உயர்ந்த எண்ணத்தை உருவாக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் மிக உயர்ந்த எண்ணத்தை வாழ்க்கையில் பிரத்யக்ஷமாக கொண்டு வரக்கூடிய நெருக்கமான ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் ஒவ்வொரு பாரதம் மற்றும் வேறு வேறு வெளிநாடுகளின் ஒவ்வொரு குழந்தைக்கும் பயர் வாரியாக விசேஷம் நிரம்பிய அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: தந்தையின் உதவியினால் ஈட்டியை முள்ளாக ஆக்கக்கூடிய எப்பொழுதும் கவலையற்ற டிரஸ்டியாக ஆகுக!

பழைய கணக்கு ஈட்டி ஆகும் ஆனால் தந்தையின் உதவியினால் அது முள்ளாகி விடுகிறது. சூழ்நிலைகள் அவசியம் வரும் ஏனென்றால் அனைத்தையும் இங்கேயே முடிக்க வேண்டும் ஆனால் தந்தையின் உதவி அவற்றை முள்ளாக்கி விடுகிறது பெரிய விஷயத்தை சிறியதாக்கி விடுகிறது. ஏனென்றால் பெரிய தந்தை உடன் இருக்கிறார். இந்த நிச்சயத்தின் ஆதாரத்தினால் எப்பொழுதும் கவலையற்று இருங்கள். மேலும் டிரஸ்டி ஆகி என்னுடையதை உன்னுடையதில் மாற்றி லேசாகி விட்டீர்கள் என்றால் அனைத்து சுமைகளும் ஒரு நொடியில் முடிவடைந்து விடும்.

சுலோகன்: சுப பாவனையின் ஸ்டாக் (கையிருப்பு) மூலமாக எதிர்மறையை நேர்மறையில் மாற்றம் செய்யுங்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋

# 17.11.1994 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஒவ்வொரு குணம் மற்றும் சக்தியின் அனுபவங்களில் மூழ்கியிருப்பது என்றால் குஷி மற்றும் அதிர்ஷ்டம் நிறைந்தவர் ஆவது ஆகும்!

இன்று அன்பின் கடல் பாப்தாதா தன்னுடைய அன்பு சொரூப குழந்தைகளை சந்தித்துக் கொண்டிருக்கிறார். தந்தைக்கும் குழந்தைகள் மேல் அதிக அன்பு இருக்கிறது மேலும் குழந்தைகளுக்கும் தந்தை மேல் அதிகமாக அன்பு இருக்கிறது. இந்த அன்பின் கயிறு குழந்தைகளையும் இழுத்து வருகிறது மேலும் தந்தையையும் இழுத்துக் கொண்டு வருகிறது. இந்த பரமாத்மா அன்பு எவ்வளவு சுகம் நிறைந்தது என்று குழந்தைகள் தெரிந்திருக்கிறார்கள். ஒருவேளை ஒரு விநாடி கூட அன்பில் மூழ்கி விட்டீர்கள் என்றால் அனேக துக்கத்தை மறந்து விடுகிறீர்கள். சுகத்தின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருக்கிறீர்கள். அந்த மாதிரி அனுபவம் இருக்கிறது இல்லையா? உலகத்தின் கணக்குப்படி நீங்கள் ஆத்மாக்கள் எவ்வளவு சாதாரணமானவர்களாக இருக்கிறீர்கள் ஆனால் பாக்கியம் எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறது என்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். முழுக் கல்பத்திலும் தர்ம ஆத்மா வானாலும் மகான் ஆத்மாவானாலும் இந்த மாதிரி உயர்ந்த பாக்கியம் யாருக்கும் பிராப்தி ஆகவில்லை, ஆகவும் முடியாது. அப்படி மிகவும் சாதாரணமானவர்கள் மற்றும் மிக உயர்ந்த பாக்கியம் நிறைந்தவர்கள். பாப்தாதாவிற்கு சாதாரண ஆத்மாக்கள் தான் விருப்பமாக இருக்கிறது - ஏன்? தந்தை தானும் சாதாரண உடலில் வருகிறார். ஏதோ ராஜாவின் உடலிலோ அல்லது ராணியின் உடலிலோ வருவதில்லை. ஏதாவது தர்ம ஆத்மா. மகாத்மாவின் உடலில் வருவதில்லை. தானும் சாதாரண உடலில் வருகிறார் மற்றும் குழந்தைகளும் சாதாரணமானவர்கள் தான் வருகிறார்கள். இன்றைய

கோடீஸ்வரன் கூட சாதாரணமானவர் தான். சாதாரணமான குழந்தைகளில் பாவனை இருக்கிறது. மேலும் தந்தைக்கு பாவனை தேவையாக இருக்கிறது, தேக உணர்வுள்ளவர்கள் தேவை இல்லை. எவ்வளவு பெரிய மனிதனாக இருப்பாரோ அவ்வளவு பாவனை இருக்காது ஆனால் அபிமானம் இருக்கும். தந்தைக்கு பாவனையின் பலனை கொடுக்க வேண்டும் மற்றும் பாவனை சாதாரண ஆத்மாக்களில் இருக்கிறது. பிரபலமான ஆத்மாக்களிடம் பாவனையும் இருப்பதில்லை, நேரமும் இருப்பதில்லை. அப்படி எவ்வளவு சாதாரணமான வர்கள் மற்றும் எவ்வளவு உயர்ந்த பாவனையின் பலனை அடைந்து கொண்டிருக்கிறார்கள் என்று தந்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். எனவே டிராமாப்படி சங்கமயுகத்தில் சாதாரணமானவராக ஆவது இதுவும் பாக்கியத்தின் அடையாளம் ஆகும். ஏனென்றால் சங்கமயுகத்தில் தான் பாக்கியத்தை உருவாக்குபவர் பாக்கியத்தின் உயர்ந்த ரேகையை வரைகிறார் மேலும் கூடவே பாக்கியத்தின் ரேகையை வரைவதற்கான எழுதுகோலையும் குழந்தைகளிடம் கொடுத்து விட்டார். எழுதுகோல் கிடைத்திருக்கிறது இல்லையா? பாக்கியத்தின் ரேகையை வரைய தெரியுமா? எவ்வளவு நீளமான ரேகையை போட்டிருக்கிறீர்கள்? சிறியதாக போடவில்லையே? எவ்வளவு விரும்புகிறீர்களோ அவ்வளவு பாக்கியத்தை நீங்கள் உருவாக்க முடியும். தடையற்ற அனுமதி இருக்கிறது மற்றும் அனைவருக்கும் அனுமதி இருக்கிறது. புதியவராக இருந்தாலும், பழையவரானாலும் ஒரு வார பாடம் எடுத்து முடித்து, தந்தையை தெரிந்து கொண்டால் தந்தை பாக்கியத்தின் எழுதுகோலை கொடுத்து விடுகிறார். இது தான் பரமாத்மாவின் அன்பாகும். அன்பின் அடையாளமாக என்ன இருக்கிறது? வாழ்க்கையில் என்ன தேவையோ அதை ஒருவேளை யாராவது யாருக்காவது கொடுக்கிறார் என்றால் அது தான் அன்பின் அடையாளமாகும். அப்படி தந்தையின் அன்பின் அடையாளமாவது எது வாழ்க்கையில் தேவையோ அந்த அனைத்து விருப்பங் களையும் நிறைவேற்றி விடுகிறார். சுகம். சாந்தியோ தேவைதான் இல்லையா. ஒருவேளை ஏதாவது பொருளை ஒருவர் இன்னொருவருக்கு கொடுக்கிறார் என்றால் அதன் மூலம் சுகம் கிடைக்கிறது. இல்லையா. அப்படி தந்தை சுகம் என்ன ஆனால் சுகத்தின் களஞ்சியமாக உங்கள் அனைவரையும் ஆக்கி விடுகிறார். சுகத்தின் களஞ்சியம் இருக்கிறது இல்லையா. முழுமையான இருப்பு இருக்கிறதா

அல்லது ஒரு அறை, இரண்டு அறையில் மட்டும் இருக்கிறதா? களஞ்சியம் இருக்கிறது. எப்படி தந்தை சுகத்தின் கடலாக இருக்கிறார், நதியோ, குளமாகவோ இல்லை கடலாக இருக்கிறார் என்றால் குழந்தைகளையும் சுகத்தின் களஞ்சியத்தின் அதிபதி ஆக்கி விடுகிறார். ஏதாவது சுகத்தின் குறை இருக்கிறதா என்ன? ஏதாவது பிராப்தியின்மை இருக்கிறதா. பின்பு கொஞ்சம் சக்தி கொடுங்கள் என்று இதைக் கூறாதீர்கள். கொடுத்து ஆகி விட்டது, கொடுங்கள் என்று கூறுவதற்கு அவசியமே இல்லை. தந்தை கொடுத்து விட்டார் அதை காரியத்தில் ஈடுபடுத்துவதற்கான விதி மட்டும் தேவையாக இருக்கிறது. மேலும் விதி கூட அனேக விதமாக தந்தை மூலமாகக் கிடைக்கிறது. அதை அவ்வப்போது காரியத்தில் நீங்கள் ஈடுபடுத்துவது மட்டும் இல்லை எனவே இருந்தும் கூட அதன் லாபத்தை எடுக்க முடிவதில்லை. எவ்வளவு பெரிய பாக்கியம் மேலும் எவ்வளவு சுலபமாகக் கிடைக்கிறது. ஏதாவது கஷ்டப்பட்டீர்களா என்ன? ஒரு காலில் நிற்க வேண்டியதாகவோ ஏற்படவில்லை தானே? அல்லது ஒரு நொடியின் தரிசனத்திற்காக வரிசையில் நின்று கொண்டிருந்தீர்கள் அப்படியும் இல்லை தானே? சௌகரியமாக அமர்ந்திருக்கிறீர்கள் இல்லையா. தரையில் கூட மெத்தையில் அமர்ந்திருக்கிறீர்கள். சௌகரியமாகவே சுலபமாக உயர்ந்த பாக்கியத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த போதை இருக்கிறது இல்லையா? பாக்கியத்தை உருவாக்குபவர் எங்களுடையவராக ஆகி விட்டார் என்று அனைவரும் போதையில் கூறுவீர்கள் இல்லையா? எப்பொழுது பாக்கியத்தை உருவாக்குபவர் உங்களுடையவர் ஆகி விட்டார் என்றால் பாக்கியத்தை யாருக்கு கொடுப்பார்.

பாக்கியத்தை உருவாக்குபவரை தன்னுடையவராக ஆக்கினீர்கள் என்றால் பாக்கியத்தின் அதிகாரத்தை அடைந்து விட்டீர்கள். யாருக்கு போதை இருக்குமோ அவர், பாக்கியம் என்னுடையது இல்லை என்றால் வேறு யாருக்கு இருக்கும் என்று எப்பொழுதும் இதே அனுபவம் செய்கிறார்கள். ஏனென்றால் பாக்கியத்தை உருவாக்குபவரே என்னுடையவர். இவ்வளவு போதை இருக்கிறதா அல்லது சில நேரம் ஏறுகிறது மற்றும் சில நேரம் இறங்குகிறதா? சங்கமயுகத்தின் காலமே எவ்வளவு குறைந்தது. மேலும் அதிகமானவர்கள் நீங்கள் அனைவருமே புதியவர்கள். எவ்வளவு கொஞ்ச காலம் கிடைத்திருக்கிறது ஆனால்

டிராமாவில் விசேஷமாக இந்த சங்கமயுகத்தின் விசேஷம் என்னவென்றால் யாராக இருந்தாலும் புதிபவரானாலும் பழையவரானாலும் வரிசை எண் முன்னுக்கு எடுப்பதற்கு பொன்னான வாய்ப்பு இருக்கிறது அப்படியானால் புதியவர்களிடம் ஊக்கம் இருக்கிறதா அல்லது நம்மை விட முன்னுக்கு அதிகமானவர்கள் இருக்கிறார்கள் நாமோ, இப்பொழுது தான் வந்திருக்கிறோம் என்று நினைக்கிறீர்களா? அப்படியில்லை எவ்வளவு முன்னேற விரும்புகிறீர்களோ அவ்வளவு முன்னேற முடியும். இதற்கான தடையற்ற அனுமதி இருக்கிறது. பயிற்சியில் மட்டும் கவனம் இருக்க வேண்டும். சில சில பழையவர்கள் கவனக்குறைவானவர்கள் ஆகி விடுகிறார்கள். மேலும் புதியவர்கள் நீங்கள் கவனக்குறைவானவர்களாக இல்லை என்றால் முன்னுக்குச் சென்று விடுவீர்கள். முன்னுக்கு வரிசை எண் பெற்று விடுவீர்கள். பெற வேண்டும் தான் இல்லையா? முதல் எண் இல்லை, முதல் டிவிஷனில் வரலாம். முதல் நம்பராகவோ பிரம்மாபாபா நிச்சயிக்கப்பட்டு விட்டார் ஆனால் முதல் டிவிஷனில் எவ்வளவு விரும்புகிறீர்களோ அவ்வளவு வர முடியும். அப்படியானால் அனைவரும் எந்த டிவிஷனில் வருவீர்கள்? அனைவரும் முதலில் வருவீர்கள் என்றால் இரண்டாம் நிலையில் யார் வருவார்கள்? மாதர்கள் எதில் வருவீர்கள்? முதல் டிவிஷனில் வருவீர்களா? மிக நல்லது. வரவே தான் வேண்டும் இந்த உறுதியான நிச்சயம் பாக்கியத்தை உறுதிப்படுத்திவிடுகிறது. தெரியவில்லை வருவோமா இல்லையா வருங்காலத்தில் ஏதாவது மாயா வந்து விட்டால்... தெரியவில்லை, மாயா மிகவும் புத்திசாலி - இந்த மாதிரி வீணான எண்ணங்களை ஒருபொழுதும் உருவாக்காதீர்கள். எப்பொழுது சர்வ சக்திவான் உடன் இருக்கிறார் என்றால் மாயாவோ அதன் எதிரில் காகிதப்புலி ஆகும். எனவே பயப்படாதீர்கள். தெரியவில்லை என்ற எண்ணத்தை ஒருபொழுதும் வைக்காதீர்கள். மாஸ்டர் ஞானம் நிறைந்தவராகி ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டே இருங்கள். (பாபா) உடன் இருப்பதின் அனுபவம் எப்பொழுதுமே சுலபமாக மற்றும் பாதுகாப்பாக வைக்கிறது. உடன் இருப்பதை மறந்து விட்டீர்கள் என்றால் கடினமாகி விடுகிறது ஆனால் அனைவரின் உறுதிமொழி உடன் இருப்போம், உடன் செல்வோம் என்பது தான் இல்லையா? அல்லது தனியாக இருப்போம், தனியாக செல்வோம் என்பதா? அதனால் உடன் இருப்பதின் அனுபவத்தை

அதிகரியுங்கள். உடன் இருக்கிறார் என்பதை தெரிந்தும் இருக்கிறீர்கள், ஏற்றுக் கொள்ளவும் செய்கிறீர்கள் ஆனால் வித்தியாசம் என்ன ஏற்பட்டு விடுகிறது? தெரிந்தும் இருக்கிறீர்கள், ஏற்றுக் கொண்டும் இருக்கிறீர்கள் ஆனால் அந்த நேரத்தில் அதன்படி நடந்து கொள்வதில்லை. மாயாவின் போர்ஸ் (சக்தி) இந்த கோர்ஸை (பாடத்தை) மறக்கடித்து விடுகிறது ஆனால் மாயா என்ன மிகுந்த பலம் நிறைந்ததா? அது பலம் நிறைந்ததா அல்லது நீங்கள் பலம் நிறைந்தவர்களா? அல்லது சில நேரம் மாயா பலம் நிறைந்ததாகவும், சில நேரம் நீங்கள் பலம் நிறைந்தவர்களாகவும் இருக்கிறீர்களா? உங்களுடைய பலவீனம் மாயா தான். வேறெதுவும் இல்லை. உங்களுடைய பலவீனம் மாயா ஆகி எதிரில் வருகிறது. எப்படி உடலின் பலவீனம் நோயாகி எதிரில் வருகிறது இல்லையா, அதே போல் ஆத்மாவின் பலவீனம் மாயாவாகி எதிர்க்கிறது. எனவே பலவீனமானவராகவும் ஆகாதீர்கள், மாயாவும் வர வேண்டாம். லட்சியமே மாயாவை வென்று உலகை வெல்பவர் ஆவது தான். எத்தனை தடலை வெற்றி அடைந்தவராக ஆகியிருக்கிறீர்கள்? கணக்கில் அடங்காத தடவை, இருந்தும் பயந்து விடுகிறீர்கள். ஏதாவது புதிய விஷயம் இருக்கிறது என்றால் புதிய விஷயமாக இருந்தது இல்லையா, எனக்குத் தெரியாது எனவே பயந்து விட்டேன் என்று சொல்வார்கள் ஆனால் அனேக தடவை வெற்றி அடைந்தவர் என்று ஒரு பக்கம் கூறுகிறீர்கள். பின்பு ஏன் பயந்து விடுகிறீர்கள். ஒவ்வொரு குழந்தையும் உயர்ந்த ஆத்மாவாகி இராஜ்ய அதிகாரி ஆகி விடட்டும் என்பது தான் குழந்தைகள் மேல் உள்ள தந்தையின் அன்பாகும். பிரஜை அதிகாரியாகவோ ஆக. வேண்டாம் தானே? அப்படியானால் இராஜ்ய அதிகாரி என்றால் ஒவ்வொரு கர்ம இந்திரியத்தை வென்றவர். ஒருவேளை தன்னுடைய கர்ம இந்திரியங்கள் மேல், மனம், புத்தி, சம்ஸ்காரத்தின் மேல் வெற்றி அடையவில்லை என்றால் பிரஜைகள் மேல் என்ன இராஜ்யம் செய்வீர்கள். ஒருவேளை தன் மேல் வெற்றி அடைய முடியாத இராஜாவாக ஆனீர்கள் என்றால் சத்யுகமும் கலியுகம் ஆகி விடும். எனவே மனம், புத்தி, சம்ஸ்காரம் கட்டுப்பாட்டில் இருக்கிறதா என்ற இதை சோதனை செய்யுங்கள். மனம் உங்களை நடத்திக் கொண்டிருக்கிறதா அல்லது நீங்கள் மனதை நடத்திக் கொண்டிருக்கிறீர்களா? என்னுடைய மனம் இன்று எங்கும் லயிக்கவில்லை. மனம், இங்கும் அங்கும் என்று அலைகிறது என்று புகார் செய்கிறீர்கள் என்றால் இது மனதை வென்ற நிலை ஆனதா?

இன்று மனம் சோர்வாக இருக்கிறது, இன்று மனம் வேறு கவர்ச்சியின் பக்கம் சென்று கொண்டிருக்கிறது என்பது வெற்றி அடைபவரின் எண்ணமா? அப்படி யார் தன் மேல் வெற்றி அடைய முடியவில்லை என்றால் அவர் உலகத்தின் மேல் எப்படி வெற்றியை அடைவார்? எனவே கர்ம இந்திரியங்களை வென்ற நிலை. மனதை வென்ற நிலை எவ்வளவு ஆகியிருக்கிறது? என்ற இதை சோதனை செய்யுங்கள். ஒருவேளை முதல் டிவிஷனில் வர வேண்டும் என்றால் இந்த லட்சணத்தினால் லட்சியத்தை அடைய முடியும்.

குழந்தைகள் ஊக்கம் உற்சாகத்திலும் இருக்கிறார்கள், ஞானத்தின் வாழ்க்கை நன்றாகவும் இருக்கிறது, ஞானம் கேட்பது மற்றும் சொல்வது இதிலும் நன்றாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்று பாபா பார்த்தார் ஆனால் இப்படி இருந்து கொண்டிருக்கும் போதே ஒருவேளை பலவீனம் வருகிறது என்றால் அதன் காரணம் என்ன? என்ன கூறுகிறீர்களோ, என்ன கேட்கிறீர்களோ, அந்த ஒவ்வொரு குணத்தின், சக்தியின், ஞானத்தின் அனுபவம் குறைவாக இருக்கிறது என்பது தான் முக்கிய மான காரணம் ஆகும். உதாரணமாக முழு நாளில் தனக்கும் மற்றவர்களுக்கும் - நான் ஆத்மா ஆவேன், நீங்கள் ஆத்மா ஆவீர்கள், அமைதி சொரூபமானவர், சுக சொரூபமானவர் என்று எத்தனை தடவை கூறுகிறீர்கள் மற்றும் எத்தனை தடவை தானும் யோசிக்கிறீர்கள் மற்றும் மற்றவர்களுக்கும் கூறுகிறீர்கள் ஆனால் நடைமுறையில் ஆத்மீக அனுபவம், ஞான சொரூபம், அன்பு சொரூபம், அமைதி சொரூபத்தின் அனுபவம் குறைவாக இருக்கிறது. கேட்பது சொல்வது அதிகமாக இருக்கிறது மற்றும் அனுபவம் குறைவாக இருக்கிறது ஆனால் அனைத்தையும் விட பெரிய சக்தி அனுபவத்தின் சக்தி ஆகும். எனவே அந்த அனுபவத்திலேயே மூழ்கி விடுங்கள். எப்பொழுது அமைதி சொரூபம் என்று கூறுகிறீர்கள் என்றால் சொரூபத்தில் தனக்கு, மற்றவர்களுக்கு அமைதியின் அனுபவம் ஏற்படட்டும். ஒவ்வொரு குணத்தின் வர்ணனை செய்கிறீர்கள், சக்திகளின் வர்ணனை செய்கிறீர்கள் ஆனால் சக்தி மற்றும் குணம் தேவையான நேரத்தில் அனுபவத்தில் வரட்டும். அனேகர் சகித்துக் கொள்ளும் சக்தியை தாரணை செய்ய வேண்டும். சகிப்புத்தன்மை மிக நல்லது என்று சொல்லிக் கொண்டும் இருக்கிறார்கள் ஆனால் அனுபவம் ஏற்படுவதில்லை. அனுபவத்தின் குறைவின் காரணமாக எவ்வளவு

விரும்புகிறீர்களோ அவ்வளவு அடைய முடிவதில்லை. ஒருவேளை அனைவரிடமும் எவ்வளவு முயற்சி இருக்க வேண்டுமோ. அவ்வளவு இருக்கிறதா என்று கேட்டீர்கள் என்றால் வெகு சிலரே ஆம் என்று கூறுவார்கள். எனவே எவ்வளவு கிடைத்துக் கொண்டிருக்கிறதோ அவ்வளவு வாழ்க்கையில் மற்றும் காரியத்தில் அனுப படிம் ஏற்படட்டும். யோசிப்பதில் மட்டும் அனுபவம் இருக்க வேண்டாம், ஆனால் நடந்து கொள்வதில், காரியம் செய்வதில் சக்திகள், குணங்கள் தனக்கும் அனுபவம் ஆகட்டும் மற்றவர்களுக்கும் அனுபவம் ஆகட்டும். ஞான சொரூபமானவன் என்று கூறவும் செய்கிறீர்கள் அப்படியானால் அந்த சொரூபம் தென்பட வேண்டும் இல்லையா. மேலும் சொரூபம் எப்பொழுதும் இருக்கும், சொரூபம் சில நேரம் இருக்கும் என்பதல்ல. அஞ்ஞான காலத்தின் வாழ்க்கையில் ஒருவேளை யாருடனாவது கோப சொரூபம் இருக்கிறது என்றால் எப்பொழுதாவது ஏதாவது விஷயம் நடக்கிறது என்றால் அந்த சொரூபம் தென்படும், மறைவதில்லை. சின்ன விஷயமானாலும், பெரிய விஷயமானாலும் யாருடைய சொரூபம் எப்படிப்பட்டதோ அது தென்படும். அது தனக்கும் அனுபவம் ஆகும் மற்றவர்களுக்கும் அனுபவம் ஆகும். அவரோ கோபக்காரரே, அவருடைய சம்ஸ்காரமே கோபத்தினுடையது என்று கூறுகிறார்கள் இல்லையா! அப்படி சம்ஸ்காரம் தென்படுகிறது இல்லையா. அதே போல் இந்த ஞான சொரூபம், அமைதி சொரூபம், சுக சொரூபம் அனுபவத்தில் வரட்டும் அப்படி அனுபவிமூர்த்தி என்பது உயர்ந்த முயற்சியின் அடையாளம் ஆகும். அப்படி அனுபவத்தை அதிகப்படுத்துங்கள். என்ன கூறினீர்களோ அதை அனுபவம் செய்தீர்களா? ஒருவேளை அனுபவம் ஏற்படவில்லை என்றால் அதற்கான காரணம் அவ்வப்பொழுது என்ன விதி கிடைக்கிறதோ அந்த விதியின் மேல் கவளம் குறைவு என்பதாகும். எவ்வளவு ஞானத்தை, சக்திகளை, குணங்களை ரிவைஸ் செய்து (மீண்டும் பார்த்து சரி செய்வது) கொண்டேயிருப்பீர்களோ அவ்வளவு ரியலைசேஷன் (உணர்வது) சுலபமாகும். ரிவைஸ் செய்யவில்லை என்றால் ரியலைசேஷனும் குறைவாக இருக்கும். கேட்டீர்கள் மிக நல்லது ஆனால் நடைமுறையில் ரிவைஸ் ஆக வேண்டும். எப்படி உலகத்தினர் காரியம் செய்வதே யோகா தான் என்று கூறுகிறார்கள். காரியத்தையும் - யோகாவையும் வேறு வேறு என்று நினைப்பதில்லை. காரியமே யோகா என்று நம்பு கிறார்கள். காரியத்தினால் யோகா செய்வது இதையே

கர்மயோகா என்று நினைக்கிறார்கள் ஆனால் காரியம் மற்றும் யோகா இரண்டிற்கும் சமநிலை வேண்டும். காரியத்தில் முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருப்பது போகா இல்லை. காரியம் செய்து கொண்டே யோகாவின் அனுபவம் இருக்க வேண்டும். காரியத்தில் முழுமையாக ஈடுபட்டுவிட்டார் என்றால் காரியம் தான் உயர்ந்ததாகி விடுகிறது, யோகா ஒதுக்கப்பட்டுவிடுகிறது நடைமுறையில் இதே கவனக்குறைவு வருகிறது. அப்படி காரியத்தில் யோகாவின் அனுபவம் இருப்பது இதைத் தான் கர்மயோகி என்று கூறுவது. அடிப்படையான விஷயம் அனுபவி சொரூபம் ஆவது. ஒவ்வொரு குணத்தின் அனுபவத்தில் மூழ்கி விடுங்கள். சக்தி சொரூபம் ஆகி விடுங்கள். உங்களுடைய சொரூபத்திலிருந்து சக்திகள் தென்படட்டும். இப்பொழுது கூட பாருங்கள் ஒருவேளை யாரிடமாவது ஏதாவது விசேஷ சக்தி இருக்கிறது என்றால் அவரைப் பற்றி இவர் மிகுந்த சகித்துக் கொள்ளும் சொரூபமுடையவர், இவரில் உள்ளடக்கும் சக்தி அதிகமாகத் தென்படுகிறது என்று கூறுகிறீர்கள். அப்படி சிலரில் தென்படுகிறது. சிலரில் தென்படவில்லை. மேலும் சில நேரம் தென்படுகிறது மற்றும் சில நேரம் இல்லை என்றால் கவனம் குறைவாக ஆகி விட்டது இல்லையா. எனவே ஒவ்வொரு சக்தி, ஒவ்வொரு குணம், ஒவ்வொரு ஞானத்தின் பாய்ன்ட்டுகள் ஞானத் துளிகள்) உங்களுடைய சொரூபத்தில் அனுபவம் செய்ய வேண்டும். மேலும் முதலில் தனக்கே எப்பொழுது அனுபவம் ஆகுகிறதோ அப்பொழுது தான் உங்கள் சொரூபம் மூலம் மற்றவர்களுக்கு அனுபவம் ஆகும். ஒருவினாடி கூட ஒருவேளை ஏதாவது குணம் மற்றும் சக்தியின் அனுபவம் ஏற்படுகிறது என்றால் எவ்வளவு குஷி அதிகரித்து விடுகிறது மேலும் எப்பொழுது நிரந்தர அனுபவி சொரூபமாக ஆகி விட்டீர்கள் என்றால் எப்பொழுதும் முகத்தில் குஷியின் பொலிவு அதிர்ஷ்டம் நிறைந்தவரின் ஜொலிப்பு அனுபவம் ஆகும். எனவே அனுபவத்தை அதிகப்படுத்துங்கள். விதியோ தெளிவாகி விட்டது இல்லையா? நல்லது. அனைவரும் அதிர்ஷ்டசாலிகளாகவோ இருக்கவே இருக்கிறீர்கள் ஆனால் விசேஷமாக குஷியை கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்கள் அப்படியானால் அனைவருக்கும் குஷி கிடைத்ததா?

அனைவரும் சௌகரியமாக தங்கியிருக்கிறீர்களா? மனம் ஓய்வாக இருக்கிறது என்றால் உடலுக்கும் ஓய்வு கிடைத்தே விடுகிறது.

எவ்வளவு தங்கும் இடங்களை அதிகரிப்பீர்களோ அவ்வளவு குறைவானதாக ஆகத்தான் வேண்டும், இப்படி நடக்கத் தான் செய்யும் இது நிர்ணயிக்கப்பட்டது, அதை என்ன செய்ய முடியும். மேலும் நல்லது தான் எங்கு அமர வைப்பீர்களோ, எப்படி அமர வைப்பீர்களோ. எப்படி தூங்க வைப்பீர்களோ... இதற்கான ஒத்திகை நடந்து விடுகிறது. அப்படி தரையில் தூங்குவது நல்லது தான், பட்டத்து ராஜா ஆகி விட்டீர்கள் இல்லையா. சாஸ்திரங்களிலோ பட்டத்து ராணி மற்றும் பட்டத்து ராஜாவின் மிகுந்த மஹிமை இருக்கிறது, நீங்களோ வெகு சுலபமாக ஆகி விட்டீர்கள். ஏதாவது கஷ்டம் இருந்ததா? வந்திருக்கும் அனைவரும் சௌகரியமாக தங்க வேண்டும் என்று பாப்தாதா மற்றும் நிமித்தமாக இருக்கும் ஆத்மாக்கள் நினைக்கிறார்கள் ஆனால் ஒருவேளை அதிகமான எண்ணிக்கை வந்த போதிலும் சௌகரியமாக இருக்கிறது என்றால் குஷிக்கான விஷயம் ஆகும். எங்கு தங்கியிருந்தாலும் அங்கு குஷிபாக இருக்கிறீர்களா? எந்த சிரமமும் இல்லையா, மீண்டும் அழைக்கலாமா? யார் வர விரும்புகிறீர்களோ அவர்கள் வரலாம் என்ற ஒரு சுற்றறிக்கை மட்டும் சென்று விட வேண்டும். அப்படி யானால் என்ன செய்ய வேண்டியதாக இருக்கும். இடைவிடாத தபஸ்யா செய்ய வேண்டியதாக இருக்கும். குஷி என்ற சத்துணவை சாப்பிடுங்கள் மற்றும் இடைவிடாத யோகா செய்யுங்கள் பின்போ அனைவரும் வர முடியும். செய்வீர்களா? களைப்படைய மாட்டீர்களே. பசி ஏற்படாதா? ஏழு நாட்கள் சாப்பிட மாட்டீர்களா. ஏழு நாட்களுக்கு உணவு கிடைக்காது. பாப்தாதா அந்த மாதிரி கடுமையாகச் செய்ய விரும்பவில்லை. நீங்கள் சகஜயோகிகள் இல்லையா. நல்லது.

இந்த பரமாத்ம மிலனின் பாக்கியம் குறைந்ததல்ல. இந்த பரமாத்ம மிலனின் சிரேஷ்ட பாக்கியம் கோடியிலும் சிலரான ஆத்மாக்கள் உங்களுக்குத்தான் கிடைக்கிறது. நல்லது. கிடைத்து விட்டதல்லவா. பக்தியிலோ ஜட சித்திரம் கிடைக்கிறது மற்றும் இங்கோ சைதன்யத்தில் தந்தை குழந்தைகளைச் சந்திக்கின்றார், ஆன்மீக உரையாடல் செய்கின்றார் எனில் குறைந்த பாக்கியமா என்ன? இருப்பினும் நீங்கள் அனைவருமே அதிர்ஷ்டசாலிகள், காலம் மாறிக் கொண்டே வருகிறது. இருந்தாலும் இப்போது ஓய்வாக அமர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். போகப்போக வளர்ச்சி அடைந்தது எனில் மாறும் தானே, இருப்பினும் நீங்கள் அதிர்ஷ்டசாலிகள் ஏனெனில் 'டூ லேட்' (Too

Late) சமயத்தில் வரவில்லை. 'லேட்' (late) ஆன சமயத்தில் வந்துள்ளீர்கள் எனில் அனைவருக்கும் குஷிதானே? நல்லது.

எந்தெந்த ஜோன்கள் வந்துள்ளனர். மகாராஷ்டிரா, தமிழ்நாடு, ஈஸ்டர்ன் (பெங்கால், பீஹார், ஒரிசா, அஸாம், நேபால்), உ.பி., இந்தோர், கர்நாடகா + இரட்டை வெளிநாட்டினர், ஆந்திரபிரதேசம்.

நாலாபுறத்தின் மிக உயர்ந்த பாக்கியத்தை உருவாக்குபவரின் பாக்கியவான் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் மனதை வெல்லும் -உலகை வெல்லும் நிச்சயம் மற்றும் போதையிலிருக்கக்கூடிய, எப்பொழுதும் ஒவ்வொரு குணம், சக்தி மற்றும் ஞானத்தின் அனுபவி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தந்தையை உடன் வைக்கக்கூடிய இணைந்த சொரூப ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் உயர்ந்த பாக்கியத்தின் ரேகையை சுலபமாக உயர்ந்ததாக ஆக்கக்கூடிய அந்த மாதிரி நெருக்கத்தில் இருக்கும் மற்றும் உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: இடைவிடாத யோகத்தின் விதி மூலமாக இடைவிடாத பூஜைக்குரியவராகக் கூடிய உயர்ந்த மகான் ஆத்மா ஆகுக!

தற்சமயம் மகான் ஆத்மாக்கள் என்று கூறப்படுபவர்கள் அவர்களுடைய பெயர் அகண்டானந்த் ஆகியவை வைக்கிறார்கள் ஆனால் அனைத்திலும் அகண்ட (இடைவிடாது) சொரூபம் உடையவர்களோ நீங்கள் தான் -ஆனந்தமும் இடைவிடாதது. சுகமும் இடைவிடாதது; தீய சேர்க்கையில் மட்டும் வராதீர்கள், மற்றவர்களின் அவகுணங்களைப் பார்த்து, கேட்டு கவனம் கொடுக்காதவராக ஆகி விட்டீர்கள் என்றால் இந்த விசேஷத்தினால் அகண்ட யோகி ஆகி விடுவீர்கள். யார் அகண்ட யோகியோ அவர் தான் அகண்ட பூஜைக்குரியவர் ஆகிறார். அப்படி நீங்கள் அந்த மாதிரி மகான் ஆத்மாக்கள் ஆவீர்கள். அரை கல்பம் நீங்களே பூஜ்ய சொரூபத்தில் இருக்கிறீர்கள் மேலும் அரை கல்பம் உங்களுடைய ஜடச்சிலைகளுக்கு பூஜை நடக்கிறது.

சுலோகன்: தெய்வீக புத்தி தான் அமைதியின் சக்தியின் ஆதாரம் ஆகும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

## 26.11.1994 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பரமாத்ம பாலனை மற்றும் பரிவரித்தனை (மாறும்) சக்தியின் பிரத்யஷ (வெளிப்படையான) சொருபம் -சகஜயோகி வாழ்க்கை!

இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் நெற்றியில் விசேஷமாக உயர்ந்த பாக்கியத்தின் மூன்று ரேகைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அனைத்து குழந்தைகளின் பாக்கியமோ எப்பொழுதும் மிக உயர்ந்ததே தான்: ஆனால் இன்று விசேஷமாக மூன்று ரேகைகள் பிரகாசமாக மின்னிக் கொண்டிருக்கின்றன. ஒன்று, பரமாத்மா பாலனையின் பாக்கியத்தினுடைய ரேகை, இரண்டாவது, எல்லைக்கப்பாற்பட்ட உயர்ந்ததிலும் உயர்ந்த படிப்பின் பாக்கியத்தின் ரேகை மற்றும் மூன்றாவது, உயர்ந்த வழி (சிரேஷ்ட மத்) கிடைப்பதற்கான பாக்கியத்தின் ரேகை ஆகும். குடும்ப வாழ்க்கையிலும், ஆன்மீக வாழ்க்கையிலும் ஒவ்வொரு குழந்தைக்கும் இந்த மூன்று பிராப்திகளும் இந்த வாழ்க்கையில் கிடைக்கவே தான் செய்கின்றன. பாலனையும் கிடைக்கிறது, படிப்பும் கிடைக்கிறது மற்றும் வழியும் கிடைக்கிறது. இந்த மூன்றின் மூலமாகத் தான் ஒவ்வொரு ஆத்மாவும் பொறுப்பாளராக ஆகி விடுகிறது. உயர்ந்த ஆத்மாக்களாகிய உங்கள் அனைவருக்கும் யாருடைய பாலனை கிடைத்துக் கொண்டிருக்கிறது? பரமாத்மா பாலனையில் ஒவ்வொரு விநாடியும் வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள். எப்படி பரமாத்மா உயர்ந்ததிலும் உயர்ந்தவரோ அதே போல் பரமாத்மாவின் பாலனையும் எவ்வளவு உயர்ந்தது. மேலும் இந்த பரமாத்ம பாலனைக்குப் பாத்திரமானவர்களாக யார் ஆகியிருக்கிறார்கள் மற்றும் எத்தனை பேர் ஆகியிருக்கிறார்கள்? முழு உலகத்திலுள்ள ஆத்மாக்களும் தந்தை என்று கூறுகிறார்கள்; ஆனால் பாலனைக்கும், படிப்பிற்கும் பாத்திரமானவர்களாக

ஆவதில்லை. மேலும் நீங்கள் எவ்வளவு குறைவான ஆத்மாக்கள் இந்த பாக்கியத்தின் பாத்திரமானவர்களாக ஆகியிருக்கிறீர்கள். முழு கல்பத்திலும் இந்த குறைந்த காலத்தில் தான் பரமாத்மாவின் பாலனை கிடைக்கிறது. தேவதைகளின் பாலனை மற்றும் மனிதர்களின் பாலனை பல பிறவிகளாய் கிடைக்கிறது ஆனால் இந்த உயர்ந்த பாலனை இப்பொழுது இல்லை என்றால் எப்பொழுதும் இல்லை. அந்த மாதிரியான உயர்ந்த பாக்கியத்தின் உயர்ந்த ரேகை எப்பொழுதும் தன்னுடைய நெற்றியில் பிரகாசித்துக் கொண்டிருப்பதாக அனுபவம் செய்கிறீர்களா? எந்தவொரு பிராப்தியையும் நிரந்தரமானதாக ஆக்க விரும்புகிறீர்களா அல்லது சில நேரத்திற்கானதாக ஆக்க விரும்புகிறீர்களா? அப்படியானால் பிராப்தி செய்வதற்கான முயற்சியும் எப்பொழுதுமே வேண்டுமா அல்லது சில நேரம் வேண்டுமா? மேலும் எப்பொழுதும் தீவிரமானதாக வேண்டுமா அல்லது சில நேரம் சாதாரணம் மற்றும் சில நேரம் தீவிரமானதாக வேண்டுமா? நடைமுறையில் என்ன நிலைமை இருக்கிறது? விரும்புவது மற்றும் நடைமுறையில் நடப்பது இதில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது இல்லையா? அதிகமாகத்தான் யோசிக்கிறீர்கள்; ஆனால் நினைவில் குறைவாக வைத்துக் கொள்கிறீர்கள். யோசிக்கும் சொரூபம் ஆக வேண்டுமா அல்லது நினைவு சொரூபம் ஆக வேண்டுமா? நினைவு சொரூபம் ஆகக் கூடியவர்கள் தான் இல்லையா? அப்படி அமிர்தவேளையில் உங்களை எழுப்புபவர் யார் என்ற இந்த ஒரு விஷயத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தந்தையின் அன்பு எழுப்பி விடுகிறது. நாளின் துவக்கம் எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறது. மேலும் தந்தை அவரே சந்திப்பதற்காக அழைக்கிறார், ஆன்மீக உரையாடல் செய்கிறார், சக்திகளை நிரப்புகிறார். அப்படி ஒவ்வொரு நாளின் தொடக்கம் எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறது. தந்தையின் அன்பினால் எழுந்திருக்கிறீர்களா அல்லது சில நேரம் நிர்பந்தத்தினால் எழுகிறீர்களா? அன்பின் பாடல் உங்களை எழுப்புகிறது, இது தான் யதார்த்தமாகும். அமிர்தவேளையிலிருந்தே தந்தை இனிமையான குழந்தைகளே, அன்பான குழந்தைகளே வாருங்கள் என்று எவ்வளவு அன்போடு அழைக்கிறார், எழுப்புகிறார். அப்படி யாருடைய தொடக்கம் (காலை இவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறதோ. மத்திய காலமும் (பகல்) முடிவும் (இரவு) எப்படி இருக்கும்? உயர்ந்ததாக இருக்கும் இல்லையா?.

தற்சமயம் குழந்தைகளுக்கு பாலனையின் பாக்கியம் எவ்வளவு பிராப்தியாகி இருக்கிறது என்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். எவ்வளவு பிராப்தி இருக்கிறதோ அவ்வளவு லாபத்தை எடுக்கிறீர்களா? இவ்வளவு பாக்கியத்தின் பாத்திரமானவர்களாக ஆவோம் என்று கனவிலும், எண்ணத்திலும் கூட இருந்ததில்லை. யோசிக்கவே முடியாத மாதிரி இருந்தது ஆனால் எவ்வளவு சுலபமாகக் கிடைத்து விட்டது. தந்தையின் அன்பின் பாலனையின் நடைமுறை சொரூபமே சகஜயோகி வாழ்க்கை ஆகும். யார் மேல் அன்பு இருக்கிறதோ அவருக்காக கடினமான சூழ்நிலை அல்லது கடினமான ஏதாவது விஷயத்தை பார்க்கவும் கேட்கவும் முடியாது. அப்படி தந்தையும் கூட கடினமானதை சகஜமானதாக ஆக்கியிருக்கிறார் இல்லையா?. எப்பொழுதும் சகஜமானது. எனவே முயற்சியின் வேகம் எப்பொழுதுமே தீவிரமாக இருக்கட்டும். இன்று மிக நல்ல முயற்சி இருக்கிறது மற்றும் நாளை கொஞ்சம் சதவிகிதம் குறைந்து விட்டது என்றால் எப்பொழுதும் சுலபமானது என்று சொல்ல முடியுமா என்ன? எப்பொழுதும் கடினமானதாக யார் ஆக்குகிறார்? சுயம் நீங்களே ஆக்குகிறீர்கள் இல்லையா? என்ன காரணம்? யோசிக்கும் பழக்கம் என்னவோ இருக்கிறது ஆனால் நினைவு சொரூபத்தின் சம்ஸ்காரத்தை சில நேரம் தான் எமர்ஜ் (வெளிப்பட்டுக் கொண்டு ஆக வைத்திருக்கிறீர்கள், சில நேரம் மெர்ஜ் (உள்ளடங்கி போவது ஆகி விடுகிறது. ஏனென்றால் நினைவு சொரூபத்திலிருந்து சக்திசாலியான சொரூபம் உருவாகிறது. யோசிப்பது சக்திசாலியான சொரூபம் இல்லை. நினைவு சக்தி ஆகும். நினைவு மறந்த நிலையில் ஏன் வந்து விடுகிறீர்கள். பழக்க தோஷத்தினால் அப்படி ஆகி விடுகிறீர்கள். ஒருவேளை உறுதியானவர் இல்லை என்றால் நிர்பந்தப்படுத்தப்படுபவர் ஆகி விடுவீர்கள். எங்கு உறுதி இருக்கிறதோ அங்கு நிர்பந்தம் இல்லை. இயற்கையான பழக்கமோ, நினைவு மறந்த நிலைக்கானதாக இல்லை, ஆரம்பத்திலிருந்து நினைவு சொரூப பிராப்தியை பெறும் தேவ ஆத்மாக்கள் நீங்கள் யோகா செய்வதற்கான முயற்சி செய்வதில்லை ஆனால் நினைவு சொரூபத்தின் பிராப்தியை அடைகிறீர்கள். அப்படி தொடக்கத்திலும் நினைவு சொரூபத்தின் பிரத்யக்ஷமான வாழ்க்கை இருக்கிறது. மேலும் அனாதி ஆத்மா நீங்கள் எப்பொழுது பரந்தாமத்திலிருந்து வந்திருக்கிறீர்கள் என்றால் விசேஷ ஆத்மாக்கள்

உங்களுடைய சம்ஸ்காரம் இயல்பாகவே நினைவு சொரூபமானது. மேலும் கடைசியில் சங்கமயுகத்திலும் நினைவு சொரூபமாக ஆகுகிறீர்கள் இல்லையா, அப்படி அனாதி, ஆதி மற்றும் கடைசி மூன்று காலங்களிலும் நினைவு சொரூபமாக இருக்கிறீர்கள். நினைவு மறந்த நிலையோ இடையில் வந்தது. அப்படியானால் ஆதி மற்றும் அனாதி சொரூபம் சகஜமாக இருக்க வேண்டுமா அல்லது இடையில் வந்த சொரூபம் சகஜமாக இருக்குமா? ஆம் நான் ஒரு ஆத்மா என்று யோசிக்கிறீர்கள்: ஆனால் அந்த நினைவு சொரூபமாகி நடந்து கொள்வது, பேசுவது, பார்ப்பது அதில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. எனவே நாம் பரமாத்ம பாலனையின் அதிகாரி ஆத்மாக்கள் என்ற இந்த நினைவை வைத்துக் கொள்ளுங்கள்.

பாப்தாதா சார்ட்டை சோதனை செய்கிறார் என்றால் ரேகைகள் சில நேரம் உயர்வாக இருக்கிறது, சில நேரம் தாழ்வாக இருக்கிறது. சில நேரம் ஏதாவது கறை இருக்கிறது, சில நேரம் வாழ்க்கை என்ற காகிதத்தில் ஏதாவது கறை இல்லாமலும் இருக்கிறது. மேலும் சில நேரம் கறையே கறை தான், ஒன்றின் பின்னால் ஒன்றாக கறையே பார்க்கத் தென்படுகிறது. ஏன்? ஒன்று தவறோ நடந்து விடுகிறது, ஆனால் தவறு நடந்த பின்பும் அந்த தவறை யோசித்துக் கொண்டே இருக்கிறீர்கள். ஏன், என்ன, எப்படி, அப்படி இருக்கக்கூடாது, இப்படி..னேக ரூபத்தில் விஷபத்தை நீங்கள் விடுவதே இல்லை. விஷயம் உங்களை விட்டு விட்டு சென்று விடுகிறது ஆனால் நீங்கள் விஷயத்தை விடுவதில்லை. எவ்வளவு நேரம் யோசிக்கும் சொரூபமாக ஆகிறீர்களோ, சரியான நினைவு சொரூபமாக ஆவதில்லையோ அப்பொழுது கறைக்கு மேல் கறை படிந்து கொண்டே இருக்கிறது. சோதனைக்கான நேரம் குறைவாக இருக்கிறது ஆனால் வீணாக யோசிக்கும் சம்ஸ்காரம் இருக்கும் காரணத்தினால் சோதனைக்கான நேரத்தை அதிகரித்து விடுகிறீர்கள். ஒரு நொடி கடந்து சென்றது, மேலும் தீய எண்ணமற்ற நிலை உருவாகி விட வேண்டும் என்ற இந்த சம்ஸ்காரத்தை வெளிக் கொண்டு வாருங்கள். தீய எண்ணமற்ற நிலையை உருவாக்கத் தெரியும் இல்லையா? தன்னுடைய உயர்ந்த பாக்கியத்தை நினைவில் கொண்டு வந்து எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருங்கள். தன்னுடைய பரமாத்மா பாலனையை எப்பொழுதும் அடிக்கடி நினைவில் கொண்டு வாருங்கள். கேட்கவும் தெரியும், யோசிக்கவும்

தெரியும் ஆனால் வித்தியாசம் என்ன ஏற்பட்டு விடுகிறது? பாப்தாதா குழந்தைகளின் விளையாட்டைப் பார்த்துக் கொண்டே இருக்கிறார். முழு நாளிலும் என்னென்ன விளையாட்டு செய்கிறீர்களோ அதை இரவில் சோதனை செய்கிறீர்கள் தான் இல்லையா? மாயாவின் பொம்மை மிகவும் கவர்ச்சிகரமானது. எனவே அந்த பொம்மையோடு விளையாட ஆரம்பித்து விடுகிறீர்கள். முதலிலோ மிகவும் அன்போடு மாயா விளையாட வைக்கிறது. மேலும் விளையாடச் செய்து, விளையாடச் செய்து எப்பொழுது தோல்வி பெறச் செய்து விடுகிறதோ அப்பொழுது உணர்வில் வருகிறீர்கள். பெரும்பான்மையோரில் முக்கியமாக ஒரு சக்தியின் குறை இருக்கிறது. சில நேரம் மிக நன்றாக நடந்து கொள்கிறீர்கள். சில நேரம் நடக்கிறீர்கள், சில நேரம் பறக்கிறீர்கள், முன்னேறிச் செல்கிறீர்கள். பின்பு ஏன் கீழே வந்து விடுகிறீர்கள்? இதற்கான முக்கியமான காரணம் என்ன? மாற்றும் சக்தியின் பலஹீனம் இருக்கிறது. இது சரியில்லை என்று புரிந்து கொள்ளவும் செய்கிறீர்கள்; ஆனால் மாறுவதில் குறை ஏற்பட்டு விடுகிறது. பிராமண வாழ்க்கையில் மாற்றத்தில் வந்து விட்டீர்கள். இப்பொழுது நான் பிராமணன் இல்லை என்று யாராவது கூறுவீர்களா?

அனைவரும் தன்னை பி.கு என்று எழுதுகிறீர்கள் இல்லையா? நான் பிராமணன் என்ற இதை தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? பிராமண வாழ்க்கையில் என்ன சோதனைகள் வருகிறதோ அதில் மாற்றம் செய்வதற்கான சக்தி அவசியமாக இருக்கிறது. எப்பொழுது வீணான எண்ணங்கள் ஓடிக் கொண்டிருக்கிறது என்றால் இவை வீணானவை என்று புரிந்தும் கொள்கிறீர்கள் ஆனால் வீணான எண்ணங்களின் ஈர்ப்பு அவ்வளவு பலமானதாக இருக்கிறது. அது தன் பக்கம் இழுத்து விடுகிறது. நதி நீர் மற்றும் கடல் நீரில் மிகுந்த சக்தி இருக்கிறது என்றால், எவ்வளவு தான் தன்னை நிறுத்துவதற்கு முயற்சி செய்தாலும் அடித்துச் செல்லப்பட்டு விடுகின்றனர். இது சரியில்லை, இதனால் நஷ்டம் தான் ஏற்படுகிறது என்று புரிந்தும் கொள்கிறீர்கள். யோசிக்கவும் செய்கிறீர்கள், இருந்தாலும் அதனுடைய ஓட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டு விடுகிறீர்கள் - இதற்கான காரணம் என்ன? மாற்றும் சக்தியின் குறை இருக்கிறது. முதலில் முக்கியமான மாற்றம் என்னவென்றால், சொரூபத்தில் மாற்றம். நான் உடல் இல்லை: ஆனால் நான் ஒரு ஆத்மா ஆவேன், இது சொரூபத்தின் மாற்றம் ஆகும். இது

தான் முதல் மாற்றம் ஆகும். எப்பொழுதாவது தேக உணர்வின் பாதிப்பு ஏற்படுகிறது என்றால், ஆத்ம அபிமானத்தின் சொரூபத்தில் நிலைத்திருக்க முடிகிறதா அல்லது அடித்துச் செல்லப்பட்டு விடுகிறீர்களா என்று இதிலேயும் சோதனை செய்யுங்கள். ஒருவேளை ஒரு நொடியில் மாற்றும் சக்தி காரியத்தில் வந்து விடுகிறது என்றால் நேரம், எண்ணம் எவ்வளவு மிச்சமாகி விடும். வீணானவைகளிலிருந்து நல்லவைகளை சேமிப்பாக்கி விடுவீர்கள்.

சொரூபத்தின் மாற்றம் மற்றும் சுபாவத்தின் மாற்றம் இது தான் முதல் மாற்றும் சக்தி ஆகும். பழைய சுபாவம் முயற்சி செய்யும் வாழ்க்கையில் ஏமாற்றம் கொடுக்கிறது. என்னுடைய இந்த சுபாவம் சரியில்லை என்று தெரிந்தும் இருக்கிறீர்கள். மேலும் இந்த சுபாவம் அவ்வப்பொழுது ஏமாற்றமும் கொடுக்கிறது என்ற இதையும் தெரிந்திருக்கிறீர்கள். இருந்தாலும் சுபாவத்தின் வசமாகி விடுகிறீர்கள். பின்பு தன்னை காப்பாற்றிக் கொள்வதற்காக என்னுடைய நோக்கம் இதுவாக இருக்கிறது, என்னுடைய சுபாவமே அந்த மாதிரி என்று கூறுகிறீர்கள். நான் விரும்பவில்லை, ஆனால் இது என்னுடைய சுபாவம் என்று கூறுகிறீர்கள். பிராமணன் ஆகி விட்டீர்கள் என்றால் ஜென்மறிட்டது, சம்மந்தம் மாறி விட்டது, தாய் தந்தை மாறிவிட்டனர், குடும்பம் மாறி விட்டது, ஆனால் சுபாவம் மாறவில்லை. பின்பு இது என்னுடைய நேச்சர் (இயல்பு) என்று இராயல் வார்த்தைகளில் கூறுகிறீர்கள். அப்படி முதல் பலஹீனம் சொரூபத்தின் மாற்றம், இரண்டாவது சுபாவத்தின் மாற்றம், மூன்றாவது எண்ணத்தின் மாற்றம். ஒரு நொடியில் வீணானதை சக்தி நிறைந்ததில் மாற்றம் செய்யுங்கள். அரை மணி நேரம் தான் புபல் வந்தது என்று சிலர் நினைக்கிறார்கள், அரை மணி நேரம் வந்தது பதினைந்து நிமிடம் சென்றது ஆனால் அரை மணி நேரம் அல்லது பதினைந்து நிமிடத்திற்கு பலஹீனமான சம்ஸ்காரத்தை உருவாக்கி விடுகிறது இல்லையா? எப்படி உடலில் ஒருவேளை யாராவது அடிக்கடி பலஹீனமானவராக. ஆகிக் கொண்டே இருக்கிறார் என்றால் நிரந்தரமாக பலஹீனமானவராக ஆகி விடுகிறார். எனவே பதினைந்து நிமிடம் ஒன்றும் குறைந்தது அல்ல. சங்கமயுகத்தின் ஒவ்வொரு விநாடியும் வருடங்களுக்குச் சமமானது. எனவே அப்படி அலட்சியமானவராக ஆகாதீர்கள். கொஞ்சம் தான் சென்றது என்றாலும் இழந்தது எவ்வளவு? ஒவ்வொரு அடியிலும் பல

மடங்கு வருமானம் என்று கூறுகிறீர்கள் என்றால் பதினைந்து நிமிடங்களில் எத்தனை அடி எடுத்து வைப்பீர்கள் மேலும் எத்தனை மடங்கு இழந்திருப்பீர்கள்? சேமிப்பிலோ கணக்கை ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு சேமிப்பாகி விட்டது என்று மிக நன்றாக வைக்கிறீர்கள் ஆனால் இழப்பதற்காகவும் கணக்கை வையுங்கள். அப்படி விரும்பாவிட்டாலும் சம்ஸ்காரம் இழுக்கிறது. எந்த விஷயமும் அடிக்கடி நடக்கிறது என்றால் அது சம்ஸ்கார ரூபத்தில் நிரம்பி விடுகிறது. எனவே எண்ணத்தில் மாற்றம் செய்யுங்கள். செய்திருக்கக்கூடாது, நடந்து விட்டது, என்ன செய்வது? என்று யோசித்துக் கொண்டு மட்டும் இருக்காதீர்கள். யோசிக்காதீர்கள் மேலும் செய்து காண்பியுங்கள். நடந்து முடிந்ததற்கு முற்றுப்புள்ளி வையுங்கள் என்று கூறுகிறீர்கள், ஒருவர் இன்னொருவருக்கு ஞானம் கொடுக்கிறீர்கள் இல்லையா?. யாராவது வந்து பேசினார்கள் என்றால் சரி. முற்றுப்புள்ளி வைத்து விடுங்கள் என்று கூறுவீர்கள் ஆனால் சுயம் நீங்கள் முற்றுப்புள்ளி வைக்கிறீர்களா? முற்றுப்புள்ளி வைப்பதற்காக எந்த சக்தி தேவையாக இருக்கிறது. மாற்றக்கூடிய சக்தி. மாற்றக்கூடிய சக்தியுள்ளவர் எப்பொழுதுமே தெள்ளத்தெளிவானவராகவும், பணிவானவராகவும் இருக்கிறார். எப்படி வளைந்து கொடுப்ப வர்கள் தான் உண்மையான தங்கம் ஆவார் என்று பாப்தாதா ஏற்கனவே கூறியிருக்கிறார். உண்மையான தங்கத்தின் அடையாளம் என்னவென்றால் அது வளைந்து கொடுக்கும். எனவே மாற்றக்கூடிய சக்தி தேவையான நேரத்தில் உபயோகத்தில் வருகிறதா அல்லது நேரம் கடந்து சென்ற பிறகு யோசித்துக் கொண்டே இருக்கிறீர்களா? எனவே மாற்றக்கூடிய சக்தியை அதிகரிக்க வேண்டும். யாரிடம் மாற்றம் செய்யும் சக்தி இருக்கிறதோ அவர் அனைவருக்கும் பிரியமானவராக ஆகுகிறார். சிந்தனைகளிலும் சகஜமானவராக இருப்பார். முன்னேறிக் கொண்டே சேவையில் இருக்கிறீர்கள் இல்லையா? சேவையில் கூட தடை ரூபமாக என்ன இருக்கிறது? என்னுடைய கருத்து, என்னுடைய திட்டம், என்னுடைய சேவை இவ்வளவு நல்லதாக இருந்த போதிலும் என்னுடையதை ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை? என்பவை தான் அப்படியானால் அவரை உண்மையான தங்கம் என்று கூறலாமா? என்னுடையது என்பது வந்து விட்டது, என்னுடையது வருவது என்றால் கலப்படம் கலந்து விடுவதாகும். உண்மையான தங்கத்தில் கலப்படம் கலந்து விடுகிறது என்றால் அது உண்மையானதாக இருக்கிறதா? அதன்

மதிப்பு இருக்கிறதா? எவ்வளவு வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. எனவே நேரம் மற்றும் சூழ்நிலையை பகுத்தறிந்து தன்னை மாற்றம் செய்ய வேண்டும், இது அவசியமாக இருக்கிறது. பெரிய பெரிய விஷயங்களில் மாற்றம் செய்வது சுலபம் தான்; ஆனால் ஒவ்வொரு சூழ்நிலை, ஒவ்வொரு சம்மந்தத்தில், நெருக்கத்தில், நேரம் மற்றும் சூழ்நிலையைப் புரிந்து தன்னை மாற்றிக் கொள்வது இது தான் நம்பர் ஒன் ஆவதாகும். இன்னாரும் புரிந்து கொள்ளட்டுமே, இவரும் தான் மாற வேண்டும், நான் மட்டும் மாறுவதா என்ன? என்று இப்படி யோசிக்காதீர்கள். யார் முதலில் செய்கிறார்களோ அவர் அர்ஜுனன் ஆகிறார், இதில் ஒருவேளை நீங்கள் உங்களையே மாற்றிக் கொண்டீர்கள் என்றால் இந்த மாற்றம் செய்வதே வெற்றியாளர் ஆவதற்கான அடையாளம் ஆகும். புரிந்ததா. நல்லது.

சரி, எல்லோரும் எளிதில் வந்து விட்டீர்கள்தானே? உங்களுக்கு சௌகரியமாக உள்ளதா? பக்தி மார்க்கத்தில் நடக்கும் திருவிழாக்களில் எவ்வளவு உழைப்பும் சிரமமும் இருக்கிறது. இந்த விழா நிதானமாக இருக்கிறது, இல்லையா? நீங்கள் நிம்மதியாக தூங்குகிறீர்கள்தானே? இருப்பினும், தரையில் கீழே தூங்குவதற்கு, உட்காருவதற்கு விரிப்பும் மெத்தையும் (foam) கிடைத்துள்ளதுதானே? மேலும் ஆற்றங்கரையில் நடக்கும் கண்காட்சியில் நீங்கள் உணவு சாப்பிட்டால், மண்ணையும் சாப்பிட வேண்டியுள்ளதே. விழாவில் உங்கள் நிகழ்ச்சி நடத்தும்போது எவ்வளவு மண் ஆகி விடுகிறது. இங்கோ நல்ல பிரம்மா போஜனம் கிடைக்கிறது. எப்பொழுதும் பிராப்திகளை உங்கள் முன் வைத்திருந்தால் பலவீனங்கள் என்பதே இருக்காது. அமிர்தவேளை முதல் என்னென்ன பிராப்திகள் கிடைக்கின்றது? அமிர்தவேளையில் உங்களை யார் எழுப்புவது என யாராவது கேட்டால்? பரமாத்மா இவர்களை எழுப்புகிறார் என்பதை யாராவது புரிந்து கொள்வார்களா? பரமாத்மா உங்களுக்காக சும்மா உட்கார்த்திருக்கிறாரா என்ன என சொல்லி சிரிப்பார்கள்? கற்பிப்பதும், எழுப்புவதும் சும்மாவா? உடனே அது எங்களுக்கு மட்டுமே என்று நீங்கள் சொல்கிறீர்கள். வயதான தாய்மார்களிடம் யாராவது உங்கள் ஆசிரியர் யார் என கேட்டால் என்ன சொல்வார்கள்? பரமாத்மா எங்களுக்கு கற்பிக்கிறார். ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா! பரமாத்மாவிற்கு வேறு மாணவர்கள் கிடைக்கவில்லையா! நல்லது. நீங்கள் மதுவனத்தில் எப்படி

மகிழ்ச்சியாக இருக்கிறீர்களோ, அப்படி உங்கள் இடங்களை மதுவனம் ஆக்குங்கள். தாய்மார்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள், இல்லையா? மகிழ்ச்சியை கையாளத் தெரியுமா? தாய்மார்களுக்கு எப்படியும் பொருட்களைக் கையாளும் பழக்கம் உள்ளது, எனவே எப்போதும் மகிழ்ச்சியையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள். பாண்டவர்களுக்கு சேமிக்கத் தெரியும், சம்பாதிப்பது என்றால் சேமிப்பதாகும். எனவே பாண்டவர்கள் சேமிப்பதில் புத்திசாலிகள். கை செலவு பணம் (pocket money) வைப்பதில் கெட்டிக்காரர்கள். எனவே எப்போதும் சரி பார்க்கவும் -எவ்வளவு இழந்தேன், எவ்வளவு சேமித்தேன் என்பதை? சேமிப்பு கணக்கை சதா வளரச் செய்யுங்கள். இன்று ஆயிரம் இருந்தால் நாளை இரண்டு மடங்கு இருக்க வேண்டும் என்பதே நன்றாக சம்பாதிப்பவரின் அடையாளம். அத்தகைய புத்திசாலிகள்தானே நீங்கள்?

தொலைவில் அமர்ந்து இருந்தாலும் பாப்தாதாவுக்கு மிக நெருக்கமாக இருக்கிறீர்கள். ஏனென்றால் பாப்தாதாவிடம் அப்படியொரு டிவி உள்ளது அதில் தொலைவில் இருப்பவர்கள் அவரது கண்களில் முழுமையாக வந்து விடுகிறார்கள். நல்லது. எல்லோரும் நடனமாடுகிறீர்கள். அவ்வளவுதான், ஆடுங்கள், பாடுங்கள், பிரம்மா போஜனம் சாப்பிடுங்கள்.

பின்பு மண்டலம் வாரியாக எழுந்திருக்கச் செய்து சந்தித்தார் -இரட்டை வெளி நாட்டினர், டில்லி, ராஜஸ்தான், பனாரஸ், உ.பி., கர்நாடகா, மகாராஷ்டிரா, ஆந்திர பிரதேசம், கேரளா.

டீச்சர்களுடன் சந்திப்பு: அனைத்து டீச்சர்களும் எப்பொழுதும் ஞான சொரூபமாக, நினைவு சொரூபமானவர்களாக இருக்கவே செய்கிறார்கள். ஏனென்றால் எப்படி தந்தை ஆசிரியராகி வருகிறார் என்றால், அப்படி நீங்களும் தந்தைக்குச் சமமான பொறுப்பிலிருக்கும் ஆசிரியைகள் ஆவீர்கள். தந்தை மாதிரியான ஆசிரியர் இல்லை ஆனால் பொறுப்பிலிருக்கும் ஆசிரியைகள் ஆவீர்கள். அப்படி டீச்சர்களின் விசேஷமோ பொறுப்புணர்வு மற்றும் பணிவுத்தன்மை. யாரிடம் நிர்மலமான சுபாவம் இருக்கிறதோ அவர் தான் வெற்றியடையும் டீச்சராக ஆகிறார். இப்பொழுது நிர்மலமான சுபாவத்தின் மேல்

விசேஷமாக கவனம் வையுங்கள். என்ன தான் ஆனாலும் தன்னுடைய சுபாவம் எப்பொழுதுமே நிர்மலமாக இருக்கட்டும். இந்த நிர்மல சுபாவம் தான் பணிவுத்தன்மையின் அடையாளம் ஆகும். எனவே நிர்மல சுபாவம் இதன் மேல் அதிக கவனம் கொடுங்கள். முற்றிலும் சீதளமானவராக ஆக வேண்டும். சீதளத்தன்மையின் மஹிமையாக சீதளாதேவி இருக்கிறார். அப்படி நிர்மல சுபாவம் என்றால் சீதள சுபாவம். விஷயம் ஆவேசத்தை ஏற்படுத்துவதாக இருந்தாலும் நீங்கள் நிர்மலமாக இருந்தீர்கள் என்றால் வெற்றியடைந்த டீச்சர் என்று கூறலாம். இருந்தாலும் நிர்மல சுபாவத்தின் மேல் கவனம் கொடுக்க வேண்டும் என்று பாப்தாதா மீண்டும் கூறுகிறார். புரிந்ததா. நல்லது.

நாலாபுறத்திலும் உள்ள எப்பொழுதும் நினைவு சொரூபமாக இருக்கும் அனைத்து ஆத்மாக்களுக்கும், எப்பொழுதும் ஒரு நொடியில் மாற்றும் சக்தியின் மூலமாக தன்னை மாற்றக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் சகஜயோகியாக அனுபவம் செய்யக்கூடிய அனுபவி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தந்தையின் நெருக்கத்தில் மற்றும் சமமாக ஆவதின் ஊக்கம் உற்சாகத்தில் இருக்கக்கூடிய அனைத்து ஆத்மாக்களுக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

<u>வரதானம்: "என்னுடையது" என்னும் சூட்சும சொரூபத்தையும் தியாகம் செய்யக்கூடிய, எப்பொழுதும் பயமற்ற, கவலையற்ற மகாராஜா ஆகுக!</u>

இன்றைய உலகத்தில் செல்வமும் இருக்கிறது; மேலும் பயமும் இருக்கிறது. எவ்வளவு செல்வமோ அந்த அளவு பயத்திலேயே சாப்பிடுகிறார்கள். பயத்திலேயே தூங்குகிறார்கள். எங்கு என்னுடையது என்பது இருக்கிறதோ அங்கு அவசியம் பயம் இருக்கும். ஒருவேளை ஏதாவது பொன் மான் கூட என்னுடையது என்றால் பயம் இருக்கும் ஆனால் ஒருவேளை என்னுடையதோ ஒரு சிவபாபா என்றால், பயமற்றவராக ஆகி விடுவீர்கள். எனவே சூட்சும ரூபத்தில் கூட என்னுடையது என்பது என்னென்ன இருக்கிறதோ அதை சோதனை செய்து அதையும் தியாகம் செய்தீர்கள் என்றால் பயமற்ற, கவலையற்ற மகாராஜாவாக இருப்பதற்கான வரதானம் கிடைத்து விடும்.

சுலோகன்: மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுத்தீர்கள் என்றால், உங்களுக்கு தானாகவே மதிப்பு மரியாதை கிடைக்கும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## **05.12.1994 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்**

## தற்சமயத்தின் தேவை -எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வின் சூழ்நிலையை உருவாக்குவது!

இன்று அன்பின் கடலாகிய தந்தை அன்பில் மூழ்கியிருக்கும் தன்னுடைய அன்பான குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருககிறார். இந்த ஈஸ்வரிய அன்பு குழந்தைகள் உங்களைத் தவிர வேறு யாருக்கும் கிடைப்பதில்லை. உங்கள் அனைவருக்கும் இது விசேஷமான பிராப்தி ஆகும். அனைத்து குழந்தைகளுக்கும் பிராப்தி இருக்கிறது ஆனால் பிராப்தி ஆவது முதல் நிலையாகும், பிராப்தியின் அனுபவத்தில் மூழ்கி விடுவது அடுத்த நிலை ஆகும். முதல் விஷயம் என்னவென்றால் பிராப்தியின் போதையோடு எங்களுக்கு தந்தையின் அன்பு கிடைத்திருக்கிறது என்று அனைவரும் கூறுகிறீர்கள். தந்தை கிடைத்திருக்கிறார் என்றால் அன்பு கிடைத்திருக்கிறது. அனைவரின் வாயிலிருந்து மேரா பாபா (என்னுடைய பாபா) என்று தான் வெளியாகிறது. அப்படி முதல் நிலையில் பிராப்தி அனைவருக்கும் இருக்கிறது ஆனால் அனுபவத்தில் எப்பொழுதுமே மூழ்கியிருப்பது. இதில் வரிசைக் கிரமமாக இருக்கிறார்கள். யார் பரமாத்மா அன்பில் மூழ்கியிருக்கிறாரோ அவரை இந்த அன்பிலிருந்து யாரும் அகற்ற முடியாது. பரமாத்மா அன்பில் மூழ்கியிருக்கும் ஆத்மாவின் ஜொலிப்பு மற்றும் பொலிவு, அனுபவத்தின் கிரணங்கள் அவ்வளவு சக்திசாலியாக இருக்கிறது, யாரும் அருகில் வருவது என்பதோ தொலைவானது ஆனால் கண்ணெடுத்து பார்க்கக்கூட முடியாது. அந்த மாதிரி அனுபவம் எப்பொழுதுமே இருக்கிறது என்றால் ஒருபொழுதும் எந்த விதமான கடின உழைப்பும் இருக்காது. இப்பொழுது யோகா செய்து செய்து யுத்தம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. போகாவில் அமர்கிறார்கள், ஆனால்

அனுபவத்தில் மூழ்கியிருப்பது என்பது இல்லாத காரணத்தினால் சில நேரம் யோகா மற்றும் சில நேரம் யுத்தம் என்று இரண்டும் நடந்து கொண்டிருக்கிறது. நான் தந்தைக்குரியவன் என்று அடிக்கடி நினைவில் கொண்டு வர வேண்டியதாக இருக்கிறது. அப்படி அடிக்கடி நினைவில் கொண் வருவது, நினைவு மறந்த நிலை இருக்கிறது அதனால் தான் நினைவில் கொண்டு வருகிறீர்கள் இல்லையா. அப்படி ஆம் இல்லை, நினைவு - நினைவு மறந்த நிலை என்ற இந்த யுத்தம் அன்பில் ஐக்கியமாகி இருக்கும் நிலையை அனுபவம் செய்ய விடுவதில்லை. தற்சமயம் குழந்தைகளுக்கு என்ன யுத்தம் மற்றும் கடின உழைப்பு செய்ய வேண்டியதாக இருக்கிறது? அது வீணானவை மற்றும் சக்திசாலியானதின் யுத்தம் அதிகமாக நடக்கிறது. சில சில குழந்தைகளுக்கு வீணானவற்றைப் பார்க்கும் சம்ஸ்காரம் இயற்கையான இயல்பாக ஆகி விட்டது. சிலரிடம் கேட்பதற்கான, சிலரிடம் வர்ணனை செய்வதற்கான, சிலரிடம் யோசிப்பதற்கான பழக்கம் அந்த மாதிரி இருக்கிறது நாங்கள் இதை செய்கிறோம் என்று அவர்கள் புரிந்து கொள்ளாத அளவிற்கு இயற்கையான இயல்பாக ஆகி விட்டது. ஒருவேளை யாராவது புரிந்து கொள்ள சைகையும் கொடுக்கிறார்கள் என்றால் கூட மாயாவின் ஞானம் இருக்கும் காரணத்தினால் தன்னை மிகுந்த புத்தி சாலிகளாக நினைக்கிறார்கள். ஒன்று மாயாவின் ஞானத்தைத் தெரிந்தவர்களாக ஆகி விடுகிறார்கள் மற்றும் இவையெல்லாம் நடக்கத்தான் செய்யும் என்று அலட்சியம் வந்து விடுகிறது. மாயாவின் ஞானத்தினால் தவறில் கூட தன்னை சரி என்று நினைக்கிறார்கள். இருப்பதோ மாயாவின் ஞானம், ஆனால் என் போன்ற ஞானி, என் போன்ற யோகி. என்னைப் போன்ற சேவாதாரி வேறு யாருமே இல்லை என்று நினைப்பார்கள். ஏனென்றால் அந்த நேரம் மாயாவின் சாயல், மனம் மற்றும் புத்தியை சரியாக முடிவெடுக்க முடியாத அளவிற்கு வசப்படுத்தி விடுகிறது. மாயாவி யோகி மற்றும் மாயாவி ஞானி ஈஸ்வரிய தெளிவிலிருந்து விலக்கி விடுகிறது. மாயாவின் ஞானம் கூட குறைந்ததல்ல. மாயாவோடு யோகா செய்பவர்கள் கூட ஆடாத அசையாத யோகிகளாவார்கள். எனவே வித்தியாசத்தைப் புரிந்து கொள்வதில்லை. அந்த நேரத்து வார்த்தைகளின் போதை கூட எவ்வளவு நல்லதாக இருக்கிறது என்பதையும் நீங்கள் அனைவரும் தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? எனவே பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் பிராப்திகளின்

அனுபவங்களின் கடலில் மூழ்கியிருங்கள் என்று கூறுகிறார். கடலில் மூழ்கியிருப்பது என்றால் கடலுக்குச் சமமாக எல்லைக்கட்டாற்பட்ட பிராப்தி சொரூபமாகி காரியத்தில் வருவது.

பாப்தாதா நாலாபுறத்திலும் உள்ள குழந்தைகளின் சார்ட்டை சோதனை செய்தார். அதில் என்ன பார்த்தார்? இறுதி நேரத்தின் அருகாமையின் அனுசாரம் தற்சமயத்தின் சூழ்நிலையில் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் வெளிப்படையான சொரூபத்தில் இருப்பது அவசியமாகும். எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியத்தை வர்ணனையும் செய்கிறீர்கள், இதில் அதிகமான பாய்ன்ட்டுகளையும் (கருத்துக்களையும்) எடுக்கிறீர்கள் மற்றும் நல்ல சொற்பொழிவும் நிகழ்த்துகிறீர்கள். அனைவரிடமும் பாய்ன்ட்டுகள் இருக்கின்றன இல்லையா? பாய்ன்ட்டுகளை வர்ணனை செய்வது மற்றும் சிந்திப்பது, இதில் அதிகமானவர்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறீர்கள். இந்த சின்ன சின்ன குமாரிகளுக்குக்கூட சொற்பொழிவை தயார் செய்து கொடுத்தீர்கள் என்றால் அவர்களும் செய்து விடுவார்கள். சரியான வைராக்கிய உள்உணர்வின் சுலபமான அர்த்தம் -ஆத்மாக்களின் நெருக்கத்தில் வந்தாலும், சாதனங்களின் சம்மந்தத்தில் வந்தாலும், சேவையின் வாய்ப்பை எடுப்பதின் பாக்கியம் கிடைத்தாலும் அனைவரின் உறவு நெருக்கத்தில் எவ்வளவு விலகிய நிலையோ அவ்வளவு அன்பான நிலை இதன் சமநிலை இருக்க வேண்டும் ஆனால் என்ன நடக்கிறது? சில நேரம் விலகியிருப்பதின் சதவிகிதம் அதிகரித்து விடுகிறது மற்றும் சில நேரம் அன்பாக இருப்பதின் சதவிகிதம் அதிகரித்து விடுகிறது. அன்பாக இருப்பதின் அர்த்தமே பொறுப்புணர்வு மற்றும் பணிவாக இருப்பது ஆனால் இதற்குப் பதிலாக என்னுடையது என்ற உணர்வு வந்து விடுகிறது. இது என்னுடைய வேலை தான், என்னுடைய ஸ்தானம் தான், எனக்குத் தான் பாக்கியத்தின் படி அனைத்து சாதனங்களும் கிடைத்திருக்கின்றன, அவ்வளவு கடினமாக உழைத்ததினால் நான் இந்த சாதனம், ஸ்தானம் மற்றும் சேவை மேலும் சேவைக்கான உதவியாளர்கள் மாணவர்களும் உதவியாளர்கள் தான்) உருவாக்கி யிருக்கிறேன். இவை என்னுடையவை, என்னுடைய உழைப்பிற்கு எந்த மதிட்டம் கிடையாதா என்ன? இந்த பொறுப்புணர்வு மற்றும் என்னுடையது என்ற உணர்வில் வித்தியாசம் இருக்கிறதா அல்லது இரண்டும் ஒன்றே தானா? இந்த என்னுடையது என்பது

இராயல் ரூபத்தில் அதிகரித்து விட்டது. இந்த என்னுடையது என்பதின் இராயல் மொழி, இராயல் எண்ணங்களை தந்தையோடு ஆன்மீக உரையாடலிலும் பாப்தாதா அதிகமாக கேட்கிறார். மிகுந்த அன்போடு தந்தையை அல்லது பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்களை சம்மதிக்க மற்றும் சம்மதிக்க வைக்க வருகிறார்கள் - பாபா இதில் நீங்கள் தான் எனக்கு உதவி செய்ய வேண்டும், நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இது என்னுடைய வேலை இல்லையா, என்னுடைய பொறுப்பு இல்லையா, என்னுடைய அதிகாரம் எனக்குத் தான் கிடைக்க வேண்டும். தந்தையிடமும் ஞானம் கொடுப்பதற்காக மிகுந்த புத்திசாலித்தனத்தைக் காண்பிக்கிறார்கள். பாப்தாதா புன்முறுவலிட்டுக் கொண்டே இருக்கிறார். பொறுப்பிலிருப்பவர்கள் என்ன கிடைத்ததோ, எப்படி கிடைத்ததோ, எங்கு அமர வைத்தாலும், என்ன அருந்தக் கொடுத்தாலும், என்ன செய்வித்தாலும் அதைத் தான் செய்வார்கள். இது தான் அனைவரின் முதன் முதல் உறுதிமொழி ஆகும். உறுதிமொழி தான் இல்லையா? இது தான் உறுதிமொழியா அல்லது சாப்பிடுவதற்கும், குடிப்பதற்கும் மட்டும் தானா? என்னுடையது என்ற உணர்வின் வைராக்கியம் தான் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம். புதுப்புது விதமான என்னுடையது இன்னும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாயா தற்சமயம் புதுப்புது விதமான என்னுடையதுகளின் சாயலை போட்டுக் கொண்டிருக்கிறது. எனவே நேரத்தின் அருகாமை பிரத்யக்ஷ ரூபத்தில் வரவில்லை. ஞானியானாலும், அஞ்ஞானியானாலும் இருவருமே உலகத்தின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது என்று கூறவும் செய்கிறார்கள், இந்த உலகம் எவ்வளவு காலம் இருக்கும் மற்றும் எப்படி இருக்கும்? ஆனால் இருந்தாலும் உலகம் இயங்கிக் கொண்டு தான் இருக்கிறது. நேரத்தின் அருகாமையின் அஸ்திவாரம் எல்லைக்கட்டாற்பட்ட வைராக்கிய உள்உணர்வு எல்லைக்கட்டாற்ப் பட்ட வைராக்கிய உள்உணர்விற்குப் பதிலாக புதுப்புது விதமான சிறு சிறு பற்றுதலின் விஸ்தாரம் மிகப் பெரியதாக இருக்கிறது என்று பாப்தாதா சோதனை செய்தார். இந்த விஸ்தாரம் சாரத்தை மறைத்து விட்டது. புரிந்ததா? இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?

இந்த பற்றுதல் மிகவும் ருசிகரமாக இருக்கிறது. ஒன்று இரண்டு தடவை ருசித்து விட்டால் அந்த ருசி இழுத்துக் கொண்டே இருக்கிறது. சேவை

செய்து கொண்டிருக்கிறீர்கள், மிக நல்லது ஆனால் பொறுப்புணர்வு இருக்கிறதா அல்லது பற்றுதலின் உணர்வு இருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள். பாபா பாபா என்பதற்கு பதிலாக என்னுடையது என்னுடையது வந்துவிடவில்லையே? உன்னுடையது என்று ஏற்றுக்கொள்வது பிறகு என்னுடையதாக ஆகி விடுகிறது. எனவே இப்பொழுது என்ன செய்வீர்கள்? என்னுடையது, என்னுடையது என்பது விருப்பமா? ஒரு மிகப் பெரிய தவறை செய்கிறார்கள் அல்லது நடைமுறையில் அதுவே ஏற்பட்டு விடுகிறது, செய்ய விரும்பவில்லை ஆனால் ஏற்பட்டுவிடுகிறது என்று பாப்தாதா ஏற்கனவே கூறியிருக்கிறார், அது என்ன? மற்றவர்களின் நீதிபதி ஆகி விடுகிறார்கள் மேலும் தன்னுடைய வக்கீலாகி விடுகிறார்கள். ஆகவேண்டும் தன்னுடைய நீதிபதியாக ஆனால் ஆகுகிறார்கள் மற்றவர்களின் நீதிபதியாக, இவர் இதைத் தான் செய்ய வேண்டும், இவருக்கு மாற வேண்டும் என்று கூறுகிறார்கள். மேலும் தனக்காக இந்த விஷயம் முற்றிலும் சரி தான். நான் என்ன கூறுகிறேனோ அது தான் சரி என்று நினைக்கிறார்கள். இவர் இப்படி, அவர் அப்படி, வக்கீல்கள் உண்மையைப் பொய்யாகவும், பொய்யை உண்மையாகவும் வாதாடி நிரூபிக்கிறார்கள் இல்லையா? மேலும் எவ்வளவு எடுத்துக்காட்டைக் கூறுவதற்கு வக்கீல்களுக்குத் தெரியுமோ அது போல் வேறு யாருக்கும் தெரியாது. தன்னுடைய நீதிபதி ஆவது என்ற இந்த தவறு நிகழ்ந்து விடுகிறது. மற்றவர்களைச் சுட்டிக் காட்டுவது மிகவும் சுலபம் ஆனால் தன்னை மாற்ற வேண்டும். சுயமாற்றம் மூலம் உலக மாற்றம் என்ற சுலோகன் கூட இருக்கிறது. முதலில் சுயம் என்பது இருக்கிறது. அப்படி என்ன சார்ட் பார்த்தோம் என்று கேட்டீர்களா?

பாப்தாதாவும் மாயா எவ்வளவு திறமை நிறைந்தது மற்றும் மாயாவின் நடத்தையைப் பார்த்து பாபாவும் புன்முறுவலிட்டுக் கொண்டே இருக்கிறார். மாஸ்டர் சர்வ சக்திவான் குழந்தைகளைக்கூட தன்னுடையவர்களாக ஆக்கி விடுகிறது. எனவே இப்பொழுது என்ன தேவை? எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வின் வாயுமண்டலத்தை உருவாக்குங்கள். எப்படி சேவையின் வாயுமண்டலத்தை உருவாக்குகிறீர்கள் இல்லையா, நிகழ்ச்சிகள் தயாரிக்கிறீர்கள். இந்த உள்உணர்வு புத்தியில் மட்டும் இருக்க

வேண்டாம், இதயம் வரை சென்றடையட்டும். அனைவரின் புத்தியில் இப்படி இருக்க வேண்டும், இப்படிச் செய்ய வேண்டும் என்பது இருக்கிறது ஆனால் இதயத்தில் இந்த அலை உருவாகி விட வேண்டும். இதுவே இப்போதைய தேவை. புரிந்ததா? அனைவரும் மிக நன்றாகப் புரிந்து கொண்டீர்களா? அல்லது இப்பொழுது புரிய வந்திருக்கிறது. பின்பு இங்கிருந்து எழுந்து சென்ற பிறகு இது எப்படி நடக்கும், இதைச் செய்வது கடினம் கேட்பது சொல்வதோ சுலபம், செய்வது கடினம் என்று யோசிப்பீர்களா? இப்பொழுது அந்த மாதிரி சொல்ல மாட்டீர்கள் தான் இல்லையா? அன்பினால் நீங்கள் அனைவரும் இங்கு வந்து சேர்ந்து விட்டீர்கள். மேலும் பாப்தாதாவும் வந்து சேர்ந்து விட்டார். பாருங்கள் அன்பில் எவ்வளவு சக்தி இருக்கிறது. அன்பு அவ்யக்தமானவரை வியக்கத்தில் கொண்டு வந்து விடுகிறது. உங்கள் அனைவரையும் மதுபன்னில் கொண்டு வந்து விட்டது. அனைவரும் அன்பில் சரியாக வந்து சேர்ந்து விட்டீர்கள் இல்லையா? யார் கொண்டு வந்தது? ரயில் கொண்டு வந்ததா? அல்லது அன்பு கொண்டு வந்ததா? எங்கு அன்பு இருக்கிறதோ அங்கு கடினமானது கடினமானதாகத் தெரிவதில்லை. இந்த மூன்று அடிக்குப் பதிலாக இரண்டு அடி தரை கூட கிடைத்தால் எப்படி இருக்கும்?சத்யுகத்தின் கட்டில்களை விட உயர்ந்தது. எல்லோரும் சௌகரியமாக இருக்கிறீர்களா? அல்லது வேறு வழியில்லை என்று நிர்பந்தத்தில் இருக்கிறீர்களா? என்ன செய்வது இருக்கத் தான் வேண்டும்... என்று அப்படியா? பக்தி மார்க்கத்திலோ கால்களை வைப்பதற்குக் கூட கஷ்டப்படுகிறார்கள், உங்களுக்கு துங்குவதற்காக மூன்று அடி இல்லை என்றாலும் இரண்டு அடியாவது கிடைக்கிறது தான் இல்லையா? நீங்களோ உங்களுடைய காலடிகளில் இடம் கொடுங்கள் என்று வேண்டினீர்கள் ஆனால் தந்தையோ கால் அடிகளுக்குப் பதிலாக பட்டத்து இராணிகளாக ஆக்கி விட்டார். இருந்தாலும் மதுபன்னின் முற்றம் இருக்கிறது இல்லையா? எங்கே தூங்கினாலும் இருப்பதோ மதுபன்னின் முற்றத்தில் தான் இல்லையா? இவ்வளவு தந்தையின் நெருக்கத்தில் வருவதற்கான அதிகாரம் கிடைக்கும் என்பது உங்களுடைய கனவில் கூட இருந்ததில்லை. அப்படியானால் அனைவரும் குஷியாக இருக்கிறீர்கள் இல்லையா. இரண்டடிக்குப் பதிலாக ஒரு அடி கிடைத்தால் கூட திருப்தியாக இருப்பீர்களா? உட்கார்ந்து கொண்டே தூங்குவிர்களா? அனேகருக்கு உட்கார்ந்திருக்கும்போது தூக்கம் நன்றாக வருகிறது, படுத்துத்

தூங்கினார்கள் என்றால் தூக்கம் வராது யோகாவில் அமர்வது மற்றும் தூக்கம் ஆரம்பம் ஆவது. ஐந்து நாட்கள் இடைவிடாது தபஸ்யா செய்ய வேண்டும் என்றால் அனைவரும் தயாராக இருக்கிறீர்களா? உணவும் கிடைக்கவில்லை என்றால் கூட சரி தானா? அல்லது அது முடியாது என்று நினைக்கிறீர்களா? எந்த பொருளை அங்கு நீங்கள் அருந்துவதில்லையோ அது அதிகமாக மதுபன்னில் கிடைக்கிறது ஆனால் எவரெடியாக இருக்க வேண்டும். கிடைத்தது என்றால் மிக நல்லது கிடைக்கவில்லை என்றால் மிக மிக நல்லது. ஏனென்றால் அனைவருக்கும் அமிர்தவேளையில் உள்ளத்தை குஷிப்படுத்தும் இனிப்பு கிடைக்கிறது. மேலும் முழு நாளும் குஷி என்ற சத்துணவோ கிடைத்துக் கொண்டே இருக்கிறது. அப்படியானால் முடியும் தான் இல்லையா? இதையும் முயற்சி செய்து பார்ப்போம். நல்லது.

மண்டலம் வாரியாக சந்திப்பு நடந்தது -ஆக்ரா, ஹுப்ளி, குல்பர்கா, தமிழ்நாடு, கேரளா, ஹைதராபாத், சிகந்தராபாத், மகாராஷ்டிரா, இந்தோர் -விடுதி குமாரிகளுடன், இரட்டை வெளிநாட்டினர்.

**டீச்சர்களுடன் சந்திப்பு:** எப்படி டீச்சர்கள் என்ற டைட்டில் (பட்டம்) இருக்கிறது, எப்படி டைட்டிலோ அப்படி முக்கியமாக எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வின் வாயுமண்டலத்தை உருவாக்குவதில் டைட்டாக (இருக்கமாக) இருக்க வேண்டும். ஏனென்றால் பொறுப்பிலிருக்கும் டீச்சர்களின் வாயுமண்டலம் அனேகர்கள் வரை சென்றடைகிறது. எனவே டீச்சர்கள் இப்பொழுது இந்த அதிசய காரியத்தை செய்து காண்பிக்கட்டும். எப்படி தன்னை மாற்றுவதில் கட்டளைப்படி நடப்பவராக ஆகியிருக்கிறீர்கள், கட்டளைப்படி நடப்பதற்கான, அனைத்திற்கும் சரி என்று சொல்லி செய்யும் பாடத்திலோ உறுதியாகி விட்டீர்கள் ஆனால் இரண்டாவது பாடம் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வுக்கானது. இப்பொழுது இந்த பாடத்தை உறுதியாக்கிக் காண்பியுங்கள். ஏனென்றால் பொறுப்பில் இருக்கிறீர்கள் இல்லையா? அப்படி பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்கள் தான் பணிவாளவராகி படைக்கும் காரியத்தை மிக சுலபமாகச் செய்ய முடியும். இப்பொழுதோ இந்த வருடமோ முடிவடைந்து கொண்டிருக்கிறது ஆனால் புது வருடத்தில் இந்த புதுமையின் ஜொலிப்பை பாப்தாதாவும் பார்ப்பார். சேவை

செய்தீர்கள், சென்டர்கள் திறந்தீர்கள். அதிகமாக வளர்ச்சி செய்தீர்கள், ஐ.பி-களும் வந்துவிட்டனர், வி.ஐ.பி-களும் வந்து விட்டனர், இதுவோ நடந்து கொண்டே தான் இருக்கும் ஆனால் சேவையில் எல்லைக்கட்பாறப்பட்ட வைராக்கிய உள்உணர்வு மற்ற ஆத்மாக்களை இன்னும் அருகில் கொண்டு வரும். வாயினால் செய்யும் சேவை நெருக்கத்தில் கொண்டு வருகிறது. மேலும் உள்உணர்வின் சேவை வாயுமண்டலத்தின் சேவையை அருகில் கொண்டு வரும். புரிந்ததா? பாப்தாதாவோ சார்ட்டை பார்க்கத்தான் செய்கிறார் இல்லையா? இருந்தாலும் சேவைக்கான பொறுப்பாளராக இருக்கிறீர்கள் -இந்த உயர்ந்த பாக்கியம் ஒன்றும் குறைந்ததல்ல. அப்படி இந்த முக்கியமான ஆஸ்தியின் பாக்கியத்தின் அதிகாரியாக ஆகியிருக்கிறீர்கள். புரிந்ததா. நல்லது.

நாலாபுறத்திலுமுள்ள மிக உயர்ந்த பாக்கியவான் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் அனைத்து பிராப்திகளின் அனுபவங்களில் மூழ்கியிருக்கும் உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் பகுத்தறியும் மற்றும் முடிவெடுக்கும் சக்தியை தீவிரப்படுத்தக்கூடிய நெருக்கமான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் சேவையில் சக்திசாலியானவராகி சக்திசாலியானவரை உருவாக்குவதற்கான பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் விலகியிருப்பது மற்றும் அன்பாக இருப்பது இரண்டின் சமநிலை வைக்கக்கூடிய ஆசீர்வாதங்களுக்குப் பாத்திரமான ஆத்மாக்களுக்குப் பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் நமஸ்காரங்களும்.

வரதானம்: விசேஷங்களின் தானம் மூலமாக மஹான் ஆகக்கூடிய மஹாதானி ஆகுக!

ஞான தானத்தை அனைவரும் செய்கிறார்கள் ஆனால் விசேஷ ஆத்மாக்கள் நீங்கள் உங்களுடைய விசேஷங்களை தானமாகச் செய்ய வேண்டும். யார் உங்கள் எதிரில் வந்தாலும் அவர்களுக்கு உங்களிடமிருந்து தந்தையின் அன்பு அனுபவம் ஆகட்டும், உங்களுடைய முகத்திலிருந்து தந்தையின் உருவம் மற்றும் நடத்தையிலிருந்து தந்தையின் சரித்திரம் (வாழ்க்கை) தென்படட்டும். உங்களுடைய விசேஷங்களைப் பார்த்து அவர் விசேஷ ஆத்மா

ஆவதற்கான தூண்டுதலைப் பெறட்டும், அந்த மாதிரி மஹாதானியாக ஆனீர்கள் என்றால் ஆரம்பத்திலிருந்து கடைசி வரை பூஜைக்குரிய நிலையிலும் மற்றும் பூஜாரி நிலையிலும் மஹானாக இருப்பீர்கள்.

சுலோகன்: எப்பொழுதும் ஆத்ம அபிமானியாக இருப்பவர் தான் மிக உயர்ந்த ஞானி ஆவார்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 14.12.1984 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நேரம், சங்கல்பம், பேச்சின் மூலம் வருமானத்தை சேமிப்பதற்கு ஆதாரம் -மூன்று புள்ளிகள் வைப்பது!

இன்று பாப்தாதா எந்த சபைக்கு வந்திருக்கின்றார்? இந்த முழு சபை எப்படிப்பட்ட ஆத்மாக் களினுடையது? ஒவ்வொருவரும் உயர்ந்தவர்களாக (Highest: செல்வந்தர்களாக (Richest) இருப்பதை பாப்தாதா பார்க்கின்றார். உலகிலேயே செல்வந்தர்கள் (Richest in the world) என்று உலகத்தினர் கூறுகின்றனர் ஆனால் நீங்கள் அனைவரும் கல்பத்திலேயே மிக செல்வந்தர்களாக இருக்கின்றீர்கள். இந்த நேரத்தில் சேமித்து வைத்த பொக்கிஷமானது முழு கல்பத்திற்கும் கூடவே வருகின்றன. இந்த பிறப்பில் செல்வந்தனாக இருக்கின்றேன், ஆனால் எதிர்காலத்தில் பல பிறப்புகளுக்கும் செல்வந்தரிலும் செல்வந்தராக இருப்பேன் என்று சிந்திக்கக் கூடியவர்கள் முழு கல்பத்திலும் யாரும் கிடைக்கமாட்டார்கள் ஆனால் நீங்கள் அனைவரும் நம்பிக்கை மற்றும் நஷாவுடன் கூறுகின்றீர்கள் -நமது இந்த பொக்கிஷம் பல பிறப்புகளுக்கு கூடவே இருக்கும். உத்திரவாதம் இருக்கின்றதல்லவா? ஆக இப்படிப்பட்ட செல்வந்தர் களை முழு கல்பத்திலும் பார்த்திருக்கின்றீர்களா? ஆக இன்று பாப்தாதா அரசர்களுக்கெல்லாம் அரசர்களாக இருக்கக் கூடிய தனது குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு நாளும் எவ்வளவு வருமானத்தை சேமிக்கின்றீர்கள்? கணக்கு எடுங்கள், சேமிப்பு கணக்கு எந்த அளவிற்கு தீவிர வேகத்தில் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது? மேலும் அதிகரிப்பதற்கான சாதனமும் மிகவும் எளிதானது. இதில் என்ன முயற்சி இருக்கின்றது? உங்களது வருமானம் அல்லது சேமிப்பு அதிகப்படுத்துவதற்கான மிக எளிய சாதனம் - பிந்து வைத்துக் கொண்டே செல்லுங்கள் மற்றும் அதிகப்படுத்திக் கொண்டே செல்லுங்கள். நீங்களும் பிந்து, தந்தையும் பிந்து மற்றும் நாடகத்திலும்

கடந்து முடிந்தவைகளுக்கு பிந்து (புள்ளி வைக்க வேண்டும். ஆக வருமானத்திற்கு ஆதாரம் பிந்து வைப்பதாகும். வேறு எந்த வழியும் கிடையாது. ஏன், எதற்கு, எப்படி போன்ற இந்த கேள்விக்குறிகள், ஆச்சரியக் குறிகள் போன்ற எதுவும் அவசியமில்லை. ஏனெனில் மாஸ்டர் ஞானம் நிறைந்தவர்களாக ஆகி விட்டீர்கள். ஆக “எப்படி” என்ற வார்த்தை 'இப்படி" என்று மாறிவிட்டது. மாறி விட்டதா? அல்லது இப்பொழுதும் கூட எப்படி, எப்படி என்று கூறுகின்றீர்களா? “தெரியாது" என்ற சப்தம் சங்கல்பத்திலும் மாறி விட்டதா? திரிகாலதர்சி களாக இருக்கக் கூடியவர் கனவிலும் இவ்வாறு சிந்திக்க மூடியாது எனும் பொழுது வாயில் பேசுவதற்கான கேள்வியே கிடையாது. சங்கமயுகத்தில் முழு விளையாட்டும் மூன்று புள்ளிகளுடையதாகும். அனைத்தை யும் விட எளிதானது பிந்து (புள்ளி) வைப்பதா? அல்லது கேள்விக் குறி எழுதுவதா? புள்ளி எளிது அல்லவா! புள்ளி வைப்பதற்கு எவ்வளவு நேரம் தேவைப்படுகின்றது? விநாடியை விட குறைவான நேரம் புள்ளி வைப்பதற்கு வருகின்றதா? அல்லது பேனா நழுவி விடுகின்றதா? சில நேரங்களில் புள்ளிக்குப் பதிலாக பேனா நீளமான கோடு போட்டு விடுகின்றது. புள்ளி வைப்பதன் மூலம் ஒரு விநாடியில் உங்களது எவ்வளவு பொக்கிஷங்கள் பாதுகாப்பாகி விடுகின்றது பொக்கிஷங்களின் பட்டியல் அறிந்திருக்கின்றீர்கள் அல்லவா ஒருவேளை புள்ளிக்குப் பதிலாக வேறு ஏதாவது குறி வைத்து விட்டால் அல்லது ஏற்பட்டு விட்டால் ஞானப் பொக்கிஷம் இழந்து விடுகின்றோம், சக்திகளின் பொக்கிஷங்களை இழந்து விடுகின்றோம், குணங்களின் பொக்கிஷங்களை இழந்து விடுகின்றோம், சங்கல்பங்களின் பொக்கிஷங்களை இழந்து விடுகின்றோம். சக்திகளை இழந்து விடுகின்றோம், சுவாசம் வெற்றியாவதற்குப் பதிலாக வெற்றியற்றதாக ஆகி விடுகின்றது, நேரத்தையும் இழந்து விடுகின்றோம் என்பதை சிந்தித்துப் பாருங்கள். எவ்வளவு இழக்கின்றோம்? நீளமான பட்டியல் ஆகி விடுகின்றது அல்லவா ஒன்று அல்லது இரண்டு விநாடிகள் தான் இழந்திருக்கின்றோம் என்று ஒருபொழுதும் நினைத்து விடாதீர்கள் ஆனால் ஒரு விநாடியில் இழந்தது எவ்வளவு? ஒரு விநாடியும் எவ்வளவு சுமையானதாக ஆகி விடுகின்றது? ஒவ்வொரு நேரத்திலும் தனது சேமிப்புக் கணக்கை அதிகப்படுத்திக் கொண்டே செல்லுங்கள். வருமானம் என்ன? மற்றும் இழந்தது என்ன?இவையனைத்துப் பொக்கிஷங்களிலும் எவ்வளவு பொக்கிஷங்களை

இழந்திருக்கின்றேன்? பாப்தாதாவும் கூட குழந்தைகளின் சேமிப்புக் கணக்கை சோதித்துக் கொண்டே இருக்கின்றார். கணக்கு பார்க்கின்ற பொழுது சிரித்துக் கொண்டே இருக்கின்றார். சிரிக்கும் அளவிற்கு என்ன பார்த்திருப்பார்? அமிர்த வேளையில் சந்திப்பும் செய்கின்றனர், ஆன்மீக உரையாடலும் செய்கின்றனர், இது செய்வேன், அது செய்வேன் என்று நல்ல உறுதிமொழியும் செய்கின்றனர், மிக நல்ல நல்ல விசயங்களைப் பேசுகின்றனர் ஆனால் போகப் போக முழு நாளில் ஏதாவது பொக்கிஷத்தை இழந்து விடுகின்றனர். பிறகு எதை ஆதாரமாக ஆக்குகின்றீர்கள்? பாப்தாதாவிற்கும் கூட தங்களது நல்ல நல்ல விசயங்களைக் கூற ஆரம்பித்து விடுகின்றனர். ஒருவேளை வீண் எண்ணங்கள் வந்தால் அது சேமிப்பா? அல்லது இழப்பா? பிறகு என்ன விசயங்களைப் பேசு கின்றீர்கள்? எண்ணங்களில் தாளே வந்திருக்கின்றது. அனைத்தும் சரியாகி விடும். சரியாகி விடும். முயற்சியாளர் அல்லவா, சம்பூர்ணமாக ஆகவில்லை, சரியாகி விடும். என்று தந்தைக்கே ஆறுதல் கொடுக்கின்றீர்கள். ஆக முழு நாளிலும் பல தடவை இந்த ஆகி விடுவோம்- (வோம், வோம்...) என்ற பாட்டை பாப்தாதா கேட்கின்றார் ஆனால் இவையனைத்தும் எவ்வளவு காலம்? கடைசியில் தான் சம்பூர்ணம் ஆக வேண்டுமா? அல்லது அதிக கால பயிற்சியின் மூலம் அதிக கால ஆஸ்தி அடைய வேண்டுமா? அழிவற்ற ஆஸ்தியை விரும்புகின்றீர்கள் அல்லவா சம்பூர்ண ஆஸ்தியை விரும்புகின்றீர்களா? அல்லது பாதி போதுமா? அதே போன்று முயற்சிலும் பாதி முயற்சி போதுமா? ஆக முயற்சி செய்கின்ற நேரத்தில் செய்வோம், பார்ப்போம், ஆவோம், செய்து விடுவோம், ஆகி விடும் - என்று சிந்திக்கின்றீர்கள், மற்றும் பிராப்திக்கான நேரத்தில் இம்மாதிரி வோம். வோம்- என்று கூறுவீர்களா? அதில் மட்டும் சம்பூர்ண பிராப்தி தேவை, சம்பூர்ண ஆஸ்தி தேவைப்படுகின்றது. அனைவரும் லெட்சுமி நாராயணன் ஆவதற்கு கை உயர்த்துகின்றீர்கள். எட்டு லெட்சுமி நாராயணன் இருப்பர் என்பது தெரியும், இருப்பினும் லெட்சுமி நாராயணன் ஆவதில் தான் கை உயர்த்துகின்றீர்கள் அல்லவா! ஆக லெட்சுமி நாராயணன் ஆவது என்றால் நம்பர் ஒன் நேர்மையுடன் தேர்ச்சி (Pass with honour) பெறுவதாகும் குழந்தைகளின் தைரியத்தைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சியும் அடைகின்றார். இராமர், சீதை ஆவதற்கு யாரும் கை உயர்த்துவது கிடையாது. தைரியம் நன்றாக இருக்கின்றது, மேலும் தைரியம் உள்ளவர்களுக்கு உதவியும் கிடைக்கின்றது.

பாபாவின் முன் சங்கல்பம் வைக்கின்றீர்கள். அதே போன்று முயற்சியின் நேரத்திலும் அதனை பேச்சு மற்றும் செயலில் கொண்டு வாருங்கள்.

நேரம் என்ற பொக்கிஷத்திற்கு எந்த அளவிற்கு மகத்துவம் வைக்க வேண்டுமோ அந்த அளவிற்கு சில குழந்தைகள் வைப்பது கிடையாது என்பதை பாப்தாதா பார்க்கின்றார். ஒரு நாளுக்கான சார்ட் (அட்டவணை) சோதனை செய்து பார்த்தால் அதிகபட்ச ஆத்மாக்களின் நேரம் வீணாவது தென்படுகின்றது. துவாபர நேரத்திலிருந்து வீணானவைகளைக் கேட்பது, பார்ப்பது, பிறகு சிந்திக்கும் பழக்கம் விரும்பாவிட்டாலும் கூட கவர்ந்திழுத்து விடுகின்றது. இந்த காரணத்தினால் தான் நேரம் என்ற பொக்கிஷம் வீண் கணக்கில் சென்று விடுகின்றது. விநாடிக்குக் கூட அதிக மகத்துவம் இருக்கின்றது என்று முன்பும் கூறியிருக்கின்றேன். அடுத்த விசபம், அதிகபட்ச ஆத்மாக்கள் வீண் பேச்சின் மூலமாகவும் நேரத்தை வீணாக்குகின்றனர். ஒரு மணி நேரத்திற்குள் என்ன வார்த்தைகள் பேசினீர்களோ அந்த ஒவ்வொரு வார்த்தையிலும் ஆன்மீக உணர்வு மற்றும் சுப பாவனை இருந்ததா? என்று சோதனை செய்யுங்கள். பேச்சின் மூலம் பாவ் (உணர்வு) மற்றும் பாவனை இரண்டும் அனுபவம் ஏற்படுகின்றது. ஒவ்வொரு பேச்சிலும் சுப பாவனை, சிரேஷ்ட பாவனை இல்லையெனில் கண்டிப்பாக மாயையின் பாவனைகள் இருக்கின்றது. அவைகள் பொறாமை, வெறுப்பு போன்று பல உள்ளன. இந்த பாவனைகள் எந்த சதவிகிதத்திலாவது கலந்து இருக்கின்றது. சில நேரங்களில் பேச்சுக்களின் டேப் ரிக்கார்டரை பாப்தாதா கேட்கின்றார். ஒவ்வொருவரின் பேச்சும் தானாகவே பதிவாகிக் கொண்டிருக்கின்றது. எந்த நேரத்தில் யாருடையதைக் கேட்க வேண்டுமோ அதனை கேட்க முடியும். ஒவ்வொரு பேச்சிலும் சாரம் இருப்பது கிடையாது. எனது பாவனை, எனது உணர்வுகள் தீயவையாக இல்லை, அப்படியே வெளிப்பட்டு விட்டது அல்லது பேசி விட்டேன் என்று சில நேரங்களில் கூறவும் செய்கின்றீர்கள் ஆனால் எந்த பேச்சில் ஆன்மீக உணர்வு மற்றும் சுப பாவனை இல்லையோ அது எந்த கணக்கில் சேமிப்பாகும்? வீணானவைகளில் ஆகின்றது அல்லவா? ஆக சேமிப்பு கணக்கு அதிகமாக இருக்குமா? அல்லது இழப்பின் கணக்கு அதிகமாக இருக்குமா? இது இழக்கின்றீர்கள் அல்லவா! ஆக பேச்சிலும் கூட

இழப்புக் கணக்கு அதிகமாக ஏற்படுகின்றது. ஆக பேச்சையும் சோதனை செய்யுங்கள். அப்படியே பேசி விட்டேன் என்று கூறுவதை மாற்றுங்கள். சக்திசாலியான வார்த்தை என்றாலே -அந்த பேச்சில் மற்ற ஆத்மாக்களுக்கு பிராப்தியின் உணர்வு அல்லது சாரம் இருக்க வேண்டும். ஒருவேளை சாரம் இல்லையெனில் சேமிப்பு கணக்கு ஏற்படாது அல்லவா! எந்த அளவிற்கு ஒரு நாளில் சேமிப்பு செய்ய முடியுமோ, அதாவது எந்த அளவிற்கு என்ற கணக்கைப் பார்க்கின்ற பொழுது அந்த அளவிற்கு இருப்பது கிடையாது என்பதை பாப்தாதா பார்க்கின்றார். ஆக என்ன செய்ய வேண்டும்? லெட்சுமி நாராயணனாக ஆகியே தீர வேண்டும் அல்லவா! அல்லது ஆகவில்லை என்றாலும் பரவாயில்லையா? முதல் பிறப்பிலிருந்தே உயர்ந்த பிராப்தியை அடைய வேண்டுமா? அல்லது இரண்டாவது, மூன்றாவது பிறப்பிலிருந்து ஆரம்பிப்பீர்களா? முதல் பிறப்பில் வராதீர்கள். இரண்டாவது, மூன்றாவது பிறப்பில் வாருங்கள், பிடித்திருக்கின்றதா? பிடிக்கவில்லை அல்லவா ஆக அந்த அளவிற்கு சேமிப்பு கணக்கு இருக்கின்றதா? ஒருவேளை சேமிப்பு குறைவாக இருந்தால் என்ன பிராப்தி அடைவீர்கள்? எந்த அளவிற்கு சேமித்தீர்களோ அந்த அளவு தான் அடைவீர்கள். ஆக இன்று பாப்தாதா அனைவரின் சேமிப்புக் கணக்கை பார்த்தார். மற்றவர்களுக்கு நேரத்தின் மகத்துவத்தை மிக நல்ல முறையில் கூறுகின்றீர்கள், சங்கமயுகத்தின் மகிமையை எவ்வளவு நல்ல முறையில் செய்கின்றீர்கள்! ஆக சுயமும் சதா நேரத்தின் மகத்துவத்தை எதிரில் வையுங்கள். நேரத்திற்கு முன்பே தனது சிரேஷ்ட பாக்கியத்தின் ஆதாரத்தில் பிராப்தியின் சேமிப்பை முழுமையாக சேமியுங்கள்.

சங்கமயுக நேரத்தின் சிறப்பம்சமே மூன்று ரூபத்தின் பிராப்தியாகும். ஒன்று -ஆஸ்தியின் ரூபத்தில், இரண்டாவது -படிப்பு, வருமானத்திற்கு ஆகாரம் என்று கூறுகின்றனர். ஆக படிப்பின் ஆதாரத்தில் மற்றும் மூன்றாவதாக -வரதானத்தின் ரூபத்தில். ஆஸ்தியும் இருக்கின்றது. வருமானமும் இருக்கின்றது, மற்றும் வரதானமும் இருக்கின்றது. பிராட்தி மிகவும் உயர்ந்தது மற்றும் பெரியது. பாதுகாக்கக் கூடியவர்களாக ஆகுங்கள் போதும். ஆஸ்தியும் எல்லையற்றது. வருமானமும் எல்லையற்றது மற்றும் வரதானமும் எல்லையற்றது ஆகும். தினமும் பகவானின் வரதானம் கிடைக்கும் என்று

ஒருபொழுதும் நினைத்துப் பார்த்தீர்களா? இவ்வளவு பேரதானங்கள் யாரும் ஒருபொழுதும் அடைய முடியாது ஆனால் நமக்கு அதிகார உரிமை இருக்கின்றது என்று நீங்கள் கூறுகின்றீர்கள். ஆஸ்தியின் மீதும், படிப்பின் மீதும் மற்றும் வரதானத்தின் மீதும். சிறிய விசயம் கிடையாது, மிகப் பெரிய விசயமாகும். மூன்று சம்பந்தங்களிலும் மூன்றின் மீதும் தனது அதிகாரத்தைப் பிராப்தியாக அடைந்து விட்டீர்கள் அல்லவா! பாபா என்னுடையவர் என்று அனைவரும் போதையுடன் கூறுகின்றீர்கள் அல்லவா! என்னுடையவர் கிடையாது அவருடையவர் என்று கூறுகின்றீர்களா என்ன? எனக்கு கற்பிப்பதற்காக தந்தை வருகின்றார் என்று புரிந்திருக்கின்றீர் அல்லவா! ஆக படிப்பின் மீதும் அதிகாரம் இருக்கின்றது அல்லவா! வரதாதாவிடத்தில் வரதானங்கள் இருப்பது எதற்காக? எனக்காகவே வரதாதா பாபா இருக்கின்றார் என்று ஒவ்வொருவரும் நினைக்கின்றீர்கள். ஆக மூன்றின் மீதும் அதிகாரம் இருக்கின்றது. கூறுவது மிகவும் எளிதாக இருக்கின்றது. அதனால் தான் உலகத்தினர், இருப்பது எவ்வாறு மற்றும் கூறுவது என்ன? என்று கூறி சிரிக்கின்றனர். ஆக அதிகாரத்தை சதா நினைவில் வைத்துக் கொண்டு அடி எடுத்து வையுங்கள். வெளிப்படையாக (emerge) வையுங்கள், குப்தமாக (merge) வைத்துக் கொள்ளாதீர்கள். பிரம்மா குமாராக ஆகி விட்டோம். பாபாவினுடையவர்களாக ஆகி விட்டோம் என்று இருந்து விடாதீர்கள். வெளிப்படையான ரூபத்தில், மனதில், புத்தியில், செயலில் வெளிப்படையாக வைத்துக் கொள்ளுங்கள். நான் இவ்வாறு இருக்கின்றேன் என்ற எண்ணம் மனதில் வெளிப்பட வேண்டும், புத்தியில் நினைவு சொரூபமாக மற்றும் செயலில் அதிகாரி என்று நம்பிக்கை மற்றும் போதையுடன் ஒவ்வொரு காரியமும் செய்ய வேண்டும். அமிர்த வேளையில் வெளிப்படையாக இருக்கின்றது. பிறகு முழு நாளிலும் குப்தமாக (மறைவாக) இருந்து விடுகின்றது என்று இருக்கக் கூடாது. சதா வெளிப்படையான ரூபத்தில் இருக்க வேண்டும். ஆக சேமிப்புக் கணக்கை அதிகப்படுத்துங்கள். மெதுவாக செய்யாமல், தீவிர வேகத்தில் செய்ய வேண்டும். ஏனெனில் மாஸ்டர் படைப்பவர்களாகிய உங்களுக்காக நேரம் காத்துக் கொண்டிருக்கின்றது. இப்பொழுதும் கூட இயற்கை கட்டளையிட்டால் என்ன செய்ய முடியாது? ஒருவேளை ஐந்து தத்துவங்களும் குழப்பம் செய்ய ஆரம்பித்து விட்டால் நடக்காமல் என்ன இருக்கும்? மேலும் எவ்வளவு

நேரத்தில் நடத்த முடியும்? ஆக நேரம், இயற்கை மற்றும் மாயை விடை பெறுவதற்காக எதிர்பார்த்துக் கொண்டிருக் கின்றது. நீங்கள் சம்பூர்ண நிலைக்கான விழா கொண்டாடினால் அது விடைபெற்றுச் சென்று விடும். இவர்கள் இன்னும் தயாராகவில்லை என்று மாயையும் பார்க்கின்ற பொழுது அது வாய்ப்பு எடுத்துக் கொண்டே இருக்கின்றது. இயற்கைக்கு கட்டளையிடட்டுமா? சகோதரர்கள் தயாராக இருக்கின்றீர்களா? இயற்கை தயாராகி விடும். கட்டளையிடட்டுமா? அல்லது ஞான சரோவர் தயாரான பின்பு கட்டளையிடட்டுமா? இவ்வாறு எவரெடியாக இருக்கின்றீர்களா? அல்லது ரெடியாக இருக்கின்றீர்களா? சக்திகள் எவரெடியாக இருக்கின்றீர்களா? சம்பூர்ணமாக ஆகி விட்டீர்களா? சிறிது மட்டும் இருந்தால் எவரெடி என்று கூற முடியாது அல்லவா? இந்த நேரத்தில் மகாவிநாசம் ஏற்பட்டு விட்டால் ஞானம் என்ற கண்ணாடியில் நான் என்ன ஆவேன்? என்று தன்னைப் பாருங்கள். கண்ணாடி அனைவரிடத்திலும் இருக்கின்றதல்லவா! தெளிவாக இருக்கின்றதா? ஆக தன்னுடைய அதிர்ஷ்டம் என்ற சித்திரத்தைப் பாருங்கள். பாபாவிற்கு எவ்வளவு நேரம் தேவைப்படும்? பிரம்மா சங்கல்பத்தின் மூலம் சிருஷ்டியைப் படைத்தார் என்று பாடப்படுகின்றது எனில் சங்கல்பத்தின் மூலம் விநாசம் ஏற்படாதா? இராஜ்யம் நடைபெற வேண்டும் என்றால் அதில் ஒரு பிரம்மா என்ன செய்வார்? கூட இருப்பவர்கள் வேண்டும் அல்லவா? ஆக பிரம்மாபாபாவும் துணைவர்களாகிய உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கின்றார். ஆக தந்தை குழந்தைகளிடத்தில் கேள்வி கேட்கின்றார், குழந்தைகள் தந்தையிடத்தில் பல கேள்விகளைக் கேட்டு விட்டனர். இப்பொழுது தந்தை குழந்தைகளிடத்தில் தேதி முடிவெடுங்கள் என்று கூறுகின்றார். அனைத்து காரியங்களுக்கும் தேதி முடிவெடுக்கின்றீர்கள் அல்லவா! ஆக இதற்கும் தேதி முடிவு செய்யுங்கள். இதற்கும் முகூர்த்தம் இருக்கின்றதல்லவா! ஞான சரோவருக்கும் தேதி முடிவெடுத்திருக் கின்றீர்கள், ஹாஸ்பிட்டலுக்கும் தேதி முடிவெடுத்திருக்கின்றீர்கள். இதற்கு எந்த தேதி? இதை யார் முடிவெடுப்பது? பாபா செய்யமாட்டார். இந்த தந்தை குழந்தைகளாகிய உங்களது கையில் கொடுத்திருக் கின்றார். ஏதாவது வேலை நீங்களும் செய்வீர்கள் தானே? அல்லது அனைத்தையும் பாபாவே செய்வாரா? தேதி முடிவெடுக்கும் நிகழ்ச்சி செய்யுங்கள். நல்லது.

(புது குழந்தைகளைப் பார்த்து) பாருங்கள், புதுப் புதுக் குழந்தைகள் நீங்கள் வந்திருக்கின்றீர்கள், உங்கள் அனைவரின் மீதும் அனைவருக்கும் எவ்வளவு அன்பு இருக்கின்றது? முதல் வாய்ப்பு உங்கள் அனைவருக்கும் கொடுக்கின்றனர். அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கின்றீர்களா? இந்த பூமியில் எவ்வளவு அடிகள் (இடம் தூங்க) கிடைத்திருக்கின்றன? இரண்டா அல்லது மூன்றா? (இரண்டு அடிகள்) இரண்டு அடியிலும் கூட மகிழ்ச்சியாக இருக்கின்றீர்கள். எந்த கஷ்டமும் கிடையாது அல்லவா? சாப்பிடுவதற்கு. குடிப்பதற்கு நன்றாக கிடைத்துக் கொண்டிருக்கின்றது தானே? மேளாவில் இப்படிப்பட்ட பாலனை வேறு யாரும் அடைய முடியாது. மேளாவைப் பார்த்திருக்கின்றீர்கள் அல்லவா? இப்படிப்பட்ட பிரம்மா போஜனம், இப்படிப்பட்ட பரமாத்ம பரிவாரம் எங்கு கிடைக்கும்? குளிர் ஏற்படுகின்றதா? சீதோஷ்ணமும் மிக இனிமையாக இருக்கின்றது. ஆக இந்த குளிரும் சீதோஷ்ணத்தின் இனிப்பாகும். இனிப்பு சாப்பிட வேண்டுமல்லவா! அனைவருக்கும் சால் பரிசாக கிடைக்கின்றது அல்லவ எந்த மேளாவிலும் இப்படிப்பட்ட பரிசு கிடைக்கின்றதா? அல்லது வெறும் கைகளுடன் வருகின்றனரா? நல்லது புதியவர்களின் உள்ளம் பூர்த்தியாகி விட்டது. மதுவனத்தைப் பார்த்து விட்டீர்களா? முன்பு கனவில் இருந்தது. இப்பொழுது சாகாரம் ஆகி விட்டது. எவ்வளவு தான் இடத்தை பெரிதாக்கினாலும் சிறியதாக ஆகியே தீரும். ஏன்? இப்பொழுது 9 லட்சம் ஆகி விட்டதா, சிந்தியுங்கள், முதல் பிறப்பிற்கான எண்ணிக்கையே தயாராகவில்லை. அது ஏற்பட்டே ஆக வேண்டும் அல்லவா? எவ்வளவு கட்டிடங்களைக் கட்டுவீர்கள்? எத்தனை ஞான சரோவர்களைக் கட்டுவீர்கள்? எண்ணிக்கையை அதிகப்படுத்துங்கள் என்று அனைவரும் கூறுகின்றனர். எந்த அளவிற்கு எண்ணிக்கையை அதிகப்படுத்துகின்றோமோ அதே எண்ணிக்கை அடுத்த ஆண்டு மேலும் அதிகரித்து விடும், பிறகு என்ன செய்வீர்கள்? எவ்வளவு கிடைக்கின்றதோ அதில் மகிழ்ச்சியாக இருங்கள். நல்லது.

மண்டலம் வாரியாக -டில்லி குழு, மும்பை, மஹாராஷ்டிரா, நாக்பூர், பூனா, போபால், கர்நாடகா, ஆந்திர பிரதேசம், இரட்டை வெளிநாட்டினர் மற்றும் தனிப்பட்ட சந்திப்பு -சகோதரர் ஜீது குடும்பத்தாருடன் (ஞானசரோவர் கான்டிராக்டர்), டாக்டர். அசோக் மேதா, டீச்சர்கள் மற்றும் தாதியுடன் சந்திப்பு நடந்தது.

நாலாபுறங்களிலும் உள்ள உயர்ந்த மற்றும் செல்வந்த சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, ஒவ்வொரு பொக்கிஷத்திற்கும் எஜமானர்களாகிய சம்பன்ன ஆத்மாக்களுக்கு, சதா தன்னை எவரெடியாக ஆக்கிக் கொள்ளக் கூடிய தீவிர முயற்சி செய்யும் ஆத்மாக்களுக்கு, சதா நேரம், சங்கல்பம், பேச்சின் மூலம் சிரேஷ்ட வருமானத்தின் கணக்கை அதிகப்படுத்தக் கூடிய மிக நெருங்கிய ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

**வரதானம்: அனைவரின் உள்ளப்பூர்வமான அன்பை பலனாக அடையக் கூடிய நியாரா (விடுபட்டவர்), பியாரா (அன்பானவர்). நிர்சங்கல்பம் (எண்ணங்களற்றவர்) ஆகுக!**

எந்த குழந்தைகளிடத்தில் நியாரா மற்றும் பிபாராவாக இருக்கக் கூடிய அல்லது நிர்சங்கல்பத்துடன் இருக்கும் விசேஷதன்மை இருக்கின்றதோ அதாவது யார் இந்த வரதானத்தை பலனாக அடைந்திருக்கின்றார்களோ அவர்கள் அனைவருக்கும் பிடித்தமானவர்களாக ஆகி விடுகின்றனர். ஏனெனில் நியாரா நிலை தான் அனைவரின் உள்ளப்பூர்வமான அன்பை பலனாக தானாகவே ஏற்படுத்தும். அவர்கள் தங்களது சக்திசாலியான நிர்சங்கல்ப நிலையின் மூலம் அல்லது சிரேஷ்ட காரியத்தின் மூலம் பலருக்கு சேவை செய்வதற்கு நிமித்தமானவர்களாக ஆகின்றனர். ஆகையால் தானும் திருப்தியாக இருப்பர், மேலும் மற்றவர்களுக்கும் நன்மை செய்வர். அவர்களுக்கு ஒவ்வொரு காரியத்திலும் வெற்றி தானாகவே பலனாக கிடைக்கும்.

**சுலோகன்: "பாபா" என்ற ஒரு வார்த்தை தான் அனைத்து பொக்கிஷங்களின் சாவியாகும். இந்த சாவியை சதா பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 23.12.1994 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தன்னுடைய மூன்று சொரூபத்தின் நினைவு எப்பொழுதுமே இருக்கட்டும் -1) சங்கமயுக பிராமணன், 2) பிராமணனிலிருந்து பரிஷ்தா மற்றும் 3) பரிஷ்தாவிலிருந்து தேவதா!

இன்று பாப்தாதா நாலாபுறத்திலுமுள்ள குழந்தைகளின் மூன்று ரூபங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைத்தையும் விட உயர்ந்த சொரூபம் பிராமணன் மற்றும் பிராமணனிலிருந்து பரிஷ்தா மேலும் பரிஷ்தாவிலிருந்து தேவதா. பிராமண சொரூபம், பரிஷ்தா சொரூபம் மற்றும் தேவதா சொரூபம். பிராமண சொரூபத்தின் விசேஷமானது அனைத்து சக்திகள் நிறைந்த சொரூபமாகும். ஏனென்றால் பிராமணன் என்றால் மாயாவை வென்றவர். அப்படி அனைத்து சக்திகளில் நிரம்பியவராக ஆவது தான் மாயாவை வென்றவர் ஆவதாகும். முதல் சொரூபம் பிராமணன். பிராமண சொரூபத்தின் விசேஷமாகிய அனைத்து சக்திகளும் தாரணை ஆகியிருக்கிறதா? என்று தன்னைப் பாருங்கள். அனைத்து சக்திகளும் இருக்கிறதா அல்லது ஏதாவது ஒரு சில சக்திகள் இருக்கின்றதா? ஒருவேளை ஒரு சக்தி கூட பலஹீனமாக இருக்கிறது அல்லது குறைவாக இருக்கிறது என்றால் பிராமண சொரூபத்திற்குப் பதிலாக அடிக்கடி சத்திரியன் அதாவது யுத்தம் செய்பவர் ஆகி விடுகிறார்கள். சத்திரியனின் கடமை யுத்தம் செய்வதாகும் மற்றும் பிராமணனின் கடமை எப்பொழுதும் மற்றும் சுலபமாக மாயாவை வென்றவர் ஆவதாகும். பிராமணன் என்றால் வெற்றியடைந்தவர். எப்பொழுதும் அனைத்து சக்திகள் அதாவது அனைத்து ஆயுதங்களினால் நிரம்பியிருப்பவர். மேலும் சத்திரியன் என்றால் சில நேரம் வெற்றி அடைபவர் மற்றும் சில நேரம் தோல்வி அடைபவர். ஏனென்றால்

சக்திகள் கிடைத்த போதிலும் தாரணை செய்யமுடிவதில்லை. எனவே நேரம் மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி எப்பொழுதும் வெற்றி அடைபவர் ஆக முடிவதில்லை. பிராமண சொரூபம் என்றால் எப்பொழுதம் கிரீடம், ஆசனம் மற்றும் திலகம் இட்ட நிலை. உலக நன்மை என்ற பொறுப்பின் கிரீடத்தை அணிந்தவர், எப்பொழுதும் இயல்பாகவே நினைவின் திலகம் இடப்பட்டவர், எப்பொழுதும் தந்தையின் இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர். சத்திரியன் ஒரே சீரான, ஆடாத, அசையாத நிலை இல்லாத காரணத்தினால் சில நேரம் ஸ்திரமானவராகவும், சில நேரம் குழப்பத்திலும், சில நேரம் அதிகாரி மேலும் சில நேரம் தந்தையிடமிருந்து சக்தியை கேட்கும் இராயல் பிச்சைக்காரனாகவும் இருக்கிறார். பிராமணன் என்றால் எப்பொழுதும் ஆன்மீக மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையில் இருப்பவர். எப்பொழுதும் ஆன்மீக நடத்தை மற்றும் முகம் உள்ளவர். சத்திரியன் என்றால் சில நேரம் அப்படியும், சில நேரம் இப்படியும் இருப்பவர். எனவே நான் யார் என்று தன்னிடமே கேளுங்கள். சில நேரம் பிராமணன், சில நேரம் சத்திரியன் என்று அப்படியா? அல்லது எப்பொழுதும் பிராமண வாழ்க்கையின் விசேஷங்களினால் நிரம்பியவராக இருக்கிறீர்களா? லட்சியமோ பிராமண வாழ்க்கைக்கானது ஆனால் சில நேரம் பிராமணன், சில நேரம் சத்திரியன் அந்த மாதிரியான லட்சணம் இல்லை தானே? இலட்சியம் மற்றும் இலட்சணம் சமமாக இருக்கிறதா அல்லது வித்தியாசம் இருக்கிறதா? வார்த்தை மற்றும் செயல் சமமாக இருக்கிறதா அல்லது வித்தியாசம் இருக்கிறதா? அனைவரும் தன்னை பிரம்மாகுமார் - பிரம்மாகுமாரிகள் என்று கூறிக் கொள்கிறீர்கள் இல்லையா? அல்லது சத்திரியன் என்று கூறுகிறீர்களா? சந்திரவம்சி என்று சொல்வதையும் விரும்புவதில்லை தானே? யாராவது உங்களை சந்திரவம்சி என்று கூறினார்கள் என்றால் அதை விரும்புவீர்களா? மாட்டீர்கள் ஆனால் செய்யும் செயல் எப்படி இருக்கிறது? எந்த நேரம் யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்களோ அந்த நேரம் தன்னுடைய போட்டோவை எடுங்கள். போட்டோ எடுக்க வேண்டும் என்ற ஆர்வம் அதிகம் இருக்கிறது தான் இல்லையா அப்படி தன்னுடைய போட்டோவை எடுக்கத் தெரியுமா? அல்லது மற்றவர்களின் போட்டோ எடுக்கத் தெரியுமா? அப்படி நான் யார் என்ற தன்னுடைய போட்டோவை எடுங்கள். ஒருவேளை யாருடைய போட்டோவாவது நன்றாக வரவில்லை என்றால் விரும்புவதில்லை தானே? அப்படி முழு

நாளில் அல்லது எத்தனை தடவை அவ்வப்பொழுது பிராமணனுக்குப் பதிலாக சத்திரியன் ஆகி விடுகிறீர்கள் என்ற இதை சோதனை செய்யுங்கள் மற்றும் சோதனை செய்து மாற்றத்தையும் கொண்டு வாருங்கள். வெறும் சோதனை மட்டும் செய்ய வேண்டாம். மாறுவதற்காகத் தான் சோதனை செய்யப்படுகிறது. அப்படியானால் அனைவரிடமும் மாற்றும் சக்தி இருக்கிறதா? அல்லது சிலரிடம் இல்லையா? அனைவரிடமும் இருக்கிறது என்ற இதுவோ மிகவும் குஷியான விஷயம் ஆகும். இப்பொழுது தேவைக்கு ஏற்ற நேரத்தில் (சக்திகளை) காரியத்தில் ஈடுபடுத்த தெரியுமா? அல்லது சில நேரம் ஈடுபடுத்துவதும் இல்லையா? ஏனென்றால் சக்தி இருக்கிறது என்றால் தேவையான நேரத்தில் காரியத்தில் வர வேண்டும். எதிரி இல்லவே இல்லை மேலும் என்னிடம் மிக நல்ல ஆயுதங்கள் இருக்கின்றன, எப்பொழுது எதிரி வருகிறானோ அப்போது ஆயுதங்கள் காரியத்திலேயே வரவில்லை என்றால் அவரை சக்திசாலி என்று கூற முடியுமா? சக்தி இருக்கிறதா என்று இதை மட்டும் சோதனை செய்யாதீர்கள் ஆனால் செயலின் போது தேவையான நேரத்தில் எந்த சக்தி வேண்டுமோ அதே சக்தியை காரியத்தில் ஈடுபடுத்த தெரியுமா? என்று இதையும் சோதனை செய்யுங்கள் ஆனால் எதிரி முற்றுகையிட்டு விடுகிறார்; பிறகு தான் சக்தியின் நினைவு வருகிறதா? அப்படி பிராமண வாழ்க்கையின் விசேடங்களை சோதனை செய்யுங்கள். பிராமணனிலிருந்து தான் பரிஷ்தா ஆவார். சத்திரியனிலிருந்து பரிஷ்தா ஆக முடியாது.

இரண்டாவது சொரூபம் பரிஷ்தா ஆகும். அனைவரும் பரிஷ்தாவாக ஆக வேண்டுமே தான் இல்லையா? அல்லது பரிஷ்தா ஆவது கடினமா? சுலபமா அல்லது கடினமா? அல்லது சில நேரம் சுலபம், சில நேரம் கடினம் என்று அப்படியா? பரிஷ்தா சொரூபத்தின் விசேஷத்தை அனைவரும் தெரிந்தும் இருக்கிறீர்கள் அதாவது பரிஷ்தா என்றால் டபுள் லைட் அப்படியானால் டபுள் லைட் இருக்கிறதா? அல்லது சில நேரம் சுமையைத் தூக்க மனம் விரும்புகிறது, மேலும் தூக்கியும் விடுகிறீர்களா? அல்லது தூக்க விரும்புவதில்லை ஆனால் மாயா தலை மேல் கூடையை வைத்து விடுகிறதா? மாயா தன்னுடைய போலியான தற்காலிக சக்தியை அந்த மாதிரி காண்பிக்கிறது யார் நிர்பந்தத்தினால் சுமையை தூக்க விரும்பாவிட்டாலும் தூக்கி விடுகிறார்கள்.

ஏனென்றால் பலஹீனமானவர் ஆன காரணத்தினால் பலஹீனமானவர் எப்பொழுதும் மற்றவைகளின் அடிமையாக இருப்பார். அப்படி மாயாவும் அடிமையாக்கி விடுகிறது அதிகார நிலை மறந்து விடுகிறது மற்றும் அடிமை ஆகி விடுகிறார்கள். அந்த நேரத்தில் பேசும் பேச்சு என்னவாக இருக்கும். விரும்பவில்லை தான்; ஆனால் ஏனோ தெரியவில்லை ஒவ்வொரு விஷயத்தில் தெரியவில்லை. தெரியவில்லை என்று கூறிக் கொண்டே இருப்பார்கள். அதிகாரி என்றால் எப்பொழுதும் சுதந்திரமானவர், மேலும் அடிமை என்றால் எப்பொழுதும் மற்றவைகளின் அடிமை ஆவது. அப்படி மற்றவைகளின் அடிமையானவர் ஒருபொழுதும் மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையில் இருக்க முடியாது. பிராமணன் என்றால் மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கை. ஒருவேளை ஏதாவது ஒரு நேரத்தில் மகிழ்ச்சிக்குப் பதிலாக இது என்ன, இது எப்படி, என்ன இது நடக்காதாட என்ற குழப்பத்தில் வருகிறீர்கள் என்றால் இது மகிழ்ச்சி நிறைந்ததல்ல, இது குழப்பம் நிறைந்த வாழ்க்கையாகும். ஒருவேளை எப்பொழுதாவது மகிழ்ச்சியை குறைவாக அனுபவம் செய்கிறீர்கள் என்றால் மீண்டும் இந்த முதல் பாடமாகிய நான் யார் என்பதை நினைவு செய்யுங்கள். நான் ஆத்மா மட்டும் இல்லை ஆனால் எந்த விதமான ஆத்மா? இதற்கு எத்தனை பதில்கள் வரும். நீளமான பட்டியல் இருக்கிறது இல்லையா? தினசரி முரளியில் 'நான் யார்' என்பதின் விதவிதமான பாடத்தைப் படித்துக் கொண்டே இருக்கிறீர்கள், கேட்டுக் கொண்டே இருக்கிறீர்கள்.

அப்படி பரிஷ்தா என்றால் டபுள் லைட் லைட் என்றால் லேசான தன்மை லேசான தன்மையின் அர்த்தம் சூழ்நிலையின் நேரத்தில் மட்டும் லேசாக இல்லை; ஆனால் முழு நாளின் சுபாவம், சம்ஸ்காரம், சம்மந்தம், நெருக்கத்தில் லேசாக இருந்தேனா? பொதுவாக சரியாக இருக்கிறேன், ஆனால் சுபாவ சம்ஸ்காரத்தில் கூட ஒருவேளை லேசான தன்மை இல்லை என்றால் பரிஷ்தா என்று கூற முடியுமா? மேலும் லேசானதின் அடையாளம் -லேசான பொருள் அனைவருக்கும் பிரியமானதாக இருக்கும், ஏதாவது சுமையான பொருளை உங்களுக்குக் கொடுத்தால் அதை விரும்புவீர்களா? மேலும் லேசான நல்ல பொருளாக இருக்கிறது என்றால் விரும்புவீர்கள் தான் இல்லையா? அப்படி யார் சுபாவம், சம்ஸ்காரம், சம்மந்தம் மற்றும் நெருக்கத்தில் லேசாக இருப்பாரோ அவருடைய அடையாளமாக அவர்

அனைவருக்கும் பிரியமானவராகவும் மற்றும் விலகியவராகவும் இருப்பார். ஏனென்றால் பிராமண சுபாவமாகும். வேறு சுபாவம் இல்லை. பிராமணன் என்றால் அனைவரின் மனதிற்குப் பிடித்த சுபாவம், சம்ஸ்காரம் மற்றும் சம்மந்தம். நெருக்கம் உடையவர் ஆவார். பெரும்பான்மை 95 சதவிகிதத்தினரின் மனதிற்குப் பிடித்தவராக அவசியம் இருக்கட்டும் - இந்த மாதிரியான ரிசல்ட் அவசியம் தேவையாக இருக்கிறது. 5 சதவிகிதம் இப்பொழுது கூட மார்ஜினாக கொடுக்கிறோம் ஆனால் கடைசி வரை இல்லை, இப்பொழுது கொடுக்கிறோம். 95 சதவிகிதம் அனைவரின் மனதிற்குப் பிடித்தமானவர் என்றால் அனைவருடனும் லேசாக (கமூகமாக) இருப்பது மேலும் அந்த லேசான தன்மை வார்த்தை, செயல் மற்றும் உள்உணர்வு மூலமாக அனுபவம் ஆகட்டும். நானோ லேசாகத் தான் இருக்கிறேன்; ஆனால் மற்றவர்கள் என்னைப் புரிந்து கொள்ளவில்லை, தெரிந்து கொள்ளவில்லை என்று அப்படியல்ல. ஒருவேளை தெரிந்து கொள்ளவில்லை என்றால் நீங்கள் உங்களுடைய மனோபலம் மூலமாக அவர்களுக்கும் உங்களுடைய அறிமுகத்தைக் கொடுங்கள். உங்களுடைய காரியம், உள்உணர்வு அவரை மாற்றம் செய்யட்டும். இதில் மாற்றம் செய்வதில் சகித்துக் கொள்ளும் சக்திக்கு மட்டும் அவசியமாக இருக்கிறது. மேலும் யாருக்கு பழைய உடல் மற்றும் பழைய உலகத்தோடு எந்த உறவுமே இல்லையோ அவர் தான் பரிஷ்தா ஆவார். இது அனைவருக்கும் நினைவு இருக்கிறது இல்லையா? அல்லது அதையும் இனிமேல் தான் செய்ய வேண்டியதாக இருக்கிறதா? பழைய உடலோடு பற்றுதல் இருக்கிறதா என்ன? உடல் சம்மந்தப்பட்ட உறவுகள் மேல் லேசானவராக ஆகி விட்டீர்களா இல்லையா? பெரியப்பா, சித்தப்பா, மாமா ஆகியோரிடமிருந்து விலகியவராக ஆகி விட்டீர்கள் தான் இல்லையா? அல்லது இப்பொழுதும் பற்று இருக்கிறதா? விலகியவராகவும் அன்பானவராகவும் இருக்கிறீர்களா? அன்பானவர் தான்; ஆனால் விலகியவராகி பிறகு அன்பானவராக ஆகிறார்கள், இதில் தவறு ஏற்பட்டு விடுகிறது. இது தவறி விடுகிறது. விலகியவராக ஆவது எளிதாக இருக்கிறதா? அல்லது அன்பானவராக இருப்பது எளிதாக இருக்கிறதா? ஆனால் உடல் சம்மந்தப்பட்ட உறவுகள் ஆகிய பெரியப்பா, சித்தப்பா, மாமா இவைகளோ இன்னும் எளிதானவை தான். எளிதானதா அல்லது கொஞ்சம் கொஞ்சம் கனவில், எண்ணத்தில் வந்து விடுகிறதா? எப்பொழுது பிராமண குடும்பத்தில்

ஏதாவது ஒரு (விரும்பத்தாகத) சூழ்நிலை வருகிறது என்றால் பெரியப்பா, சித்தப்பா, மாமா நினைவு வருகிறது? அம்மாதிரி சூழ்நிலைகளில் அநேக ஆத்மாக்களுக்கு பிராமண குடும்பத்திற்குப் பதிலாக லௌகீக உறவு விரைவில் நினைவில் வந்து விடுகிறது என்று பாப்தாதா பார்க்கிறார். சூழ்நிலை விலகியிருப்பதற்குப் பதிலாக லௌகீகத்தினரின்) ஆதரவை நாடும் அனுபவம் செய்விக்கிறது. எப்பொழுது உடலில் இருந்து கொண்டே இறந்தவர்களாக (மறுபிறவி) ஆகி விட்டீர்கள் என்றால் முந்தைய ஜென்மத்தின் உறவினர்களாகிய பெரியப்பா, சித்தப்பா, மாமா, அம்மா, அப்பா ஆகியோரின் நினைவு இருக்கிறதா என்ன? கனவில் கூட வருகிறதா என்ன? அப்படி உறவு, ஜென்மம் மாறி விட்டது இல்லையா? அப்படி பரிஷ்தா என்றால் பழையவைகளோடு எந்தவொரு உறவும் இல்லை என்ற இந்த விளக்கத்தை தான் கூறுகிறீர்கள் இல்லையா? பின்பு சில சமயம் எங்கிருந்தாவது வெளிவந்து விடுகிறதா? முறிந்து போன உறவு இணைந்து விடுகிறதா? இறந்து போனதிலிருந்து உயிர் பெற்று விடுகிறீர்களா? பரிஷ்தா என்றால் பழையவைகளோடு எந்த உறவும் இல்லை, அனைத்தும் புதியது பரிஷ்தா ஆவதில் என்ன தடைகள் இருக்கிறதோ அதற்கான காரணம் ஒன்று, முதல் படி தேக உணர்வை விட வேண்டும், இரண்டாவது படி அது இன்னும் சூட்சுமமானது அதாவது தேக அபிமானத்தை விட வேண்டும். தேக உணர்வு மற்றும் தேக அபிமானம் இருந்தும் தேக உணர்வு (ஸ்தூல ரீதி) என்பது பொதுவானது; ஆனால் எவ்வளவு ஞான சொரூப ஆத்மா, யோக சொரூப ஆத்மாவாக ஆகுகிறீர்களோ அவ்வளவு தேக அபிமானம் (சூட்சுமானது) தடை ஏற்படுத்துகிறது. மேலும் அனேக விதமான அபிமானம் வருகிறது -தன்னுடைய புத்தியின் அபிமானம், தன்னுடை உயர்ந்த சம்ஸ்காரத்தின் அபிமானம், தன்னுடைய நல்ல சுபாவத்தின் அபிமானம், தன்னுடைய விசேஷங்களின் அபிமானம், தன்னுடைய ஏதாவது விசேஷ கலையின் அபிமானம்: மேலும் தன்னுடைய சேவையின் வெற்றிக்கான அபிமானம். இந்த சூட்சும அபிமானம் தேக உணர்வை விட மிகவும் நுண்ணியமானது. அபிமானத்திற்கான வாசலையோ தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? நான் -எனது. இது தான் அபிமானத்தின் வாசல் அப்படி பரிஷ்தாவின் அர்த்தம் தேக உணர்வு மற்றும் தேகத்தின் கவர்ச்சியிலிருந்து விலகியிருப்பது மற்றும் தேகத்தின் ஸ்தூல சம்மந்தத்திலிருந்து விலகியிருப்பது மட்டுமில்லை;

ஆனால் பரிஷ்தா என்றால் தேகத்தின் சூட்சும அபிமானத்தின் சம்மந்தத்திலிருந்தும் விலகியிருப்பது ஆகும். மேலும் அபிமானத்தின் அடையாளம் -எங்கு அபிமானம் இருக்கிறதோ அங்கு அவமானத்தின் உணர்வு கூட விரைவில் ஏற்படும். எங்கு அபிமானம் இருக்கிறதோ அங்கு அவமானத்தின் உணர்வு வெகு விரைவில் ஏற்படுகிறது. ஏனென்றால் 'நான்' மற்றும் 'என்னுடையதின்' வாசல்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. பரிஷ்தாவின் யதார்த்த சொரூபமானது தேக உணர்வு, தேகத்தின் சம்மந்தத்திலிருந்து, தேக அபிமானத்திலிருந்து விலகியிருப்பது ஒருவேளை ஏதாவது குணம் இருக்கிறது. ஏதாவது சக்தி இருக்கிறது என்றால் கொடுத்தவரை (வள்ளலை) ஏன் மறந்து விடுகிறீர்கள்? மற்றும் இன்னொரு விஷயம் இதன் மூலமாக சுலபமாக விலகியிருப்பதற்கான வழி மற்றும் விதி மிக சுலபமானது அது ஒரு வார்த்தையாகும். ஒரு வார்த்தையில் அவ்வளவு சக்தி இருக்கிறது. அதனால் தேக அபிமானம் மற்றும் தேகத்தின் உணர்வு நிரந்தரமாக முடிந்து விடுகிறது. அந்த ஒரு வார்த்தை எது? செய்யவர்செய்விப்பவர் தந்தை செய்வித்துக் கொண்டிருக்கிறார். 'செய்பவர் செய்விப்பவர்' இந்த வார்த்தை தேக உணர்வையும் மற்றும் தேக அபிமானத்தையும் அகற்றி விடுகிறது. ஒரு வார்த்தையை நினைவு செய்வது சுலபம் தான் இல்லையா. மற்ற அனைத்து ஞான விஷயங்கள் மறந்து போனாலும், மறக்கக் கூடாது, அப்படியே ஒருவேளை மறந்து போனாலும் ஒரு வார்த்தையை நினைவு செய்ய முடியும் இல்லையா. செய்பவர் செய்விப்பவர் பாபா ஆவார். பின்பு பாருங்கள் பரிஷ்தா வாழ்க்கையின் அனுபவம் எவ்வளவு சுலபமாக அனுபவம் ஆகிறது என்று. பிரம்மாபாபா எதன் ஆதாரத்தில் பரிஷ்தாவாக ஆனார். எப்பொழுதும் செய்பவர்செய்விப்பவரின் நினைவினால் சக்தி நிறைந்தவராகி பரிஷ்தாவாக ஆனார். ஃபாலோ ஃபாதர் (தந்தையைப் பின்பற்றி நடப்பது) தான் இல்லையா? அல்லது ஃபாலோ மாயாவா? சில நேரம் மாயாவும் தாய் தந்தை ஆகி விடுகிறது, மிக நல்ல பாலனை மற்றும் பிராப்தி செய்விக்கிறது ஆனால் அவை அனைத்தும் ஏமாற்றம் ஏற்படுத்தும் பிராப்தி ஆகும். முதலில் பிராப்தி பின்பு ஏமாற்றம். பகுத்தறியும் சக்தியோ இருக்கிறது இல்லையா? மாயாவா அல்லது தந்தையா என்று இதை அந்த நேரத்தில் பகுத்தறிய வேண்டும். ஏமாற்றம் அடைந்து பின்பு பகுத்தறிவது இது ஒன்றும் புத்திசாலித்தனம் இல்லை. ஏமாற்றம் அடைந்தோ அனைவரும் புரிந்து கொள்கிறார்கள் ஆனால் ஞான

சொரூப ஆத்மா முதலில் இதை பகுத்தறிந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்கிறார். அப்படி பரிஷ்தா என்று யாரைக் கூறுவது என்று புரிந்து கொண்டீர்களா?

மூன்றாவது பரிஷ்தாவிலிருந்து தேவதை. இப்பொழுது தேவதை ஆக வேண்டுமா அல்லது எதிர்காலத்தில் ஆனீர்களா? தேவதை என்றால் அனைத்து குணங்களினால் அலங்கரிக்கப்பட்டவர். இந்த தெய்வீக குணங்கள் சங்கமயுகத்தின் தேவதை வாழ்க்கையின் அலங்காரம் ஆகும். இந்த நேரம் தெய்வீக குணங்களினால் அலங்கரிக்கப்பட்டவர்களாக ஆனீர்களாளால் தான் எதிர்காலத்தில் ஸ்தூல அலங்காரத்தினால் அலங்கரிக்கப்பட்டு இருக்கிறீர்கள். அப்படி தேவதை என்றால் தெய்வீக குணங்களினால் அலங்கரிக்கப்பட்டவர் மற்றும் இன்னொன்று தேவதை என்றால் கொடுப்பவர். எடுப்பவரில்லை ஆனால் கொடுப்பவர். அப்படி லாக இருக்கிறீர்களா? அல்லது சில நேரம் எடுப்பவர் மற்றும் சில நேரம் கொடுப்பவராக இருக்கிறீர்களா? தெய்வீக குணங்களின் அலங்காரம் எப்பொழுதும் இருக்கிறதா அல்லது சில நேரம் ஏதாவது அலங்காரம் மறந்து விடுகிறதா? என்று சோதனை செய்யுங்கள். சர்வ குண சம்பன்னம் இது தான் தேவதை வாழ்க்கையின் அடையாளமாகும். இந்த குணம் தான் நகைகள் ஆகும். எனவே பிராமண சொரூபத்தில் அனைத்து சக்திகள், பரிஷ்தா சொரூபத்தின் டபுள் லைட் நிலை மற்றும் தேவதா சொரூபத்தின் வள்ளல் தன்மையின் அடையாளம் மற்றும் தெய்வீக குணங்கள் நிரம்பியவராக ஆகியிருக்கிறேனா? என்று பாருங்கள். மூன்று சொரூபங்களையும் அனுபவம் செய்கிறீர்களா? எப்படி தந்தையின் மூன்று சம்மந்தம் -தந்தை, ஆசிரியர், சத்குரு எப்பொழுதும் நினைவிருக்கிறது. அதே போல் இந்த மூன்று சொரூபத்தையும் எப்பொழுதும் நினைவு வையுங்கள். புரிந்ததா? ஆக வேண்டியதோ நீங்கள் தான் இல்லையா அல்லது வேறு யாராவது வரப்போகிறார்களா? நீங்கள் தான் ஆக வேண்டும் இல்லையா? இன்று பிராமணன், நாளை பரிஷ்தா மற்றும் பின்பு தேவதை. தன்னுடைய பரிஷ்தா சொரூபத்தை ஞானத்தின் கண்ணாடியில் பாருங்கள். பரிஷ்தா எப்பொழுதும் பறந்து கொண்டே இருப்பார்கள் மற்றும் செய்தி கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். பரிஷ்தா வந்தார், செய்தி கொடுத்தார் மற்றும் மேலே பறந்து சென்று விட்டார். அப்படியானால் அந்த பரிஷ்தாக்கள் யார்? நீங்கள் தான்

இல்லையா. உடனடியாக சொல்லுங்கள் -நாங்கள் தான் இருந்தோம். அது நாங்கள் தான் மற்றும் நாங்களே அப்படி ஆவோம். இது உறுதி தான் இல்லையா. இதைத் தான் நிச்சயபுத்தியுடையவர்கள் வெற்றி அடைவார்கள் என்று கூறுவது. நீங்கள் சத்திரியனா அல்லது வெற்றி அடைபவரா? யாராவது சத்திரியனாக ஆவீர்களா? அல்லது வேறு யாரோ ஆவார்களா. அப்படி நீங்கள் பிராமணர்கள். இப்படி இருந்து கொண்டிருக்கும்பொழுதே ஒருபொழுதும் சத்திரியனாக ஆகாதீர்கள். ஒருவேளை அடிக்கடி சத்திரியனாக ஆகிக் கொண்டே இருந்தீர்கள், யுத்தம் செய்து கொண்டே இருந்தீர்கள் என்றால் யுத்தத்தின் சம்ஸ்காரத்தை எடுத்துச் செல்பவர்கள் எங்கு போய்ச் சேருவார்கள். சந்திர வம்சத்திலா அல்லது சூர்யவம்சத்திலா? சந்திர வம்சம் விருப்பம் இல்லை தானே அல்லது சில நேரம் அப்படி ஆகி விட்டது என்றால் பரவாயில்லை என்ற அந்த நிலையா? அப்படியானால் நீங்கள் அனைவரும் யார்? பிராமணனா? உறுதியான பிராமணனா அல்லது கொஞ்சம் கொஞ்சம் பிஞ்சாக இருக்கிறீர்களா? சக்திகள் உறுதியாக இருக்கிறீர்களா? பாண்டவர்கள் உறுதியாக இருக்கிறீர்களா? ஒருவேளை உறுதியாக இருக்கிறீர்கள் என்றால் எப்பொழுதும் குஷி நிறைந்த செய்தி அடங்கிய கடிதம் வர வேண்டும். மாயா வந்து விட்டது. இது நடந்து விட்டது, என்ன ஆகி விட்டது என்று தெரியவில்லை, எப்படி நடந்தது ஆகிய இவை எண்ணத்தில் கூட இருக்க வேண்டாம். தந்தையோ கனவில் கூட இருக்க வேண்டாம் என்று கூறுகிறார். கனவில் கூட ஏன், என்ன என்பது இல்லாத நிலை அந்த மாதிரியான உறுதியானவராக இருக்கிறீர்களா? சக்திகள் மஹா உறுதியானவர்களாக இருக்கிறீர்களா? பாண்டவர்கள் உறுதியானவர்கள் என்றால் நாங்கள் மஹா உறுதியானவர்கள் என்று கூறுங்கள். ஏனென்றால் சக்திகளைத் தான் பொறுப்பிலிருப்பவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறது. பொறுப்பிலிருப்பவர்களே உறுதியானவர்கள் -உறுதியற்றவராக இருக்கிறார்கள் என்றால் மற்றவர்களின் நிலைமை என்னவாகும். பாண்டவர்கள் முதுகெலும்பாக இருக்கிறார்கள். முதுகெலும்பாக ஆவது பிடித்திருக்கிறதுதான் இல்லையா? அல்லது எதிர்கொள்வது பிடித்திருக்கிறதா? முதுகெலும்பாக ஆவது நல்லது, மிகவும் பாதுகாப்பாக இருக்கிறீர்கள். இல்லை என்றால் அடி வாங்குவீர்கள். நல்லது.

அனைவரும் தங்கள் இனிய வீட்டை அடைந்து விட்டீர்கள். போக வேண்டும், போக வேண்டும் என்ற எண்ணம் இருந்தது, இப்போது என்ன எண்ணம் உள்ளது? இப்போதும் போகத்தானே வேண்டும்? சேவையின் நிமித்தமாகப் போகிறீர்கள் அதனால்தான் மகிழ்ச்சியுடன் செல்கிறீர்கள். சேவைக்காகப் போறீங்களா, கடைக்குப் போறீங்களா, வீட்டுக்குப் போறீங்களா, ஆபீஸுக்குப் போறீங்களா? அலுவலகம் அல்லது வீடு எதுவாக இருந்தாலும், அனைத்தும் சேவை செய்யும் இடங்கள். சேவாதாரிகளுக்கு எல்லா இடங்களிலும் சேவை உள்ளது. எனவே மதுபனுக்கு வருவது, ஊக்கம் உற்சாகத்தின் கஜானாவை நிரப்பிக் கொண்டு சேவைக்குச் செல்வது. நீங்கள் மகிழ்ச்சியாக செல்கிறீர்களா, இல்லை கட்டாயத்தின்பேரிலா? சேவை என்றாலே மகிழ்ச்சி! கணக்கு வழக்கு இருக்கிறது, கடனை அடைக்கச் செல்கிறோம், என அப்படி இல்லை. கடமையாற்ற செல்கிறீர்கள். வீட்டில் பல கொக்குகள் உள்ளன. கொக்குகள் இல்லை என்றால், நீங்கள் யாருக்கு ஞானம் கொடுப்பீர்கள்? அன்னத்தை அன்னமாக ஆக்குவீர்களா? கொக்குகளை அன்னம் ஆக்குவீர்களா? எனவே நீங்கள் என்ன நினைவில் கொள்வீர்கள்? பிராமணர்-to-ஃபரிஷ்தா, ஃபரிஷ்தா-to-தேவதை! உறுதியாக இருக்குமா? ரயிலில் போகும்போதே அதை மறந்து விடுவீர்களா? தங்களது இடத்திற்குப் போகப்போக மீதம் ஏதாவது ஒன்று இருக்குமா -இப்படி ஆகாதல்லவா? எல்லோரும் வசதியாக இருக்கிறார்களா? பலகையில் தூங்குவது சுகமாக இருக்கிறதா? கட்டிலின் நினைவு வரவில்லையே? ஆம், அனைவருக்கும் கட்டில் கிடைக்கும் ஒரு காலம் வரும், ஆனால் அது எப்போது வரும்? அபு முழுவதும் தனதாக்கும்போது. இந்த குழுவின் சுகம் கட்டில் மற்றும் டன்லப் மெத்தையை (dunlop bed) விட அதிகமானது. இதிலும் சுகமாகத்தானே தூங்குகிறீர்கள்? ஞானஅமிர்தத்தைக் குடித்தபடியே தூங்கினால் நன்றாகத் தூங்குவீர்கள். ஞானஅமிர்தத்தைக் குடியுங்கள், பிரம்மா போஜனம் சாப்பிடுங்கள்! அனைவருக்கும் சமைத்த உணவு கிடைக்கிறது. அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள். அதிர்ஷ்டமும் உள்ளது, கலகலப்பாகவும் உள்ளது. சில நேரங்களில் தீவிரம், சில நேரங்களில் மகிழ்ச்சியா? தோற்றத்தில் எந்த வித்தியாசமும் இருக்கக்கூடாது. கோபம் வந்தால் முகம் சிவந்து விடும் அல்லவா? எப்போதும் மகிழ்ச்சியான முகத்துடன் இருக்க வேண்டும். இதைத்தான் கலகலப்பாக இருப்பது என்று கூறப்படுகிறது. நல்லது, ஒவ்வொருவரும்

தந்தையை நினைத்து முழு மனதுடன் நேசிப்பது போல், தந்தையும் உங்களை பல மடங்கு நினைக்கிறார் மற்றும் நேசிக்கிறார். நீங்கள் தந்தையிடம் கேட்கிறீர்கள், நாள் முழுவதும் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? நாள் முழுவதும் குழந்தைகள் உங்களை மட்டுமே நினைத்துக் கொண்டிருப்பதாக சொல்கிறார். மற்றும் வேறு வேலை என்ன உள்ளது? இந்த போதை உள்ளதா? உலகினர் தந்தையை நினைக்கிறார்கள், தந்தையோ உங்களை நினைக்கின்றார்! நல்லது.

மண்டலம் வாரியாக சந்திப்பு நடந்தது -குஜராத், ஈஸ்டர்ன், பாம்பே, பூனா, கர்நாடகா, ஆந்திர பிரதேசம், இரட்டை வெளிநாட்டினர்.
எல்லா தாதிகளும் மேடையில் பாப்தாதா முன்பாக நின்று சந்தித்துக் கொண்டுள்ளனர் -தாதி ஜானகி, தாதி சந்திரமணி, தாதி ஜீ.

நாலாபுறத்திலுமுள்ள அனைத்து பிராமணனிலிருந்து பரிஷ்தா, பரிஷ்தாவிலிருந்து தேவதா, மூன்று சொரூபத்தின் நினைவு சொரூப ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் ஒரு வார்த்தை செய்பவ ர்செய்விப்பவரின் நினைவினால் தன்னை டபுள் லைட் ஆக ஆக்கக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு. எப்பொழுதும் தேவதை என்றால் வள்ளலாகி கொடுக்கக்கூடிய, அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் வரதானங்களை செயலில் கொண்டு வரக்கூடிய கர்மயோகி ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: ஆன்மீக சக்தியை ஒவ்வொரு காரியத்தில் உபயோகிக்க கூடிய யுக்தியுக்தான ஜீவன்முக்த் ஆனவர்கள் ஆகுக!

இந்த பிராமண வாழ்க்கையின் விசேஷமே ஆன்மீகமாகும். ஆன்மீகத்தின் சக்தியினால் தான் தன்னை மற்றும் மற்றவர்களை மாற்றம் செய்ய முடியும். இந்த சக்தியினால் அனேக விதமான உலகியல் பந்தனங்களிலிருந்து விடுதலை கிடைக்கிறது ஆனால் ஒவ்வொரு காரியத்தில் லூசாக (பொறுப்பற்ற நிலை) இருப்பதற்குப் பதிலாக யுத்தியுக்த்தாகி ஆன்மீக சக்தியை உபயோகம் செய்யுங்கள். எண்ணம், சொல் மற்றும் செயல் மூன்றிலும் ஆன்மீகத்தின் சக்தி

சேர்ந்தே அனுபவம் ஆகட்டும். யார் மூன்றிலுமே யுக்தியுக்த்தாக இருக்கிறாரோ அவர் தான் ஜீவன்முக்த் (விடுதலை) ஆனவர் ஆவார்.

சுலோகன்: சத்தியத்தின் விசேஷம் மூலமாக குஷி மற்றும் சக்தியின் அனுபவத்தை செய்து கொண்டே இருங்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 31.12.1994 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# புது வருடத்தை சுப பாவனை, குண சொரூப வருட ரூபத்தில் கொண்டாடுங்கள்!

இன்று புது யுகத்தை படைக்கும் பாப்தாதா தன்னுடைய புது யுகத்து இராஜ்ய அதிகாரி குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். புது வருடத்தைப் பார்த்து தன்னுடைய புது யுகம் நினைவு வருகிறதா? புது யுகத்தின் எதிரில் இந்த புது வருடம் ஒன்றும் பெரிய விஷயமில்லை. அந்த புது யுகத்தில் ஒவ்வொரு பொருள், ஒவ்வொரு மனிதன், இயற்கை அனைத்தும் புதியதாக இருக்கும். புது வருடம் எப்பொழுது தொடங்குகிறது என்றால் பழைய பொருள் மற்றும் மனிதனின் பழைய சுபாவம், சம்ஸ்காரம், நடத்தை கொஞ்சம் புதியதாக இருக்கிறது, கொஞ்சம் பழையதாக இருக்கிறது ஆனால் உங்களுடைய புது யுகத்தில் பழையதின் பெயர் அடையாளமே இல்லை. மனிதனும் புதியது அதாவது சதோபிரதானமாக இருக்கிறார். மேலும் இயற்கையும் சதோபிரதானம் அதாவது புதியதாக இருக்கிறது. இயற்கையிலும் கூட இன்றைய நாட்கள் போல பழைய நிலை இருக்காது. அப்படி புது யுகத்தின் வாழ்த்துக்களுடன் புது வருடத்தின் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

இன்று விசேஷமாக புது வருடத்தைக் கொண்டாடும் ஊக்கம் உற்சாகத்தோடு குஷி குஷியாக அனைவரும் வந்து சேர்ந்து விட்டீர்கள். பாப்தாதாவும் உள்ளப்பூர்வமான ஆசீர்வாதங்களையும் சேர்த்து புது யுகத்தின் மற்றும் புது வருடத்திற்கான இரட்டை வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். உங்கள் அனைவருக்கும் கூட இரட்டை நினைவிருக்கிறதா அல்லது ஒரு நினைவு தான் இருக்கிறதா? உங்களுடைய புது யுகம் கண்களின் எதிரில், புத்தியில் தெளிவாக இருக்கிறது இல்லையா? எப்படி நாளையிலிருந்து புது வருடம்

தொடங்குகிறது என்று கூறுவோம் அதே போல் நாளை புது யுகம் வந்தே விட்டது என்று அந்த அளவு தெளிவாக இருக்கிறதா? போதை இருக்கிறதா? அனைவரும் புது யுகத்தின் இராஜ்ய அதிகாரிகளாக இருக்கிறீர்களா? அனைவரும் இராஜா ஆவீர்கள் என்றால் பிரஜைகளை உருவாக்கியிருக்கிறீர்களா? நீங்கள் அனைவருமே இராஜாக்கள் தான்! ஆனால் இராஜ்யம் யார் மேல் செய்வீர்கள்? தன் மேல் செய்வீர்களா? அப்படி பாப்தாதா புது யுகம் மற்றும் புது வருடம் இரண்டையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். நாளைய விஷயம் தான் இல்லையா? அதுவும் நேற்றைய விஷயம் மற்றும் இதுவும் நாளைய விஷயம். பின்பு புது யுகம் இருக்கும் இல்லையா? உங்களுடைய புது யுகத்தின் ஆடை (உடல்) எதிரில் தென்படுகிறதா? பழைய ஆடையை விடுவோம் மற்றும் புது ஆடையை அணிவோம். அப்படி அந்த ஆடை நல்லதாக ஜொலிக்கும் அழகானதாக இருக்கிறது இல்லையா! இப்பொழுதோ பாருங்கள் ஒவ்வொருவரிடமும் ஏதாவது ஒரு குறை இருக்கும். சிலருடைய மூக்கு வளைந்திருக்கும், சிலருடைய கண்கள் கோணலாக இருக்கும், சிலருடைய உதடு ஒரு மாதிரி இருக்கும் மேலும் புது யுகத்தில் அனைத்தும் நம்பர் ஒன் ஆக இருக்கும், ஒவ்வொரு கர்ம இந்திரியமும் மிகச் சரியாக இருக்கும். அந்த மாதிரியான ஆடை எதிரில் தாங்கியில் மாட்டப்பட்டிருக்கிறது தானே? அணிய வேண்டும் அவ்வளவு தான். உங்களுடைய ஆடை நன்றாக இருக்கிறது, உங்களுக்கு பிடித்திருக்கிறதா? பார்த்துக் கொண்டு இருக்கிறீர்கள் தான் இல்லையா?

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் பார்க்கிறார் என்றால் என்ன பார்க்கிறார்? ஒன்று ஒவ்வொரு வரின் நெற்றியில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் மணியாகிய உயர்ந்த ஆத்மாவைப் பார்க்கிறார். மேலும் கூடவே ஒவ்வொரு குழந்தையின் பாக்கியத்தின் உயர்ந்த ரேகையைப் பார்க்கிறார். ஒவ்வொருவரின் பாக்கியம் எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறது. அனைவரின் பாக்கியம் உயர்ந்தது தான் இல்லையா. அல்லது யாருடையவாவது இடைப்பட்டதாகவும் இருக்கிறதா? அனைவரும் முதல் எண்ணாக இருக்கிறீர்களா? இரண்டாவது மூன்றாவதாக இருப்பவர்கள் இனி வரப்போகிறார்களா? நல்லது. உலகத்தினர் உங்களுடைய வாயில் குலாப் என்று கூறுவார்கள். மேலும் பாப்தாதா உங்களுடைய வாயில் குலாப் ஜாமுன்

என்று கூறுகிறார். குலாப் ஜாமுன் அனைவருக்கும் மிக பிடித்தமானதாக இருக்கிறது இல்லையா? குலாப் ஜாமுன் அல்லது இனிப்பு சாப்பிடுவதற்காகவே பாப்தாதா ஒவ்வொரு வியாழக்கிழமையும் போக் வைத்திருக்கிறார். போக்கில் நீங்களும் சாப்பிடுகிறீர்கள் பாப்தாதாவிற்கும் ஸ்வீகாரம் செய்விக்கிறீர்கள். வீட்டில் செய்தாலும் செய்யாவிட்டாலும் வியாழக்கிழமையன்றோ இனிப்பு கிடைக்கும் இல்லையா. மேலும் எப்பொழுது குஷிக்கான கொண்டாட்டம் இருக்கிறது என்றால் வாயில் இனிப்பு கொடுப்பார்கள். இனிப்பான வாய் என்றால் இனிமையான முகம். வாய்க்கோ அனைவரும் இனிப்பு கொடுக்கிறார்கள் ஆனால் உங்கள் அனைவரின் வாயிலும் இனிப்பு இருக்கிறது என்றால் முகமும் இனிமையானதாக இருக்கிறது. அல்லது கொஞ்சம் கொஞ்சம் கசப்பானதாகவும் இருக்கிறதா? ஒருவேளை ஒரு கோடாவது கசப்பானதாக இருக்கிறது என்றால் இன்று வருடத்தை வழி அனுப்புவதோடு இந்த கொஞ்சம் இருக்கும் கசப்பான நிலைக்கும் விடை கொடுங்கள். விடை கொடுக்கத் தெரியுமா? அல்லது உங்கள் கூடவே வைத்துக் கொள்வது பிடித்திருக்கிறதா? அல்லது விடை கொடுத்து அனுப்பி விட்டு பின்பு அழைத்து விடுவீர்களா? நாங்கள் விட விரும்புகிறோம் தான்; ஆனால் மாயா விடுவதில்லை என்று பின்பு கூறுவீர்களா? நாங்கள் விட்டு விட்டோம்; ஆனால் மாயா வந்து விட்டது என்று அப்படிச் சொல்ல மாட்டீர்கள் இல்லையா? அங்கு சென்ற பிறகு இந்த மாதிரி கடிதம் எழுதுவீர்களா? விடை கொடுப்பது என்றால் நிரந்தரமாக விடை கொடுப்பது. விடை கொடுப்பதின் அர்த்தமே பின்பு வரவிடக்கூடாது. அல்லது சில நேரம் வந்து விட்டாலும் ஒன்றும் பாதகமில்லையா? ஏனென்றால் அனேகருக்கு பழைய சம்ஸ்காரம் மிகவும் பிடித்திருக்கிறது. நாளையிலிருந்து இந்த மாதிரி இருக்காது என்று இன்று சொல்வார்கள், பிறகு பல வருடங்கள் அதன் அடிமையாகி விடுவார்கள். இதை விடை கொடுத்தல் என்று கூற மாட்டோம் இல்லையா? எனவே விடை கொடுப்பதையும் கற்றுக் கொள்ளுங்கள். வருடத்திற்கு விடை கொடுப்பதோ பொதுவான விஷயம் ஆனால் நீங்கள் அனைவரும் மாயாவை அம்சம் மற்றும் வம்சத்தையும் சேர்த்து விடை கொடுக்க வேண்டும். அம்சமாத்திரம் கூட இருக்க வேண்டாம். சில குழந்தைகள் 75-சதவிகிதமோ வித்தியாசம் வந்து விட்டது. மேலும் வந்து விடும் என்று கூறுகிறார்கள் ஆனால் மாயா அம்சத்திலிருந்து

வம்சத்தை மிக வேகமாக உருவாக்கி விடுகிறது. 25-சதவிகிதம் அம்சமாத்திரத்திலும் இருந்து விட்டது என்றால் 25-லிருந்து 50-வரை வெகு விரைவில் வந்தடைய முடியும். எனவே அம்சத்தையும் சேர்த்து அழிக்க வேண்டும். அப்படியானால் புது வருடத்தில் என்ன செய்வீர்கள்? பழைய வருடத்தை விடை கொடுப்பதின் கூடவே மாயாவின் அம்சத்தையும் விடை கொடுக்க வேண்டும். மேலும் விடை கொடுப்பதின் கூடவே வாழ்த்துக்களும் கொடுக்கிறீர்கள் இல்லையா? நாளை ஒருவர் இன்னொருவரை சந்தித்தீர்கள் என்றால் புதுவருடத்தின் வாழ்த்துக்கள் என்று அனைவரும் கூறுவீர்கள் இல்லையா! அப்படி விடை கொடுங்கள். அதன் கூடவே தானும் மற்றும் பிறரும் எப்பொழுதும் பரிஷ்தா சொரூபத்தில் இருப்பதற்கான வாழ்த்துக்களையும் கொடுங்கள். நீங்களோ பரிஷ்தாக்கள் தான். மேலிருந்து கீழே வந்தது, தன்னுடைய காரியம் செய்தது, மேலும் பறந்து சென்றது. பரிஷ்தாக்கள் இதைத் தான் செய்கிறார்கள் இல்லையா? மேலே பறக்கும் கலைக்கான அடையாளமாக இறக்கைகள் கொடுத்திருக்கிறார்கள். மற்றபடி செயற்கையான இறக்கைகள் இல்லை ஆனால் பரிஷ்தாக்களுக்கு இறக்கைகள் இருப்பதாக காண்பிக்கிறார்கள். அதன் அர்த்தம் பரிஷ்தா என்றால் பறக்கும் கலை உள்ளவர். அப்படி பரிஷ்தா சொரூபத்தின் வாழ்த்துக்களை தனக்காகவும் கொடுங்கள்; மற்றவர்களுக்கும் கொடுங்கள். எப்பொழுதும் பரிஷ்தா சொரூபத்தின் நினைவிலும் இருங்கள் மேலும் மற்றவர்களையும் அதே சொரூபத்தில் பாருங்கள். இன்னார், இப்படிப்பட்டவர் என்று அப்படியில்லை, பரிஷ்தாவாக இருக்கிறார் என்று அப்படி இந்த பரிஷ்தாக்கள் செய்தி கொடுக்கும் காரியத்தின் பொறுப்பிலிருக்கிறார்கள். புரிந்ததா? எனவே அனைவருக்கும் பரிஷ்தா சொரூபத்தின் வாழ்த்துக்களைக் கொடுங்கள். யார் எப்படிப்பட்டவராக இருந்தாலும் பார்வை மூலமாக படைப்பு மாற முடியும். எப்பொழுது பார்வை மூலமாக படைப்பு மாற முடியும் என்றால் பிராமணன் மாற முடியாதா என்ன? உங்களுடைய பார்வை நினைவு ஒவ்வொரு ஆத்மாவையும் மாற்றி விடும்.

பாப்தாதாவிற்கு சில நேரம் குழந்தைகள் மேல் சிரிப்பு வருகிறது. உங்களுக்கும் உங்கள் மேலேயே சிரிப்பு வருகிறதா? நாங்கள் உலகத்தை மாற்றுபவர்கள், உலகத்திற்கு நன்மை செய்பவர்கள் என்று

ஒரு பக்கம் கூறுகிறார்கள். பின்பு உலகத்தை மாற்றுபவர் வந்து என்னால் இந்த மாற்றத்தை செய்ய முடியாது என்று கூறுகிறார். சில நேரம் ஆன்மீக உரையாடலின்போது இதைச் செய்யக்கூடாது என்று விரும்புகிறோம்; இருந்தாலும் செய்து விடுகிறோம் என்று தன்னைப் பற்றியும் கூறுகிறார். அப்படி உலகத்தை மாற்றுபவர் நான் விரும்புகிறேன், ஆனால் செய்ய முடிவதில்லை என்று கூறினால் அவருக்கு என்ன பட்டம் கொடுக்கலாம்? அவரை உலகத்தை மாற்றுபவர் என்று சொல்ல வேண்டுமா அல்லது பலஹீனமானவர் என்று சொல்ல வேண்டுமா? என்ன செய்வது, எப்படிச் செய்வது எப்பொழுது நடக்கும் என்று தெரியவில்லை என்ற பாடலை கூறுகிறீர்கள் இல்லையா... இந்தப் பாடலை பாப்தாதாவும் கேட்கிறார் இல்லையா. எப்பொழுது உலகத்தை மாற்றுபவர் மற்றும் உலகத்திற்கு நன்மை செய்பவராக இருக்கிறார் என்றால், அவர் எந்தவொரு ஆத்மாவையும் மாற்ற முடியாதா என்ன? தன்னை மாற்ற முடியாதா என்ன? ஒருவேளை தன்னை மாற்றுபவராக இல்லை என்றால் அவர் உலகத்தை மாற்று வராக எப்படி இருக்க முடியும்?

இந்த வருடத்திற்கான விசேஷமான திடமான உறுதிமொழியைத் தனக்காகவே எடுத்துக் கொள்ளுங்கள் என்று பாப்தாதா கூறுகிறார். உறுதிமொழியின் அர்த்தமே உடலே சென்று விட்டால் கூட கொடுத்த உறுதிமொழி மீறப்படாது என்பது தான். அப்படியானால் உறுதிமொழி எடுப்பதற்கு இந்தளவு தைரியம் இருக்கிறதா? செய்வீர்களா? பயப்பட மாட்டீர்கள் இல்லையா? அப்படி ஒருபொழுதும் யாருடைய பலஹீனம் மற்றும் குறையைப் பார்க்க மாட்டோம் என்ற உறுதிமொழியை உங்களுக்கு நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள். யாருடைய பலஹீனம் மற்றும் குறையை கேட்க மாட்டோம் மற்றும் சொல்லவும் மாட்டோம். கேட்க மாட்டோம், சொல்ல மாட்டோம், பார்க்க மாட்டோம் என்றால் இந்த வருடம் என்ன ஆகி விடும்? இந்த வருடம் ன, குணசொரூப வருடம் ஆகி விடும். ஒவ்வொரு வருடத்திற்கும் அந்தந்த பெயரைக் கொடுக்கிறார்கள் இல்லையா? இந்த உறுதிமொழியை அனைவரும் எடுத்து விட்டார்கள் என்றால் இந்த வருடம் சுபபாவனை, குணசொரூப வருடமாக ஆகி விட்டது. சம்மதமா? பின்பு அங்கே சென்ற பிறகு மாறிவிடாதீர்கள். மதுபன்னிலோ சுற்றுப்புறச் சுழல் நன்றாக இருந்தது இல்லையா? மேலும் இங்கோ சுற்றுப்புறசூழலின் தொடர்பு இருக்கிறது

என்று பின்பு கூறுவீர்களா? மாற்றம் செய்பவர் யாருடைய தொடர்பிலும் வருவதில்லை, யாருடைய பிரபாவத்திலும் வருவதில்லை. ஒருவேளை மாற்றுபவரே பிரபாவத்தில் வந்து விட்டார் என்றால் அவர் மாற்றமாக என்ன செய்வார்? எனவே இந்த வருடத்தை குணமூர்த்தி, சுபபாவனை வருடம் என்ற ரூபத்தில் கொண்டாடுங்கள். யாருடைய சுபமற்ற விஷயங்களையும் நீங்கள் உங்களிடம் சுபமாக்கி எடுங்கள். சுபமற்றதை பார்த்தும் கூட நீங்கள் சுபமான பார்வையில் பாருங்கள். இந்தக் காரணத்தினால் இது நடந்தது. இது காரணமாக இருந்தது அப்படி இருக்க வேண்டாம். காரணத்தை நிவாரணத்தில் மாற்றம் செய்யுங்கள். தைரியம் இருக்கிறதா? நல்லது. பாப்தாதா எப்பொழுது தொலைக்காட்சிப் பெட்டியை பார்க்கிறார் என்றால் மிகுந்த மகிழ்ச்சி வருகிறது. இந்தக் கலியுக டி.வி யைப் பார்ப்பதில்லை. பிராமணர்களின் டி.வி யைப் பார்க்கிறோம். நீங்களும் இந்த டி.வி-யைப் பார்க்கலாம் என்று அப்படியில்லை. எப்பொழுது குழந்தைகளின் விளையாட்டைப் பார்க்கிறோம் என்றால் மிகவும் மகிழ்ச்சி வருகிறது. மிக்கி மவுஸின் விளையாட்டை செய்கிறீர்கள் இல்லையா? கொஞ்ச நேரத்திற்காக சிலர் சிங்கமாகி விடுகிறார். சிலர் நாயாகி விடுகிறார். எந்த நேரம் கோபப்படுகிறீர்களோ அந்த நேரம் என்னவாக இருக்கிறீர்கள்? எந்த நேரம் யாருடன் விவாதிக்கிறீர்களோ, அவர் மேல் வார்த்தைக்கு மேல் வார்த்தைகளால் போர் தொடுத்துக் கொண்டே செல்கிறீர்கள் என்றால் அந்த நேரம் என்னவாக இருக்கிறீர்கள் என்றும் நிரூபித்துக் கொண்டே செல்கிறீர்கள். மிக்கி மவுஸாகவே ஆகி விடுகிறீர்கள் இல்லையா? இந்த வருடம் மிக்கி மவுஸாக ஆகாதீர்கள். பரிஷ்தா ஆக வேண்டும். மிக்கி மவுஸ் விளையாட்டை அதிகமாக விளையாடியாகி விட்டது. இந்த வருடம் அந்த மாதிரி சக்திசாலியான வருடமாக கொண்டாடுங்கள். ஏனென்றால் நேரமோ அருகில் வரத்தான் வேண்டும். மேலும் கொண்டு வரத்தான் வேண்டும். நாடகப்படி வரத்தான் வேண்டும். இருந்தாலும் கொண்டு வருபவர்கள் யார்? நீங்கள் தான் இல்லையா?

இன்னொரு விசேஷமாக இந்த வருடம் என்ன செய்வீர்கள்? புது வருடத்தில் ஒன்றோ வாழ்த்துக்கள் தெரிவிக்கிறீர்கள்; இன்னொன்று பரிசு கொடுக்கிறீர்கள். அப்படி இந்த புது வருடத்தில் எப்பொழுதும் ஒவ்வொருவருக்கும், யார் யார் எப்பொழுது உறவு நெருக்கத்தில் வருகிறாரோ, அது பிராமண பரிவாரமாக இருந்தாலும், மற்ற

ஆத்மாக்களாக இருந்தாலும் அந்த அனைத்து ஆத்மாக்களுக்கும் ஒன்றோ இனிமையான வார்த்தைகள் என்ற பரிசு கொடுங்கள், அன்பான வார்த்தைகள் என்ற வெகுமதி கொடுங்கள் மற்றும் இன்னொன்று எப்பொழுதும் ஏதாவது குணத்தின், சக்தியின் பரிசைக் கொடுங்கள். இந்தப் பரிசை ஒரு நொடியில் கூட கொடுக்க முடியும். நேரம் கிடைக்கவில்லை, பரிசை பெறுபவருக்கும் நேரம் இல்லை, கொடுப்பவருக்கும் நேரம் இல்லை என்று அப்படி சொல்லாதீர்கள். ஒருவேளை தன்னுடைய உயர்ந்த பாவனை, உயர்ந்த நல்விருப்பங்களின் உணர்வு இருக்கிறது என்றால் ஒரு நொடியில் எண்ணத்தினால், பார்வையினால் தன்னுடைய உள்ளப்பூர்வமான புன்முறுவலினால் யாருக்காவது மிக அதிகமாகக் கொடுக்க முடியும். யார் யார் வருகிறார்களோ அவர்களுக்கு பரிசு கொடுக்க வேண்டும். வெறும் கையோடு செல்ல வேண்டாம். அந்தளவிற்கு உங்களிடம் பரிசு இருக்கிறதா? அல்லது இரண்டு நாள் கொடுத்தோம் என்றால் முடிந்து விடுமா? அனைவரின் கையிருப்பு (ஸ்டாக்) நிரம்பி இருக்கிறதா? அல்லது யாருடைய ஸ்டாக் கொஞ்சம் குறைந்து இருக்கிறதா? யாரிடம் குறைந்து விட்டதோ அவர்கள் கையை உயர்த்துங்கள். நிரப்பி விடுவீர்களா? யாரிடம் குறைவாக இருக்கிறது என்றால் அவர்கள் கடிதம் எழுதி ஜானகி தாதி அவர்களிடம் கொடுத்தீர்கள் என்றால் அவர்கள் அதன் மேல் வகுப்பு நடத்துவார்கள். குறை இருக்கக்கூடாது இல்லையா? வள்ளலின் குழந்தைகள் மேலும் குறை இருக்கிறது என்றால் நன்றாக இல்லை. எனவே நிரம்பியவர்களாகி செல்லுங்கள். குறையை எடுத்துச் செல்லாதீர்கள். வருடத்தின் கூடவே குறைகளுக்கும் விடை கொடுத்துச் செல்லுங்கள். நாளை ஒரு நாள் மட்டும் தான் பரிசு கொடுக்க வேண்டும் என்று அப்படியில்லை. வருடம் முழுவதும் அனைவருக்கும் பரிசைக் கொடுத்துக் கொண்டே செல்லுங்கள் பரிசு பெறாமல் யாரும் செல்ல வேண்டாம் என்றால் எவ்வளவு நன்றாக இருக்கும். ஒருவேளை யாராவது வருகிறார் என்றால் அவருக்கு அன்போடு சிறிய பரிசு கொடுத்தால் கூட எவ்வளவு குஷியடைகிறார். பொருளைப் பார்ப்பதில்லை ஆனால் பரிசு அதாவது அன்பின் சொரூபத்தைப் பார்க்கிறார்கள். பரிசினால் ஒருவரும் எல்லாம் நிறைந்தவராக ஆவதில்லை ஆனால் அன்பினால் அனைத்தும் நிறைந்வராக ஆகி விடுகிறார். எனவே அன்பைக் கொடுங்கள் மற்றும் அன்பைப் பெறுங்கள். ஒருவேளை யாராவது உங்களுக்கு அன்பைக்

கொடுக்காவிட்டாலும் கூட நீங்கள் அவரிடமிருந்து அன்பை பெற்று விடுங்கள். பெறத் தெரியுமா அல்லது எப்படி பெறுவது என்று வெட்கம் வருமா? இந்த மாதிரி பெறுவதில் ஒன்றும் பாதகமில்லை. அவர் உங்கள் மேல் கோபப்படுகிறார்; நீங்கள் அதை அன்பின் ரூபத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் உலகை மாற்றுபவர் தான் இல்லையா. அப்படியானால் உலகத்தை மாற்றுபவர் யாருடைய எதிர்மறையையும் நேர்மறையில் மாற்ற முடியாதா என்ன? அப்படி இந்த வருடம் எப்பொழுதும் அன்பைக் கொடுங்கள் மற்றும் அன்பைப் பெறுங்கள். யாரும் கொடுக்கவே இல்லை, என்ன செய்வது என்று அப்படிச் சொல்லாதீர்கள். அவர்கள் கொடுத்தாலும் அல்லது கொடுக்காவிட்டாலும், நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். ஏதாவது கொடுப்பார் இல்லையா. எதிர்மறையைக் கொடுக்கட்டும் அல்லது நேர்மறையைக் கொடுக்கட்டும், ஏதாவதோ கொடுப்பார் இல்லையா ஆனால், ஹே உலகை மாற்றுபவர்களே! நீங்கள் எதிர்மறையான விஷயங்களை நேர்மறையில் மாற்றி எடுத்துக் கொள்ளுங்கள். இந்த வருடம் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? நல்லது. வெளிநாட்டினர் என்ன செய்வீர்கள். பரிசு கொடுப்பீர்களா? வள்ளலாகி விட்டீர்களா? ஆஹா! வள்ளல் தன்மைக்காக வாழ்த்துக்கள். நல்லது.

ஹாஸ்டல் குமாரிகளை சந்தித்த பின்பு இரட்டை வெளிநாட்டினருடன் -யு.கே., ஐரோப்பா, ஆஸ்திரேலியா, தெற்கு ஆசியா, மொரீஷியஸ், ஆப்பிரிக்கா, ஜப்பான், அமெரிக்கா, ரஷ்யா மற்றும் பாரதவாசிகளுடன் சந்திப்பு நடந்தது. பின்பு வெளிநாட்டு சிந்தி சமூகத்தவருடன் சந்திப்பு நிகழ்ந்தது.

நாலாபுறத்திலுமுள்ள புது யுகத்தின் இராஜ்ய அதிகாரி உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் சுயமாற்றம் மற்றும் உலகமாற்றத்தின் பொறுப்பிலிருக்கும் விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் முயற்சி செய்து புதுமை மற்றும் உயர்ந்த நிலையைக் கொண்டு வரக்கூடிய அனைவரின் அன்பிற்குரிய ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் தந்தையின் பெயரை பிரத்யக்ஷம் செய்யக்கூடிய உண்மையான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் "நான்" மற்றும் "என்னுடையது" என்பதை யதார்த்த உணர்வு மற்றும் அர்த்தத்தில் கொண்டு வரக்கூடிய சகஜயோகி ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

நல்லது, நாலா புறம் இருந்தும் புத்தாண்டு வாழ்த்து அட்டைகள் நிறைய வந்துள்ளன. வாழ்த்து அட்டை வாங்கும்போதே முதலில் உங்களது வாழ்த்துக்கள் பாப்தாதாவை வந்தடைந்து விடுகின்றன ஆனால் இருப்பினும் மனமகிழ்ச்சிக்காக அனுப்பி வைத்து விடுகின்றனர். எனவே பாப்தாதாவும் கடிதம், வாழ்த்து அட்டை அனுப்பிய எல்லா உள்நாடு வெளிநாட்டுக் குழந்தைகளுக்கும் விசேஷமாக கோடி மடங்கு வாழ்த்துக்களுடன் சதா பறக்கின்ற, பறக்க வைக்கின்ற, சதா சகஜமாக உலக மாற்றம் செய்யக்கூடிய, இந்த சொரூபத்தில் கோடி மடங்கு வாழ்த்துக்களை அளிக்கின்றார் -வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!

**சகோதர, சகோதரிகள் இரவு 12-மணி வரை நிறைய பாடல்களைப் பாடினர், பின்னர் பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தார் (1995)!** நாலா புறமும் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் புத்தாண்டிற்கான கோடானுகோடி மடங்கு வாழ்த்துக்கள். இந்த புத்தாண்டில், நாங்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்போம் மற்றும் அனைவருக்கும் தில்குஷ் மிட்டாய் வழங்குவோம் என்ற திட சங்கல்பம் செய்யுங்கள். எப்படிப்பட்ட சூழ்நிலையாயினும், சூழ்நிலை போகட்டும் ஆனால் உங்கள் குஷி போகக்கூடாது. யாராவது உங்களுக்குத் துக்கம் தந்தாலும் சரி, ஆனால் நாம் எப்போதும் சுகத்தைக் கொடுப்போம், சுகத்தை எடுப்போம் என்ற இந்த திடமான உறுதிமொழியுடன் புத்தாண்டைத் தொடங்கினீர்களா? எனில் பழைய விஷயங்களுக்கு, பழைய உலகின் விஷயங்களுக்கு விடையளித்து விட்டீர்கள்தானே? நீங்கள் அதை திரும்பப் பெற மாட்டீர்களா? எனவே விடையளித்தற்கான பாராட்டுக்கள், வாழ்த்துக்கள்! நல்லது.

வரதானம்: எண்ணம் என்ற விதையை நன்மை என்ற சுபபாவனையினால் நிரப்பி வைக்கக்கூடிய உலகிற்கு நன்மை செய்பவர் ஆகுக!

எப்படி முழு மரத்தின் சாரம் விதையில் இருக்கிறதோ அதே போல் எண்ணம் என்ற விதை ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும், இயற்கைக்காகவும் சுபபாவனையுடையதாக இருக்கட்டும். அனைவரையும் தந்தைக்குச் சமமாக ஆக்கும் பாவனை, பலமற்றவரை

பலம் நிரம்பியவராக ஆக்கும், துக்கமான அமைதியற்ற ஆத்மாக்களை எப்பொழுதும் சுகம், அமைதி நிறைந்தவராக ஆக்கும் பாவனையின் சாறு மற்றும் சாரம் ஒவ்வொரு எண்ணத்தில் நிரம்பி இருப்பதாக இருக்கட்டும், எந்தவொரு எண்ணம் என்ற விதை இந்த சாரத்தினால் காலியானதாக அதாவது வீணானதாக இருக்க வேண்டாம். நன்மை செய்யும் பாவனையினால் சக்திசாலியானதாக இருக்கட்டும். அப்பொழுது தான் தந்தைக்குச் சமமான உலகிற்கு நன்மை செய்யும் ஆத்மா என்று கூறலாம்.

சுலோகன்: மாயாவின் குழப்பத்தினால் பயப்படுவதற்குப் பதிலாக பரமாத்மாவின் சந்திப்பின் மகிழ்ச்சியைச் கொண்டாடிக் கொண்டே இருங்கள்!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்